www.tamilarangam.net

# நவ சகாப்தம்

பாட்டாளி வர்க்க முன்னணியினர் கழகம்-இலங்கை

ஒற்றை ஆட்சியா?

சமஷ்டி ஆட்சியா?



இந்திய மாதிரியா?

பிரிவினையா?

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பாட்டாளி வர்க்க முன்னணியினர் கழகம்

இதழ் – 11 ஆண்டு – 1996 25/= அன்பளிப்பு – 15/-

☞ உள்ளே


- நமது கண்ணோட்டம்
- சிறீலங்காவில் தொழிற்சங்கப் போராட்டம்
- தமிழீழ தேசிய விடுதலை யுத்தம் - ஒரு பார்வை
- யாரை நோகடித்தோம்..........
- சமகாலத்தில் தேசிய இனவிடுதலைப் போராட்டங்கள்
- மேதின சர்வதேச கருத்தரங்கிற்கு நமது செய்தி
- எது மூன்றாவது பாதை?


---

## பண்பான வாசகர்களுக்கு!

இனவாத அரசினதும், அராஜக இயக்கங்களினதும் கடுமையான கெடுபிடிகளுக்கும் தடைகளுக்கும் மத்தியில் "நவசகாப்தம்" உங்கள் கைகளில் எல்லைகளைத் தாண்டி கிடைக்கிறது. இதனை புதிய தோழமை உள்ளங்களின் கைகளுக்கு மாற்றுங்கள். உளப்பூர்வமான ஆலோசனைகளை, விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம். இதழின் தொடர்ச்சிக்கு – வளர்ச்சிக்கு நிதியுதவி செய்யுங்கள்.

– நன்றி.

☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆

தொடர்பு முகவரி :-
P. FERNADAEZ, 390, DAWES ROAD,
1204 EASTYORK, M4B 2E5, ONTARIO, CANADA

**PROLETARIAT VANGUARD'S ORGANIZATION**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# நமது கண்ணோட்டம்

தமிழீழ மக்களின் தேசிய இனப்பிரச்சனைக்கும் யுத்தத்திற்கும் முற்றுப் புள்ளி வைக்க, அமைதியை சமாதானத்தை ஏற்படுத்த "அரசியல் தீர்வே" இறுதியானது. இலங்கை மக்களின் நலனில் அக்கறை கொண்டவர்கள் முழங் குவது இதுவே. பொதுசன முன்னணி அரசும் இப்படிக் கூறித்தான் ஆட்சிக்கு வந்தது. சமஷ்டி முறையில், பண்டா - செல்வா ஒப்பந்தத்தை வளர்க்கும் விதத்தில் அரசியல் தீர்வை முன்வைக்கப் போவதாக கூறியது. 95 ஆவணி 2-இல் ஒரு "அரசியல் தீர்வு திட்டப் பெட்டகத்தை" அரசு முன் வைத்தது. இம் மோசடித் திட்டம் பற்றிய வாதவிவாதங்களை தமிழ் துரோகத் தலைமைகளு டன் நடாத்திவந்தது.

யாழ்ப்பாணத்தை அரசு கைப்பற்றிய பின் அரசியல் தீர்வு அதன் உள்ளடக் கங்கள் குறித்து உரத்துப் பேசப்படுகிறது. அரசு இராணுவத் தயாரிப்புக்களில் இருந்தபடி, மோசடி அரசியல் தீர்வுத் திட்டம் அமர்களமாக பிரச்சாரப் படுத்தப் படுகிறது. அரசியல் தீர்வு பற்றிய சர்ச்சைகள் மிகத் தந்திரமாக 2 முறையில் நடக்கின்றது. ஒன்று அதிகாரப் பரவல் திட்டத்தை ஏற்றுக் கொண்டு அதற்குள் திருத்தம், சேர்ப்புப் பற்றிய விவாதம் தமிழ் மக்களின் இன்றைய அரசியல் கோரிக்கையை இத் திட்டம் எந்த விதத்திலும் கணக்கில் கொள்ளவில்லை. இரண்டாவது இந்த அதிகார பரவல் திட்டத்தை எப்படி? அமுல்படுத்துவது; சட்டத்திருத்தத்திற்கு 3/2 பெரும்பான்மையைப் பெறுவது எப்படி? சில சட் டத் திருத்தங்களுக்கு சர்வசன வாக்கெடுப்பை பயன்படுத்துவதா? என்ற விவா தத்துள் பிரச்சனை முடிக்கப்படுகின்றது.

வடக்கு - கிழக்கு தமிழ் மக்களின் தேசிய இனப் பிரச்சனைக்கு தீர்வாக இந்திய - இலங்கை ஒப்பந்தம் கொடுத்த நாடு தழுவிய 9 மாகாணப் பிரிப்பும் 13-வது சட்டத் திருத்தமும் அதன் அதிகாரப் பரவல் திட்ட மோசடியையும் அறிவோம். சந்திரிகா அரசின் அரசியல் பெட்டகம், அதே மாகாணங்களின் ஒன்றியமாக நாட்டை மாற்றி சில அதிகாரங்களை கூட்டுவது குறைப்பது பற்றி முதலில் முன் வைத்தது. ஆனால் யாழ் கைமாறிய பின் அண்மையில் U.N.P. இன் M.P. சோஸ்க்சியாஸ் முன்மொழியப்பட்ட தீர்வு அரசியல் யாப்புச் சட்டத்தின் இரண்டாவது பிரிவு மாற்றப்படாது, "இலங்கை ஒற்றையாட்சியாக ஒரே அரசாக இருக்கும். அதே போல் 9-வது பிரிவான 'பௌத்த மதம் மட்டுமே அரசமதமாக இருக்கும்' என்பதும் மாற்றப்படாது, 1987-ல் 13-வது சட்டத் திருத்தப்படி மாகாண இணைப்பு, குடியேற்றத் திட்டப் பிரச்சனை அணுகப் பட வேண்டும். சோஸ்க்கியின் இத் திட்டம் ஏற்கப்பட்டால் அரசின் அதிகாரப் பரவல் திட்டம் பாராளுமன்ற தெரிவுக் குழுவின் மூலம் சட்ட வடிவாக்க

www.tamilarangam.net



U.N.P. யும் ஒத்துழைக்கும், என்பது தெளிவாகியுள்ளது. இதை 6 தமிழ் கட்சிகள் எதிர்க்கின்றன. அதிகாரப் பரவல், மாகாண கூட்டாட்சி திட்டத்தை வற்புறுத்து கின்றன. சோஸ்க்கியின் திட்டத்தை நீதியமைச்சர் பீரீஸ் கூட, "அரசியல் தீர்வுக்கு இருந்து வந்த தடை நீங்கி விட்டது" என்று குதுகலிக்கின்றார்.

பீரீஸ் முன் வைத்த அரசியல் தீர்வுத் திட்டறு(மோசடி) பெட்டகம் நடை முறைப்படுத்தும் பிரச்சனைகளால் (மோசடித் திட்டத்தை கூட எதிர்த்து வந்த U.N.P. ஐ சரிக்கட்டவும், பிரேமதாசாவின் 'பல்லின நாடு' என்பதை எதிர்த்த வல்பொலராகுல தேரோ, அஸ்கிரிய மல்வத்த மஹாநாயக்க தேரோக்கள், மற்றும் இன மத வெறியர்களைச் சரிக்கட்டவும், தனது ஆட்சியைத் தக்க வைக்கவும்) சந்திரிகா அரசு இன்று இனவாத ஒற்றை ஆட்சிக்கு பௌத்த மதம் அரசு மதம் என்றமதவாத அரசியல் ஆட்சிக்கு உகந்த முறையில் ஒரு அதிகாரபர வல் திட்டத்தில் வந்து நிற்கிறது. இதுவரை "சனநாயக சோசலிச சிறீலங்கா குடியரசு" என்ற பெயர் புதிய அரசியல் சட்டத்தில் 'சிறீலங்கா குடியரசு' என மாற்றுகிற அளவுக்கு இன, மத வெறியில் மூழ்கியுள்ளது. வெளிநாட்டுத் தூதுவர்களை சர்வதேச நிவாரண அமைப்புக்களை அண்மையில் சந்தித்த சந்திரிகா "அதிகாரப் பரவல் தொடர்பான பேச்சு வார்த்தைகள் நடாத்த மறுக் கப்பட்ட வடபகுதி மக்களுடன் தாம் நேரடியாகப் பேசவுள்ளோம்" என அதிகார உச்சத் தொனியில் கூறினார்.

தமிழ் துரோகத் தலைமைகள் கூட தீர்வுத் திட்டத்தின் அரசியல் ரீதியான அடிப்படை மோசடி பற்றி பேசவில்லை. அதற்குள் உரிமைகளை கூட்டிக் குறைப்பது பற்றி பேசினார். நடைமுறைபடுத்தும் பிரச்சனைகளில் மட்டும் விவாதம் நடாத்தினர். ஆனால் அரசின் இன்றைய முடிவு இத் தலைமைக ளைக் கூட முழிக்க வைத்துள்ளது. இத்திட்டத்திற்கு கூட ஒரு வாய்ப்புக் கொடுத்துப் பார்க்கலாம் என்கின்ற அளவுக்கு இத் தலைமைகளில் 'மோச மான துரோகிகள்' தோன்றத் தொடங்கி விட்டனர். புலிகளோ என்ன செய்வது என்ற பாணியில் பார்த்துக் கொண்டிருக்கின்றது. 88-இல் மாத்தையா, யோகி தலைமையில் உருவாக்கப்பட்ட அரசியல் முன்னணி போல், இன்றும் I.R.A. இன் சின்பெயின் அரசியல் இயக்கம் போல் ஒன்றை உருவாக்க முயற்சிக்கின் றனர்.

அரசு ஒரு புறம் தனது மோசடித் திட்டத்தை ஏற்க மறுப்பவர்கள் அனைவ ரையும் பிரிவினை வாதிகளாக, பயங்கரவாதிகளாக முத்திரை குத்த தொடங்கி யுள்ளது. மறுபுறம் யுத்தத் தயாரிப்பையும் செய்கிறது. யாழை இன்று வெள் ளைப் பிரதேசமாக்குவதில் இராணுவ ரீதியில், புனரமைப்பு புனர்வாழ்வு வேலைகளில், சிவில் நிர்வாகத் தயாரிப்புகளில் வேகமாக இறங்கியுள்ளது. யாழை உடன் புனரமைக்க 70 மில்லியன் டொலரும், அகதிகளை மீளக் குடியேற்ற 20 மில்லியன் டொலரும், நீண்டகால புனரமைக்கு 1 பில்லியன்

www.tamilarangam.net



டொலர் திட்டமும் முன் வைத்துள்ளது. இதையும் வல்லரசுகளிடம் உலக நிதிநிறுவனங்களிடம் அரசு பிச்சை கேட்க தொடங்கியுள்ளது. அமெரிக்கா யாழ் நிலைமையை மகிழ்ச்சியுடன் வரவேற்று 13 கோடியை 3 நிவாரணத் திட்டங்களுக்கு வழங்கியுள்ளது. ஜப்பான் 6 கோடி வழங்கியுள்ளது. இந்தியா முழு நாட்டுக்கும் என 100 கோடியை வழங்கியுள்ளது. இது 3 வருட வட்டி இன்றி 12 ஆண்டுகளில் திருப்பிக் கொடுக்க வேண்டியது. டீசல், ரெயில் இஞ்சின்களை இந்தியாவிடம் வாங்க வேண்டியது நிபந்தனையாகவுள்ளது.

யுத்தத்தால் யாழில் அழிந்து கிடக்கும் 80% கட்டிடடங்களை, 15 ஆண்டுகள் திருத்தப்படாத குண்டும் குழியுமான சாலைகளை, தொலைத் தொடர்பை, போக்குவரத்து, மின்சார வசதிகளை புனரமைக்க அரசு முயல்கிறது. இவ் ''யாழ் புனரமைப்பு திட்டம்'' அன்னிய நாடுகளின், நிதி நிறுவனங்களின் காலடியில் முன் வைக்கப்பட்டுள்ளது. சுன்னாகம், காங்கேசன் துறை மின் நிலையங்கள் மீண்டும் பழையபடி பிரிட்டன் கொம்பனிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. யாழ் புனரமைப்பு திட்டம் உண்மையில் பல தேசிய கொம்பனிகளுக்கும், வல்லரசுகளுக்கும் தாரை வார்க்கும் சிறீலங்கா அரசின் சதித்தனமான திட்டமாகும். இதை அமுல்படுத்த அரசு சாரா நிறுவனங்களும், தன்னார்வ அமைப்புகளும் களத்தில் முழுப் பொறுப்பை எடுத்துள்ளது.

அரசு தமிழீழ மக்களின் தேசிய இனப் போராட்டத்தை திசை திருப்பி ஒடுக்க மோசடி அரசியல் தீர்வு திட்டத்தையும், புனரமைப்பு - புனர்வாழ்வு திட்டத்தையும் முன் வைக்கின்றது. இவற்றை எதிர்த்து போராடும் போராளிகளை, மக்களை நசுக்க வெளிப்படையாக இராணுவ மனித பல தயாரிப்பில் இறங்கியுள்ளது. பிரதான படையில் 10,000 பேரையும், தொண்டர் படையில் 5000 பேரை சேர்க்கத் தொடங்கியுள்ளது. 80-ல் இராணுவத்தை விட்டுபோன 26000 படையினர்க்கு பொது மன்னிப்பு வழங்கியுள்ளதுடன், இதில் 10,000 பேர் திரும்புவர் என்றும் அவர்களை உடன் யாழுக்கு அனுப்ப திட்டமிட்டுள்ளது. 12 ஆண்டு கட்டாய இராணுவ சேவை முடிந்து விடுப்பு பெற்றவர்களில் 57 வயதுக்குட்பட்டவர்கள் இருந்தால் அவர்களை மீண்டும் சேர்க்கவும் உத்தேசித்துள்ளது. யாழ் கொமாண்டர் ஜெனரல் ஜனக பெரைரா'' யாழை தொடர்ந்து தக்கவைப்போம். நகர்ப்புற கொரில்லா யுத்தத்தை தோற்கடித்தது போல் காட்டுக்குள் பின் வாங்கியுள்ள புலிகளின் கிராமப்புற கொரில்லா யுத்தத்தையும் தோற்கடிப்பேம்'' என சூழுரைக்கிறார்.

தமிழ் தேசிய இனப்பிரச்சனையை தீர்க்க சந்திரிகா ஒரு கையில் ஒற்றை ஆட்சி அதிகார பரவல் (மோசடி) திட்டத்தையும், மறு கையில் இராணுவ தயாரிப்பு திட்டத்தையும் வைத்திருக்கிறார். ஆனால் போராளிகள் ஆயுதங்களை கீழே போட்டு விட்டு வந்தால் தான் பேச்சுவார்த்தை நடத்த முடியும். அதுவும் அதிகார பரவல் திட்டம் பற்றி மட்டுமே என்கிறது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



புலிகளோ ஆரம்பத்தில் யாழை விட்டு இராணுவம் வெளியேறினால், யுத்தத்தை நிறுத்தினால் பேச தயார் என்றது. இப்போது மூன்றாவது சக்தி தலையிட்டால் பேச முடியும் என்கின்றது. துரோக தலமைகளை போல், புலிகளும், அரசின் அரசியல் தீர்வு திட்டம் அடிப்படையில் ஏமாற்று என்ப தையோ, குறைந்த பட்சம் சுயநிர்ணய உரிமைதான் தீர்வாக இருக்க முடியும் என்பதையோ முன் வைக்காதுள்ளனர். அதிகார பரவல் திட்டத்தை அடிப்ப டையில் நிராகரிக்க தவறுகின்றனர்.

துரோக தலமைகளும், புலிகளும் மூன்றாவது சக்தி தலையிட கோருகின் றன. மொட்டையான இந்த தலையீட்டு கோரிக்கையை இவர்கள் முன் வைக் கின்றனர். இதே போல் இந்தியரசு, தலையிட வேண்டும் எனக் கோரி வந்ததன் விளைவை, IPKF இன் அநியாயத்தை தமிழீழ மக்கள் மறந்து விடவில்லை. அரசு இன்றய தனது பலத்தை நினைத்து அன்னிய தலையீட்டை கோர வில்லை பதிலாக லக்ஷ்மன் கதிர்காமர் மூலம் வெளிநாடுகள் தாம் 'தலையிடு வதில்லை' என்ற வாக்குறுதியை பெற முயல்கிறது. தனது அரசியல் - இரா ணுவ நடவடிக்கைக்கு ஆதரவை கோருகிறது. புதிய இந்தியரசு "இலங்கை உள் விவகாரத்தில் தலையிடுவதில்லை", என அறிவித்துள்ளது. ஆனால் தமி ழீழ அகிம்சாவழி - ஆயுதப் போராட்ட வழி ஏஜெண்டுகளை இந்தியா கை விட்டு விடவில்லை. கனடாவின் அமைப்பு ஒன்று தனது மத்தியஸ்தம் பற்றி புலிகளுக்கு எழுதியுள்ளது. நோர்வே சுவிட்சர்லாந்து அவுஸ்ரேலியா போன்ற நாடுகள் தலையீட்டுக்கு தயராக இருக்கின்றன. 95-ல் யுத்த நிறுத்த கண்கா ணிப்பு குழுவில் இவர்களின் பங்கும் கவனிக்கத்தக்கது.

சிங்கள தேசிய இன ஒடுக்குமுறைக்கு எதிரான தமிழ் மக்களின் போராட் டங்கள், பேச்சு வார்த்தைகள், ஒப்பந்தங்களின் சரித்திரத்தை திரும்பிபார்க்க வேண்டியுள்ளது. பண்டா - செல்வா, டட்லி-செல்வா ஒப்பந்தம், வட்ட மேசை, சர்வகட்சி மாநாடு, திம்பு பேச்சுவார்த்தை, இந்திய - இலங்கை ஒப்பந்தம், பாராளுமன்ற தெரிவுக்குழு என எதுவுமே இன ஒடுக்குமுறையை நிறுத்த, தமிழ் மக்கள் முன் வைத்த அரசியல் கோரிக்கையை ஏற்றதில்லை. இன சமத்துவகோரிக்கை, சுயாட்சி, சமஷ்டி, கோரிக்கை மறுக்கப்பட்டது - அடக்கப்பட்டபோது சுயநிர்ணய உரிமையை தமிழ் மக்கள் கோரிக்கையாகி யது, அரசு அவற்றை தீர்க்க தவறியது. எலும்புதுண்டு பிச்சையை போட்டது தமிழ் துரோக தலமைகள் அரசுடன் ஒப்பந்தம் செய்தன. இவை கிழிக்கப்பட் டது. அமுல்படுத்தமுடியவில்லை. இன அழிப்பு நில ஆக்கிரமிப்பு வளர்ந்தது. தமிழ் மக்கள் தமது சுய நிர்ணய உரிமை அடிப்படையில் பிரிவினை என்ற உயர்ந்த பட்ச முடிவுக்கு வந்தனர். இவ் அரசியல் கோரிக்கையை அடைய தேசிய விடுதலை யுத்தத்தை நடத்தி வருகின்றனர். யுத்தம் நமது தவறுகளால் ஏற்ற - இறக்கத்தை தேக்கத்தை கண்டிருப்பது உண்மை. யாழை இழந்தது எதார்த்தம்.

www.tamilarangam.net



தேசிய விடுதலை யுத்தம் தொடங்கிய பின் 'திம்பு பேச்சு' மூன்றாவது நாடான இந்தியாவின் முன்னிலையில் நடந்தது. தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கிகரித்து அதற்குட்பட்ட அரசியல் தீர்வு காணப்பட்டால் போராளிகள் பிரிவினையைக் கூட கைவிட தயாராக இருந்தனர். செயவர்த் தனா அரசு திம்புக் கோரிக்கைகளை கூட ஏற்க மறுத்தது. போராளிகள் திம்பு கோரிக்கையை உயர்த்தி பிடித்தபடி தொடர்ந்து நடத்திய தேசிய விடுதலை யுத்தத்துக்கு உள்நாட்டு - உலக நாட்டு மக்களின் ஆதரவு இருந்தது. இக் கோரிக்கைகளை மதிக்காத 87 இலங்கை - இந்திய ஒப்பந்தம் தமிழ் துரோக தலமைகளால் ஏற்கப்பட்டது. ஆனால் IPKF க்கு எதிரான யுத்தத்துக்கு தார்மீக பலம் நமக்கு இருந்தது. இன்று போரில் பலவீனப்பட்டுள்ளபோதும் அரசின் அதிகார பரவல் அரசியல் தீர்வு திட்டம் திம்புக் கோரிக்கைளை ஏற்கவில்லை. தேசிய இன சமத்துவத்தை தரக் கூடியதாக இல்லை. எனவே பிரிவினைக் கோரிக்கையை கைவிட்டு விடும் அளவுக்கு தமிழீழ மக்களின் குறைந்த பட்ச தேசிய இன உரிமைகளை அங்கீகரிக்கவில்லை அரசின் திட்டம். தமிழ்த் துரோகத் தலமைகள் கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாகி விட்டார் கள். அதுதான் அரசுக்கு சாதகமாகவுள்ளது ஆனால் போராடும் மக்கள் தமது அரசியல் கோரிக்கையை கை விட மாட்டார்கள்.

தேசிய விடுதலைக்காக போராடும் எல்லா போராளி அமைப்புக்களும், விடுதலையை நேசிக்கும் தனி ஒரு நபர் கூட பாக்கி இல்லாது எல்லாரும் சிறீலங்கா அரசுடன் ஆன பேச்சுவார்த்தைக்கு - இனப்பிரச்சனைத் தீர்வுக்கு - சமாதனம் அமைதி ஏற்பட தமிழீழ மக்களின் அரசியல் கோரிக்கையாக திம்பு கோரிக்கைகளை நாம் முன் வைக்க வேண்டும். அரசு இக்கோரிக்கையை அங்கிகரியாது ஒற்றை ஆட்சியை, அதிகார பரவல் திட்டத்தை தமிழீழ மக்கள் மீது திணித்தால், துரோக தமிழ்த் தலைமைகளுடன் ஒப்பந்தம் செய்தால், நாம் பிரிவினை கோரிக்கையை அடிப்படையாக தொடர்ந்தும் முன்னிறுத்துவது தவிர்க்க முடியாதது. அரசியல் பேச்சுக்கு - தீர்வுக்கு திம்புக் கோரிக்கைகளை முன்னிறுத்திய படியே அரசுக்கும் துரோக தமிழ் தலைமைகளுக்கும் எதிரான தேசிய விடுதலை யுத்தத்தை தொடர்ந்து நடத்த வேண்டியுள்ளது. அதற்கான இராணுவ தயாரிப்பில் போராளிகளும் ஈடுபடுவது நியாயமாகும். உள்நாட்டு மக்களிடமும் - உலக மக்களிடமும் நமது அரசியல் கோரிக்கையை தெளிவாக முன்னிறுத்துவதில் இன்று பலவீனமாகவுள்ளோம். அரசு இதிலும் பலமாக வுள்ளது. புலிகள் கூட யுத்தத்தை நிறுத்த கோருவது, புலிகளை அங்கீகரிக்க கோரும் அளவுக்கு, "திம்புக் கோரிக்கையை" முழ உலகத்தின் முன்னால் வைத்து மக்களின், போரின் தார்மீக அரசியல் அடிப்படையை நிலை நிறுத் தாது பின்னிற்கிறது. அதிக சுயாட்சி அதிகாரத்தில் மூழ்க தயாரகவுள்ளதை வெளிப்படுத்துகிறது. புலிகளின் தலமை திம்புக் கோரிக்கைகள கூட கைவிட்டு தமிழ் மக்களுக்கும், புலிப் போராளிகளின் தியாகங்களுக்கும்

www.tamilarangam.net



துரோகம் செய்யக்கூடாது என்பதே தேசபக்தர்களின் கோரிக்கை, யுத்தத்தை நிறுத்தக் கோரி யாழில் நடந்த 20 மைல் நீள மனிதச்சங்கிலிப் பேராட்டம் போல் நூறு மனிதச் சங்கிலிகளை வடக்கிலும் கிழக்கிலும் ஏன் சிறீலங்காவி லும், தமிழிழ அகதிகள் வாழும் உலகின் மூலை மூடுக்கெல்லாம் நடத்த வேண்டியுள்து. போராட்டம் யுத்தம் தொடர நமக்கு அரசியல் தார்மீக பலம் வேண்டும். புரட்சிகர தேசபக்த சனநாயக சக்திகளின் கடமை இதுதான்.

★ *திம்புக் கோரிக்கை தமிழீழ மக்களின் அரசியல் கோரிக்கை.*

★ *சிறீலங்கா அரசே! திம்புக் கோரிக்கைளை அங்கீகரி*

★ *மூன்றாவது நாடுகளே! திம்புக் கோரிக்கையை அங்கீகரிக்க நிர்பந்தியுங்கள்.*

★ *திம்புக் கோரிக்கைளை முன்னிறுத்துபவர்களே! ஒன்று திரள்வோம்.*

ஆசிரியர் குழு

*"அரசின் இராணுவ தயாரிப்பு"*



www.tamilarangam.net



# இலங்கையில் ஒரு அரசியல் சுயம்வரம்

அண்மைக்காலத்தில் இலங்கையின் இனப்பிரச்சனைக்குத் தீர்வு காணும் விடயத்தில் சமஷ்டி ஆட்சி பற்றிய பேச்சு மிகப் பிரபலமாக அடிபட்டு பின்னர் இப்போது ஒய்ந்து போயுள்ளதை யாவரும் அறிவர். ஆனால் அந்த சமஷ்டி யென்ற தீர்வை ஆதரித்து நின்றவர்கள் அது எப்படியான தீர்வாக இருக்கு மென்ற எந்த விளக்கத்தையும் இதுவரை தரவில்லை.

சமஷ்டி ஆட்சியென்பது இதுதான் என்று நிர்மாணிக்கப்பட்ட வடிவம் ஒன்று உண்மையில் எங்குமே இல்லை. அது ஒவ்வோர் நாட்டிலும் அவ்வவ் நாடுகளின் சமூக, பொருளாதார, சரித்திரப் பின்னணிகளுக்கமைய வடிவ மைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு நாட்டிற்கு நாடு வெவ்வேறுபட்ட தன்மை களை இவ்வாட்சிமுறை கொண்டிருந்த போதிலும் சமஷ்டி என்ற ஒரு கருத்து ருவத்தை எய்துவதற்கு இவற்றிற்கிடையே பொதுமைப்பாடான சில அம்சங் கள், குறைந்த பட்ச அடிப்படைகளாக அமைவது அவசியமாகிறது. இந்த அடிப்படையான அம்சங்களை நிர்ணயித்துக் கொண்டபின் இதன் வழிகாட்ட லின் கீழ் அந்தந்த நாடுகளின் தனித்துவமான பிரச்சனைகளுக்கேற்ப அவற்றிற் குரிய சமஷ்டி ஆட்சியமைப்பு தீர்மானிக்கப்படுகிறது.

**சமஷ்டிக்கான அடிப்படைகள்**

இவ் அடிப்படையம்சங்களில் முதலாவது அரசியலமைப்புச் சட்டம். அதாவது சமஷ்டி ஆட்சிமுறை அரசியலைமைப்புச் சட்டத்திலேயே வரைவு செய்யப்படல் வேண்டும். வேறெந்த வகையாலுமல்ல. அதாவது அரசியலை மைப்பச் சட்டத்திற்கான திருத்தங்களாலோ, அல்லது வெறும் பாராளுமன்றத் தீர்மானங்களாலோ அல்ல.

அடுத்த அம்சம் இரண்டு இறைமைகள் என்ற கருத்து ஒப்புக் கொள்ளப் பட்டிருத்தல் வேண்டும். அதாவது இரண்டு இறைமையுள்ள ஆட்சிப் பிரிவுக ளாக மத்திய அரசு (Centre), சமஷ்டி ஆட்சி அலகு (State) அதாவது மாநில அரசோ, மாகாண அரசோ மாவட்ட அரசோ ஏதாவதொரு ஏற்றுக் கொள்ளப் பட்ட ஆட்சி அலகு என்ற இரு ஆட்சி அலகுகள் ஒரு நாட்டில் இயங்குவது ஏற்றுக் கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும். இங்கு இவை இரண்டுக்குமான இறைமையும், அதிகாரங்களும் அரசியலமைப்புச் சட்டத்தினால் நேரடியாக வளங்கப்படுவதாய் இருக்கும். மாறாக மத்திய அரசால் (பாராளுமன்றத்தால் அல்லது ஜனாதிபதியால்) சமஷ்டி அலகிற்கு வளங்கப்படுவதாய் இருக்காது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அடுத்ததாக சமஷ்டி ஆட்சி அலகிற்கு (State) வளங்கப்பட்ட அதிகாரங்களை அவ் ஆட்சியலகின் அனுமதியின்றி மத்திய அரசால் மீளப் பெற முடியாது. சமஷ்டியின் மற்றய அம்சங்கள் சுதந்திரமான நீதிமன்றம் (Indipendent Judiciary) நீதிமன்றம் மத்திய அரசால் செல்வாக்குச் செலுத்தப்படக் கூடியதாக இருக்கக் கூடாது. அரசியலமைப்புச் சட்டத்தின் ஏதாவது சரத்தின் கருத்து விளக்கம் பற்றிய சந்தேகங்களில் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பே இறுதியானதாக அமையும். இந்த வகையில் சமஷ்டி ஆட்சி முறையைத் தமது ஆட்சி முறையாக ஏற்றுக் கொண்ட பல நாடுகள் உலகில் உள்ளன. இவற்றில சோசலிச நாடுகளும் உள்ளன. முதலாளித்துவ, ஜனநாயக நாடுகள் உள்ளன. உதாரணமாக அமெரிக்கா, கனடா, சுவிட்சர்லாந்து, முன்னாள் சோவியத் யூனியன், யூகோஸ்லாவாக்கியா போன்ற நாடுகளைக் கூறலாம். இந்நாடுகளில் நிலவும் சமஷ்டி ஆட்சிகள் தத்தமக்கு ஏற்ற வகையில் வெவ்வேறு சிறப்பம்சங்களையும் கொண்டுள்ளவை. அமெரிக்காவை எடுத்துக் கொண்டால் குடி மகன் ஒருவனுக்கு அமெரிக்க மத்திய அரசு மட்டுமின்றி அவன் வசிக்கும் சமஷ்டி ஆட்சிப்பிரதேசமும் (State) கூட தனியான பிரஜாவுரிமை வழங்க அதிகாரமுள்ளது. இவ்வாறு ஒரு அமெரிக்கன் இரண்டு பிரஜாவுரிமைகளைப் பெறுகிறான். மேலும் அமெரிக்காவிலும் முன்னைய சோவியத் யூனியன், யூகோஸ்லாவாக்கியா போன்ற நாடுகளிலும் சமஷ்டி ஆட்சிப் பிரதேசங்கள் தமக்கான சொந்த அரசியலமைப்புச் சட்டத்தையே வரைய உரிமை வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு உலகில சமஷ்டி ஆட்சி ஒரு வெற்றிகரமான முன்னுதாரணமாக நிலை கொண்டு பல ஆண்டுகள் கடந்து விட்ட நிலையிலும் எமது நாடான இலங்கையில் சமஷ்டி பற்றிய மிகுந்த அச்சம் ஆட்சியாளர்களிடையேயும் பெரும்பான்மை இனத்தவர் மத்தியிலும் நிலவுகிறது. இனப்பிரச்சனைக்கான தீர்வு பற்றிய பாராளுமன்றத் தெரிவுக்குழுக் கூட்டங்களில் அண்மைக் காலத்தில் முன் வைக்கப்பட்ட சமஷ்டி ஆட்சிக்கான சிபாரிசுகூட முதலில் ஏதோ ஓர் அக்கறையை வெளிப்படுத்தி வரவேற்கப் பட்டது போல் இருந்த போதிலும் பின்னர் தெரியாத்தனமாக, சுடுசட்டியைத் தூக்கிவிட்டது போல், திரும்ப மெதுவாக கீழே வைக்கப்பட்டு விட்டது. அதற்குப் பதிலாக இந்தியாவின் மாதிரியான உரிமைகளை வழங்கலாம் என்ற அபிப்பிராயங்கள் வெளிப்படுத்தப்பட்டன.

இந்தியா ஒரு சமஷ்டி ஆட்சியைக் கொண்ட நாடா என்பதில் இன்னும் அங்கு சர்ச்சைப் பாடுகள் இருந்து கொண்டே இருக்கின்றன. இந்தியாவின் அரசியலமைப்புச் சட்டம் இந்தியாவை ஒரு சமஷ்டி ஆட்சி நாடாகச் சொல்லவில்லை. அதே வேளை இலங்கையைப் போல் ஒற்றையாட்சி நாடாகவும் சொல்லவில்லை. அதன் 1-ம் சரத்தின்படி அது தன்னை மாநிலங்களின் ஒன்றியம் (Union of States) என்று வரையறுத்துக் கொள்கிறது. எனினும் சமஷ்டி

www.tamilarangam.net



நாடொன்றைப் போன்ற பல அம்சங்களை அது கொண்டுமிருக்கிறது. இந்தியாவின் மாநில ஆட்சிமுறை அரசியலமைப்புச் சட்டத்தாலேயே வரையறை செய்யப்பட்டுள்ளது. மேலும் மாநிலங்களுக்கான அதிகாரங்கள் அரசியலமைப்புச் சட்டத்தாலேயே வழங்கப் பட்டுள்ளது. (மத்திய அரசாலல்ல) அத்துடன் சுதந்திரமான நீதிமன்ற உத்தரவாதம் செய்யப்பட்டுள்ளது. ஆனால் இறைமையைப் பொறுத்தமட்டில் மாநில அரசுகளின் இறைமை மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே உள்ளது. மாநில அரசுகள் செயல்படக்கூடிய துறைகள் எவையென ஒரு பட்டியலும், மத்திய அரசு செயல்படக் கூடிய துறைகள் எவையென இன்னொரு பட்டியலும் அரசியலமைப்புச் சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ளது. இதே போன்ற ஆட்சித் துறைகள் பற்றிய வகைப்பாடு இலங்கையில் மாகாணசபை அரசுகள் அமைக்கப்பட்ட போதும் ஏற்படுத்தப்பட்டிருந்தது. எனினும் அது மாகாண சபைகளுக்கு வழங்கியுள்ள துறைகளும் அதிகாரங்களும் இந்தியாவுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது மிகவும் மட்டுப்படுத்தப்பட்டதாகவே உள்ளது. அதிலும் சில துறைகளில் மாகாண அரசுக்கு செயற்படக்கூடிய கணிசமான அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது போல் பார்வைக்குக் காட்டப்பட்டாலும் பின்னிணைப்புகள் மூலம் அவ்வதிகாரங்கள் பறிக்கப்பட்டுள்ளது. உதாரணத்துக்கு காணிபற்றிய விடயம், மாகாணத்திற்கு உரிய பட்டியலில் போடப்பட்டு மாகாண அரசிற்குட்பட்ட விடயம் போல் காட்டப்பட்டாலும் பின்னர் அதன் பின்னிணைப்பு மூலம் காணி பற்றிய முழு அதிகாரமும் ஜனாதிபதியின் கைகளில் உள்ளதாக ஆக்கப்பட்டுள்ளது. இவ்வாறு முன் கதவால் கொடுத்த அதிகாரங்களே பின் கதவால் திருடிக் கொள்ளப்பட்டுள்ளது.

இப்போது சமஸ்டி பற்றிய கேள்வி ஒருபுறம் இருக்கட்டும். சமஷ்டி பற்றிய பெரும்பான்மைக் கட்சிகள் ஆரவாரத்துடன் சில நாட்கள் பேசிவிட்டு இறுதியில் சமஷ்டியல்ல. இந்தியா போன்ற அதிகாரங்களை வழங்கத் தயாராக உள்ளோம் என்று கூறினார்கள் அல்லவா, அதைக் கூட சாத்தியப்படுத்துவது இவர்களால் ஆகக் கூடிய காரியமா என்று பார்ப்போம். இலங்கை அரசின், அரசியல் யாப்பின் சரத்து இரண்டு (Article2) கூறுகிறது இலங்கைக் குடியரசு ஒரு ஒற்றையாட்சி நாடு என்று அதே வேளை இந்தியாவின் சரத்து 1 அதை மாநிலங்களின் ஒன்றியமாக வரையறை செய்கிறது. இந்தியா தன்னை ஒரு மதசார்பற்ற இறைமையுள்ள சோசலிச ஜனநாயகக் குடியரசாகப் பிரகடனப்படுத்த இலங்கையோ (சரத்து 9-ல்) பௌத்தம் என்ற தனியொரு அத்தியாயத்தையே (அத்தியாயம் 2) திறந்து இலங்கைக் குடியரசானது பௌத்தத்திற்கு அதிஉன்னத ஸ்தானத்தை வழங்க வேண்டுமென்றும், அரசின் முக்கியமான பணி பௌத்த சாசனத்தைப் பாதுகாத்து வளர்ப்பதாகுமென்றும் கூறுகிறது. இந்தியாவில் தெளிவாக வரையறுக்கப்பட்ட அதிகாரப் பரவாக்கல் அலகாக மாநிலங்கள் உள்ளன. இம் மாநிலங்கள் மொழியடிப்படையில் மொழிவாரி

www.tamilarangam.net



மாநிலங்களாக வகுக்கப்பட்டுள்ளன. இலங்கையின் அரசியல் யாப்பு சரத்து 5-ன் படி இலங்கையின் நிலப்பகுதி 25 நிர்வாக மாவட்டங்களைக் கொண்டிருக்குமென்று கூறுவதன் மூலம் அதன் நிர்வாக அலகு மாவட்டங்களாகவே உள்ளது. அத்துடன் அது வெறும் நிர்வாக அடிப்படையிலேயேயன்றி மொழியடிப்படையிலோ இனத்துவ அடிப்படையிலேயோ வரையறுக்கப்படவில்லை. இந்தியாவைப் போல் அதிகாரங்களை வழங்கத் தயார் என்று கூறுவதானால் முதலில் இலங்கை தனது ஒற்றையாட்சி முறையை மாற்றிக் கொள்ளத் தயாரா? பௌத்த மத நாடாக அன்றி மதசார்பற்ற நாடாகப் பிரகடனப்படுத்தத் தயாரா? அதிகாரப் பரவலாக்கல் அலகாக மொழிவாரி மாநிலங்களை வரையறை செய்யத் தயாரா? என்பன முதலில் முன்னிற்கும் கேள்விகளாகும். இதை விட வழங்கப்பட்ட அல்லது வழங்குவதற்காக பாராளுமன்றத் தெரிவுக் குழுவில் ஆராயப்பட்ட அதிகாரங்களைப் பொறுத்தவரை கூட இந்தியாவில் அவை வழங்கப்பட்டிருக்கும் அளவுடன் ஒப்பிட முடியாததாக உள்ளது. இந்தியாவில் விவசாயம், நிலச்சீர்திருத்தம் போன்ற துறைகள் முற்றுமுழுதாக மாநில அரசுகளுக்கான துறைகளின் பட்டியலில் அடங்குகின்றன. இங்கு இலங்கையில், காணி முன்னர் குறிப்பிடப்பட்டது போல் ஜனாதிபதியின் அதிகாரத்திற்கு உட்பட்டதாக உள்ளது. இதே போல் பாதுகாப்புத் துறையில் இந்தியாவில் தேசியப் பொலீஸ், மாநிலப் பொலீஸ் என்று இரண்டு பிரிவுகள் இயங்கி, மாநிலங்களின் பாதுகாப்பை மாநிலப் பொலீசே பார்த்துக் கொள்வதாய் உள்ளது. அவசியமேற்படும் போதுதான் தேசியப் பொலீஸ் நடவடிக்கைகளில் இறங்க நேரிடும். அங்கு மாநிலப் பொலீஸ் ஐ.ஜீ.பி.யின் கீழ் இயங்குவதாயும், ஐ.ஜீ.பி. மாநில முதலமைச்சருக்குப் பதில் சொல்லக் கடமைப்பட்டவராகவும் இருப்பார். ஆனால் இலங்கையில் மத்திய அரசின் கீழ் செயற்படும் ஐ.ஜீ.பி.ற்கு கட்டுப்பட்ட, அதே வேளை மாகாண முதலமைச்சருக்கும் பதில் சொல்லக் கடமைப்பட்ட டி.ஐ.ஜி.களின் தலைமையில் மாகாணங்களின் பொலீஸ் இயங்கும். இந்த வகையில் இங்கு பொலீஸின் நிர்வாகம் கூடுதலாக மத்திய அரசின் கட்டுப்பாட்டிலேயே நிறுவப்பட்டுள்ளது. மேலும் மாகாணப் பொலீஸ் கமிஷன் ஒன்று அமைக்கப்படுமென்றும் கூறப்பட்டது. ஆனால் அப்படியான கமிஷன் இதுவரை அமைக்கப்படவேயில்லை.

இப்படியான நிலையில் இந்தியாவினைப் போன்ற வகையில் அதிகாரங்களை வழங்கத் தயாராக உள்ளோமென்று கடைசி··க நிகழ்ந்த பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் அமைச்சர் ஹமீத் தெரிவித்த நம்பிக்கை வாக்கியம் கூட ஒரு உண்மையான கருத்தாழத்துடன், அதாவது மேலே நாம் பார்த்த இத்தனை மாற்றங்களையும் செய்யத் தயார் என்ற திண்ணத்துடன் கூறப்பட்டதா? அல்லது சமஷ்டியைத் தரமுடியாதென்ற காரணத்திற்காக பதிலுக்குக் கூறப்பட்ட வெறும் சமாதான வார்த்தைகளா? என்ற கேள்வி எப்படியும் தோன்றத்தானே செய்யும்.

நன்றி - அருவி - 1993

www.tamilarangam.net



# சிறீலங்காவில் தொழிற்சங்க போராட்டங்கள்

சந்திரிகாவின் அய்க்கிய முன்னணி அரசு ஆட்சிக்கு வந்து 2 வருடங்கள் முடிவடைவதற்குள்ளாகவே அனைத்து தொழிற்துறை, சேவைத்துறைகளைச் சேர்ந்த தொழிற்சங்கங்களும் தொழிலாளர்களும் போராட்டங்களை ஆரம்பித்துள்ளனர். சந்திரிகாவின் ''முற்போக்கான முதலாளித்துவ தொழில் வணிக கொள்கைகள்'' சிறீலங்காவின் தொழிலாளி வர்க்கத்தையும் அனைத்து உழைக்கும் மக்களையும் அரசுக்கெதிராக கிளர்ந்து போராட வைத்துள்ளது. மறுபக்கத்தில் வடக்கிலும் கிழக்கிலும் தேசிய விடுதலைப் போராட்டத்தை ஒடுக்கி தமிழ் மக்களை மிக மோசமான இராணுவ அடக்கு முறைக்கு உள்ளாக்கி, வாழ்விடங்களை விட்டுத் துரத்தி, அதை தனது வெற்றி என கொக்கரிக்கிறது சந்திரிகாவின் பொதுசன முன்னணி அரசு.

கிழக்கிலும் - வடக்கிலும் தொடரும் புலிகளின் இராணுவத் தாக்குதலால் தடுமாறி போய் இருக்கும் பிரதி இராணுவ அமைச்சர் அனுருத்த ரத்வத்தைக்கு, அவருடைய கட்டுப்பாட்டில் உள்ள சிறீலங்கா மின்சார சபையின் தொழிலாளர்கள், தனியார் மயமாக்கலை எதிர்த்து போராட்டத்தில் இறங்கியுள்ளதும் அவருக்கு தலையிடியைக் கொடுத்துள்ளது. 'லங்கா எலக்றிக் கம்பனி' நிறுவனத்தை அவுஸ்ரேலிய 'ஸ்னோய் மவுன்ஸ்ரன்ஸ்' இக்கம்பெனிக்கு விற்பனை செய்வதை ஆட்சேபித்து 14500 மின்சாரசபை தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் இறங்கியுள்ளனர். ஆண்டொன்றுக்கு 300 மில்லியன் ரூபா நிகர இலாபத்தைப் பெறும் இந்த மின்சார நிறுவனத்தின் 51 சதவீதமான பங்குகளை 1200 மில்லியன் ரூபாவுக்கு விற்பனை செய்வது 'தேசியக் குற்றமாகும்' என ''இலங்கை மின்சார சபையைப் பாதுகாக்கும் அமைப்பு'' கூறியுள்ளது. ஏற்கனவே மின்சாரத் தட்டுப்பாடு காரணமாக 6-8 மணி நேரம் நாடு முழுவதும் மின்சார துண்டிப்பு நடைமுறையில் உள்ளது. இதைக் காரணம் காட்டி அவசரகால நிலைமையின் கீழ் நடவடிக்கை என்ற பெயரில் ஏகபோக நிறுவனங்களுக்கு மின்சார சபையைக் கூறுபோட்டு விற்பனை செய்வதில் அரசு இறங்கியுள்ளது. இதனை எதிர்த்து தொழிலாளர்கள் வேலை நிறுத்தமும் தொடர் போராட்டங்களும் நடாத்த தொடங்கியுள்ளனர்.

மின்சார சபை தொழிலாளர்களின் போராட்டத்தை ஒடுக்குவதற்காக பொதுசன முன்னணி அரசு அத்தியாவசிய சேவையாக மின்சார சேவையைப் பிரகடனம் செய்துள்ளது. அதன்படி அத்தியாவசிய சேவைப் பிரிவுகளில் வேலை செய்வோர் போராட்டங்கள் எதுவும் செய்யக் கூடாது என்பது அரசி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



யல் சட்டமாகும். ''தொழிலாளர்கள் தமது பிரச்சனைகளுக்காக மட்டுமே போராட வேண்டும். தனியார் மயமாக்கலை எதிர்த்துப் போராடுவதை, அரசின் கொள்கைளை தீர்மானிப்பதை அனுமதிக்க முடியாது'' என சந்திரிகா கூறியுள்ளார். 'ஒபரேஷன் ஷாக்'' என்ற அதிரடி நடவடிக்கை மூலம் மின்சாரசபைத் தொழிலாளர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் 20 தொழிற்சங்கங்களின் தலைவர்களையும் சில தொழிலாளர்களையும் கைது செய்தது. விக்கிரமசிங்கா போன்ற தொழிற்சங்க தலைவர்கள் தலைமறைவாயினர். உடனடியாக வேலைக்குத் திரும்பாவிட்டால் வேலை இழப்பு, சொத்துக்கள் பறிமுதல் செய்தல், அவசரகால நிலைமையின் கீழ் கைது செய்தல் நடக்கும் என அரசு அறிவித்தது. (80-களின் வேலை நிறுத்தத்திலும் இந்த அடக்குமுறை நடந்தது). நாட்டின் மின் தேவையில் 80% வீதத்தை நீர்மின்சாரமே பூர்த்தி செய்கிறது. பருவமழை இன்மையாலும், 1977-க்குப் பின்பு புதிய மின் திட்டங்களை அமைக்காததிற்கும் மின்சார சபை தொழிலாளர்கள் காரணமல்ல. இந்த நெருக்கடியை பயன்படுத்தி தனியார் மயமாக்கும் அரசின் கொள்கையை தொழிலாளர்கள் எதிர்க்கின்றனர். நெருக்கடியான காலத்தில் தொழிலாளர் வேலை நிறுத்தம் நாட்டை இருளில் மூழ்கடிப்பதை அரசு பொறுக்காது'' என சந்திரிகா தொழிலாளர்களைப் பயமுறுத்தி அறிக்கை விட்டார். 14500 தொழிலாளர்களின் எதிர்காலத்தையும் நாட்டின் எதிர்காலத்தையும் இருளில் நிரந்தரமாக மூழ்கடிக்கும் சந்திரகா அரசை எப்படி தொழிலாளர்களால் பொறுத்துக் கொள்ள முடியும்? ஏன் பொறுத்துக் கொள்ள வேண்டும்?

வேலை நிறுத்தத்தின் போது மின்சார விநியோகம் இன்மையால், தண்ணீர் பிரச்சனையும் ஏற்பட்டது. மக்களின் அன்றாட வாழ்நிலையில் பாதிப்புக்கள் ஏற்பட்டதும் தன்னெழுச்சியான போராட்டங்கள் ஆங்காங்கே அரசுக்கு எதிராக ஆரம்பமானது. மக்கள் போராட்டங்களை எதிர் கொள்ள முடியாத அரசு தொழிலாளர்களுக்கு எதிராக மக்களைத் திசை திருப்பி விட்டது. அவசரகால நிலைமையின் கீழ் இலங்கையின் நேர அட்டவணையை கிறீன்விச் நேர அட்டவணையில் இருந்து ஒரு மணி நேரத்தை முன் நகர்த்தி நெருக்கடியை குறைக்க வழி தேடுகின்றது. மின் பற்றாக்குறையான காலத்தில் மக்களின் உளவியல் ரீதியான எதிர்ப்பின்மையைப் பயன்படுத்திமின் உற்பத்தியில் கொள்ளை இலாபம் அடிக்கும் பல்தேசிய கம்பனிகளுக்கு உற்பத்தியை தாரை வார்த்துக் கொடுக்க முயலுகிறது அரசு. வேலை நிறுத்தத்தால் கொழும்பு பொது மருத்துவமனையும் இராணுவ மருத்துவமனையும் பாதிக்கப்பட்டது உண்மை. ஆனால் இயல்பாக நடந்த இரண்டு மரணங்களுக்கு கூட மின்சார சபைத் தொழிலாளர்களின் மீது திட்டமிட்டு பழி சுமத்தியது அரசு. ''வேலை நிறுத்தத்தை முறியடிப்பதில் அவசரகாலச் சட்ட விதியைப் பாவிப்பதில் சடங்கு முறை சன நாயகத்தை பற்றி தானும் அரசும் கவலைப்படப் போவதில்லை'' என சந்திரிகா கூறியுள்ளார். தொழிலாளிக்கும் - முதலாளிக்கும், ஒடுக்

www.tamilarangam.net



கும் இனவாத அரசுக்கும் - ஒடுக்கப்படும் தேசிய இன மக்களுக்கும் என பொதுவான சனநாயகம் உலகில் எங்குமில்லை. இதை சந்திரிகாவின் 'சமா தான சேலையில் தொங்கும் சனநாயகவாதிகள்' புரிந்து கொள்ள வேண்டும்.

இதே வேளை மின்சார சபை தொழிலாளர்கள் போராட்டத்தை ஆதரித்து கூட்டுத் தொழிற்சங்கம் போராட்டத்தை தொடங்கியுள்ளது. அவசரகால நிலைமையைப் பயன்படுத்தி மின்சார சபை தொழிலாளர்களின் போராட் டத்தை முறியடிப்பதை நிறுத்த வேண்டும். அவர்களின் கோரிக்கைகளை தாமதிக்காது நிறைவேற்ற வேண்டும், தனியார் மயமாக்கலில் இருந்து அரசு நிறுவனங்களைப் பாதுகாத்தல் என்பன போன்ற கோரிக்கைகளை வைத்து போராட்டத்தை ஆரம்பித்துள்ளன. வங்கி, இரும்பு உருக்கு, புகையிரதம், நீர் விநியோக சபை, காப்புறுதி, தபால் தொலைத் தொடர்பு உட்பட இன்னும் பல அரச நிறுவனங்களின் தொழிற்சங்கங்கள் இக் கூட்டுத் தொழிற்சங்கத்தில் அங்கம் வகிக்கின்றன. ''அரசு நிறுவனங்களைதனியார் மயமாக்கலில் இருந்து பாதுகாக்க வேண்டும்'' என்ற நோக்கில் இந்த 9 தொழிற்சங்கங்களும் இணைந்து கூட்டுத் தொழிற்சங்கத்தை உருவாக்கியுள்ளன.

கடந்த சித்திரை மாதத்தில் 5 இலட்சம் தோட்டத் தொழிலாளர்கள் தமது அடிப்படை உரிமைகளுக்காக ஒரு வாரம் அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். பொதுசன முன்னணி அரசில் அங்கம் பெறும் கட்சிகளும் அமைச்சர்களும், தொழிற் சங்கங்களும் கூட இதில் பங்கேற்றன. அதற்கு முன் 3700 மருத்துவர்கள் நாடத்திய 9 நாள் வேலை நிறுத்தமும் அமெரிக்க ஒலிப ரப்பு கூட்டுத் தாபனத்தை எதிர்த்து புத்தளம் விவசாயிகள் நடாத்திய போராட் டம் என எல்லாம் அரசை பேச்சு வார்த்தைக்கு இறங்கி வரச் செய்துள்ளது. சந்திரிகா அரசின் பொருளாதார, கல்வி, வேலை வாய்ப்புக் கொள்கைகளுக்கு எதிராக மக்களின் அவ்அவ்துறை சார்ந்த போராட்டங்கள் எல்லாம் தனியார் மயமாக்கல் திட்டத்திற்கும் ஏற்கனவே நடந்த தனியார் மயமாக்கலால் உரு வான வேலை இழப்பு, ஆட்குறைப்பு, நிலப்பறிப்பு, மூலவள அழிப்பு, வேலைக்கான உத்தரவாதம், சம்பள உயர்வு, அடிப்படை வசதிகள் கோரியு மான போராட்டங்களாகும்.

UNP அரசும் பின் சந்திரிகா அரசும் தேயிலை, றப்பர் தோட்டங்களை தனியார் மயமாக்கியதால் தோட்ட தொழிலாளர்களின் (சிங்களவர் - தமிழர் கள்) வேலை நிலைமையிலும் வாழ்நிலையிலும் ஏற்பட்ட பல பொளாதாரப் பிரச்சனைகள், தொழிற்சங்க உரிமைப் புறக்கணிப்பு, தேசிய அடையாள அட்டை இன்மையும், பொலீசு அடக்கு முறையும், தோட்ட தமிழர்களுக்கு எதிரான ''விழிப்பான பாதுகாப்பு நடவடிக்கை'' என்ற இன ஒதுக்கலும், தோட் டத் தொழிலாளர்களை அரசு மேல் விரக்தியடைச் செய்துள்ளது. பங்குனி மாதத்தில் பூண்டுலோயா, சீன், மடக்கும்புர தோட்டங்களில் லட்சக்கணக்

www.tamilarangam.net



கான தொழிலாளர்கள் தன்னெழுச்சியாக வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். தொழிலாளர்களின் மனக் கொந்தளிப்பை, தன்னெழுச்சியான போராட்டத்தை எந்த தொழிற் சங்கங்களும் கண்டு கொள்ளவில்லை. பின்னர் ''தொழிலாளர் போராட்டம் அரசியல் போராட்டமாக மாற்றப்படும்'' என்று கூறிய P. காதரும் (ம.ம.மு)''. ''தோட்டத் தொழிலாளர்களை ஏமாற்ற முடியாது'' என தொண்டமானும் (இ.தொ.கா) அறிக்கை விட்டனர் இவர்களுடன் சேர்ந்து ரொட்ஸ்கிய, திரிபுவாத கட்சிகளின் தொழிற்சங்கங்களும் கூட்டாக சித்திரை 22-இல் ஒரு வாரகால அடையாள வேலை நிறுத்தத்திற்கு அழைப்பு விட்டனர். பிரேமதாச ஆட்சியில் தோட்டங்கள் தனியார் மயமாக்கப்பட்ட போது ஒப்புக் கொள்ளப்பட்டும் இதுவரை வழங்கப்படாத 8 ரூபா சம்பள உயர்வு, 300 நாள் வேலைக்கு உத்தரவாதம், போன்ற கோரிக்கைகளை முன் வைத்தன.

தோட்டத் துரைமார் சங்கமும், அரசும் இவ்வேலை நிறுத்தத்தை முறியடிக்கப் போவதாக அறிவித்தன. 8/- சம்பளம் அதிகரித்தால் ஆண்டுக்கு 3000 பில்லியன் ரூபா வேண்டும் எனவும் தோட்டத் தொழிலாளர் குடும்பங்கள் 2.5% வேலை வாய்ப்பைப் பெற்றுள்ளது. வெளியே உள்ள தொழிலாளர் குடும்பங்கள் 1.5% தான் வேலை வாய்ப்பைப் பெற்றுள்ளனர் எனவும் 200 நாள் வேலைக்குத் தான் உத்தரவாதம் கொடுக்க முடியும். அதுவும் மின்சாரப் பற்றாக்குறையால் கடினமாக உள்ளது என்று கூறி தொழிலாளர் கோரிக்கையை துரைமார் சங்கம் நிராகரித்தது. வேலை நிறுத்தம் தொடங்கி 3-வது நாள் மலையக மக்கள் முன்னணி போராட்டத்தில் இருந்து விலகிக் கொண்டது. துரோகி தொண்டமான் தமிழ்நாட்டில் இருந்து கொண்டு தன்னுடைய பேரன் ஆறுமுகம் தொண்டமான் மூலம் வேலை நிறுத்தம் தொடர்வதாக அறிவித்தார். இந்த ம.ம. முன்னணியின் சந்திரசேகரனும், இ.தொ.கா.வின் தொண்டமானும் சந்திரிகா அரசின் அமைச்சர்கள். லங்கா சமசமாஜக் கட்சியினதும், திரிபுவாத கொம்யூனிசக் கட்சியினதும் தொழிற்சங்கங்களும் ம.ம.மு, இ.தொ.கா.வுடன் சேர்ந்து தொழிலாளர் போராட்டத்தை திசை திருப்பி சமரச பாதைக்கு தள்ளி விட்டனர். தன்னெழுச்சியாக தொடங்கிய தொழிலாளர் போராட்டத்தை வேலை நிறுத்தமாக அறிவித்து தீர்வுகள் இன்றி இப் பாராளுமன்ற தொழிற் சங்கங்கள் தொழிலாளர்களுக்குத் துரோகம் இழைத்தன. 80-களின் நடந்த வேலை நிறுத்தத்தில் ஆண்-பெண் தொழிலாளர்களுக்கு சம சம்பளம் மற்றும் சம்பள உயர்வு பெற்றுக் கொடுத்த இப்போராட்டம் அரசால் கடுமையாக ஒடுக்கப்பட்டது. அதனால் வேலை இழந்த 7000 தொழிலாளர்களுக்கு இதுவரை வேலை கிடைக்கவில்லை. வறுமையால் தொழிலாளர்கள் தற்கொலை கூட செய்தனர். வேலை நிறுத்தத்தில் உயிர் இழந்தவர்களின் விதவை மனைவியர்க்கு அறிவிக்கப்பட்ட நஷ்டஈடு 1 இலட்சம் இன்னமும் கொடுக்கப்படவில்லை. இக் கோரிக்கைகள் எல்லாம் கருங்காலி தொழிற்சங்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கங்களால் காற்றில் பறக்கவிடப்பட்டுள்ளது. தொழிலாளர்களிடம் சந்தாப் பணம் வாங்குவதும் தொழிற்சங்க தேர்தலுக்கும், பாராளுமன்ற தேர்தலுக்கும் ஒட்டுச் சேகரிப்பதும் தான் இவர்களின் வேலை ஆகவுள்ளது.

சிறீலங்காவில் இன்று மூன்று விதமான அரசியல் சக்திகளின் தொழிற்சங்கங்கள் இருக்கின்றது. முதலாவது முதலாளித்துவ நிலப்பிரபுத்துவ வல்லரசிய நலன் சார்ந்த UNP, SLFP, இ.தொ.கா. TULF போன்ற கட்சிகளின் தலைமையில் உள்ள தொழிற்சங்கங்கள், இரண்டாவது றொட்ஸ்கியவாதக் கட்சிகளான LSSP, NSSP, RLSSP, மற்றும் திரிபுவாத கொம்யூனிஸ்ட் கட்சிகளின் தலைமையில் உள்ள தொழிற்சங்கங்களும் உள்ளன. இவை தொழிற்சங்க வாதத்திலும், சீர்திருத்த வழியிலம் பொருளாதாரப் போராட்டங்களிலும் தொழிலாளர்களை இழுத்துச் செல்கின்றன. மூன்றாவதாக மார்க்சியத்தை சந்தர்ப்பவாதமாகப் பேசிக் கொள்ளும் JVP போன்ற குட்டி முதலாளிய இயக்கங்களின் தலைமையில் உள்ள தொழிற் சங்கங்கள், இவை தொழிலாளர்களை போர்க்குணம் மிக்க பொருளாதாரப் போராட்டங்களில் ஈடுபடுத்துவதுடன், தொழிலாளர்களை அவர்களது சொந்த அரசியல் அதிகாரத்திற்கான கோரிக்கைகள் போராட்டங்கள் வழியாக அணிதிரட்டி அவர்களையும் ஆயுதப் போராட்டத்திற்கு தயாராக்குவதில்லை. மாறாக மாணவர்கள் இளைஞர்களின் ஆயுதப் போராட்டத்திற்கான ஆதரவு தெரிவிக்கும் உதவி வழங்கும். வெகுசன ஆதரவு அமைப்புக்கள் என்ற எல்லைக்குள் தொழிற்சங்கங்களை தொழிலாளர் போராட்டங்களை நிறுத்தி விடுகின்றனர். இவை அனைத்துக்கும் மத்தியிலும் செங்கொடி சங்கம் போன்ற சிலபுட்சிகர தொழிற்சங்கங்களும் இருக்கின்றன. ஆனால் இவை மிக பலவீனமாக இருக்கின்றன.

தொழிற்சங்க இயக்கத்திற்கு இலங்கையில் நீண்ட வரலாறு உண்டு. தொழிற்சங்கப் போராட்டங்கள் காலனிய இலங்கையில் தொடங்கி நவகாலனிய கட்டத்திலும் தொடர்கிறது. இலங்கையின் அரசியலில் தொழிற்சங்க இயக்கங்கள் தீர்மானகரமான சக்திகளாக இருந்தன. ஆளும் வர்க்கம் தொழிலாளர்களை இன ரீதியாக பிளவுபடுத்த ஆரம்பித்ததில் இருந்து ஆளும் கட்சிகளின் தொழிற்சங்கங்கள் சிங்கள இனவாதத்திற்கும் பௌத்த மதவாதத்திற்கும் தொழிலாளர்களை பலியாக்கி வந்துள்ளது. A.E. குணசிங்கா போன்ற முதிர்ந்த தொழிற்சங்கவாதிகள் கூட காலனிய கட்டத்திலேயே தொழிற்சங்க இயக்கத்தை சிங்கள இனவாதத்திற்கு இரையாக்கினர். அதே வேளை இன, மதவாதத்தையும், அரசையும், இனவாத தொழிற்சங்கங்களையும் எதிர்த்து தொழிலாளர்களை ஐக்கியப்படுத்திப் போராடியதிலும் இடதுசாரி தொழிற்சங்கங்கள் பெரும் பங்கு வகித்தது.

1942- 1945-களில் நடந்த தேயிலை, றப்பர் ஏற்றுமதி துறைகளின் தொழிற்சங்க போராட்டம், 1947 மே பொது வேலை நிறுத்தம், 1955 பஸ் கொம்பனி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஊழியர்கள் போராட்டம், 1957,58-களில் முறையே LSSP, CPC தலைமையில் நடந்த துறைமுகத் தொழிலாளர் உள்ளிட்ட பொது வேலை நிறுத்தம், 1962-இல் இலங்கை போக்குவரத்து சபை தொழிலாளர் போராட்டம், 1966-இல் தமிழ் மொழி பாவிப்புக்கு எதிராக நடந்த வகுப்புவாத வேலை நிறுத்தம், (SLFP, LSSP, CPC கட்சிகளின் தொழிற்சங்கங்கள் நடாத்தியது) 67 -68 களில் உலக வங்கியின் நிர்ப்பந்தத்தால் செய்யப்பட்ட 20% வீத பண மதிப்பிறக்கத்திற்கும், விலை உயர்வுக்கு எதிராகவும், சம்பள உயர்வுக்காக தனியார் துறை - அரசாங்க துறை வேலை நிறுத்தங்கள், 1970-களில் செங்கொடி சங்கம் தலைமை தாங்கிய தோட்டத் தொழிலாளர்களின் வேலை நிறுத்தம், 1976-இல் புகையிரத தொழிலாளர் வேலை நிறுத்தம் என்பன முக்கியமா னவை.

வடக்கு கிழக்கு பகுதிகளில் இருந்த அரசு துறை நிறுவனங்களில் நடந்த தொழிற்சங்க போராட்டங்கள் எல்லாம் அரசால் இனவாத அணுகுமுறையில் ஒடுக்கப்பட்டது. சில தொழிற்சாலைகள் மூடப்பட்டு தொழிலாளர்கள் வீட் டுக்கு அனுப்பப்பட்டனர். காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை, பரந்தன் இரசாயனக் கூட்டுத்ஸ்தாபனத் தொழிலாளர்களின் சம்பள உயர்வுக் கோரிக் கைகள் கூட இனவாத தொழிற்சங்கங்களாலும் அரசாலும் ஏற்றுக் கொள்ளப்ப டவில்லை. சிங்கள தொழிலாளர்கள் என்ற போர்வையில் 1980-களில் சிங்கள குண்டர்களால் காங்கேசன் துறை சீமெந்து தொழிற்சாலையில் சில தமிழ் பொறியியலாளர்கள் வேலை நேரத்திலேயே அடித்துக் கொலை செய்யப்பட் டனர். 1976-க்குப் பின்பு இவ்விரண்டு தொழிற்சாலைகளின் வளர்ச்சிகளும் அரசால் தடுக்கப்பட்டது. தமிழ் தொழிலாளர்கள் வீதியில் நிறுத்தப்பட்டனர். இதே போன்று ஆனையிறவு உப்பு தொழிற்சாலை, புல்மோட்டை இல்ம னைட் தொழிற்சாலை, வாழைச்சேனை காகித ஆலை, கல்லோயா, கந்தளாய் பகுதியில் உள்ள சீனி, சாராய தொழிற்சாலைகள், ஓட்டி சுட்டான் ஓட்டுத் தொழிற்சாலை இது போன்ற பல வடகிழக்கு பகுதிகளில் இருந்த அரசுதுறை நிறுவனங்களில் தொழிலாளர்கள் நடாத்திய தொழிற்சங்க போராட்டங்கள் எல்லாம் சிறீலங்கா அரசாலும் தொழிற்சங்களாலும் இனவாத முலாம் பூசப் பட்டு, சில தொழிற்சாலைகள் சிறீலங்காவிற்கு மாற்றப்பட்டன. சில மூடப் பட்டன. வடக்கு கிழக்கு தொழிலாளர்களின் போராட்டங்களை சிறீலங்கா அரசு நசுக்குவதற்கு தமிழ் தரகுமுதலாளி வர்க்கமும், TULF-கட்சியும் திரிபு வாத தொழிற்சங்கங்களும் அரசுக்கு உறுதுணையாக இருந்தன. இவ்வாறு தொழிற்சங்கப் போராட்ட வரலாற்றை புரட்டினால் ஒவ்வொரு கட்டத்திலும் மேலே பார்த்த மூன்று விதமான அரசியல் சக்திகளின் தொழிற்சங்க அணுகுமு றைகளை பார்க்க முடியும்.

இலங்கை ஆளும் வர்க்கத்தின் பொருளாதார நலன்களுக்காக, நவகால னிய வல்லரசிய சுரண்டலுக்காக U.N.P. S.L.F.P. இவற்றின் கூட்டணி அரசுக

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ருக்கிறது. இவ்விடுதலை யுத்தம் 1987கள் வரைU.N.P. தலைமையிலான அரசுக்கும், படைகளுக்கும் எதிராக பிரதானமாக 5 போராளி இயக்கங்களின் இராணுவ நடவடிக்கைகள் அடங்கிய விடுதலை யுத்தமாக இருந்தது. 1987-1990-க்கு இடைப்பட்ட காலம் இந்திய ஆக்கிரமிப்புக்கு எதிராக புலிகள் தலைமை தாங்கிய ஆக்கிரமிப்பு எதிர்ப்பு யுத்தமாகவும், 91-94-ல் மீண்டும் U.N.P. அரசுக்கும், பின்னர் 95 முதல் இன்று வரை S.L.F.P. தலைமையிலான மக்கள் கூட்டணிக்கும், சிறீலங்கா படைகளுக்கும் எதிரான தேசிய விடுதலை யுத்தமாகவும் நடக்கிறது. மூன்று தனித்தன்மை வாய்ந்த சட்டங்களை தமிழீழ தேசிய விடுதலை யுத்தம் சந்தித்துள்ளது. கடைசி இரண்டு கட்டங்களிலும் புலிகள் மட்டுமே யுத்தத்தின் தனிச் சக்தியாகவுள்ளனர்.

யாழ், தேசிய விடுதலை யுத்தத்தின் வளர்ச்சியில் கடந்த 5 ஆண்டுகளாக புலிகளின் கட்டுப்பாட்டு பகுதியாக, எதிரியை முடமாக்கல் நிலைக்கு தள்ளிய பிரதேசமாக இருந்தது. எதிரியின் ஒப்பறேசன் தண்டர் போல், முன்னேறிப் பாய்தல், சூரிய ஒளி இராணுவ நடவடிக்கைக்கு பின் யாழ் மீண்டும் அரசின் கட்டுப்பாட்டு பகுதியாக மாறியுள்ளது. புலிகளை தற்காப்பு கட்டத்துக்குதள்ளிய பிரதேசமாகியுள்ளது. புலிகள் எதிரிக்கு எதிராக புலிப்பாய்ச்சல், தவளைப்பாய்ச்சல் மீண்டும் தாக்கும். இராணுவ நடவடிக்கைகள் மூலம் எதிரியை ஒரளவு நிலை குலையச் செய்தனர். இராணுவ நடவடிக்கைகள் மூலம் எதிரியை ஒரளவு நிலை குலையச் செய்தனர். இறுதியில் புலிகளே தமது கட்டுப்பாட்டு பகுதியை விட்டு பின் வாங்கியுள்ளனர் என்பதே உண்மை.

அரசு தனது இராணுவ வெற்றிக்கு இராணுவத்தின் போர்த்திறமையையும் கூடவே, தமிழ் மக்கள் புலிப்பயங்கரவாதத்தை நிராகரித்து அமைதியை - அரசியல் தீர்வை விரும்புகிறார்கள் என்கிறது. இனவாத படைகளின் இராணுவ வெறியை மெச்சுவதுடன் ஊக்குவிக்கிறது. தேசிய இனப் பிரச்சனைக்கு அரசியல் தீர்வு எனக் கூறி மோசடி அதிகார பரவலாக்க திட்டத்துள் புலிகளைக் கூட முழ்கடிக்க முயலும் சர்வதேச பிரச்சாரத்தை கட்டவிழ்த்து விட்டுள்ளது.

இராணுவதளபதி ஜெரி. டி. சில்வாவுக்கு அடுத்து 14-வது இராணுவ தளபதியாக இம்மாதம் பொறுப்பு ஏற்றுள்ள ஜெனரல் றோகான் தலுவத்தை ''புலிகளை பலவீனமடையச் செய்து அரசியல் தீர்வுக்கு அழைத்து வருவதே எமது நோக்கம். படைத்தளபதி என்ற முறையில் நான் ஒரு பக்க கடமையை நிறைவேற்றுவேன்'' என கூறியுள்ளார்.

புலிகள் பலவீனப்பட்டுளளதை கண்டு ஒரு புறம் உள்ளூர குதுகலிக்கின்ற தமிழ்த்துரோக தலைமைகள் மறுபக்கம் புலிகள் மேலும் மேலும் பலவீனப்பட்டால் அரசு தங்களைக் கூட கண்டு கொள்ளாது போய்விடுமோ என்ற அச்சத்தில் புலிகள் வரையறுக்கப்பட்டு பலவீனப்பட வேண்டும் எனவும் அவர்களையும் அரசியல் பேச்சில் கலக்க வைக்க வேண்டும் என்றும் கருதுகின்றன. அரசு தன்னால் முடிந்த வரை புலிகளை பலவீனப்படுத்துவதுடன்

www.tamilarangam.net



''மோசடி தீர்வு திட்டத்துள்'' புலிகளையும் கலக்க வைத்து தேசிய இனப்பிரச்ச னையை 87-களில் திசை திருப்பியது போன்று 97-களில் முழுவதுமாக திசை திருப்ப முயல்கின்றது.

புலிகள் தங்கள் பின் வாங்கலுக்கு - தோல்விக்கு காரணமாக அரசு படை களை எதிர்த்து நின்று பிடிக்காததற்கு காரணமாக மீண்டும் யாழை கைப்பற்ற தேவையாக கனரக ஆயுதங்கள் (Artillery) வேண்டும். அதற்கு பணம் வேண் டும். போர் புரிய மனிதபலம் வேண்டும் என்று மட்டும் முன் வைக்கின்றனர்.

இன்று வரையிலான தேசிய விடுதலை யுத்தத்தில் புலிகளின் யுத்த பங்க ளிப்பே பிரதானமானதும் தொடர்ச்சியானதும் ஆகும். இனியும் எவ்வளவு தூரம்? எவ்வளவு காலம்? தமது யுத்த பங்களிப்பை தொடர்வர்? மீணடும் யாழைப் பிடிப்பார்களா? இல்லையா? கிளிநொச்சியை மையமாக கொண்டு ''தென் தமிழீழத்தை'' உருவாக்குவார்களா? முல்லைதீவில் தமிழீழ வைப்ப கத்தை வங்கியை தொடக்கி விட்டார்களே!

தமிழீழ தேசம் சுதந்திரம் அடைய வேண்டும், மக்கள் விடுதலை பெற வேண்டும். தேசிய விடுதலைப் போராட்டமும், போரும் முன்னேற வேண் டும். இதற்கு தடையாகவுள்ள அரசியல் - இராணுவத்தடைகளை, பலவீனங் களை கண்டு பிடித்து களைய விரும்புபவர்கள் முகங் கொடுக்க வேண்டிய கேள்வி? யாழ்ப்பாணத்தை புலிகள் இழந்ததற்கான அடிப்படையான அரசி யல்சார் இராணுவக் காரணிகள் என்ன? தேசிய விடுதலை யுத்தம் மூலோபாய ரீதியாக எந்த கட்டத்தில் இருக்கிறது? தேசிய விடுதலை யுத்தம் வளர்ந்துள் ளதா? வீழ்ச்சி நிலையில் உள்ளதா? என்பதே மையமான பிரச்சினை. யுத்தம் வளர வேண்டும். இந்த யுத்தத்துக்காக இது நாள் வரை சிந்திய ரத்தமும், எல்லா இழப்புகளும் வீண்போகக் கூடாது தேசிய விடுதலையும், யுத்தமும் காட்டிக் கொடுக்கப்படுவதை, திசை திருப்பப்படுவதை அனுமதிக்கக் கூடாது என விரும்பும் உண்மையான தமிழீழ தேசபக்தர்கள் புரட்சியாளர்கள் சனநாயவா திகள், ஆதரவாளர்கள் எல்லாரும் சிந்திக்க வேண்டிய தருணம் இதுதான்.

## தமிழீழ தேசிய விடுதலை யுத்தம் மூலோபாய ரீதியில் எந்த கட்டத்திலுள்ளது. யாழ் தோல்வி யுத்தத்தின் வளர்ச்சியா? தேக்கமா?

தமிழீழ தேசிய விடுதலைப் போர், வழமையாக பலராலும் 1ம், 2ம், 3ம், 4ம் கட்ட ஈழப் போர் என எழுதப்படுகிறது. தேசிய விடுதலை யுத்தம் இரா ணுவ அர்த்தத்தில் எந்த கட்டம் என்பதை புரிய வேண்டுமானால் முதலில் தேசிய விடுதலை யுத்தத்தின் மூலோபாய ரீதியான மூன்று கட்டங்களை பார்ப்போம்.

www.tamilarangam.net



1. எதிரியின் மூலோபாய ரீதியான தாக்குதலும், எமது மூலோபாய ரீதியான தற்காப்பு கால கட்டம்.
2. எதிரியின் மூலோபாய ரீதியான பாதுகாப்பினதும், எமது எதிர் தாக்குதலுக்கான தயாரிப்பின் கால கட்டம்.
3. எமது மூலோபாய ரீதியான எதிர்த் தாக்குதலினதும், எதிரியின் மூலோபாய ரீதியான பின் வாங்குதல் கால கட்டம்.

(நீண்ட கால யுத்தம் - மா. சே.துங்)

தமிழீழ மக்களின் தேசிய விடுதலை யுத்தமானது. தமிழீழ பகுதியை ஒரு முழுமையான யுத்த நிலைமையாக எடுப்பதில் இருந்து உருவாகிறது... இதிலிருந்து தான் இராணுவ மூலோபாயம் வகுக்கப்பட வேண்டும். ஒரு முழுமையான யுத்த நிலைமை பற்றிய விஞ்ஞானமே இராணுவரீதியான மூலோபாய மாகும். 1984-கள் வரை சிறீலங்கா அரசுப்படைகள் (எதிரி) மூலேபாய ரீதியான தாக்குதலிலும், புலிகள் உட்பட போராளி இயக்கங்கள் எல்லாம் மூலோபாய ரீதியான தற்காப்பு நிலையும் என்ற முதலாவது கட்டத்தில் தேசிய விடுதலை யுத்தம் இருந்தது.

போராளிகள் தற்காப்பு நிலையில் இருந்து கொண்டே எதிரி மீது தந்திரோபாய ரீதியான தாக்குதல்களையும், போர் நடவடிக்கைகளும் செய்தனர். எதிரி தனது மூலோபாய ரீதியான தாக்குதல் நிலையில் இருந்து தேடுதல் வேட்டைகளை, சுற்றி வளைப்புக்களை நடத்தினான், காத்திருந்து சில போர் நடவடிக்கைகளை கூட செய்தான் ஆனால் போராளிகளின் மேலோங்கிய தற்பாதுகாப்பு நடவடிக்கைகளும் தந்திரோபாயமான பரந்தளவிலான கொரில்லா தாக்குதல்களும், பொலிஸ் நிலையங்கள் மேலான தாக்குதல் வெற்றிகளும் வளர்ந்தது. சில தாக்குதல்கள் தோல்வி கண்ட போதும், போராளிகளின் இராணுவ செயல்பாடுகள் கையோங்கி இருந்தது. இனக் கலவரங்களால், சிறைப்படுகொலைகளால், எதிரியின் இராணுவ நடவடிக்கைகளால் உள்நாட்டிலும் - வெளிநாட்டிலும் போராளிகளின் பக்கம் பலம் வளர்ந்து கொண்டிருந்தது. போராளிகளின் தொடர்ச்சியான கொரில்லா தாக்குதல்களால் எதிரி தனது எல்லா அன்றாட நடவடிக்கைகளிலும் அச்சத்துடன் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டான். (பொலிசு நிலையம், இராணுவ முகாம், ரெயில் போக்குவரத்து, நடமாட்டத்தில், உணவு குடிநீர் போக்குவரத்தில்... என கொரில்லா தாக்குதலை முகங்கொண்டான். தவிர்க்க முடியாது பின்வாங்குவதிலும், தற்காப்பு நடவடிக்கையிலும் இறங்கினான் முதல் கட்டத்தில் யுத்தத்தில் ஏற்பட்ட இவ் எதிர்மறை வளர்ச்சி 1985-களில் தமிழீழ விடுதலை யுத்தம், மூலோபாய ரீதியாக இரண்டாவது கட்டத்துள் காலடி எடுத்து வைத்தது.

எதிரி மூலோபாய ரீதியான பாதுகாப்பிற்கும், போராளிகள் எதிர் தாக்குதலுக்கான தயாரிப்பின் கால கட்டத்துள் நுழைந்தனர். முதலாவது கட்டத்தில். எதி

www.tamilarangam.net



ரிக்கு எதிராக செய்த இராணுவ நடவடிக்கைகள் தொடர்ந்து கொண்டிருந்தது. அதே வேளை 85-களில் போராளி இயக்கங்களுக்கு இடையில் ஏற்பட்ட மோதல், இயக்க உள்மோதல், இந்தியாவின் இராணுவ ஊக்குவிப்பில் இந்திராகாந்தி இறப்புக்கு பின் ஏற்பட்ட மாற்றம். மற்ற இயக்கங்கள் மேல் புலிகளின் தடைவிதிப்பு. இவை போராளிகள் மத்தியில், உள்நாட்டு - வெளிநாட்டு மக்கள் மத்தியில் ஏற்படுத்திய தாக்கம், அனைத்தாலும் போராளிகளின் இராணுவ ரீதியான ஒட்டு மொத்த பலத்தில் ஏற்பட்ட சிதறல்களும் - வீழ்ச்சிகளும் (போராளி இயக்கங்கள் எதிரிக்கு எதிராக கூட்டு இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டதில்லை) யுத்தத்தின் வளர்ச்சியில் தாக்கத்தை ஏற்படுத்தியது. ஆனால் இவற்றுக்கு மத்தியிலும் யாழில் எதிரி பெரிய முகாம்களை விட்டு வெளியில் வந்து நடமாடுவதை தடுப்பதில் எல்லாப் போராளி இயக்கங்களும் தமது கொரில்லாப் போர் முறையின் முழுச் சக்தியையும் பயன்படுத்தினார்கள்.

இராணுவரீதியில் நோக்குகையில் விடுதலை யுத்தத்துக்கு இரண்டு வடிவங்கள் உண்டு ஒன்று கொரில்லா யுத்தம். இரண்டாவது கிரமமான யுத்தம். இந்த இரண்டும் ஏக காலத்தில் உருவாகி வளர்வதில்லை. நீண்ட கால மக்கள் யுத்த பாதையின் ஆரம்ப வடிவம் கொரில்லா யுத்தம். ஆரம்ப வடிவமான கொரில்லா யுத்தம் தொடக்கத்தில் பிரதான போராட்ட வடிவமாகவும் இருக்கிறது. இது படிப்படியாக வளர்ந்து கிரமமான யுத்தமாக மாற்றமடைய வேண்டும் கிரமமான யுத்தம் போராட்டத்தின் யுத்தத்தின் பிரதான வடிவமாக மாறிய பின்னரும் கொரில்லா யுத்தம் அதன் துணை அம்சமாக தொடர்ந்து நீடிக்கும். இத்தகைய மாற்றம் யுத்தத்தின் மூலோபாய ரீதியான வளர்ச்சி கட்டங்களுடன் பிரிக்க முடியாதபடி ஒன்றை ஒன்று சார்ந்தும் யுத்தம் வளர்கின்றது. விடுதலை யுத்தத்தின் இந்த இரண்டு வடிவங்களும், இரண்டு விதமான படைவடிவங்களை ஆயுத வகைப்படுத்தல், படை வியூகங்கள்(Formation) யுத்த நடத்தைகள் என இன்ன பிற வேறுபாடுகளை கொண்டது.

தமிழீழ போராளிகள் கொரில்லா யுத்த முறையிலிருந்து கிரமமான யுத்த முறைக்கு வளரவில்லை. அல்லது அதன் ஆரம்ப வடிவங்களை மட்டும் தொட்டிருந்தனர். மூலோபாய ரீதியான எதிர் தாக்குதலுக்கான நமது தயாரிப்புக்கான 2-வது கட்டத்திலும் சிறு இராணுவ முகாம்கள், பெரிய பொலிஸ் நிலையங்கள் மீது போராளிகள் தாக்குதல்களை நடத்தினர். கிழக்கிலும், வடக்கின் எல்லை மாவட்டங்களிலும் கொரில்லா தாக்குதல்களை தற்காப்பில் இருந்து கொண்டு நடத்தினர். சிலதில் வென்றனர். எதிரி தான் தாக்குதல் கட்டத்தில் இருந்த போது உருவாக்கிய மினி முகாம்களை, பொலிஸ் நிலையங்களை தந்திரோபாய ரீதியாக பின் வாங்கினான். பெரிய இராணுவ முகாம்கள், பொலிஸ் நிலையங்களுடன் அவற்றை இணைத்தான். போராளிகள் எதிரி மூலோபாய ரீதியாக பின் வாங்க தொடங்கி விட்டதாக கருதினர். தாங்கள்

www.tamilarangam.net



ளால் ஊக்கப்பட்டுத்தப்பட்ட தனியார் மயமாக்கல் (தோட்டத்துறையில் நடந்த தேசிய மயமாக்கலில் கூட 1000 ஏக்கருக்கு மேல் வைத்திருந்த தனியாரின், பல் தேசியக் கொம்பனிகளின் தோட்டங்கள் தேசிய மயமாக்கப்படவில்லை). தாராள மயமாக்கல், அந்நிய செலாவணிக்காக ஏற்றுமதிமயமாக்கல், நவீனமயமாக்கல், உலகமயமாக்கல் கொள்கைகளால் உருவான பொருளாதாரச் சுரண்டலுக்கும் அரசியல் அதிகார ஒடுக்கு முறைக்கும் எதிரான தமிழ் - சிங்கள மக்களின் போராட்டங்கள் இன்று இலங்கையை குலுக்கிக் கொண்டிருக்கின்றது. சிங்கள ஆளும் வர்க்கம் இனமதவாதத்தைக் கொண்டு சுரண்டப்படும் மக்களைப் பிளவுபடுத்தியது. பொருளாதாரப் போட்டியில் சிங்கள முதலாளி வர்க்கத்திற்கு முன்னுரிமை கொடுத்து அதை நிலை நிறுத்தி சிறீலங்கா அரசு தமிழ் தேசிய ஒடுக்கு முறையை தொடர்கிறது. தமிழ் மக்களின் போராட்டத்தை பயங்கரவாதப் போராட்டமாக சித்தரித்து, நாட்டைப் பிளவுபடுத்தும், சிங்கள மக்களுக்கு எதிரான போராட்டமாக காட்டுகிறது. சிங்கள மக்களை மேலும் மேலும் இன,மத வாத சகதிக்குள் புதைக்க முயல்கின்றது. ஆனால் சிறீலங்காவில் உள்ள சிங்கள - தமிழ் - முஸ்லீம் மக்களின் வாழ்க்கைப் போராட்டம் வர்க்கப் போராட்டங்கள் மேலெழுந்து வருவதை அரசால் தடுத்து விடவோ, அழித்து விடவோ முடியவில்லை. சிறீலங்காவில் நடந்த அண்மைக்கால தொழிற்சங்க போராட்டங்கள் இதை வெளிப்படுத்தியுள்ளது.

இலங்கை தரகு - அதிகார வர்க்க முதலாளிவர்க்த்தையும் வல்லரசுகளையும் நலகாலனிய இனவாத அரசையும் தோற்கடிப்பதால் மட்டுமே தமிழீழ - சிறீலங்கா தேசங்கள் மீதான தேசிய ஒடுக்குமுறையை மக்கள் மேலான சுரண்டலை இல்லாதொழிக்க முடியும். இப்பொது எதிரிகளுக்கு எதிராக கிளர்ந்தெழுந்த மக்களின் போராட்டங்களை சிறீலங்காவில் திரிபுவாத கொம்யூனிச கட்சியும், ரொட்ஸ்கியவாத கட்சிகளும், தமது வயிற்றுப் பிழைப்புக்காக பாராளுமன்ற அரசியலுக்குள் திசை திருப்பி மூழ்கடித்துள்ளனர். தொழிலாளர்களை இனவாத சகதிக்குள் நேரடியாகவும் - மறைமுகமாகவும் தள்ளிவிட்டுள்ளன. குட்டி முதலாளித்துவ இடதுசாரி இயக்கமான J.V.P. தனது அதிதீவிரவாத போராட்டத்தால் பெரும் தோல்வியை கண்டுள்ளது. இதுவும் இனவாத அரசியலுக்குள் சிங்கள தொழிலாளர்கள் பலியாக கணிசமான பங்கு வழங்கியுள்ளது.

தமிழீழ மக்களின் தேசிய விடுதலைப் போராட்டம் TULF ஆல் தொடக்கம் முதல் காட்டிக் கொடுக்கப்பட்டது. குட்டி முதலாளித்துவ தேசிய இயக்கங்களால் திசை திருப்பப்பட்டு துரோகம் இழைக்கப்பட்டுள்ளது. போராடும் தமிழ் முதலாளிவர்க்க - புலிகளால் அவர்களின் குறுகிய தேசிய வெறியால், வல்லரசு எதிர்ப்பின்மையால் பொது எதிரிகளுக்கு எதிராக சிறீலங்கா மக்களின் போராட்டங்களுடன் அய்க்கியப்பட முடியாதுள்ளது. தொழிலாளர்

www.tamilarangam.net



போராட்டங்களை ஆதரிக்க கூட முடியாதுள்ளது, பொது எதிரியை தோற்கடிக்க முடியாதுள்ளது.

இக்கடமையை சரிவர நிறைவேற்றக் கூடிய புரட்சிகர கொம்யூனிச சக்திகள் நாட்டின் குறிப்பான போராட்ட சூழ்நிலைமைகளை புரிந்து கொண்டு, போராட்டங்களுக்கு தலைமை தாங்கி அமைப்பு ரீதியில் வழிகாட்டுவதில், பலவீனமானவர்களாக இருக்கிறார்கள். இதனால் மக்கள் போராட்டங்களில் இருந்து அன்னியப்பட்டுள்ளனர். இந்த பலவீனங்கள் தோல்விகளுக்கு காரணம். நடைமுறைப் போராட்டங்களுக்கு தலைமை தாங்குவதில் உள்ள வீரதீர பலவீனம், தியாகத்துக்கு தயாரின்மை என்பன அடிப்படைக் காரணங்கள் ஆக மாட்டாது. கொம்யூனிச கட்சியை கட்டுவதில் வளர்ப்பதில் உள்ள சித்தாந்த அரசியல் பார்வைகளின் அமைப்புக் கண்ணோட்டங்களில் உள்ள பலவீனமே அடிப்படைக் காரணம்.

தொழிற்சங்க இயக்கத்தை கட்டுவதை கொம்யூனிசக் கட்சியைக் கட்டுவதற்கு சமனாக பார்த்த தவறு CPC (இடது) சக்திகளிடம் வெளிப்பட்டது. இதை சண்முகதாசனே பிற்காலத்தில் ஒப்புக் கொண்டுள்ளார். இத்தவறை சரிவர புரிந்து மாற்ற வேண்டியுள்ளது. அத்துடன் தொழிற்சங்கப் போராட்டம், விவசாயிகள் போராட்டம், பெண்கள் போராட்டம், சாதியப் போராட்டம், மாணவர், இளைஞர் போராட்டம், சுற்றுச் சூழல், அரசு ஊழியர், போராட்டம் என சுரண்டலுக்கும் ஒடுக்கு முறைக்கும் எதிரான எல்லா மக்கள் பிரிவுப் போராட்டங்களைப் பற்றிய பார்வையிலும் வெகுசன, ஆயுதப் போராட்டங்களை முன்னெடுப்பதில் இன்று ஆதிக்கம் பெற்றிருக்கும் திரிபுவாத, ரொட்ஸ்கியவாத, சீர்திருத்தவாத, சமரசவாத, அதிதீவிரவாத பார்வைகளை, அரசியல் அமைப்பு வழிகாட்டுதலை இவற்றின் சித்தாந்த மூலங்களை, வர்க்க சமரசமற்ற சித்தாந்தப் பேராட்டத்தால் தோற்கடிக்க வேண்டியுள்ளது. தொழிலாளர் வர்க்க புரட்சிகர சித்தாந்த பாதையில் இருந்து அரசியல் அமைப்பு வழிகாட்டுதலை முன்வைக்க வேண்டியுள்ளது. மக்கள் போராட்ட இயக்கங்களை நடைமுறையில் கட்ட வேண்டியது நமது கடமையாகும்.

தமிழரசன்

www.tamilarangam.net



# தேசிய விடுதலை யுத்தம் - ஒரு பார்வை

**தமிழீழ தேசிய விடுதலை யுத்தத்தில் சித்திரை 19-1995, 96**

1995 சித்திரை 19-ல் யுத்த நிறுத்தம் உடைந்தது. புலிகளின் யுத்த வரலாற்றில் முதன் முதலாக தோற்றுவிக்கப்பட்ட கடற்புலிகள், திருகோணமலை துறைமுகத்தில் கடற்படைக் கப்பல்களை தகர்த்தனர். பேச்சு வார்த்தை ஊடாக புலிகளின் பங்கு வகித்தல் மூலம் யாழை சீரமைக்கும் எல்லா நடவடிக்கைகளும் அரசால் நிறுத்தப்பட்டது. அமுலுக்கு வர இருந்த பொருளாதார தடை, மீன் பிடித்தடை நீக்கம் வந்தது - போனது. அரசுக்கும் - புலிகளுக்கும் இடையிலான மோதல்கள் வேகமடைந்தன. அரசு யாழ்மீது பகுதி வாரியான இராணுவ நடவடிக்கையை தொடக்கியது. புலிகளை போர் வெறியர்கள் என்றது. ஒப்பரேசன் முன்னேறிப்பாய்தல் - சூரிய ஒளி மூலம் வலிகாமத்தையும், யாழ் நகரையும் கைப்பற்றியது. புலிகள் தென்மாராட்சிக்கும் பெருநிலப்பரப்புக்கும் பின் வாங்கினர். இலட்சக்கணக்கான மக்கள் அகதிகளாக இடம் பெயர்ந்தனர். 95 மார்கழி வரை புலிக் கொடி பறந்த யாழ் கோட்டையில், சிங்கக் கொடியை ஏற்றியது சிறீலங்கா இராணுவம். அரசும், இன மாதவாதிகளும் கூடிக் கொண்டாடினர்.

1996 சித்திரை 19-ல் ஒரு வருடப் போரின் நினைவு, புலிகளின் கடற்படை கரும்புலிகளின் ஓராண்டு நிறைவு. அரசுக்கு அதிர்ச்சி வைத்தியம் செய்ய 12.04-96-இல் கடற்புலிகளின் கொழும்பு துறைமுக தாக்குதல் பெருந்தோல்வியில் முடிந்தது. (துறைமுகத்தில் இஸ்ரேலில் இருந்து வாங்கப்பட்ட குண்டு வீச்சு விமானம் கப்பலில் இருந்தது. புலிகளுக்கு முன்கூட்டி தெரியுமா?) அரசு படைகள் 19-இல் தென்மாராட்சி மீதும், கிளாலியை கைப்பற்றும் சூரிய ஒளி 2 தொடக்கியது. புலிகள் சூரிய ஒளி 1-க்கு காட்டியளவு எதிர்ப்பு கூட காட்டாது பின் வாங்கினர். அரசு படைகள் தொடர்ந்து வடமாராட்சி மீது தாக்குலிலும், கைப்பற்றிய பகுதிகளில் தேடுதல் வேட்டையிலும் இறங்கியுள்ளனர்.

புலிகளுக்கு பொதுமன்னிப்பு அளிப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. சரண் அடைபவர்கள் முதலில் ஆயுதங்களை கீழே போட வேண்டும். 13 வருட யுத்த வாழ்வை துறக்க வேண்டும். பாதுகாப்பு படையின் சிறப்பு முகாம்களில் சில மாதங்கள் இருத்தல், கைத்தொழில் கல்வி பயிற்சிகளுக்கு அரசு ஊக்குவிக்கும் (மார்கழி 95-க்கு பின் 40-க்கும் மேலான புலிகள் சரண் அடைந்துள்ளதாகவும் அவர்கள் இப்போது யாழில் அரசுபடை மேற் கொள்ளும் ''சல்லடை போடும் தேடுதலில்'' ஆள்காட்டிகளாக பயன்படுத்தப்படுவதாகவும் கூறப்ப

www.tamilarangam.net



டுகிறது. சிறீலங்கா அரசு நேரடியாகவும், அரசு சாரா நிறுவனங்கள் மூலமும் யாழை மறுசீரமைக்க - புனரமைக்க தொடங்கியுள்ளது. பொருளாதார தடைகள் ஓரளவு நீக்கப்பட்டுள்ளது. 23 பஸ்களை (இ.போ.ச) யாழில் இயக்குகிறது. யாழ் பொது மருத்துவமனை 40 டொக்ரர்களின் உதவியுடன் இயக்கப்படுகிறது.

1995 சூரிய ஒளி 1 நடவடிக்கையின் போது யாழை விட்டு வெளியேறிய இலட்சக்கணக்கான அகதிகளையும், யாழை விட்டு செல்ல ஊக்குவிக்கப்பட்ட - அழைத்து செல்லப்பட்ட ஆயிரக்கணக்கான அகதிகளை காட்டி புலிகள், அரசு இராணுவரீதியில் யாழை வென்றது, அரசியல் ரீதியில் தோற்றது. மக்கள் எல்லாம் புலிகளின் பக்கம் இருப்பதாக பிரச்சாரப்படுத்தினர்.

1996- சூரிய ஒளி 2-க்கு பின் அகதிகளாக சென்ற மக்களில் ஒரு பகுதி மீண்டும் தமது வாழ்விடங்களுக்கு திரும்ப தொடங்கியுள்ளனர். (இதை தடுத்த புலிகளுக்கும் - மக்களுக்கும் கைகலப்பும் நடந்துள்ளது.) அகதிகள் தங்கியுள்ள இடங்களில் உணவு, இருப்பிட வசதி, மருத்துவம் போன்ற அடிப்படை தேவைகள் தீர்க்கப்படாததால்'' உணவு இல்லை என்றாலும் பச்சை தண்ணீர் குடித்து விட்டு சொந்த வீட்டில் உறங்கலாம்'' அகதிகளின் இந்த உளதிருப்தி விரைவாக யாழ்போக தூண்டுகிறது. அரசாங்கம் தனது இராணுவ நடவடிக்கையின் அழிவுகளை மறைக்கவும். புலிகள் வேறு - மக்கள் வேறு மக்கள் அரசு பக்கம் இருப்பதாக காட்டவும் புலிகளை அரசியல் ரீதியாகவும் தோற்கடித்து விட்டோம் என பிரச்சாரப்படுத்துகிறது. அகதிகள் யாழ் திரும்ப பல உதவித் திட்டங்களை அறிவித்துள்ளது. அரசு யாழில் சிவில் சமூக கட்டுப்பாட்டை தனதாக்குவதே உடனடி வேலையாக செய்கிறது. பழைய அரசுப் பணியாளர்களை (5 ஆண்டுகளாக புலிகளின் சிவில் சமூக நிறுவனங்களில் வேலை செய்து கொண்டு அரசிடம் சம்பளம் வாங்கியவர்கள் விமானம் மூலம் யாழ் கொண்டு வருகிறது.) முதல் கட்டமாக வவுனியாவில் அகதி நிலையில் இருந்த 100 பேரை தூக்கி வந்து நிறுத்தியுள்ளது. அரசும் சரி புலிகளும் சரி தங்களின் உண்மையான தோல்விகளை மறைக்க தாங்கள் தாங்களே வெற்றி பெற்றதாக உலகுக்கு காட்ட மக்களை மந்தைகளாக பாவிக்கின்றனர்.

புலிகள் தங்களின் பின்வாங்குதலுக்காக தந்திரோபாயமாக சில ஆயிரம் மக்களை கூட்டிச் சென்றிருந்தால், மீண்டும் யாழ் திரும்ப தயாரான மக்களை தடுத்திருக்கக்கூடாது. யாழில் மக்கள் பரந்து வாழ்வதே எதிரிக்கு எதிராக கொரில்லாக்கள் இயங்க நிபந்தனையாகவுள்ளது.95-96 ஓர் ஆண்டில் எத்தனை மாற்றம், ஏமாற்றம்.

தமிழீழ மக்களின் தேசிய விடுதலைக்கான ஆயுதப் போராட்டம். யுத்தமாக மாறியது முதல் எதிரியின் தேசிய இன ஒடுக்கு முறையுத்தம் அதற்கு எதிரான நமது தேசிய இன விடுதலை யுத்தம் 13 ஆண்டுகள் நடந்து கொண்டி

www.tamilarangam.net



மூன்றாவது, கட்டத்தில் இருப்பதாக பெருமிதப்பட்டனர். அதனால் தான் வரும் 'தீபாவளிக்கு' - வரும் 'தைப் பொங்கலுக்கு' தமிழீழம் கிடைத்து விடும் என பிரச்சாரத்தில் ஈடுபட்டனர்.

இப்பெரிய இராணுவ முகாம்கள், பொலிஸ் நிலையங்கள் மீது தொடுத்த தாக்குதல்கள் எதுவும் வெற்றி பெறவில்லை என்பதும், சிறு அளவிலான தாக்கங்களை எதிரிக்கு ஏற்படுத்தினர் என்பதும் உண்மை. எதிரி தனது பெரிய முகாம்களின் கண்காணிப்பு பகுதியை சுருக்கி கொண்டான். ஒரு கிரமமான யுத்த முறைக்கு வளராமல், கிரமமானயுத்த முறையில் யுத்த பயிற்சி இல்லா மல் இப் பெரிய முகாம்கள் மீதான தாக்குதலில் வெற்றி பெற முடியாது. போராளிகள் கிரமமான யுத்த வடிவ பயிற்ச்சி கூட இல்லாமல் இருந்தனர். போராளிகள் யுத்த கல்வி ஊடாகவும், தோல்விகளின் அனுபவத்தின் வழியாக வும் கிரமமான யுத்த முறையின் தேவையை புரிந்து கொண்டனர் ஆனால் அவர்களது சொந்த வர்க்க அரசியல் அமைப்பு பலவீனங்கள் இவ் யுத்த முறைக்கு வளர அனுமதிக்கவில்லை - அவகாசம் கொடுக்கவில்லை.

பதிலுக்கு கொரில்லாயுத்த வடிவத்துள் நின்றபடியே கொரில்லா யுத்த முறையில் புதுப்புது தாக்குதல் முறைகளை நவீன ஆயுதங்களை தேடி ஓடச் செய்தனர். காவல் அரண்களை தாக்க தற்கொலைப் போராளிகள், வெடி நிரப் பிய லொறிகளை ஓட்டிச் சென்று மோத விடுவது. பெருந்சேதத்தை விளை வித்து கொரில்லா தாக்குதல் அணி உள்புகுவது என எதிரிக்கு எதிராக தமது இராணுவ நடவடிக்கைகளை எதிர் தாக்குதலுக்கான தயாரிப்பு கட்டத்தில் இருந்து கொண்டு தந்திரோபாய ரீதியான தாக்குதல்களுடன் நிறுத்திக் கொண் டனர். போராளிகளின் தாக்குதல்கள் எதுவும் எதிரியை மேலும் பலமான தற்காப்புக்குள் தள்ளிய போதும் எதிரியை சீர் குலைக்கவும், நிர்மூலமாக்கவும் முடியவில்லை. நாட்டை, யாழை யார் ஆழ்வது என்ற போட்டியில் ஒரு இயக்கம் மற்ற இயக்கத்தை எப்படி அழிப்பது. காட்டிக் கொடுப்பது என துடித்தனர். புலிகள் எதிரிக்கு எதிரான தமது இராணுவ நடவடிக்கைகளை செய்து கொண்டே மற்ற இயக்கங்களை முழுவதுமாக தடை செய்ததுடன், 1987 தையில் யாழ் மீதான சிவில் சமூக கட்டுப்பாடு புலிகளின் கட்டுக்குள் வருவதாக அறிவித்தனர்.

கொரில்லா யுத்தத்தின் நோக்கமும், அதன் சக்தியும் எதிரியின் சுதந்திர மான நடமாட்டங்களை கட்டுப்படுத்துவதும், எதிரிக்கு கிலியை ஏற்படுத்துவ தும், நடமாட்டத்திலுள்ள (வாகனம், நடை, ரோந்துப்படகு) சிறுபடைப்பிரி வுகளை (செக்சன், பிளட்டுன்) சீர்குலைத்து அழிப்பதும் ஆகும். கிரமமான யுத்த முறையால் மட்டுமே நடமாட்டத்திலுள்ள பெரிய படைப்பிரிவுகளை, எதிரியின் முகாம்களை எதிர் தாக்குதல் மூலம் அழித்தொழிக்கவும், நிர்மூல மாக்கி துரத்தவும், [illegible] கட்டுப்பாட்டுள் தற்காலிகமா கவோ - நிரந்தரமாகவோ [illegible]

www.tamilarangam.net



போராளி இயக்கங்களின் இராணுவ ரீதியான பலவீனம். மற்றும் அரசியல் அமைப்பு பலவீனங்களை எதிரி சரியாக ஆய்வு செய்தான் புலிகள் எல்லா இயக்கங்களையும் தடை செய்த வேளை (எதிரி செய்ய வேண்டிய வேலைகளை புலிகளே செய்தனர்) எதிரி மூலோபாய ரீதியான பாதுகாப்பு நிலையில் இருந்தபடி, கிழக்கை தனது சுதந்திரமான - எச்சரிக்கையுடன்கூடிய நடமாட்ட பகுதியாக மாற்றுவதில் வெற்றி கண்டான். வடக்கில் எல்லை புறத்தில் தந்த ரோபாய ரீதியாக தாக்கவும் - தேவையானால் பின்வாங்கவும் செய்தான். போர் நடவடிக்கைகளிலும் கூட இறங்கினான். 87-களின் தொடக்கத்தில் பாதுகாப்பில் இருந்து கொண்டு எதிரியின் எதிர் தாக்குதல் தொடங்கியது. முகாமை விட்டு வெளியே வரும் நடவடிக்கைகள் வெற்றியளிப்பதை பார்த்தான். விமானக் குண்டு வீச்சு, பீரங்கி தாக்குதல், செல் தாக்குதல் மூலம் பெரும் அழிவு இன்றி தரைப்படை முன்னேற முடியும் என்று கணிப்பு செய்தான். இலக்கற்ற மற்றும் இலக்குதவறும் குண்டு வீச்சால் மக்கள் பெருமளவு பாதிக்கப்பட்டாலும் குறுகிய கால இராணுவ நடவடிக்கை மூலம் போராளிகளை துரத்திச் செல்ல முடிவு செய்தான். ''ஒப்பறேசன் விபறேசன்'' வடமாராட்சி மீது தொடங்கியது. புலிகளின் கழுத்தை நெரிக்கும் அளவுக்கு எதிரி முன்னேறினான்.

இராணுவ நடவடிக்கைக்கு எதிரான கண்டனக் குரல்கள் உலகளவில் வலுவடைந்தது. இந்தியாவின் இலங்கை மீதான தலையீட்டுக் கொள்கைக்கு, (தமிழீழ மக்களுக்கு உதவுவது என்ற பெயரில்) கடைசிச் சந்தர்ப்பம் என்பதால் இந்திய விமானப்படையின் ''ஒப்பறேசன் பூ மாலை'' உணவுப் பொட்டல போடுகையுடன் யுத்தத்தின் மொத்த அரசியல் இராணுவ நிலமையும் மாறியது. தமிழீழ தேசிய விடுதலை யுத்தம் மூலோபாய ரீதியாக இரண்டாவது கட்டத்துள் நுழைந்தது. 85,86 இரண்டு ஆண்டுகளில் மீண்டும் முதலாவது கட்டத்துக்கு திரும்பியது. போராளிகள் மூலோபாய ரீதியான தற்காப்பு கட்டத்துக்கும் எதிரி மூலோபாய ரீதியான தாக்குதல் கட்டத்துக்கும் மீண்டும் வந்தனர். இந்திய தலையீடு மொத்த யுத்த சூழ்நிலையிலும் பெரிய மாற்றத்தை உண்டு பண்ணியது.

## இந்திய ஆக்கிரமிப்பு எதிர்ப்பு யுத்தம்

1983-கறுப்பு யூலை நாட்டில் ஏற்படுத்திய மாற்றங்கள் போல் 1987 யூலை இந்திய - இலங்கை ஒப்பந்தம், இந்திய ஆக்கிரமிப்பு படை வருகை, (IPKF) போராளிகளின் ஆயுத ஒப்படைப்பு, இடைக்கால அரசு உருவாக்கம் என பல நடந்தேறியது. இடைக்கால அரசு அதிகாரம் ஆயுத ஒப்படைப்பு இவற்றில் எழுந்த முரண்பாட்டால் இந்திய படைக்கும் புலிகளுக்கும் இடையில் யுத்தம் தொடங்கியது.

www.tamilarangam.net



தமிழீழ மக்கள் தமது தேசிய விடுதலைக்காக நடத்திக் கொண்டிருந்த யுத்தம் மூலோபாய ரீதியில் வளர்ந்ததா? வீழ்ந்ததா என்பதோ, அல்லது புலிக ளின் அழிவை இந்தியரசின் தலையீடு தானே காப்பாற்றியது என்பதல்ல இங்கு பிரச்சினை. தமிழீழ தேசிய விடுதலை யுத்தம் வளர்வதும் - தேய்வதும், மீண்டும் வளர்வதும் ஏன் ஒரு வேளை யுத்தம் கைவிடப்பட்டு அரசுடன் சமரசம் அடைவதும் அல்லது இறுதி வெற்றி வரை யுத்தம் தொடர்வதும் தேசிய இன விடுதலை யுத்தத்துக்கு தலைமை தாங்கும் வர்க்கங்களின் அரசி யல் இராணுவ கொள்கைகளை பொறுத்த விடயம். அது நம்மவர்களால் மட்டுமே தீர்மானிக்கப்பட வேண்டும்.

தேசிய இனப் பிரச்சனைக்கு முழுமையான அரசியல் தீர்வை முன் வைக் காத, திம்புக் கோரிக்கைகளை கூட ஏற்காத, போராளி இயக்கங்களை மதிக்காத இந்திய இலங்கை அரசுகள் செய்து கொண்ட ஒப்பந்தத்தை அமுல்படுத்தும் பொறுப்பை இந்திய இராணுவம் எடுத்துக் கொண்டது.

தமிழீழ மக்கள் எந்த அரசியல் கோரிக்கைகளுக்காக போராடுகிறார்களோ. எதை அடைய யுத்தம் செய்கிறார்களோ. அவற்றை ஏற்காது மதிப்பளிக்காது. துரோகம் செய்யும் அரசியல் - இராணுவ தீர்வுகளை (போராளிகளில் பெரும் பகுதி ஏற்றுக் கொண்டாலும்) ஒப்பந்தங்களை நிராகரிக்கின்ற உரிமை தமிழீழ மக்களுக்கு, அவர்களது நலன்களுக்காக போராடுகின்ற இயக்கங்களுக்கு உண்டு. அதையும் மீறி ஏமாற்று அரசியல் தீர்வை, ஒப்பந்தத்தை பலாத்கார ரீதியில் அமுல்படுத்த வருகின்ற எந்த இராணுவத்தையும் (அன்று துரோக இயக்க இராணுவத்தையும், நாளை புலிகளாக இருந்தாலும் கூட) எதிர்த்து போரிடுவதும் தமிழீழ மக்களின் முழு அரசியல் உரிமையே". இந்திய இராணு வத்துக்கு எதிரான யுத்தம் என்பது அடிப்படையில் இந்திய இலங்கை ஒப்பந் தத்துக்கு எதிரான தமிழீழ மக்களின் அரசியல் யுத்தமேயாகும்.

தமிழீழ தேசிய விடுதலை யுத்தத்தை நசுக்குகின்ற ஒரு மூன்றாவது நாட் டின் இராணுவத்துக்கு எதிரான யுத்தமாக மாறியது. இந்திய ஆக்கிரமிப்பு எதிர்ப்பு யுத்தம். கூடவே அவ் ஒப்பந்தம் சிறீலங்கா மக்களின் தேசத்தின் உரிமைகளுக்கும் எதிராக இருந்தது. ஆனால் இந்தியப் படைகள் நேரடியாக சிறீலங்காவில் இறங்காததால் அதில் கைச்சாத்திட்ட சிறீலங்கா அரசுக்கும் படைகளுக்கும் எதிரான சிங்களமக்களின் போராட்டம் J.V.P.யால் தலைமை தாங்கப்பட்டது. இந்திய ஆக்கிரமிப்பு எதிர்ப்பு போராட்டம் யுத்தம் இலங்கை மக்களின் கூட்டு போராட்டமாக யுத்தமாக மாற வேண்டியிருந்தது. இந்திய இலங்கைப் படைகளுக்கு எதிரான யுத்தமாக மாறியிருக்க வேண்டும். மாற்றப் பட்டிருக்க வேண்டும். புலிகளும் - J.V.P. யும் அவர்களின் குட்டி முதலாளிய அரசியலும் இராணுவ மூலோபாயமும் யுத்த முறையும் அவ்வாறு மாற விட வில்லை. மாறவும் அனுமதிக்காது.

www.tamilarangam.net



இந்திய ஆக்கிரமிப்பு யுத்தத்துக்கு எதிரான தமிழீழ மக்களின் ஆக்கிர மிப்பு எதிர்ப்பு தேசிய விடுதலை யுத்தம். 1987-கள் வரை சிறீலங்கா அரசுக்கு எதிரான தேசிய விடுதலை யுத்த சூழ்நிலமைகளில் இருந்து கீழ்வருமாறு வேறுபட்டிருந்தது.

- தேசிய இன ஒடுக்குமுறை யுத்தம் ஒரு உள்நாட்டு யுத்தமாக இருந்தது.

  இந்திய ஆக்கிரமிப்பு யுத்தம் ஒரு அன்னிய நாட்டின் தலையீட்டு யுத்தம்.

- உள்நாட்டு தமிழ் 'பயங்கரவாதத்துக்கு' எதிரானது என இன ஒடுக்கு முறை யுத்தத்தை சிறீலங்கா அரசு கூறியது.

  இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்துவது, தமிழர்களுக்கு உதவுவது எனக் கூறி 'சமாதானப்படை என்ற பெயரில் இந்தியரசு ஆக்கிரமிப்பு யுத் தத்தை நடத்த வேண்டியிருந்தது.

- சிறீலங்கா அரசுக்கும் - படைகளுக்கும் எதிரான உணர்வு, தமிழீழ மக்களி டம் நீண்ட காலமாக, பரவலான எதிர்ப்பு இருந்து வந்தது.

  இந்தியரசு - படைகள் மேல் தமிழ் மக்கள் மத்தியில் நீண்ட காலமாக பரவலான நம்பிக்கை தமிழ்த்தலைமைகளால் ஊட்டப்பட்டிருந்தது இயக்கங் களுக்கு இந்தியா இராணுவ பயிற்சி, பின் தள உதவி, பணம் என பலவும் செய்து வந்தது. இந்தியப் படைகள் தொடக்கத்தில் தமக்கு எதிரான மக்க ளின் உணர்வுகள் வேகமாக வளரவிடாது பார்க்க வேண்டியிருந்தது.

- சிறீலங்கா படைகளுக்கு தமிழீழத்தின் தரை - கடல் - ஆகாய வழியிலான யுத்த அனுபவம் இருந்தது.

  இந்திய படைகளுக்கு இங்கு பிரதானமாக தரை கடல் வழியிலான யுத்த நடவடிக்கைகள் முதல் அனுபவமாக இருந்தது. சிறீலங்கா இராணுவத்து டன் கூட்டு நேரடி இராணுவ நடவடிக்கை இருக்கவில்லை.

- சிறீலங்கா படைகள் பெருமளவு தெற்க்குக்கு மாற்றப்பட்டிருந்தது. இரா ணுவ தலைமைக்கு J.V.P. யை நசுக்குவது பிரதான வேலையாக இருந்தது. இந்தியப் படைகளின் நுழைவுக்கும், இராணுவ நடவடிக்கைக்கும் எதிராக சிறீலங்காவிலும், தமிழீழத்திலும் வெகுசன கொந்தளிப்பு போராட்டங்கள் வளர்ந்தது, தமிழ் நாட்டிலும், அய்ரோப்பிய நாடுகளிலும் இந்தியப் படை பின் வாங்க கோரும் போராட்டங்கள், எதிர்ப்பு போராட்டங்கள் தொடக்கத் திலேயே உருவாகின.

- இந்தியப் படைகள் பஞ்சாப், காஷ்மீர், அசாம், நாகலாந்து, திரிபுரா - எனப் பல தேசிய இன விடுதலை இயக்கங்களுக்கு எதிராக யுத்தம் புரிந்த அனுப வம் இருந்தது. பாகிஸ்தான், சீனாவுடன் எல்லை யுத்தங்களை நடத்திய அனுபவமும் இருந்தது. தெற்காசியாவில் அன்னிய நாட்டில் நுழைந்து

www.tamilarangam.net



தேசிய இன விடுதலை இயக்கத்தை ஒடுக்க யுத்தம் புரிவது முதல் அனுபவம்.

- 'அய்நா சமாதானப் படையில், இந்திய இராணுவம் பங்கு வகிக்கிறது. இந்தியப் படைகள் மட்டும் தனியாக 'சமாதானப் படையாக' வேடமிட்டு தெற்காசியாவில் செயல்படுவது முதல் முறை. இத்தகைய யுத்த சூழ்நிலை மையின் வேறுபாடுகள் சிறீலங்கா இராணுவத்தை விட, இந்திய இராணு வம் (எதிரி) தனது மூலோபாய ரீதியான தாக்குதல் கால கட்டத்தில் கூட, புலிகள் மேல் யுத்த ரீதியாக ஈவிரக்கமற்று யுத்த வினையாற்றுவதற்கு எல் லைப்படுத்தும் அம்சங்களாக இருந்தன. புலிகளின் பக்கம் இவ் அம்சங்கள் மூலோபாய ரீதியான தற்காப்பில் இருந்தும், இந்திய இராணுவத்தின் மேல் கொரில்லா யுத்த முறையை சிறப்பாக பிரயோகிக்க வாய்ப்பளித்தது. முக்கி யமான பாதக அம்சம் ஒன்றும் இருந்தது. சிறீலங்கா படைகளை எதிர்த்து யுத்தம் புரிகையில் தமிழீழ மக்களின் பக்கம் இருந்து எதிரிக்கு சேவகம் செய் யும் ஒரு துரோக காக்கை வன்னிய படைக் கூட்டம் இருக்கவில்லை, இந்திய ஆக்கிரமிப்பு எதிர்ப்பு யுத்தத்தில் Telo, Plot, Eprlf, Epdp, Endlf, Tulf என்பன காக்கை வன்னிய கூட்டமாக செயல்பட்டனர். இந்திய இராணுவத்துக்கு எல்லா நிலைகளிலும் உதவினர் - இந்திய ஆக்கிரமிப்பு எதிர்ப்பு தேசிய விடுதலை யுத்தத்தில், துரோகிகளாக செயற்பட்டன இத்தலமைகள்.

புலிகளுக்கும் - இந்திய இராணுவத்துக்கும் இடையில் யுத்தம் தொடங் கிய பின்னர் யாழ்ப்பாணத்தை கைப்பற்ற இந்திய இராணுவம் "ஒப்பறேசன் பவான்" நடவடிக்கையை தொடக்கினான். (சூரிய ஒளி -1-ல் சிறீலங்கா இரா ணுவம் 'பவான்' இராணுவ நடவடிக்கையில் கடைப்பிடித்த படை முன்னேறு தல் வியூகத்தையே பின்பற்றியது). புலிகள் அப்போதும் தமது தலைமையை, பின்வாங்குதலை பெரு நிலப்பரப்பை நோக்கியே நகர்த்தினர். வவுனியாவும், கிளிநொச்சியும், முல்லைத்தீவும் வட எல்லைப்புற காடுகளும் புலிகளின் பிரதான இராணுவ செயற்படுகளமாக மாறியது. புலிகள் எதிரிக்கு எதிராக பல எதிர் தாக்குதல்களையும், போர் நடவடிக்கைகளையும் செய்தனர். கண்ணி வெடித் தாக்குதல்களை மிகக் கச்சிதமாக நடத்தினர். எதிரியை அசைய வைக் கும் கொரில்லாயுத்த முறையை பயன்படுத்தி (அலைந்து திரியும் கொரில்லா நடவடிக்கையில் புலிகளுக்கு தேர்ச்சியுண்டு) எதிரியை சிறுமுகாம்களில் இருந்து வெளியே கொண்டு வந்து தாக்கினர். அதே போல் நடமாட்டத்தில் இருந்த சிறுபடைப் பிரிவுகள் மீது (செக்சன், பிளட்டூன்) பலபக்க கொரில்லா தாக்குதல்களை நடத்தி வியூகங்களை விட்டு வெளியே வந்த இராணுவத்தை அழித்தனர். இராணுவத்தை பிணைக்கைதிகளாக பிடித்தனர் பீரங்கி வண்டி களை, கவசவாகனங்களை தற்கொலைப் போராளிகள் மூலம் தகர்த்தனர். புலிகளின் பெண் பிரிவு கொரில்லாப் படைகளும் இவ் யுத்த நடவடிக்கை யில் சிறப்பான பங்கு வகித்தனர். எதிரி யாழ் நகரை பிடிக்க நிறைய அழிவு

www.tamilarangam.net



களை சுமக்க நேர்ந்தது. கண்ணி வெடியில் சிக்கி இறந்தவர்கள், கை, கால் இழந்து ஊனமானவர்கள் பெரும் எண்ணிக்கையை தொட்டது. நிறைய நாட்களின் பின் யாழ் எதிரியின் கைவசமானது.

இந்தக் கால கட்டத்திலும் புலிகளால் கிரமமான யுத்த முறைக்கு முன்னேற முடியவில்லை. சிறீலங்கா படைகளால் கழுத்து நெரிக்கப்படும் நிலைக்கு தள்ளப்பட்ட புலிகள் அவ்வளவு விரைவாக வளர்வது கடினமானதும் கூட. இந்திய ஆக்கிரமிப்பு படைக்கு எதிராக நடந்த எழுச்சிகரமான வெகுசன போராட்டங்கள், (தீலிபனின், அன்னை பூபதியின் சாகும் வரை உண்ணாவிரத போராட்டம்) கொரில்லா யுத்த முறையைக் கொண்டே தினமும் எதிரிக்கு எதிராக நடத்திய தாக்குதல்களும், எதிரியின் அழிவுகளும் புலிகளை உச்சி குளிர செய்து கொண்டிருந்தது. எதிரி இராணுவ ரீதியிலும் - அரசியல் ரீதியிலும் எவ்வாறு செயல்படுவது என்பதில் குழம்பிக் கொண்டிருந்தான்.

மூலோபாய ரீதியான தாக்குதல் கட்டத்தில் இருந்தபடி தேடுதல் நடவடிக்கையிலும், போர் நடவடிக்கையிலும், சுற்றி வளைப்புக்கான முன்னேறுதலிலும், எதிர் தாக்குதல்களிலும் எதிரி முதலில் இருந்த வேகத்தை குறைத்தான். மட்டுப்படுத்தப்பட்ட நடவடிக்கையில் நின்றான். தந்திரோபாய ரீதியான தற்காப்பு நடவடிக்கையில் அதிக கவனம் செலுத்தினான். புலிகளின் 'எதிரியை அசைய வைக்கும்.' 'உள் இழுத்து செல்லும்' கொரில்லா நடவடிக்கைக்கு பலியாவதை திட்டமிட்டு நிறுத்தினான். தனது முகாம்கள் மீதான புலிகளின் தாக்குதலுக்கு மட்டும் உறுதியாக பதிலடி கொடுத்தான். அரசியல், மனோவியல் காரணங்களை முன்னிட்டு சமாதான படைக்குள் முதல் கட்டமாக முன்னிலை பெற்றிருந்த தமிழ்நாட்டு இராணுவப் படைப்பிரிவுகளை, தமிழ் பேசத் தெரிந்தவர்களை, நடமாட்ட படைகளில் - வெகுசன தொடர்பு அலுவலகம், தொலைத் தொடர்பு, போக்குவரத்து பிரிவு இவற்றில் இருந்து தந்திரமாக நிறுத்தி முகாமுக்குள் பணியாற்ற வைத்தான். யுத்த முனைகளில் அவ்விடங்களுக்கு பஞ்சாப், கூர்க்கா றெஜிமெண்டை முன்தள்ளினான். புலிகளும் அதற்கு மேல் முகாம்களை தாக்கி அழிக்கும் அளவுக்கு வளரவில்லை. எதிரியின் கண்களுக்கு இப்போ புலிகளும்-மக்களும் ஒன்றாக தெரியத் தொடங்கினர். இராணுவ காடைத் தனங்கள் அரங்கேற்றம் பெற்றது.

புலிகள், எதிரிக்கு சேவகம் செய்து கொண்டிருந்த துரோக இயக்க படைகளையும், அவர்களின் தற்காலிக- நிரந்தர முகாம்களையும் தாக்குவதில், அழித்தொழிப்பதில் யாழுக்கு வெளியே மும்முரமாக ஈடுபட்டனர். புலிகளின் புதிய கொரில்லாப் படையினர்கான யுத்த பயிற்சியாகவும் இவை இருந்தது. துரோகிகளின் இராணுவ கூட்டான 'மூன்று நட்சத்திர' செயல்பாடுகள் மேல் குறி வைத்து புலிகள் தாக்குதல்களை தேடுதல் வேட்டைகளை செய்தனர்.

www.tamilarangam.net



இதில் துரோக இயக்கங்களின் உறுப்பினர்களது, படையினரது உற்றார், உறவினர், நண்பர்கள், உணவு கொடுத்தவர்கள் என பலர் கடும் சித்திரவதைக்கும் - அழித்தொழிப்புக்கும் உள்ளாகினர் (இதே போல் இத்துரோக இயக்கங்கள் கையோங்கியிருந்த காலங்களில், இடங்களில் அதே போன்று பதில்நடவடிக்கைகள் செய்தனர்) பல அப்பாவிகள் இரண்டு பக்கத்தாலும் பலியாக்கப்பட்டனர். இயக்கங்கள் மேல் மக்களுக்கு வெறுப்பும் வளர்ந்தது. துரோக இயக்கங்களின் சிறிய - பெரிய முகாம்கள் மீதான புலிகளின் தாக்குதல் வெற்றிக்கு, வவுனியாவில் 'முயல் குத்தி' பகுதியிலிருந்தPLOT இயக்க பிரதான இராணுவ முகாம் மீதான தாக்குதல் உதாரணமாக பார்க்கப்படுகிறது.

எதிரியின் 'ஒப்பரேசன் பவான்' இராணுவ நடவடிக்கை வெற்றிக்கு பின் புலிகள் பெருமளவில் காட்டுப்பகுதியை தளமாக்கினர். மூலோபாய ரீதியான தற்காப்பு கட்டத்தின் தோல்வியாக யாழ் தோல்வி இருக்கவில்லை புலிகள் செயற்படா கொரில்லாயுத்த முறைக்கு பின் வாங்கவில்லை. மனிதபலமும், ஆயுதமும் தொடர்ந்து கிடைத்தது. இந்திய ஆக்கிரமிப்பு யுத்தத்துக்கு எதிரான வெகுசன கிளர்ச்சி மனித பலத்தை வழங்கியது. துரோக இயக்க படைகள் மீதான வெற்றிகள், எதிரி மீதான கொரில்லாத் தாக்குதலில் கைப் பற்றப்பட்டவை என நேரடியாகவும் - மறைமுகமாகவும் இந்தியாவின் ஆயுதங்கள், வெடி பொருள்கள், தொலைத் தொடர்பு சாதனங்கள் - மற்றும் இராணுவ உபகரணங்கள் கிடைத்தது. சிறீலங்கா அரசாங்கம் கோடிக்கணக்கில் (10கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது.) ஆயுதங்களை அள்ளி கொடுத்தது இந்திய சார்பு இயக்கங்கள் ( துரோக படைகள்) மீதான புலிகளின் இராணுவதாக்குதலுக்கு சிறீலங்கா இராணுவம் நேரடியான உதவிகளைக் கூட செய்தது. இன்று சிறீலங்கா அரசுக்கு எதிராக புலிகளுக்கு மனித பலம், ஆயுத உதவி அள்ளி வழங்கும் அரசியல் - இராணுவ சூழ்நிலமை சாதகமாக இல்லை.

போராளி இயக்கங்களுக்கு இடையிலான அரசியல், அமைப்பு முரண்பாட்டை, பிளவுகளை, பழைய ஆயுத மோதல்களை மறக்க முடியாத யுத்த பிளவுகளாக மாற்றியதிலும்,.போராளிகளின் ஒட்டு மொத்த இராணுவ-அரசியல் பலத்தை சிதைக்கும் மக்களை நம்பிக்கை இழக்க வைக்கும் மாபெரும் தூரநோக்குள்ள அரசியல் - இராணுவ யுக்தியை இந்தியரசும், சிறீலங்கா அரசும் திட்டமிட்டு செய்தன. தமிழ்த் துரோக தலைமைகளின் உதவியை சில சமயங்களில் புலிகளையும் இந்த சதிதிட்டத்துக்கு எதிரி கச்சிதமாக பயன்படுத்தினான்.

அதே வேளை இந்தியரசுக்கும் - புலிகளுக்கும் இடையிலான முரண்பாட்டையும், தமிழீழ மக்களுக்கும் - சிறீலங்கா மக்களுக்கும் இடையில் ஏற்படக் கூடிய, இரண்டு அரசுகளுக்கும் எதிரான போராட்ட அய்க்கியத்தை - யுத்த ரீதியான கூட்டை தற்காலிகமாகவேனும் தடுத்து விட்டதில் சிறீலங்கா அரசு. இந்திய அரசை விட திறமையாக நடந்து கொண்டது இதற்கு புலிகளின் தலை

www.tamilarangam.net



மையை நன்றாக சரியான தருணத்தில் யுத்த ரீதியிலும் பயன்படுத்தி கொண்டது. சிறீலங்கா மக்களுக்கு இந்திய எதிர்ப்பாளனாக பிரேமதாச அரசு நடித்தது. மக்களின் இந்திய விரிவாக்க எதிர்ப்பை அரசு எதிர்ப்பை ஆயுதப் போராட்டமாக மாற்றிய J.V.P. -இன் தலைமையை கழுத்தை நெரித்து கொன்றது, புலிகளுடன் ஆக்கிரமிப்பு எதிர்ப்பு யுத்த கூட்டை இரகசியமாக நிதி, ஆயுதம் வழங்கி கட்டி காத்தது. இலங்கை மக்களுக்கு கூட இந்திய எதிர்ப்பாளனாக சிறீலங்கா அரசு நடித்து காட்ட முடிந்தது.

இந்திய ஆக்கிரமிப்பு படையின் பின் வாங்கலை பின்வருவன விரைவுபடுத்தியது.

1. இந்திய ஆக்கிரமிப்பு எதிர்ப்பு யுத்தத்தை புலிகள் தொடர்ந்தும் நடத்தியது தமிழ்த் துரோக படைகளை முன்னால் நிறுத்தி, பின்னால் இருந்து ஆக்கிரமிப்பு யுத்தத்தை நடத்துவதில் ஏற்பட்ட தோல்வி.
2. சிறீலங்காவிலும் இந்திய ஆக்கிரமிப்பு எதிர்ப்பு வெகுசன போராட்டங்கள் வளர்ந்தது. இதனால் சிறீலங்கா அரசு கூட இந்தியப் படை பின் வாங்க கால வரம்பு விதித்தது.
3. தமிழ் நாட்டிலும் உலகளவிலும் இந்தியப்படை பின் வாங்க கோரிய வெகுசன போராட்ட வளர்ச்சி.
4. புலிகளுக்கும் - சிறீலங்கா அரசுக்கும் இடையில் ஏற்பட்ட அரசியல் இராணுவ ஒத்துழைப்பு கூட்டு.
5. இந்திய இராணுவத்தின் வரலாற்றில் குறுகிய காலத்தில் சந்தித்த பெருமளவு படையினரின் உடல் - ஊன இழப்பும், அழிவும்.
6. உலகளவில் இந்திய இராணுவத்துக்கும் - அரசுக்கும் ஏற்பட்ட அவமானம்.
7. இந்திய மத்திய அரசு தலைமையில் ஏற்பட்ட மாற்றம். மாநில அரசின் நிர்ப்பந்தம்.

இவை எல்லாம் சேர்ந்து இந்திய இராணுவத்தை தமிழீழத்தை விட்டு படிப்படியாக பின் வாங்க வைத்தது. IPKF -ஆல் துரோக தலைமைகளின் உதவியுடன் துப்பாக்கி முனையில் நடந்த தேர்தலும், பொம்மை அரசும், அதனால் உருவாக்கப்பட்ட "தமிழ்த்தேசிய மீட்புபடையும்" நின்று பிடிக்க முடியவில்லை. புலிகளின் உக்கிரமான அழித்தொழிப்புக்கு முகங் கொடுக்க முடியாத நிலையில், சிறீலங்கா படைகளும் புலிகளுக்கு உதவிக் கொண்டிருந்தநால், "19-அம்ச கோரிக்கைகளை" "மீண்டும் தமிழீழத்தை" திருகோணமலையில் அறிவித்தனர். வரதராஜ பெருமாளும், துரோக படைகளின் தலைமைகளும், பாதுகாவலர்களும் மீண்டும், ஒரு துரோகப் படை தயாரிப்புக்காக இந்திய படைகளுடன் இந்தியாவுக்கு பின் வாங்கினர்.

www.tamilarangam.net



இங்கும் புலிகள், வடக்கு - கிழக்குமாகான 'தற்காலிக அரசை' நிலை குலையச் செய்வதற்கும், துரோக இயக்கங்களை இந்தியாவுக்கு ஓட விரட்டிய திலும், சிறிலங்கா அரசின் உதவியை இராணுவ ரீதியில் பயன்படுத்தினர். இந்திய ஆக்கிரமிப்பு எதிர்ப்பு யுத்தத்தை நடத்தவும், துரோக தமிழ்ப் படை களை அழிக்கவும் புலிகள் சிறீலங்கா அரசுடன் செய்திருந்த அரசியல் இரா ணுவ கூட்டு உலகின் மிகச் சிறந்த இராஜதந்திரமாக, அய்க்கிய முன்னணி நடைமுறையாக பார்ப்பவர்களே!

இன்று சிறிலங்கா அரசு, புலிகளை தமிழீழ மக்களின் போராட்டத்தை போரை நசுக்க, அதே தமிழீழ துரோக இயக்க படைகளையும், இந்தியாவின் அரசியல் இராணுவ உதவிகளையும் எப்படி பயன்படுத்துகிறது? புலிகளை விட சிறீலங்கா அரசு மிகச் சிறந்த உலக இராஜ தந்திரி - அய்க்கிய முன்னணி நடைமுறையாளன் என ஏற்றுக் கொள்வோமா?

இந்திய ஆக்கிரமிப்பு எதிர்ப்பு யுத்தத்தை தமிழீழத்தில் மேலும் வளர்த்தெ டுப்பதிலும், துரோக தமிழ் தலைமைகளை திட்டமிட்டு அன்னியப்படுத்தி தேவையான போது அழித்தும் அவ் இயக்கங்களில் இருந்த ஆயிரக்கணக்கான போராளிகளை தேசிய விடுதலை யுத்தத்தின் பக்கம் வென்று எடுப்பதிலும், துரோகிகளை தேடும் வேட்டையில் அப்பாவி மக்கள் மீது நடந்து கொண்ட முறையிலும் புலிகள் இழைத்த தவறுகள் கொஞ்ச நஞ்சமல்ல. இந்திய ஆக்கிர மிப்புக்கும் சிறீலங்கா அரசுக்கும் எதிராக, பொது எதிரிக்கு எதிராக சிறீலங்கா வின் மக்கள் பேராட்டங்களை திட்டமிட்டு நீண்டகால நோக்கில் ஆதரவளிப் பதற்கும் அவற்றுடன் ஒன்றுபடுவதற்கும் எதிராக புலிகளின் தலைமை நடந்து கொண்ட அரசியல் இராணுவ தவறும் சிறியதல்லவே. இவற்றுக்கு காரணம் புலிகளின் குட்டி முதலாளிவர்க்க அரசியலும், குறுகிய கால இராணுவ வெற்றி கண்ணோட்டமுமே தான்.

புலிகள் அன்று இந்திய ஆக்கிரமிப்பு எதிர்ப்பு யுத்தத்தை இறுதி வரை நடத்தினார்கள். கொரில்லா யுத்தத்தில் அன்று தமக்கு தெரிந்த அத்தனை திறமைகளையும் பயன்படுத்தி யுத்தத்தின் மூலம் இந்திய ஆக்கிரமிப்பா ளனை தமிழீழ மக்களுக்கு அடையாளம் காட்டினர்.

யாழ்ப்பாணத்தை மீண்டும் தமது கட்டுப்பாட்டுள் கொண்டு வருவதற் கான இராணுவ ரீதியான இராஜதந்திரங்களை புலிகள் கடைப்பிடித்தனர். மூலோபாய ரீதியாக தற்காப்பு கட்டத்தில் இருந்து கொண்டே IPKF இன் பின் வாங்குதலையும் சிறீலங்கா இராணுவத்தின் எல்லைப்படுத்தப்பட்ட சக்தியை யும் சரியாக பயன்படுத்தி யாழ்ப்பாணத்தை எதிரி முடமாக்கப்பட்ட பிரதேச மாக மாற்றினர் புலிகளின் இந்த இராணுவ தந்திரத்தை அதற்காக அரசுடன் ஓராண்டு நடத்திய பேச்சு வார்த்தையை, தேனிலவை மெச்சுவோமாக.

இந்திய ஆக்கிரமிப்பு எதிர்ப்பு தேசிய விடுதலை யுத்தம் மூலோபாய ரீதி யாக எதிரி தனது முதலாவது கட்டத்திலே இருந்தபடியே நாட்டை விட்டு பின்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வாங்கினான். புலிகளும் தமது மூலோபாய ரீதியான முதலாவது கட்டத்தில் இருந்தபடியே எதிரியை பின் வாங்க வைத்ததுடன், யாழில் மட்டும் சிறீலங்கா படைகளை முகாமுக்குள் நேரடியாக முடமாக்கி தமது கட்டுப்பாட்டு பிரதேசமாக, எதிரி முடமாக்கப்பட்ட பிரதேசமாக மாற்றினர். இத்தகைய ஒரு அரசியல் - இராணுவ யுத்த நிலமை விதிவிலக்காக நடக்கக் கூடியதே என்பதற்கு இந்திய ஆக்கிரமிப்புக்கு எதிரான புலிகளின் யுத்தம் ஒரு எடுத்துக் காட்டு.

### தேசிய விடுதலை யுத்தம் இரண்டாவது தடவையாக மூலோபாய ரீதியான இரண்டாவது கட்டத்திற்குள்

IPKF முழுவதும் பின் வாங்கியது. யாழ்ப்பாணத்தின் அதே பழைய இராணுவ - கடற்படை முகாம்களில் சிறீலங்கா படைகள் மிக குறைந்த எண்ணிக்கையில் இருந்தன. புலிகள் இராணுவ முகாம்களை அழித்து தமது கட்டுக்குள் கொண்டு வருமளவுக்கு இராணுவ பலத்தை பெற்றிருக்கவில்லை. ஆனால் முகாம்களுக்குள் இருந்த இராணுவம் வெளியே வரவிடாதபடி தாக்கும்-தடுக்கும் முறையில் பாதுகாப்பு அரண்களை, கண்ணி வெடிகளை, கண்காணிப்பு நிலைகளை உரிய இடங்களில் ஏற்படுத்தினர். யாழில் இராணுவத்தை முகாமுள் முடக்கும் தயாரிப்புக்களை விரைவு படுத்தினர்.

எதிரியும் புலிகளின் இந்த தயாரிப்புக்களை அறிந்தான். எதிரி தெற்கில் இருந்த படைகளை உடனடியாக யாழுக்கு மாற்ற முடியாத நிலமை, J.V.P. தலமை அழிக்கப்பட்டபின் பதிலடியாக J.V.P. கொடுக்க கூடிய அதிர்ச்சி நடவடிக்கைகளை சமாளிக்கவும் - J.V.P. யை பூண்டோடு அழிக்கவும் தயார் நிலையில் இருக்க வேண்டியிருந்தது. கூடவே புலிகளுடன் நடத்திவந்த பேச்சு வார்த்தையை பயன்படுத்தி இராணுவ தயாரிப்பை மேலும் செய்ய வேண்டிய தேவை, 'புலிகளைப் போல்' அரசுக்கும் தேவைப்பட்டது. எதிரி கிழக்கில் தனது கட்டுப்பாட்டை பேணிக் கொள்வதும், வடக்கில் தற்காலிகமாக முடங்கிகிடப்பதும் ஒரே வழியானது.

புலிகள் வடக்கைப் போல் கிழக்கிலும் கொரில்லாக்களின் சுதந்திர நடமாட்டத்தை உருவாக்க முயன்றனர். எதிரியின் படைகள் வடக்குக்கு மாற்றப் படுவதை தடுக்கவும், கிழக்கில் தன்னைப் பலப்படுத்த எதிரி உருவாக்கி வந்த பொலிஸ் நிலையங்கள், கிழக்கில் மிச்ச மிதமிருந்த தமிழ்த் துரோகப் படைகளுடன் எதிரி ஏற்படுத்த தொடங்கிய உறவுகள், புலிகளை வேகமாக இயங்க தூண்டியது.

யாழ்ப்பாணத்தில் எதிரி படைகளை பலப்படுத்துவதற்கு முன், எதிரி முகாமை விட்டு வெளியில் வருவதை தடுப்பதற்கான தயாரிப்புக்களில் முன்னிலை பெற்ற புலிகள், அம்பாறை பொலிஸ் நிலைய தாக்குதலுடன் 91 யூனில் மீண்டும் யுத்தம் உருவானது. தமது முன் திட்டப்படி கிழக்கில் நூற்றுக்கணக்கான பொலிசாரை புலிகள் பிணைக் கைதிகள் ஆக்கினர். கிழக்கிலும், வடக்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கின் எல்லைப் புறங்களிலும் தொடர்ச்சியான கொரில்லா தாக்குதல்களை தந்திரோபாயமான போர் நடவடிக்கைகளை மேற் கொண்டனர். யாழில் இரா ணுவம் முகாமை விட்டு வெளியே வந்தால் என்ன நடக்கும் என அச்சுறுத்தும் இராணுவ முன் செய்கைகளை வெளிப்படுத்தினர்.

1987-ல் மூலோபாயரீதியாக யுத்தத்தில் முன்னேறி முதல் கட்டத்தை அடைந்த எதிரி, IPKF வருகையால் ஏற்பட்ட மொத்த யுத்த சூழ்நிலை மாற்றங் களால், IPKF பின் வாங்கி பின்னர் தனது நிலையை தக்க வைக்கும் தயாரிப்பில் ஏற்பட்ட தோல்வியால் மீண்டும் 91-ல் மூலோபாய ரீதியாக பாதுகாப்பு கட்டத் துக்கு இறங்க நேரிட்டது. 85-ல் எதிரி முகாமுக்குள் முடங்கிய முறைக்கும் இப்போது முடங்கிய முறையும் வேறுபட்டது. ஆனால் எதிரி சிறீலங்காவில் தோன்றிய ஆயுத எழுச்சியை மூலோபாய ரீதியாக முதல் கட்டத்திலேயே நசுக்கி விட்ட வெற்றியும், புலிக்கும் இந்தியப் படைகளுக்கும் இடையில் மோதலை உருவாக்கியதிலும் வெற்றி பெற்றிருந்தான். அதே போல் புலிகள் 87-இல் மூலோபாய ரீதியாக முதலாவது கட்டத்துக்கு தாம் தள்ளப்பட்ட போதும், இந்திய ஆக்கிரமிப்பு படையை பின் வாங்க செய்த வெற்றியுடன், யாழில் மீண்டும் சிறீலங்கா படைகளை முடக்கிய வெற்றியும் பெற்றிருந்தனர்.

புலிகள் மூலோபாய ரீதியான எதிர் தாக்குதலுக்கான தயாரிப்பு கட்டத் தின் தொடக்கம் முதல் கிழக்கில், வட எல்லைப் புற பகுதிகளில் தந்திரோபாய ரீதியான தாக்குதல்களை இராணுவ முகாம்கள் மீது நடத்தினர். பொலிஸ் நிலையங்கள் மேலான போர் நடவடிக்கைகள் வெற்றியளித்தன. எதிரி அவற்றை மூட வேண்டியளவுக்கு பின் வாங்கினான் கிழக்கில் இருந்த முகாம் களை பாதுகாப்பது இராணுவத்தின் பெரிய வேலையாக இருந்தது. வடக் குக்கு இராணுவத்தை தொடர்ந்து அனுப்பினால் கிழக்கையும் புலிகளின் கைக ளில் ஒப்படைப்பதற்கு சமன் ஆகிவிடும். இதனால் யாழை பலப்படுத்தும் வேலையை தற்காலிகமாக நிறுத்தினான். முகாமை விட்டு வெளியே செல் வதை தந்திரோபாயமான தற்காப்பாக அமுல்படுத்தினான்.

'புலிகளின் யாழ் இராச்சியம்' வடதமிழீழம் அறிவிக்கப்பட்டது. யாழின் சிவில் சமூக நிறுவன கட்டுப்பாடுகள் புலிகளிடம் வந்தது. நிதி, நீதி, பொலிசு, சட்டம், வரி, போக்குவரத்து, ஒலி, ஒளிபரப்பு சொத்துக்கள் தேசியவுடமை (புலியுடமை) என புலிகளின் தனி இயக்க கட்டுப்பாடு உருவானது. பிரபாக ரன் தேசியத்தலைவராக பாடத் திட்டத்தில் சேர்க்கப்பட்டார். புலிகளே தமிழீழ போராட்டத்தின் ஒரே இயக்கமாக காட்டப்பட்டது. வெளியுறவு செயலகங் கள் உருவாகின. தமிழீழ அரசு பற்றிய புலிகளின் பொருளாதார, அரசியல், பாதுகாப்பு கொள்கைகள், அரசமைப்பு சட்டங்கள் யாழ் இராச்சியத்தில் அமு லுக்கு வரத் தொடங்கியது. சிறீலங்கா அரசின் இனவாத சிவில் சமூக நிறுவன கட்டுமானத்தை, சீரழிந்த சட்ட அமுலாக்கலுடன் ஒப்பிடுகையில் (குடித்த

www.tamilarangam.net



டைச் சட்டம் பெண்களின் சுதந்திரமான நடமாட்ட பாதுகாப்பு....) புலிகளின் சட்ட அமுல்வடிவங்கள் ஒரு புறம் இன ஒடுக்குமுறையில் இருந்து விடுபட்ட சுதந்திரத்தையும் மறுபுறம் ஒரு இராணுவ சர்வாதிகார அமைப்பின் தோற்றத் தையும் வெளிப்படையாக மக்களுக்கு காட்டியது.

ஒரு விடுதலை யுத்தத்தில் மூலோபாயரீதியான இரண்டாவது கட்டம் நீண்ட காலங்களை கொண்டது. நமது எதிர்த் தாக்குதலுக்கான தயாரிப்பு என்பது இராணுவம், பொருளாதாரம், அரசியல் என எல்லாவற்றிலும் தயா ரிப்பை கோருவது. ஒரு அமைதியானகால கட்டமல்ல இது இராணுவ ரீதியில் தாக்குதல்களால், போர் நடவடிக்கைகளால், எதிரியை சில இடங்களில் நிர்மூ லமாக்கும் இராணுவ நடவடிக்கைகளால் நிறைந்து காணப்படும் கட்டம், எதிரி முடக்கப்பட்ட பகுதிகளில் மூன்று துறைகளிலும் தயாரிப்பு வளரவேண் டும். எதிரிக்கும் நமக்கும் போட்டி நடக்கும் பகுதிகளில் தந்திரோபாயரீதி யான தாக்குதல்கள் வளர்வதும், எதிரியின் கட்டுப்பாட்டு பகுதியில் தற்காப்பு ரீதியான கொரில்லா தாக்குதல்கள் உருவாகி வளர வேண்டும். இதே போல் எதிரியும் தான் இரண்டாவது கட்டத்தில் தோற்றால் ஒரே வழி பின்வாங்குவது யுத்தத்தில் தோல்வியடைவது என்பதால் எதிரி மூலோபாய ரீதியான பாதுகாப் பில் நீண்ட காலம் இருந்து கொண்டு தனது பலவீனங்களை தவறுகளை மூன்று துறைகளிலும் தன்னை தயார்படுத்துவான். தான் முதலாவது கட்டத்துக்கு மீண் டும் திரும்புவதற்கு முழு அக்கறை எடுப்பான்.

''பழைய குருடி கதவைத் திறடி'' என்பது போல் 85-களில் யுத்தம் மூலோ பாயரீதியாக இரண்டாவது கட்டத்துள் நுழைந்த போதும் 91-இல் மீண்டும் யுத்தம் மூலோபாய ரீதியாக இரண்டாவது கட்டத்துள் நுழைந்த போதும் இருந்த இராணுவ - அரசியல் சூழ்நிலைமைகளை, இருபகுதியிலுமான இரா ணுவ சமனிலையை கணிப்பதில் புலிகள் தவறு இழைத்தனர். புலிகள் தங்க ளின் சிறப்பான யுத்த பங்களிப்பை நினைத்து சந்தோசம் அடைந்தது தவ றில்லை. அதிதமாக தமது பலத்தை கணித்தனர். யாழ் மீதான தமது கட்டுப் பாட்டை யுத்தத்தின் முடிந்த முடிவாக கருதினர். யுத்தம் மூலோபாயரீதியாக மூன்றாவது கட்டத்தில் இருப்பதாக நினைத்து செயல்பட்டனர். பிரச்சாரம் செய்தனர். யாழ் மீண்டும் தம் கையை விட்டு போகலாம் எதிரி கைக்கு என்பதை கனவிலும் ஏற்க மறுத்தனர். யுத்தத்தின் வளர்ச்சி - வீழ்ச்சி விதிகளை அறியாது இதுதான் 'இறுதியுத்தம்' 'இறுதியுத்தம்' என்றனர்.

**யாழ்ப்பாணம் ஒரு விடுதலைப் பிரதேசம் அல்ல,**
**எதிரி முடமாக்கப்பட்ட பிரதேசம்,**
**புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசம்**

யாழ்ப்பாணம் ஒரு விடுதலைப் பிரதேசமாக இருக்க வேண்டின், யாழுக் குள் உள்ள எதிரியின் முகாம்கள் சிறியதோ பெரியதோ எதிரி நிர்மூலமாக்கப்

www.tamilarangam.net



பட்டு முகாம்கள் நமது கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும். அல்லது நிரந்தர மாக அழிக்கப்பட வேண்டும். தரை, கடல் என புவி அமைப்பை பொறுத்து விடுதலைப் பிரதேசத்துள் எதிரி நுழைவதற்கு இயற்கையாகவே கடினமான பகுதிகளில் எமக்கு சாதகமான செயற்கையான பாதுகாப்பு மற்றும் எதிர்த் தாக்குதல் தயாரிப்பு நிலைகளை கொண்ட பகுதியில் எமக்கும் எதிரிக்கும் இடையிலான எல்லைச் சாவடி இருக்க வேண்டும். ஒரு வேளை எதிரி தன்து வாழ்வா - சாவா போரில் எவ்வளவு இழப்பை சந்தித்தும் உள்ளே நுழைய தயாரானல் அவனது நுழைவை தடுக்கவும் முன்னேறுதலை நிறுத்தவும் இயற் கையான, செயற்கையான வலுவான இராணுவ எதிர் தாக்குதல் அரண்கள் நம்மிடம் இருக்க வேண்டும். நமது ஆயுதங்கள், படை வடிவங்கள், வியூகங் கள் (கனரக ஆயதங்கள் உட்பட) எதிரி நுழையக்கூடிய வழிகளில் எப்போதும் தயார் நிலையில் இருக்க வேண்டும். தேவைப்படின் உதவிப்படைகள் வந்து சேர வழிஇருக்க வேண்டும். விடுதலைப் பிரதேச மக்கள் குறித்த வயது எல்லைக்கு மேல் எல்லாரும் ஆயுதப் பயிற்சி பெற்றிருக்க வேண்டும்.

மக்களின் ஆயுதப்படைகள் கட்டப்பட்டிருக்க வேண்டும். எதிரிக்கு எதி ராக தேவைப்படும் பொழுது மக்கள் உணர்வு பூர்வமாக அல்லது அழைப்பின் பேரில் மக்களின் ஆயுதப்படைகளில் போர் புரிய தயாராக இருக்க வேண்டும். விடுதலைப் பிரதேசத்துள் எதிரி நுழைந்தால் மக்கள் தமது சொந்த மண்ணும் வாழ்வும் பறிபோவதாக உணர்ந்து போர் வீரர்கள் அளவுக்கு யுத்த முனையில் தேர்ச்சியுடன் பங்காற்ற முடியாவிட்டாலும், போர்வீரர்களின் ஒரு கையாக செயல்படுமளவுக்கு மக்கள் தயாரிக்கப்பட்டிருக்க வேண்டும். யாழ் மக்கள் விமானக் குண்டு வீச்சுக்கும், பீரங்கி குண்டு தாக்குதலிலும் தம்மை தற்காத்து கொள்ள பதுங்கு குழிகளை அமைப்பதிலும், எச்சரிக்கையுடன் பதுங்கி கொள் வதற்கும் புலிகளால் பயிற்சி அளிக்கப்பட்டிருந்தனர். மற்றப்படி யுத்தத்தின் பார்வையாளர்களாகவே இருக்க பயிற்றுவிக்கப்பட்டனர். ''புலிகள் விட மாட்டார்கள். பார்த்துக் கொள்வார்கள்'' உணவும், பணமும், கொடுக்கவும், பாதுகாப்பு அரண்களுக்கு பனங்குத்தி வெட்டி அடுக்கவும், மண் மூட்டை அடிக்கவும், மாவீரர் கல்லறைகள் கட்டவும் ஆன கடமைகளே மக்களுக்கு சொல்லிக் கொடுக்கப்பட்டது. ஆகக் கூடியது எதிரியின் தாக்குதலை கண்ட தும் அகதிகளாக வெளியேற வைத்து சர்வதேச அபிப்பிராயத்தை ஆதரவை தேடுவது புலிகளின் வேலையாக இருந்தது.

விடுதலைப் பிரதேச மக்களுக்கு தொடர்ச்சியான இராணுவ அரசியல் விழிப்புணர்ச்சி பயிற்சிகள், பள்ளிகள் நடத்த வேண்டும். பொருளியல் வாழ் நிலைமையில் எதிரியின் பொருளாதார தடைகளைத் தாங்கி கொள்ளவும், சுய உற்பத்தியிலும் கவனம் செலுத்த வேண்டும். புலிகள் இதில் ஒரளவு வெற்றி பெற்றார்கள். ஆனால் கடத்தல் பொருள்களின் விலையை கட்டுக்குள் வைத்தி ருப்பதில், பணக்காரர்கள் மட்டுமல்ல ஏழைகளும் வாங்கும் ஏற்பாட்டை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



செய்யவில்லை. வெளி நாட்டு பணம் உள்ளவர்கால் தாக்கு பிடிக்க முடிந்தது. மொத்தத்தில் பொருளியல் வாழ்நிலையில் இருந்து வந்த ஏற்ற தாழ்வு, சமூக சமத்துவம் இன்மை (புலிகளாக மாறுவதில் பார்க்கப்படவில்லையே தவிர மற்றய) அனைத்து சமூக நடவடிக்கையிலும் தொடர்ந்தது. இந்த பொருளியல் ஏற்ற தாழ்வை நீக்க, சமூக, சமத்துவத்தை ஏற்படுத்த விடுதலைப் பிரதேச அரசு திட்டமிட்டு செயல்பட வேண்டும் அப்போது தான் எதிரியின் கட்டுப்பாட்டு பகுதியிலுள்ள தமிழ் மக்கள், தம்மை விட சிறந்ததான சுதந்திரமான உரிமை களை வாழ்க்கையை அனைத்து நிலைகளிலும் விடுதலைப் பிரதேச மக்கள் அனுபவிப்பதை பார்ப்பார்கள். யாழில் இருந்த பெரும்பான்மை மக்களின் மனநிலை என்னவாக இருந்தது? யாழுக்கு வெளியே வாழும் தமிழர்களின் வாழ்க்கை மேலானது என கருதினார்கள். புலிகளின் எல்லைச் சாவடியை தாண்டி போய் வர முடியாதா? என்ற ஏக்கம் இருந்தது. விடுதலைப் பிரதேசத் தின் குணாம்சங்களில் எவற்றை எல்லாம் புலிகளின் யாழ் இராச்சியத்தில் காண முடிந்தது.

விடுதலை யுத்தத்தில் இராணுவ ரீதியில் ஒரு விடுதலைப் பிரதேசம் எப்படி இருக்க வேண்டும். அரசியல் பொருளியல் அரசமைப்பு ரீதியில் எப் படி இருக்க வேண்டும். யாழ்ப்பாணம் ஒரு உ+ம் என கொள்ள முடியாது. மூன்று புறமும் கடல், சிறுபகுதி நிலத் தொடர்பு யாழ் ஒரு பெரிய குடாநாடு. நட்ட நடுவில் வடக்கின் முப்படைகளுக்கும் தலைமையகமான மிகப் பெரிய பலாலி இராணுவ முகாம், உள்ளே இருக்க காரை நகர் கடற்படை முகாம், ஆனையிறவு, பூனநகரி, ஊர்காவத்துறை இராணுவ முகாம், குடாவை சுற்றியி ருக்க, யாழின் சிவில் சமூக நிறுவனங்களின் கட்டுப்பாட்டை மட்டும் பார்த்து விடுதலைப்பிரதேசம் என புலிகளும் - மற்றவர்களும் பிரச்சாரப்படுத்தினர். தவறான யுத்த கணிப்பீட்டில் இருந்தனர்.

யாழ் எதிரியை முடமாக்கிய பிரதேசம் என்பதே உண்மை எதிரி எப்ப வேண்டுமானாலும் தன்னை பாதுகாப்பு கட்டத்தில் தயாரித்துக் கொண்டு வெளியே வருவான் என்பது பல தடவை நிருபிக்கப்பட்டுள்ளது. ஒப்பறேசன் லிபறேசன், பவான், முன்னேறிப்பாய்தல் சூரிய ஒளி 1-2, என எல்லாவற்றி லும், யாழை கைப்பற்றும் இராணுவ வியூகத்தை தீர்மானிக்கும் தொடக்க புள்ளியாக பலாலி இராணுவ முகாம் இருக்கிறது. நாலாபுறமும் படைகள் முன்னேற முடியும். எதிரியை தடுத்து நிறுத்த இயற்கையான பூகோள அமைப்பு செயற்கை தடைகளுக்கு தயாரிப்பு எங்கும் இல்லை. யாழ்ப்பா ணத்தை துண்டு துண்டாக எதிரி கைப்பற்றவும், கடற்கரையோ முகாம்களில் இருந்தும் பலாலி முகாமின் மையத்தில் இருந்தும் நம்மை சுற்றி வளைக்க இவை எதிரிக்கு அனு கூலமாக இருக்கிறது.

பலாலி முகாம் அழிக்கப்பட்டாலும், யாழ்ப்பாணத்தை ஒரு விடுதலைப் பிரதேசமாக மாற்றுவது காரிய சாத்தியமா என்பதும், ஒரு வேளை விடுதலைப்

www.tamilarangam.net



பிரதேசமாக மாற்றப்பட்டாலும் நீண்ட கால யுத்த நோத்தில் யாழின் பூகோள நிலமையும், சமூக பொருளாதார அரசியல் காரணிகளும் எத்தனை வருடங்களுக்கு விடுதலைப் பிரதேசமாக நீடித்து நிற்க்க அனுமதிக்கும்? தேசிய விடுதலை யுத்தத்தில் யாழ்ப்பாணத்தை தான் மீண்டும் மீண்டும் முதல் நிலை விடுதலைப் பிரதேசமாக பார்க்க வேண்டுமா? எதிரி முடமாக்கப்பட்ட பிரதேசத்தை எப்படி விடுதலைப் பிரதேசமாக்க முடியும். அதற்கான இராணுவ வழிகள் என்ன என்பது பற்றியும், இராணுவ மூலோபாயத்தை வகுப்பதில் அக்கறையுள்ளவர்கள் சிந்திக்கவும் ஆராயவும் வேண்டிய வேளையிது.

எதிரி மிகப் பொறுமையாக மூலோபாய ரீதியான பாதுகாப்பு கட்டத்தில் இருந்தான். புலிகளைப் பற்றி நன்றாக படித்தான். இராணுவ அரசியல் ரீதியில் தன்னை தயார்படுத்தினான். புலிகளுடன் முரண்பட்டவர்களை மெது மெதுவாக இரண்டு முறையிலும் தனது நண்பர்களாக்கினான். சிறீலங்காவின் நிலைமைகளை சீரமைத்தான். இராணுவத்தை தெற்கிலிருந்து வடக்கு, கிழக்குக்கு படைப் பகுப்பு செய்தான், கிழக்கில் துரோக தமிழ்த் தலமைகளின் உதவியுடன் தனது இராணுவ நடவடிக்கைகளை புலிகள் மேல் முடுக்கினான். அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களை தனது கட்டுப்பாட்டுள் புலிகளின் பாரிய எதிர்ப்பின்றி கொண்டு வந்தான். EPDP, EPRLR, TELO போன்ற இயக்கங்களின் அரசியல் அரசு நிர்வாக பங்களிப்புக்களை ஊக்குவித்து புலிகளுக்கும் மக்களுக்கும் இடையிலான 'இன உணர்வு உறவுகளை' பலவீனமடையச் செய்தான். இதே போல் PLOT, TELO உதவியுடன் வவுனியா மன்னார் மாவட்டங்களின் நகர்ப்புற கட்டுப்பாட்டை புலிகளிடம் இருந்து விடுவித்தான்.

தேசிய விடுதலை யுத்தத்தில் எதிரிக்கு 91-க்கு பின் கிடைத்த மிகப் பெரிய சாதகமான அம்சம் மூலோபாய ரீதியாக வீழ்ந்த தன்னை, தமிழர்களை கொண்டே தமிழர்களை அழிக்கும் போராட்டத்தை, பலவீனப்படுத்தும் நடவடிக்கைகள் மூலம் மீண்டும் மூலோபாய ரீதியாக தான் எழுந்திருக்க முயன்றான். அதற்கு "புலிகளே தமது பிரதான எதிரி" என்ற முடிவுக்கு வந்த எல்லா தமிழர்களையும், இயக்கங்களையும் எதிரி பயன்படுத்தினான். புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த தீவுப் பகுதிகளை மீண்டும் ஆக்கிரமிக்கும் இராணுவ நடவடிக்கையை, Amphibious தாக்குதல் நடத்தினான். வெற்றியடைந்தான் மிகத் தந்திரமாக துரோக குழுக்களில் ஒன்றான இராணுவரீதியில் எதிரியுடன் முழுக்க ஒத்துழைத்த EPDP இன் கைகளில் தீவுப்பகுதியின் சிவில் சமூக கட்டுப்பாட்டை ஒப்படைத்தான். இராணுவ கட்டுப்பாட்டை தனது தலமையில் கூட்டாக செய்தான். புலிகளிடம் இருந்து நிலத்தை கைப்பற்றுவது தனது சிங்கள ஆட்சி அதிகாரத்துக்கு அல்ல "தேசிய நீரோட்டத்தில் உள்ள நல்ல தமிழர்களின் கைகளில் ஒப்படைக்கவே" என உள் நாட்டிலும் - வெளி நாட்டிலும் பிரச்சாரம் செய்தான். புலிகளை அரசியல் ரீதியில் மக்களிடம் இருந்து அன்னியப்படுத்தும் வேலைத்திட்டமாக தமிழ்த் துரோக

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



குழுக்களை பயன்படுத்தி செய்தான். யாழப்பாணடத்துக்கு வெளியே புலி களை இராணுவ ரீதியாக செயற்படா நிலைக்கு தள்ளும் - பலவீனப்படுத்தும் வேலையை எதிரி தானே செய்தான். தீவுப்பகுதியின் தோல்வி புலிகளை மூலோபாரீதியான தோல்விக்கு தள்ளவில்லை. ஆனால் எதிரி மூலோபாய ரீதியான பாதுகாப்பு கட்டத்தில் இருந்து தந்திரோபாய ரீதியாக நடத்திய தாக்கு தலின் வெற்றியாக அமைந்தது.

புலிகள் எதிர் தாக்குதலுக்கான தயாரிப்பு கட்டத்தில் யாழில் சொந்த இராணுவ தொழில் நுட்பவியலாளர்களை கொண்டு கைக்குண்டுகளும், தோட்டாக்களும், சிறிய மோட்டர்களும் தயாரித்தனர். துப்பாக்கிகளை பழுது பார்த்தனர். இவற்றில் தொழில் நுட்பம் வளர்க்கப்பட்டது. இராணுவ மருத்து வமனை, இராணுவ தலைமையகம், தொலைத் தொடர்பு தலமைபகம் நிலத் தின் மேலும் பாதாளத்திலும் அமைத்தனர். இரகசிய இராணுவ கிட்டங்கி களை ஏற்படுத்தி பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்தனர். இராணுவ பயிற்சி பள்ளிகளை அமைத்தனர்.

உள்நாட்டு மூலவளங்களை பயன்படுத்தி பொருளாதார திட்டங்களை ஊக்குவித்தனர். எதிரியின் பொருளாதார தடையை ஒரளவு தாக்கு பிடிக்கும் அளவுக்கு முயற்சித்தனர். 'தமிழீழ பொருண்மிய கழகம்' குறிப்பிடத்தக்க சாத னைகளை செய்தது. அரசியல் பண்பாட்டு ரீதியில் எல்லாம் 'புலிகளின் குர லே', யுத்தமே வாழ்க்கை எனவும் போதிக்கப்பட்டது. மாற்றுக் கருத்துக்கள் துப்பாக்கி முனையில் தடை செய்யப்பட்டது. எதிரியை எதிர்த்து நிற்க்கும் உரிமை புலியை தவிர யாருக்கும் இல்லை என்ற சட்டம் எழுதப்படாது அமுல்படுத்தப்பட்டது. பல புரட்சிகர தேசபக்த சனநாயக சக்திகள் சிறை வைக்கப்பட்டனர். சிறைத்துறை வளர்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுத்தனர். தமிழ்நாட்டு சினிமாவும், சீரழிவுக்காலாச்சார புத்தகங்களும் தடை செய்யப் பட்டது.

ஆனால் தனி ஒரு மனிதனின் ஒரு சிறு கூட்டத்தின் வீரசாகசங்களை காட்டும், எந்தப் பெரிய எதிரிகளையும் நவீன ஆயுதங்களை கொண்டு ஒருவன் தோற்கடிக்கும் 'ராம்போ' ஜாக்கிசன் படங்கள் ஓட புலிகளே ஊக்குவித்தனர். இறந்த போராளிகளுக்கு கட்டப்பட்ட கல்லறைகள் சுதந்திரம் அடைந்த நாட் டில் செய்யப்பட்டிருப்பதை காட்டிலும் அழகு கூட்டும் பராமரிக்கும் வேலை கள் செய்யப்பட்டன. தமிழீழ வங்கியும், நாணயங்களும் புழக்கத்துக்கு கொண்டு வர முயற்சிகள் நடந்தன.

யுத்த ரீதியில் யாழ் ஒரு இராணுவம் முடக்கப்பட்ட பிரதேசம் என புரிய, ஏற்க்க மறுத்தனர். விடுதலைப் பிரதேசமாக வட-தென் வியட்னாம் போல், யாழை விடுதலை அடைந்த 'வட தமிழீழமாக' கருதினர். இது ஒரு மாயையில் புலிகள் செய்ததல்ல. யாழுக்குள் உள்ள இராணுவ கடற்படை முகாம்கள்

www.tamilarangam.net



பலப்படுத்தப்பட்டு வருவதை, தீவுப்பகுதி தம் கையை விட்டு போனதை கண்டார்கள். கிழக்கில் தாம் செயற்படா தற்காப்பு நிலையில் இருப்பதையும், எதிரியின் கட்டுப்பாடு மேலோங்கி வருவதையும், வடக்கின் எல்லைப் பிரதே சங்களில் கொரில்லாக்கள் தந்திரோபாயரீதியான சில தாக்குதல்களிலும், மிகக் குறைந்தளவான போர் நடவடிக்கையிலும் மட்டுமே ஈடுபட்டு வருவதையும், யாழில் எதிரி முகாம்கள் மீது வெற்றியளிக்கும் நிர்மூலமாக்கும் எந்த தாக்குதல் களையும் நடத்த முடியவில்லை என ஒட்டு மொத்த யுத்த சூழ்நிலைமையை யும் புலிகள் கண்ணார கண்டனர். எதிரி எப்போது வேண்டுமானாலும் யாழைத் தாக்குவான் என்பதையும் தெரிந்திருந்தனர் புலிகள், அதனால் தான் இறுதி யுத்தம் வரப் போகிறது. தயாரிப்புக்கு 'பவுனும், பணமும்' வசூலிக்கும் இயக்கத்தை நடத்தினர்.

85-களைப் போல் அன்றி இம்முறை யுத்தம் மூலோபாய ரீதியாக இரண் டாவது கட்டத்துள் நுழைந்து இரண்டு மூன்று வருடங்களை தாண்டிய போதும் இராணுவ ரீதியாக யுத்தம் வளர்ந்து செல்வதற்கான தயாரிப்புக்கள், திட்டமிட்ட எதிர் தாக்குதல்களும், தந்திரோபாயரீதியான தாக்குதல்களும் போர் நடவடிக்கைகளும் அதற்கான படைவடிவ, ஆயுத நிலை வளர்ச்சிகளும் நடக்கவில்லை. ஒரு சில வெற்றி கண்ட தோல்வியடைந்த பெரிய இராணுவ நடவடிக்கைகள் தான் நடந்தன. அவை எதுவும் எதிரியை மூலோபாயரீதியாக பலவீனப்படுத்தவில்லை. எதிரிக்கு தனது பலவீனங்களை கற்றுக் கொடுக்கும் தாக்குதல்களாகவே எதிர் மறையில் இருந்தன. எதிரியை தொடர்ந்தும் முட மாக்கல் நிலையில் வைத்திருக்க முடியும் எனவும், எதிரி தங்களை அங்கீக ரித்து பேச்சு வார்த்தைக்கு கீழிறங்குவதே ஒரே வழி எனவும் புலிகள் தவறாக கணித்தனர்.

விடுதலை யுத்தத்தின் இரண்டு வடிவங்களான கொரில்லா யுத்த முறை, கிரமமான யுத்த முறையில், கொரில்லா யுத்த முறையைக் கொண்டு யாழில் எதிரியை முகாமுள் முடமாக்க முடிந்தது உண்மையே. ஆனால் கிரமமான யுத்த முறைக்கு தம்மை வளர்க்க தவறினால் கிரமமான யுத்த முறையில் தேர்ச்சி பெற முடியாவிட்டால் எதிரியை தொடர்ந்தும் முடமாக்கல் நிலை யில் வைத்திருக்க கூட முடியாது போகும். யாழில் எதிரியை முடமாக்கல் நிலையில் நீட்டிக்கவும், நாம் கிரமமான யுத்த முறைக்கு வளரவும் வேண்டியி ருந்தது. கிழக்கில் எதிரியின் நிம்மதியான வாழ்வை கெடுக்க நாம் தற்காப்பில் இருந்து கொண்டு தந்திரோபாயமான கொரில்லா தாக்குதல்களை, போர் நட வடிக்கைகளை செய்ய வேண்டும். பெரு நிலப்பரப்பில் எதிரிக்கு ஓய்வு கொடுக்காமல் தந்திரோபாயமான தாக்குதல்களை வளர்க்க வேண்டும். இதன் மூலம் எதிரி முடமாக்கப்பட்ட பிரதேசத்தில் இராணுவத்தின் பலத்தை அதிக ரிக்க முடியாதபடி செய்ய வேண்டும். யாழில் மேலும் எதிரியை பலவீனப் படுத்த பின்புறமாக கிழக்கிலும், பெருநிலப்பரப்பிலும் புலிகளின் இராணுவ

தமிழ்த் தேசிய ஆவண சுவடிகள்

www.tamilarangam.net



நடவடிக்கைகள் வளர்க்கப்பட்டிருக்க வேண்டும். பெரு நிலப்பரப்பில் கூட எதிரியை முடமாக்கும் ஒரு பிரதேசத்தை வளர்க்க முயன்றிருக்க வேண்டும்.

கிரமமான யுத்தத்தின் இரண்டு முறைகளான நடமாட்ட யுத்த முறை ஸ்தான யுத்த முறைக்கு வளர்வது மூலோபாயரீதியான இரண்டாவது கட்டத்தில் உள்ள நமக்கு மிக அடிப்படையாகவுள்ளது. யாழின் யுத்த சூழ்நிலமையும், புலி அமைப்பும் இதுவரை நடமாட்ட யுத்தத்திற்கான வாய்ப்புக்களை மட்டுப்படுத்தியுள்ளது. எதிரி பெரிய இராணுவ கடற்படை முகாமுக்குள் முடமாக்கப்பட்டிருந்தும், யாழில் உள்ள முகாமுகளுக்கு இடையிலும், யாழுக்கு வெளியேயான முகாமுகளுடனான தொடர்பிலும், படைப்பரிமாற்றம், ஆயுத பரிமாற்றம் மற்றும் அன்றாட தேவைகளுக்கான போக்குவரத்துக்கு வான்வெளி, கடல்வழி போக்குவரத்தை பயன்படுத்தினான். தரைப் போக்குவரத்தை நிறுத்தினான். (ஆனால் கிழக்கிலும், பெரு நிலப்பரப்பிலும் நடமாட்ட யுத்தத்துக்கான வாய்ப்புகள் நிறைய உண்டு) எதிரி 5 ஆண்டுகள் முகாமுக்குள் முடங்கி கிடக்கையில் நாம் ஸ்தான யுத்த முறைக்கு வளர்ந்திருக்க வேண்டும். அப்போது மட்டுமே எதிரியின் முகாம்கள் மீது வெற்றியளிக்கும் திட்டமிட்ட தாக்குதல்களை நடத்த முடியும். எதிரியை நிர்மூலமாக்கி முகாமை கைப்பற்றி வைத்திருக்கவோ - அழிக்கவோ முடியும். புலிகளின் ஆனையிறவு முகாம் மீதான தாக்குதல் தோல்வியும், பூனகரி முகாம் தாக்குதல் வெற்றியும், ஸ்தான யுத்தத்தின் தொடக்க வடிவங்கள். ஆனால் அவை ஸ்தான யுத்தத்திற்கான நிரந்தபடை வடிவத்துடன் நடத்தப்பட்டவை அல்ல. படை நிலைப் பிரிப்பிலும், ஆயுத வகைப்படுத்தல் முறையில், தொலைத்தொடர்பு, போக்குவரத்து முறையில், படை வியூகத்தில் பல கொரில்லாக் குழுக்களின் சேர்க்கையாக தேர்ந்தெடுத்த கூட்டு வடிவமாக நடத்தப்பட்டது. யாழ் கோட்டை மீதான வெற்றி புலிகளின் ஸ்தான யுத்தத்தின் வெற்றியாக பார்க்கப்படுகிறது. யாழ் கோட்டைச் சமரில் எதிரி தந்திரோபாயமாக பின் வாங்கிய பின்னும், எதிரி உள்ளே இருப்பதாக நினைத்து புலிகள் தாக்கிக் கொண்டிருந்ததை கவனத்தில் கொண்டு பார்ப்பது நல்லது. மண்டைத்தீவு முகாம் மீதான தாக்குதல் ஒரு ஸ்தான யுத்தமுறை தாக்குதல் அல்ல Amphibious தாக்குதல் வெற்றியாகும். தீவுப்பகுதியை புலிகளிடம் இருந்து எதிரி கைப்பற்றியது கிரமமான - யுத்த முறைக்கு Amphibious தாக்குதல் முறையை பயன்படுத்தியதாகும்.

புலிகள் பெரு நிலப்பரப்பில் நடமாட்ட யுத்ததை தொடக்கி வளர்த்திருக்க வேண்டும். அதற்கான வாய்ப்புக்களை எதிரி வழங்கிக் கொண்டிருந்தான். புலிகள் கொரில்லா யுத்த முறையுடன் நிறுத்திக் கொண்டனர். அல்லது கொரில்லாக் குழுக்களின் கூட்டு யுத்த நடவடிக்கைகளுடன் திருப்தி அடைந்தனர். ஒரு முகாம் மீதான தாக்குதலில் கூட்டு கொரில்லா யுத்த முறை வடிவத்தையும், அவ்வேளை எதிரிக்கு உதவ வரும் அக்கம் பக்க படைகளை தனித்த

www.tamilarangam.net



னியான கொரில்லா குழுக்கள் மூலம் எதிர்பார்த்த பாதையில் கிடைக்கும் எதிரியை மட்டும் தாக்கி அழிப்பதும் - தடுத்து நிறுத்துவதும் ஆன முறையை கையாண்டனர். யாழ் தமது கட்டுப்பாட்டில் இருந்த போது, புலிகள் இங்கு ஸ்தான யுத்த முறைக்கு வளர்வதிலும், பெரு நிலப்பரப்பில் நடமாட்ட யுத்த முறைக்கு வளர்வதிலும் மொத்தத்தில் கிரமமான யுத்தத்திற்கு தம்மை தயாரிப்பதில் கவனம் செலுத்தி இருந்தால், எதிரி தனது பலத்தை எங்கும் ஸ்திரப்படுத்திக் கொள்ள விடாது தடுத்திருக்கலாம். பெரு நிலப்பரப்பில் கொரில்லா யுத்த முறையை கொண்டே எதிரியை முடமாக்கல் நிலைக்கு தள்ளுவதில் கூட முன்னுரிமை கொடுக்க தவறிய புலிகளால் நடமாட்ட யுத்த முறைக்கு வளர்வது காரிய சாத்தியமற்றதே. கிழக்கில் புகையிரத பாதை பாதுகாப்பு, நெடுஞ்சாலை பாதுகாப்பு மற்றும் தேடுதல் வேட்டையில் ஈடுபடும் எதிரியின் செக்சன், பிளட்டூன்கள் மீது மட்டகளப்பில் இன்றுவரை புலிகளின் கொரில்லா தாக்குதல் வெற்றியளித்து வருகிறது. இதை நடமாட்ட யுத்த முறையின் வெற்றியாக பார்ப்பது மிகத் தவறாகும். இது நடமாட்டத்திலுள்ள எதிரியன் சிறு படைப்பிரிவுகள் மீது நடமாட்டத்திலுள்ள கொரில்லாக்களின் தாக்குதல்களாக, வெற்றிகளாக மட்டுமே பார்க்க வேண்டும். வெலிஓயா தாக்குதலின் மிகப் பெரிய தோல்வி. ஆனையிறவு தோல்வி தொடக்க நிலையிருந்த ஸ்தான யுத்த முறையில் நடத்தப்பட்ட தாக்குதல்களின் தோல்வியாகும். இவை புலிகளை மூலோபாய ரீதியான எதிர் தாக்குதலுக்கான தயாரிப்பு கட்டத்தின் தோல்வியாக மாற்றிவிடவில்லை. அதே போன்று கோட்டை, பூனநகரி, மண்டைத்தீவு வெற்றிகள் எதிரியை மூலோபாய ரீதியாக பின் வாங்கும் 3-வதுகட்டத்துக்கு தள்ளி விடவும் இல்லை.

இந்த தோல்விகள், வெற்றிகளின் படிப்பனைகளை கொண்டு, யாழ் மீதான கட்டுப்பாட்டை தக்க வைப்பதற்கான தேவையை இராணுவ ரீதியில் புரிந்து கொரில்லா யுத்த வடிவத்திலிருந்து கிரமமான யுத்த வடிவத்துக்கு வளர்வதிலும், ஸ்தான யுத்த முறையை செழுமைப் படுத்தி வளர்ப்பதிலும், நடமாட்ட யுத்த முறையை உருவாக்குவதிலும் முன்னுரிமை கொடுப்பதற்கு பதில் குண்டான் சட்டிக்குள் குதிரை ஓட்டுவதில் அதிக அக்கறை காட்டினர். கொரில்லா யுத்த வடிவத்துள் புதிய புதிய யுக்திகளை உருவாக்கினர்.

தீவுப்பகுதியின் தோல்வியும், கடற்படை உதவியுடன் இராணுவம் கடல் வழிமூலம் ஒரு பகுதியில் இருந்து மற்ற பகுதிக்கு வந்து Amphibious தாக்குதல் நடத்துவதையும்கண்டனர். எதிரியின் கடல்வழிப் போக்குவரத்தை தடுக்கவும், புலிகளின் வடக்குக்கும் - கிழக்குக்குமான தரைவழி - படகுவழி போக்குவரத்தை ஆனையிறவு முகாமும், பூனநகரி முகாமும் தடுத்து வந்தது. ராஜீவ் கொலைக்கு பின் தமிழகத்துடனான கடல் போக்குவரத்தில் ஏற்பட்ட நெருக்கடிகளாலும், கூடவே திருகோண மலை, கொழும்பு துறைமுகங்கள் மீதான தாக்குதலுக்கு கடல் வழியின் சாதகமான வாய்ப்பையும் உணர்ந்து புலிகளின்

www.tamilarangam.net



தலைமை 94-ல் கடற்புலிகள் என்ற கொரில்லா அணியை உருவாக்கியது. 1983-களில் இருந்து தமிழ்நாட்டுக்கு பயிற்சிக்கு செல்லும் போராளி இயக்கங்கள் படகுகளில் சிறந்த நீச்சல் வீரர்களை, வண்டி ஓட்டிகளை உருவாக்கி வைத்திருந்தனர். சிறீலங்கா கடற்படையை தவிர்க்க முடியாது சந்தித்தால் தாக்குவதற்கும் - தப்புவதற்கும் படகுகளில் L.M.G. யும் பொருத்திவைத்திருப்பது வழக்கமாகவிருந்தது.

95-ல் யுத்த நிறுத்தத்தை உடைத்த, திருகோணமலைத் துறைமுக தாக்குதல், முன்னேறிப் பாய்தல், நடவடிக்கையில் புலிகளின் எதிர் நடவடிக்கையான புலிப்பாய்ச்சலின் போது காங்கேசன் துறை முகத்தில் 'எடித்தரா' ரடார் பொருத்திய கட்டளைக் கப்பலை மூழ்கடித்தது. முல்லைத் தீவு கடலில் கடற்படை கொண்டு வந்த பயணிகள் கப்பலை கடத்தியது, மற்றும் பல கடல் சமரில் கடற் படையினரையும், கடற் காவல் ரோந்து படகுகளையும் வெடி பொருள் நிரம்பி படகுகளில் சென்று மோதியும், நீரடி நீச்சல் அணியின் தற்கொலைத் தாக்குதல் மூலமும் எதிரியை கடலிலும் புலிகள் தாக்க தொடங்கினர். பூனகரி, மண்டைத்தீவு இராணுவ முகாம் தாக்குதலின் வெற்றியில் கடற்புலிகளின் பங்கு குறிப்பிடத்தக்கது. இவை கடல்புலிகளின் கொரில்லாப்போர் வெற்றிகளாகும். யாழின் புவி அமைப்பும் நீண்ட நெடிய கடல்பகுதியும், யுத்த நிலைமையும் எதிரிக்கு எதிராக கடலிலும் யுத்தத்தை நடத்த கோரியது. இதைப் புரிந்து கடலில் கொரில்லாப் போர் என்ற மட்டத்துக்கு வளர்த்தது புலிகளின் தலைமை.

எதிரியின் விமானப்படையானது யுத்தத்தில் வழங்கி வந்த பங்கை அறிவோம். தேசிய விடுதலை யுத்தத்தில் புலிகள் 95-ல் நடத்திய விமான எதிர்ப்பு ஏவுகனை தாக்குதல் யுத்தத்தின் போக்கை திசை திருப்பி விடும் என எதிர்பார்க்கும் அளவுக்கு இருந்தது. பலாலியில் புலிகளின் ஏவுகனை தாக்குதலால், படைகளை ஆயுதங்களை மற்றும் இராணுவ சாதனங்களை உணவை ஏற்றி இறக்கும் போக்குவரத்து அவ்ரோ விமானம் 2 சுட்டு வீழ்த்தப்பட்டது. புலிப் பாச்சலில் F - 7 ரக குண்டு வீச்சு விமானம் வீழ்த்தப்பட்டது. எதிரி தற்காலிகமாக தனது விமான போக்குவரத்தை நிறுத்தும் அளவுக்கு பாதிப்பை ஏற்படுத்தியது. கொழும்பு கடலில் 60 இராணுவத்துடன் தான் கடலில் வீழ்ந்து ஒரு விமானம் மூழ்கியது. இதற்கு புலிகள் காரணமல்ல என்பது பின் தெரிந்தது. புலிகளின் குறுகிய தூர ஏவுகனைத் தாக்குதலைப் புரிந்து கொண்ட எதிரி விமானம் இறங்கும், ஏறும் முறைகளில் மாற்றம் செய்தான் உயரப் பறந்தான். தனது இராணுவ நடவடிக்கையில் புலிகளின் முகாம்களை தனித்து அடையாளம் கண்டு தாக்க முடியாத நிலையில் உத்தேசமான குண்டு வீச்சுக்களை பரவலாக நடத்தினான். அழிவுகளை அதிகரித்தான். புலிகளிடம் இருப்பதாக கருதப்படும் கிளைடர் இலகுரக விமானம் இதுவரை பயன்படுத்தப்பட

www.tamilarangam.net



வில்லை. சூரிய ஒளி 1,2-ல் எதிரியின் விமானப்படை தாக்குதலை புலிகளால் தடுத்துவிட முடியவில்லை.

ஒரு கட்டம் வரை தரையிலும் கடலிலும் வானிலும் கூட கொரில்லா யுத்த முறையை கொண்டு எதிரியை அவனின் சிறிய படைப்பிரிவுகளை அழிக்கவும், நிலைகுலையச் செய்யவும், தற்காலிகமாக பின் வாங்கச் செய்யவும் முடியும். ஒரு கட்டத்துக்கு அப்பால் எதிரியின் கிரமமான படைப் பிரிவுகளை எதிர் கொள்ளவும் எதிர் தாக்குதல் நடத்தவும், குறைந்தது நமது பிரதேசத்தை பாதுகாக்கவும் எதிரியை விரட்டியடிக்கவும், அழிக்கவும் நாமும் கிரமமான யுத்த வடிவத்துக்கு வளர வேண்டும். நடமாட்ட - ஸ்தான யுத்த முறையில் தேர்ச்சி பெற்று வளர வேண்டியது யுத்த விதியாகும்.

புலிகள் கிரமமான யுத்த வடிவத்துக்கு வளர்வதற்கு பதில் கொரில்லா யுத்த வடிவத்துள் நின்று கொண்டனர். கொரில்லா போரில் நவீன மிக நவீன ஆயுதங்களை, வெடி பொருள்களை பயன்படுத்தினர். கொரில்லா போர் முறையில் அரிதாக பயன்படுத்தப்படும் (சுற்றி வளைப்பை உடைக்கவும், எதிர்த் தாக்குதலிலும்) தற்கொலைத் தாக்குதல் செயலை, புலிகள் தற்கொலைத் தாக்குதல் படைப்பிரிவாகவே தரையிலும் - கடலிலும் மாற்றினர். 'கரும் புலிகள்' வடக்கு கிழக்கில் எதிரிக்கு எதிராவும், தெற்கில் அரசியல் தலைவர்கள் மற்றும் இராணுவ தலைமையகம், கொலன்ன எரிபொருள் நிலையம், துறைமுகம், மத்திய வங்கிதாக்குதல்கள் கரும்புலிகளின் தற்கொலை கொரில்லா நடவடிக்கைகளே. ''எல்லாளன் படை'' பொருளாதார ரீதியில எதிரிக்கு அதிர்ச்சி வைத்தியம் செய்யும் படை, அன்னிய நாட்டு தூதரங்களுக்கு, முதலீடுகளுக்கு எச்சரிக்கை விடுவது, அண்மையில் தேயிலையில் விசம் கலந்த செய்தியை வெளியிட்டது. (தம்பாப்பிள்ளை மகேஷ்வரன் பாணி) புலிகள் தற்கொலை கரும்புலிகளை வளர்த்தனர். ஏன் புலி இயக்க உறுப்பினர்களை உள்நாட்டில் எதிரிப்படையோ, உளவுப்பிரிவோ, வெளிநாடுகளில் பொலிசாரே கையால் பிடித்தால் கூட விசம் தின்று தற்கொலை (தாக்குதல் அல்ல) செய்யும் படையாக வளர்த்தனர். இவை எல்லாம் உலகளவில் கொரில்லா வடிவ போர் முறைக்குள் புலிகளால் அறிமுகப்படுத்தப்பட்ட, வளர்க்கப்பட்ட புது விசயங்கள். இவற்றைப் பார்க்கும் சிலர் கொரில்லா யுத்த வரலாற்றில் புலிகளின் கொரில்லாப் போர் தான். அதி உயர்ந்த வடிவம் என்றும் சேகுவரா, பிடல்காஸ்ரோ, டெஜிரெப்ரே வரிசையில் நவீன கொரில்லா யுத்த தத்துவ படைப்பாளன் பிரபாகரன் எனவும் கூறுகின்றனர். டெஜிரெப்ரே தத்துவத்தின் வாரிசு என்பதுதான் உண்மையாகும். தமிழீழ தேசிய விடுதலை யுத்தத்தில். கொரில்லா போர் என்றால் ''தற்கொலைப் போராளிகளின் போர்'' என உலகுக்கு காட்டிய தவறை செய்துள்ளனர்.

தேசிய விடுதலை யுத்தத்தில் புலிகள் மூலோபாயரீதியான எதிர் தாக்குதலுக்கான தயாரிப்பு கட்டத்தில் செய்ய வேண்டிய முக்கியமான இராணுவக்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கடமையான கிரமமான வடிவத்தில் வளராது விட்டனர். கிரமமான யுத்தத்தில வளர்வதற்கு தேர்ச்சி பெறுவதற்கு யாழில் 5 ஆண்டுகள் கிடைத்த அளப்பரிய வாய்ப்பை விழலுக்கு இறைத்த உதிரமாக கை தவற விட்டனர். புலிகளின் தலமை அரசியல் ரீதியில் இந்த கட்டத்தில் இழைத்த தவறுகளும் முக்கியமானவை. எதிரிக்கு எதிரான போராட்ட சக்திகளை (துரோகிகளை அல்ல) தேடி அழித்தனர். சிறைப்படுத்தினர். துரோக இயக்கங்களின் கீழ் அணிப் போராளிகளை வென்றெடுக்க சிறிதும் அக்கறை காட்டவில்லை. தம்முடனும் - துரோக இயக்கங்களுடனும் அரசியல் ரீதியில் முரண்பட்டவர்களை யாழுக்கும் - நாட்டுக்கும் வெளியே நிற்க்க வைத்தனர். புலிகள் இயக்கத்துள் நடந்த உள் மோதல்கள் சொந்த அணிகளை பலவீனப்படுத்தியது. 20 வயதுக்கு மேற்பட்டவர்கள் புலிகளில் சேர முன் வரவில்லை. பள்ளிச் சிறுவர்களின் படையை உருவாக்க வேண்டியநிலை. யாழ் இராச்சியத்தில் புலிகளின் அரசியல், சமூக - பொருளாதார, அரசமைப்பு நடவடிக்கைகள், பாஸ் வழங்கும், பிள்ளைகளை பிணை கொடுக்கும், உரிமையாளர் யாழில் இல்லாத வீடுகளை தேசியமயமாக்கும் திட்டங்கள், குற்றங்களுக்கான தண்டனை முறைகள், புலிகளுக்கும் மக்களுக்கும் இடையிலான முரண்பாட்டை கூர்மைப்படுத்தியது. 92-ல் இஸ்லாமிய மக்கள் யாழிலும் மன்னாரிலும் இருந்து விரட்டியடித்தது. ஆயிரக் கணக்கான மக்களை அகதிகளாக்கியது. சிங்கள அப்பாவி மக்கள் மீதான (குடியேற்ற திட்ட சிங்கள காடையர்கள் மீது நடத்தப்பட்டவை அல்ல) எல்லையோர வெறித்தன தாக்குதல்களும் புலிகள் மேல் வெறுப்பை ஏற்படுத்தியது. உலகளவில் புலிகளை தமிழ் இனவாத மதவாத சக்தியாக பார்க்கப்பட வைத்துள்ளது. ராஜீவ் கொலை, பத்மநாபா கொலைகள் பின் தமிழகத்தின் ஆதரவு கேள்விக்குறியானது? புலிகளின் நடமாட்டத்துக்கு நெருக்கடியையும் ஏற்படுத்தியது. இங்கு தடை செய்யப்படாத புலி இயக்கம் இந்தியாவில் தடை செய்யப்பட்டது.

புலிகளின் அரசியல் - இராணுவத் தவறுகள் எல்லாம் சிலர் கூறுவது போல் தமிழீழ போராட்டத்தை திசை திருப்ப புலிகள் திட்டமிட்டு ஏகாதிபத்திய ஆலோசனையில் உதவியில் செய்யுவம் தவறுகள் அல்ல. என்பதில் தெளிவாக நாம் இருக்க வேண்டும். தேசிய இன விடுதலைப் போரில் புலிகளின் முதலாளிவர்க்க அரசியலும், குறுகிய கண்ணோட்டம் கொண்ட சுத்த இராணுவ மூலோபாய, தந்திரோபாய வழியும் முன்னணிப்படை யுத்த முறையும் தான் இத் தவறுகளுக்கான அடிப்படைகளாகும்.

சிறீலங்கா அரசு புலிகளால் பாதிக்கப்பட்ட புலிகளுடன் முரண்பட்ட எல்லா உள்நாட்டு வெளிநாட்டு துரும்புக்களையும், புலிகளின் மீதான, யாழ் மீதான தாக்குதலுக்கு துப்பாக்கிகளாக, குண்டுகளாக மாற்றினான். விரட்டப்பட்ட இஸ்லாமிய மக்கள் மத்தியில் 'மதத் தீவிரவாத ஜிகாத்படை' வளர உதவினான். தாக்கப்பட்ட படக்கூடிய சிங்கள கிராமங்களில் ஆயுதம் தாங்கிய

www.tamilarangam.net



குண்டர்படைகளை உருவாக்கி வளர்த்தான். கிழக்கிலும், வவுனியாவிலும் வேலை வாய்ப்பு திட்டத்தில் தமிழர்களை பொலிசில் சேர்த்தான். திருமலை, வவுனியாவை புனரமைத்தான். இங்கு தமிழர் ஆட்சி நடப்பதாக உலகுக்கு காட்டினான். இப்பகுதிகள் எல்லாம் புலிகளால் மீண்டும் தாக்கப்படலாம் என்பதையும் கணக்கில் கொண்டு தான் மூலோபாயரீதியான தாக்குதல் கட்டத்துக்கு யுத்தத்தில் திரும்புவதற்கான, தந்திரோபாரீதியான நடவடிக்கைகளாக மட்டுமே செய்தான். புலிகளை மக்களின் மனங்களிலிருந்து தனிமைப்படுத்துவதில், இராணுவரீதியாக தன்னை தயாரிப்பதில் மிகத் தீவிரமாக வேலை செய்தான், 'மக்களின் குரல்' ஒலிபரப்பை எதிரி நடத்தினான்.

1993-ல் எதிரியின் யுத்த தயாரிப்பு வளர்ச்சி சில குறிப்புகள் 83-ல் எதிரி 70,000 படையினரை மூன்று டிவிசனில் பிரித்து வைத்திருந்தான். 5 இன்பன்ரி ரெஜிமென்ட்டும், 10 பிரிகேட்டுக்களும், 4 வகை கனரக ஆயுதம் கொண்ட 4 கனரகரெஜிமென்ட்டும், 30 டாங்குள் கொண்ட 1 ஆர் மெட் ரெஜிமென்ட்டும் இருந்தது. சிறிய வகை ஆயுதங்கள், வெடி பொருள்கள்BE11-212 ரக உலங்கு வானூர்திகள் இஸ்ரேலிடமும், TAAS கொம்பனி மூலம் பயன்படுத்தப்பட்ட ஆயதங்களும் வாங்கி வந்தான். இராணுவ உயர் அதிகாரிகள் பயிற்சி 1970-களில் முதலில் இஸ்ரேலில் தொடங்கியது. 80-களுக்கு பின் (Mosad) மொசாட் நேரடியாக கொழும்பில் பயிற்சி அளிக்கிறது. சீனாவிடம் இருந்து கனரக ஆயுதங்கள், 2 படைகாவும் விரைவுக் கப்பல்கள், 43 கரையோர ரோந்து படகுகள் வாங்கியதுடன் கடற்படை 3000 பேரை கொண்டிருந்தது. 16km தூரம் செல்லும் 85mm ரக கனரக ஆயுதங்களும் இருந்தது.

93-ல் எதிரி 90,000 படையினரை கொண்டிருக்கிறான் புதிதாக "நடமாடும் வான் வெளி பிரிகேட்டை" உருவாக்கியுள்ளான், 200 டாங்குகள் கொண்ட 3 ஆர்மெட்ரெஜி மெண்ட்டையும், 8000 கடற்படையினரையும் கொண்டுள்ளான். 91-இல் மூன்று விரைவு சாங்காய் தாக்குதல் கப்பல்களை, 35mm, 25mm முறையே இரண்டு ஆயுத படகுகள், விமானப் படையில் முதன் முதலாக சேர்க்கப்பட்ட F-7B ஜெட் வானூர்தியும், Y-8 போக்குவரத்து விமானமும் 27km தூரம் செல்லும் 130 mm 59-1 ரக கனரக ஆயுதமும் சீனாவிடம் வாங்கினான். Antonov-32 விமானம் உக்கிரேனிடமும், Famia - 58A ரக புக்காரா விமானம் 4ம் ஆர்ஜென்டின தயாரிப்பும் வாங்கினான். தற்போது M 18 போக்குவரத்து உலங்கு வானூர்திகளை, எவுகணைத் தாக்குதலில் தப்பக்கூடிய கவசத கடு பொருந்திய 7.62 mm மெசின்கண் உள்ள உலங்கு வானூர்தியும், 20 mm ஆயுதம் பொருந்திய 2 உலங்கு வானூர்திகளும், அய்ரோப்பிய நாடுகளில் வாங்க முயற்சி நடக்கிறது. காட்டுக்குள் புலிகளை தேடி அழிப்பதற்கு விமானப்படையின் வளர்ச்சி அவசியம் என்கிறார் புதிய தளபதி. BMP இன்பன்ரி சண்டை வாகனங்களை, ரோந்து படகுகள், சண்டைக்கான உலங்கு வானூர்தி போக்குவரத்து விமானச் செலவுகள் உட்பட 400 மில்லியன் அமெரிக்க டொலர் இராணுவ செலவாக மாறியுள்ளது 95-ல்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



புலிகளிடம் எத்தனை பிரிகேட் அதன் பெயர் வடிவத்தில் அல்ல, ஆயுத பிரிப்பு, பயிற்சி நிலையில் இருக்கின்றன என்பது தெளிவாக இல்லை. 10 ஆயிரம் வரையில் மொத்த வீரர்கள் இருக்கலாம் எனவும், பிரான்சில் இருந்து வாங்கப்பட்ட 3 கிளைடர் இலகுரக விமானங்களும், இந்தியாவின் பினாகி டெக்னோஜிஸ்ட் தயாரிப்பு கிளைடர் விமானங்கள் சிலதும் இருக்கலாம் என கருதப்படுகிறது. 15 தொன் முதல் 18 தொன் வரை வெடி பொருள்கள் இருக்க லாம் என IRA இன் இராணுவ பலத்தை கணிப்பிட்ட ஒரு இராணுவ ஆய்வு நிறுவனம் இத்தகவல்களையும் தெரிவித்துள்ளது.

எதிரி ஆயுதங்களை பலப்படுத்த முடிந்தளவுக்கு படைவீரர் பலத்தை பெருக்க முடியவில்லை. கடந்த 5 ஆண்டுகளில் 3,500 பேர் இராணுவத்தை விட்டு ஓடியுள்ளனர். 25,000 படையினரை சேர்க்கும் நீண்ட கால திட்டமும், சூரிய ஒளிக்கு பின் 10,000 பேரை சேர்க்கும் குறுகிய கால திட்டமும் வெற்றிய ளிக்கவில்லை. இராணுவத்துக்கு முக்கியமாக போர் முனையில் இருப்பவர்க ளுக்கு சம்பள உயர்வுடன் பல சலுகைகளை எதிரி அறிவித்துள்ளான். நாட்டில் 20% வேலையில்லாப் பிரச்சினை இருக்கையில் ஏன் இராணுவத்துக்கு ஆட்கள் கிடைக்கவில்லை என ஆய்வு செய்கிறான். இராணுவத்தில் சேர இருந்த தகுதி களை எல்லா நிலையிலும் குறைத்துள்ளான் பல புதிய ஊக்குவிப்பு திட்டங் களை உருவாக்குகிறான்.

## தேசிய விடுதலை யுத்தம் இரண்டாவது தடவையாக மூலோபாய ரீதியான முதலாவது கட்டத்துள்

புலிகள் யாழை தக்க வைக்கவும், எதிரி யாழை கைப்பற்றவும் ஆன யுத்த தயாரிப்பில் இராணுவ ரீதியில் தயாராகி விட்ட எதிரி அரசியல் ரீதியில் தன்னை மேலும் பலப்படுத்தவும். புலிகள் இராணுவ ரீதியிலும் அரசியல் ரீதியில் தம்மை பலப்படுத்தவும் வேண்டியிருந்தது. சந்திரிகா அரசின் வருகை யும் - புலிகளுக்கு கூட சந்திரிகா மேல் இருந்த மயமக்கமான பார்வையும் ஒரு தற்காலிக யுத்த நிறுத்தத்தை ஏற்படுத்தியது. புலிகள் தமது பலம் பற்றிய மிகையான கணிப்பீட்டாலும், சர்வதேச நிலவரத்தையும், எதிரியின் பலத்தை புரிந்து கொள்ளாமலும் சந்திரிகா எந்த நிலைக்கும் கீழ் இறங்குவார் என கணித்தனர். ஆனால் சிறீலங்கா இனவாத ஆளும்வர்க்கமும், ஏகாதிபத்தியங்க ளும் புலிகளை இராணுவ ரீதியில் தோற்கடிக்க, அரசின் படைகளை ஒரு கையாகவும், சந்திரிகாவின் அரசியல் தலைமையை உள்நாட்டிலும் - வெளி நாட்டிலும் புலிகளை அரசியல் ரீதியில் தனிமைப்படுத்துவதற்கான மறுகை யாகவும் பயன்படுத்தின. புலிகளை யுத்த நிறுத்த மீறல் நிர்பந்தத்துக்கு சாதுரிய மாக தள்ளியதன் மூலம் எதிரிதனது அரசியல் இராணுவ ராஜதந்திரத்தில் முன்னிலைக்கு வந்தான்.

www.tamilarangam.net



யுத்த நிறுத்த மீறலை புலி செய்தவுடன் நாட்டின் அமைதிக்கும், மக்களின் சமாதான வாழ்வுக்கும், அரசு, தான் தடையாக இருந்து வந்ததை மறைத்து நாட்டின் முழு துன்பங்களுக்கும், மக்களின் துயரங்களுக்கும் தமிழ்ப் பயங்கரவாதம், புலிகள் தான் காரணம் என தொடர்பு சாதன யுத்தத்தை, மனோவியல் யுத்தத்தை முடுக்கி விட்டான்.

35,000 படையினரை யாழுக்கு கொண்டு வந்து முன்னேறிப் பாய்தல் இராணுவ நடவடிக்கையை தொடக்கினான். இது புலிகளின் உண்மையான யுத்த பலத்தை பரிசோதிப்பதாகவும், யாழை கைப்பற்றும் முழு இராணுவ திட்டத்துக்கு முன் பரிசோதனைப் பகுதிகள் மேலான தாக்குதலாகவும் இருந்தது. அளவெட்டியிலும், சண்டிலிப்பாயிலும் புலிகளின் மீள எதிர் தாக்குதல் (Counter attack) புலிப்பாய்ச்சல் நடவடிக்கையின் சேதமும், துருப்புக்களுடன் வீழ்த்தப்பட்ட ஆவ்ரோ விமானதாக்குதல், அளவெட்டியில் புக்கார குண்டு வீச்சு விமானம் வீழ்த்தப்பட்டது. 'எடித்தரா' காங்கேசனில் மூழ்கடிக்கப்பட்டது. எதிரிக்கு குறிப்பிடத்தக்க அளவு சேதங்களை ஏற்படுத்தியது. ஆனால் இவை எதுவும் எதிரி தனது மூலோபாய ரீதியான பாதுகாப்பு கட்டத்தில் இருந்தபடி, யாழை கூறு போட்டு கைப்பற்ற தொடங்கிய முன்னேறும் நடவடிக்கையை தந்தரோபாய ரீதியாகக் கூட பின் வாங்க வைக்கவில்லை. கிரமமான படை முன்னேற்றத்தை புலிகளால் தடுத்து நிறுத்த முடியாது என்பதை யுத்தத்தின் மூலம் எதிரி புரிந்தான். தனது இழப்பை குறைப்பதற்காக விரைவான முன்னேறுதலுக்கு பதிலாக படிப்படியாக முன்னேற முடிவு செய்தான். அதன் படியே நடந்தான்.

புலிகள் எதிரியைப் போல கிழக்கின், பெரு நிலப்பரப்பின் போராளிகளை யாழுக்கு கொண்டு வந்தனர். யாழை இழப்பது புலிகளுக்கு இராணுவ ரீதியில் பெரிய தோல்வி என்பதுடன் மானப்பிரச்சனையாகவும் பார்த்தார்கள். எதிரி யாழ் முழுவதையும் கைப்பற்ற ஒரு மூர்க்கத்தனமான யுத்தத்தை கட்டவிழ்த்து விட மாட்டான். அல்லது தாங்கள் தடுத்து நிறுத்துவோம், கொரில்லா யுத்த முறையின் பரிசோதிக்கப்படாத எல்லா யுக்திகளையும் பயன்படுத்த நினைத்தனர். தெற்கின் மீதான பொருளாதார நிலை தாக்குதல், சிங்கள மக்கள் மீதான தாக்குதல், கிழக்கில் தொடுக்கப்படும் கொரில்லாத் தாக்குதல்கள், சர்வதேச ரீதியில் எழும் கண்டனங்களை கொண்டு எதிரிக்கு கடிவாளம் போட முடியும் என தவறாக புலிகள் முடிவு செய்தனர்.

எதிரி யாழ் மீது படைக்குவிப்பை நடத்தும் போதும் அதை மட்டுப்படுத்த - தடுக்க கிழக்கிலும், பெருநிலப்பரப்பிலும் வாய்ப்பு இருந்தால் தெற்கிலும் கூடுதலான அக்கறையுடன் பொலிசு நிலையங்கள், இராணுவ முகாம்கள், பொருளாதார நிலைகள் மீது தந்திரோபாயரீதியான தாக்குதல்களை,

www.tamilarangam.net



போர் நடவடிக்கைகளை புலிகள் நடத்தி இருக்க வேண்டும். அவை முழுவதும் வெற்றி பெறா விட்டாலும் அத்தகைய நடவடிக்கையை உக்கிரப்படுத்தியிருக்க வேண்டும். மாறாக எதிரி போல் தாமும் யாழில் படைக்குவிப்பு செய்தனர். இப்போது யாழை இழந்த பின் யாழில் உள்ள இராணுவம் பின் வாங்க வேண்டும். முகாமுள் முடங்க வேண்டும் என கிழக்கில் எதிரி மீதான தாக்குதல்களை தொடர்ந்து நடத்துகின்றனர். யுத்தத்தை நிறுத்தவும், பேச்சு வார்த்தைக்கு வரவும் வேண்டுமானால் யாழில் இராணுவம் பின் வாங்க வேண்டும் என்கின்றனர் புலிகள். எதிரி அவ்வளவு முட்டாளாக இல்லை.

சூரிய ஒளி - 1 இராணுவ நடவடிக்கை புலிகளின் பிரதான இராணுவ முகாம்களை, தலைமையகங்களை, தொலைத் தொடர்பு ஒலி - ஒளிபரப்பு நிலையங்களை, ஆயுத தொழிற்சாலை, இராணுவ மருத்துவமனை என நமது யுத்த பலத்தின் அடிப்படை நிலைகளை குறி வைத்தான். அவை அமைந்துள்ள பகுதிகளை முதலில் கைப்பற்றும் தாக்குதல் வியூகத்தை தேர்ந்தெடுத்தான். தான் எவ்வளவு விலை கொடுத்தாலும் மக்களுக்கு சொத்துகளுக்கு அழிவை ஏற்படுத்தியும் யாழ் நகரை கைப்பற்றுவது என்ற முடிவுடன் யுத்தத்தை தொடக்கினான்.

புலிகள் புதைத்து வைத்திருந்த கண்ணி வெடிகளை செயற்கை தடைகளை, இயற்கையான சிறு தடைகளை பயன்படுத்தினர். பாதுகாப்பு அரண்களில் இருந்து எதிர் தாக்குதல் நடத்தினர். எதிரி ஒவ்வொரு அடிகளையும் ஒரு மகசீன் குண்டுகளை சுடுவதன் மூலம் முன்னேறச் செய்தனர். புலிகளால் எதிரியின் வான்வழித் தாக்குதலை பீரங்கி குண்டு தாக்குதலை சமாளிக்க முடியவில்லை. எதிரியின் தரைப்படை முன்னேற்றத்தை தடுக்க முடியவில்லை. புலிகளுக்கு முன் இரண்டு வழிகளே இருந்தது. ஒன்று எதிரியுடன் மூர்க்கத்தனமாக மோதி அழிவதும் அழிப்பதும் ஆனால் எதிரியின் முன்னேறுதலை தடுக்க முடியாது. இரண்டு பின் வாங்குவது அதற்கான கால அவகாசத்தை பெற எதிரியின் முன்னேற்றத்தை காலதாமதப்படுத்துவது. அதற்குரிய போர் முனைகளில் மட்டும் எதிர் தாக்குதல் நடத்துவது. கண்ணிவெடிகளை, செயற்கை தடைகளை ஏற்படுத்துவது, முதலாவது வழியை தேர்ந்தெடுக்கிற அளவுக்கு புலிகள் முட்டாள்கள் அல்ல. இரண்டாவது வழியை அமுல்படுத்தினர். மானப் பிரச்சனையை மறைக்க "விழ்ந்தாலும் மீசையில் மண் படவில்லை" என்பது போல் "மக்கள் இல்லாத மண்ணை எதிரி கைப்பற்றினான்" என காட்டவும் நினைத்தனர். தமது பின் வாங்குதலை சாதுரியமாக நடைமுறைப்படுத்தவும் யுத்த பீதியில் இயல்பாக வெளியேறிக் கொண்டிருந்த இலட்சக்கணக்கான அகதிகளை ஊக்குவித்தனர். சில ஆயிரம் மக்களை திட்டமிட்டு கூட்டியும் சென்றனர். யாழ்ப்பாணம் எதிரியின் கைகளுக்க எதிரி எதிர் பார்த்ததை விட குறைந்த இழப்புகளுடன் கை மாறியது.

www.tamilarangam.net



ஒரு யுத்தத்தில் தனி ஒரு சண்டையே, தனி ஒரு பகுதி கை மாறுவதோ, கூட மூலோபாயரீதியாக மாற்றத்தை கொண்டு வருவதுண்டு. யாழின் இழப்பு தமிழீழ தேசிய விடுதலை யுத்தம் மீண்டும் மூலோபாய ரீதியாக முதலாவது கட்டத்துக்கு திரும்ப வைத்துள்ளது. எதிரி மூலோபாய ரீதியான தாக்குதல் கட்டத்துக்கு முன்னேறியுள்ளான். புலிகள் மூலோபாய ரீதியான தற்காப்பு கட்டத்துக்கு பின் வாங்கியுள்ளனர்.

இராணுவ ஆய்வாளர்கள் கூறுவது போல் இந்த 13 ஆண்டு கால யுத்தம் எதைக் கற்றுத் தந்துள்ளது என்றால் "புலிகளை முற்று முழுதாக அரசால் அழிக்கவும் முடியாது. புலிகளால் அரசை முற்று முழுதாக தோற்கடிக்கவும் முடியாது. இது புலிகளுக்கும் அரசுக்கும் கூட நன்றாக தெரியும்". இதனால் தான் இந்திய தேசிய பாதுகாப்பு கல்லூரியில் தேர்ச்சி பெற்ற புதிய 14-வது தளபதி றோகான் தலுவத்த "புலிகளை பலவீனமடையச் செய்து அரசியல் பேச்சில் கலக்க செய்வதே படையின் கடமை. அரசியல் தீர்வுதான் இறுதியானது" என்கிறார். எதிரிகளின் பார்வை அப்படித்தான் இருக்க முடியும். புலிகளைப் பொறுத்த வரை 95-ல் அரசுடன் பேரம் பேசுவதற்கு இருந்த சக்தியையும் இழந்துள்ளனர். மூலோபாயரீதியாக யுத்தத்தில் ஏற்பட்டுள்ள மாற்றம் எதிரியை பலப்படுத்தியுள்ளது. அரசு ஒரு மோசடி அரசியல் தீர்வு திட்டத்தை முன் வைத்துள்ளது. புலிகள் தமது அரசியல் தீர்வு பேச்சுக்கான அடிப்படையை தெளிவாக அறிவிக்காதுள்ளனர். இப்போதும் புலிகளுக்கு முன் இரண்டு வழிதான் உள்ளது. இன்றுள்ள பலத்தை பேணிக் கொண்டு அரசின் மோசடித் திட்டத்தில் சில மாற்றங்களை கோரி பெறுவதுடன் தேசிய விடுதலை யுத்தத்தை கை கழுவி விடுவது. இரண்டு குறைந்த பட்சமாக 'திம்பு கோரிக்கைகளை' அரசியல் தீர்வுக்கு - பேச்சுக்கு முன்னிறுத்துவதும், முடிந்தளவு தமது இராணுவ அரசியல் தவறுகளை திருத்தியும், பலவீனங்களை பலப்படுத்தியும் மூலோபாயரீதியான தற்காப்பு கட்டத்தில் இருந்து யுத்தத்தில் முன்னேற முயல்வது.

இதில் எதைச் செய்வது? எப்படிச் செய்வது? என்பதை புலிகளின் தலைமையும், தமிழீழ முதலாளி வர்க்கமும் தீர்மானிப்பார்கள். இரண்டாவதை செய்தால் பெரும்பான்மை தமிழீழ மக்களின் அரசியல் கோரிக்கையின் பக்கம் நிற்பார்கள். தேசிய விடுதலை யுத்தத்தில் இதுவரை சிந்திய உதிரத்துக்கு தமிழீழ தாகத்துக்கு உண்மையாக இருப்பார்கள். அதே வேளை புலிப்படையை கொண்டு, தற்கொலைக் கொரில்லாப் போர் முறையை கொண்டு எதிரிப் படைகளை உயர்ந்த பட்சமாக கொஞ்ச காலம் முகாமுக்குள் முடங்க வைக்கலாம் பயமுறுத்தலாம், பொருளாதார நிலைகளை தாக்குவது அரசியல் தலைவர்களை அழிப்பதன் மூலம் அரசை ஆட்டங் காணச் செய்யலாம். அதில் எள்ளளவும் சந்தேகம் இல்லை. புலிகள் இதை நடைமுறையில் நிரூபித்திருக்கிறார்கள். ஆனால் தமிழீழ தேசிய விடுதலை யுத்தத்தில் மூலோபாயரீதியான வளர்ச்சிக் கட்டங்களை எட்டுவது - தக்க வைப்பது, மேலும் அடுத்த கட்டம்

www.tamilarangam.net



வளர்வது. எதிரி முடமாக்கப்பட்ட பிரதேசங்களை - விடுதலைப் பிரதேசமாக வளர்ப்பது. தேசிய விடுதலை யுத்தத்தில், புரட்சிகர உள்நாட்டு யுத்தத்தில் இறுதியாக எதிரிப் படைகளை முற்று முழுதாக துடைத்தொழித்து தேசம் சுதந்திரம் அடைவதை, மக்கள் விடுத்தலை அடைவதை இந்த தற்கொலைப் போர் முறையால், முன்னணிப் படை யுத்த முறையால் சாதிக்க முடியவே முடியாது. இதற்கும் புலிகள் உதாரணமாக இருப்பார்கள்.

தெற்காசியாவிலுள்ள தேசிய இன விடுதலை இயக்கங்கள் சிலவும், மார்க்சிய - லெனினிய கட்சிகள் சிலவும் 95-க்கு முன், இராணுவ ரீதியில் புலிகளிடம் இருந்து கற்றுக் கொள்வது பற்றி நிறைய பேசியும், எழுதியும் வந்துள்ளன. இப்போதும் பேசப்படுகிறது. புலிகளின் குட்டி முதலாளிவர்க்க அரசியலும் அது ஊடறுத்து வெளி வந்த இராணுவ மூலோபாயமும், இராணுவ அமைப்பு கட்டமைப்பும் போர் முறைகளும், (இராணுவ தொழில் நுட்ப வளர்ச்சிகளை விட்டு விட்டு) அது தமிழீழ தேசிய விடுதலைப் போரில் சந்தித்த வெற்றிகள், தோல்விகள், தேக்கம் என்பது புலிகள் சொல்வது போல் மனித பலப் பிரச்சனையோ, துரோக இயக்க நடத்தைகளோ, நிதிப்பற்றாக்குறையோ, நவீன ரக,கனரக ஆயுதப் பிரச்சனைகளோ அல்ல. தேசிய இனப் பிரச்சனையில் முதலாளி வர்க்க அரசியலின் முன்னணிப் படை யுத்த முறையின், தேக்கமாகும் என்பதை புலிகளின் யுத்த அனுபவத்தில் இருந்து கற்றுக் கொள்ள வேண்டும்.

தமிழீழ தேசிய விடுதலை யுத்தம் சந்திதுள்ள தேக்கத்தை உடைக்கவும், போராட்டத்தை மேலும் வளர்க்கவும் வேண்டின். தொழிலாளி வர்க்க சித்தாந்த பாதையில், கொம்யூனிஸ்ட் கட்சி தலைமையில், மக்கள் யுத்த முறையில் போராட்டம் முன்னேடுக்கப்பட வேண்டும். இதைப் புரிந்துள்ளவர்கள், நடைமுறைப்படுத்த உழைப்பவர்கள், போராட்டத்தின் அரசியல் மூலோபாயத்தை வகுப்பதுடன், "நீண்ட கால மக்கள் யுத்த பாதையில் ஆயுதப் போராட்டத்தை முன்னேடுப்போம்" என எழுதுவது, பேசுவதுடன் நிற்காது. இராணுவ மூலோபாயத்தை வகுப்பதில், நடைமுறையில் அமுல்படுத்துவதில் கூடிய கவனம் செலுத்த வேண்டும். இதைச் செய்ய அரசியல் சார் இராணுவக் கல்விக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும். (இராணுவ தொழில் நுட்பக் கல்வி வேறு அரசியல் சார் இராணுவக் கல்வி வேறு)

போராட்டத்தில் புரட்சிகர அரசியல் திட்டத்தை கொண்டிருந்த NLFT, T.M.P.P. PLFT அமைப்புக்கள் கூட மக்கள் யுத்த கண்ணோட்டம் கொண்ட இராணுவ மூலோபாயத்தை முன் வைப்பதிலும், மக்கள் இராணுவத்தை கட்டுவதிலும் கூட நமக்கு முன்னுதாரணங்களை கொண்டில்லை. கட்சியை கட்டுவது, படை கட்டுவது பற்றிய அங்கும் இங்குமான சில தர்க்கங்களே இருந்தன. குட்டி முதலாளித்துவ இயக்கங்களின் இராணுவ அராஜகங்களை பார்த்து

www.tamilarangam.net



படையை கட்டுவதை நினைத்து பயந்தது ஒரு புறம். அல்லது புரட்சிகர அரசியல் திட்டம் இருப்பதால், அதைப் புரிந்து கொண்டவர்களின் தலைமையில் படைகளை கட்டினால் அது மக்கள் இராணுவமாக இயங்கும் என நினைத்து சில தயாரிப்புகளும் செய்யப்பட்டது எவையும் நடைமுறையில் வெற்றி பெறவில்லை.

இன்று நம்மிடம் கட்சியும் இல்லை. படையும் இல்லை கிழக்கிலும் வடக்கிலும் நமது அரசியலை முன் வைத்து செயல்பட முடியாதளவுக்கு சிறீலங்கா அரசை விட புலிகளும் துரோக இயக்கங்களும் முதலில் தடை விதிக்கிறார்கள். கைது செய்து சிறையில் தள்ளுகின்றனர். கொலை கூட செய்கின்றனர். நாம் அரசியல் ரீதியாக இராணுவரீதியாக பிரதான எதிரியான சிறீலங்கா அரசை, வல்லரசுகளைத்தான் குறி வைக்கிறோம் என்பது நமது சரியான பார்வை, அது தான் நமது பலம். ஆனால் கிழக்கிலும் - வடக்கிலும் தலைமறைவாக வாழ்கிறோம் அல்லது நாட்டுக்கு வெளியே இருக்கும் நிலை, நாட்டில் யுத்தம் பிரதான நிகழ்ச்சி நிரலாகவுள்ளது. சுத்த இராணுவ இயக்கங்களின் இராணுவ சர்வாதிகாரம். உள்ளூரில் தலை விரித்தாடுகிற சூழ்நிலை. நாம் தற்காப்புக்கு கூட (எல்லா முறையிலும்) தயாரான நிலை இன்றி இயங்க முடியாதுள்ளது. சிதறுண்டுள்ள கட்சி நிலைச் சக்திகளை அய்க்கியப்படுத்துவது முதல் வேலையாகவுள்ளது. வெகுசன இயக்கங்களை கட்ட வேண்டியுள்ளது. வெகுசனங்கள் மத்தியில் நமது அரசியல் செல்லாமல் மக்கள் யுத்த முறையிலான கொரில்லாப் படைக் கூறுகளை கூட கட்டி வளர்க்க முடியாது. அறைக்குள் மட்டும் விவாதிப்பவர்களின், தலைமறைவில் உள்ளவர்களின் கட்சியாக மட்டுமே இயங்க முடியும். (கட்சி இரகசியமாக இருப்பது இயங்குவது வேறு - தலை மறைவிலுள்ளவர்களின் கட்சியாக மட்டுமே இருப்பது வேறு என்பதைப் புரிந்து கொள்வோம்.

யுத்தம் பிரதான நிகழ்ச்சி நிரலாக இருக்கையில், கொம்யூனிசக் கட்சி ஒன்று இல்லாத நிலையில், கட்சியை கட்டி விட்டு படையை கட்டுவோம் என்பதும் படையை கட்டுவதே கட்சியை கட்டுவதுதான் என்பதும் எதிர் எதிரான வாதங்களேயாகும். அலை ஓய்ந்த பின் நீந்தக் கற்றுக் கொள்வோம் என்ற வாதத்தில் தற்காப்புக்கு கூட தயாராக மறுப்பதும், நடுக்கடலிலும் நீந்த கற்றுக் கொள்ளலாம் என்ற துணிச்சல் வழியில் சென்று அழிவதும் கட்சியையும் படையையும் கட்டுவதற்கான சரியான வழிகள் அல்ல. எதிரிகள் பலவீனமான பகுதிகளில் வெளிப்படையாக நமது அரசியலை மக்களிடம் முன் கொண்டு செல்வோம். பலமான பகுதிகளில் இரகசியமாக மக்களிடம் கொண்டு செல்வோம். வெகுசனங்களை அணி திரட்டுவோம். அதற்கு தடையாக நம்மை அழிக்கவரும் எதிரிகளை எல்லாப் பகுதிகளிலும் தன்னையும் கொல்ல வந்த பசுவையும் புலியையும் கூட கொல்லலாம் என்கின்றளவுக்கு தற்காப்பு தயாரிப்புக்களுடன் இயங்குவோம். அதற்கு உதவக்கூடிய முறையில் வெகுசன இயக்க அய்க்கிய முன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



னணி வேலைகளில் கவனம் செலுத்துவோம். கட்சியை கட்டுவதே அடிப்படை வேலையும் பிரதான வேலையும், பிரதான எதிரிக்கு எதிராக மூலோபாயரீதி யான தற்காப்புக் கட்டத்துள் இருந்து கொண்டு கொரில்லா யுத்த கூறுகளை கட்டி வளர்க்க வேண்டியது நமது கடமையாகும்.

திலீபன்

*அரசியல் - இராணுவ விவகார அர்த்தத்தில் பார்த்தால் யுத்தம் இரு வகைப்படும். ஒன்று "முன்னணிப்படை யுத்தமுறை", மற்றையது "மக்கள் யுத்தமுறை" இரு யுத்தமுறையும் யுத்தத்தின் இரு வடிவங்களான கொரில்லா யுத்தத்தையும், கிரமமான யுத்தத்தையும் ஏற்கின்றனர். இதில் இவர்களி டையே வேறுபாடு இல்லை. வேறுபாடு இதைவிட பாரதூரமானது. மக்கள் யுத்தத்திற்கான ஒரு மிகத்தரமான எடுத்துக்காட்டாக இன்று உலக புரட்சியா ளர்கள் அனைவராலும் முரண்பாடின்றி ஏற்றுக் கொள்ளப்பட்டது சீன யுத்த மும், வியட்நாம் யுத்தமுமாகும். அதிலும் குறிப்பாக வியட்நாம் யுத்தமாகும். இதன் படிப்பினைகளை வைத்துக் கொண்டும், தமிழ் ஈழ போராளிகளின் படிப்பினைகளை வைத்துக் கொண்டும் இவ் இரு யுத்த முறையையும் ஒப்பிடு வோம்.*

| மக்கள் யுத்த முறை | "முன்னணிப்படை" யுத்தமுறை |
|---|---|
| 1. கட்சிதான் முன்னணிப் படை; அரசியல் அர்த்தத்தில் இராணுவம் ஒரு முன்னணிப் படை அல்ல. அது ஒரு கருவி, கட்சியின் கருவி மாத்திரமே யாகும். கட்சியும் கூட பாட்டாளி வர்க்க சித்தாதத்தால் ஆயுதபாணியானது. ஆகவே அது முழுகுழுக்களின் முன்னணிப்படையல்ல. அரசியல் அர்த்தத்தில் அது பாட்டாளி வர்க்க முன்னணிப்படை இவ்வித அரசியல் முன்னணிப் படை மக்களில் இருந்து பிரிந்ததொன்றல்ல. சித்தாந்த வளர்ச்சியிலும், நடைமுறைச் செயற்பாட்டிலும் இது மக்களை விட உயர்வானதொன்று. ஆனால் மக்களைவிட மேலானதொன்றல்ல. இது ஸ்தாபன ரீதியாக மக்களுடன் பின்னிப் பிணைக்கப்பட்ட ஒரு அரசியல் தலைமையாகும். | 1. மக்களுக்காக, மக்களின் நலன்களை நிறைவேற்றும் நோக்கம் கொண்ட பலதனிநபர்களின் கூட்டு, மக்களில் இருந்து பிரிந்து, தனித்து, மக்களின் மேல் இருக்கும் ஒரு கூட்டம். மக்கள் சொந்த பலம் இல்லாதவர்கள் என்று கருதுவார்கள். ஆகவே அனைத்தும் மேலிருந்து தான் செய்யப்படவேண்டும் என்று கருதுவார்கள். இதனால் தம்மேல் மாத்திரமே இவர்களுக்கும் நம்பிக்கை தமது இராணுவ பலத்தின் அதிகரிப்புக்கு ஒப்ப மக்கள் மேல் செலுத்தும் ஆணையும் அதிகரிக்கும். |

www.tamilarangam.net



| | |
|---|---|
| 2. இராணுவம் அரசியல் கட்சியின் தலைமையில் இருக்கவேண்டும். | 2. அரசியல் கட்சியின் தலைமையை நிராகரிப்பது மாத்திரமல்ல; தானும் ஒரு அரசியல் தலைவனாக இருப்பதைக் கூட நிராகரிக்கின்றது. |
| 3. கட்சிக்கும் இராணுவத்துக்கும் இடையேயான இணைவு பிரிக்கமுடியாத ஒரு முழுமையாகவுள்ளது. அமைப்பு ரீதியாக இது ஒன்றிணைக்கப்பட்டுள்ளது. | 3. இராணுவத்துள் சில அரசியலாளர்கள் இருப்பார்கள். இராணுவத்திற்கு அரசியல் ஆலோசனை வழங்குவதும் இதன் செய்கைகளை அரசியல் ரீதியில் நியாயப்படுத்துவதுமே இவர்கள் கடமையாகும். மன்னர் மண்டப ஆஸ்தான கவிஞர்களைப் போல் இருப்பார்கள். |
| 4. அரசியல் போராட்டத்தின் ஒரு கட்டமே ஆயுதப் போராட்டம். அத்துடன் அதன் ஒரு வெளிப்பாடுமாகும். அது மாத்திரமல்ல ஒரு தற்காலிக வடிவம். "யுத்தம் என்பது இரத்தம் சிந்தும் அரசியல், அரசியல் என்பது இரத்தம் சிந்தாத யுத்தம்" என்று கூறுவார்கள். | 4. யுத்தம் ஒரு நிரந்தர வடிவம். அது ஒரு தனிவிசேட வடிவம். |
| 5. அரசியல் போராட்டத்தையும் ஆயுதப் போராட்டத்தையும் இணைப்பதிலும், பொருளாதார போராட்டத்தையும் ஆயுதப் போராட்டத்தையும் இணைப்பதிலும் வல்லமை. | 5. இதுபற்றி நாட்டமேயில்லை. ஆயுதப் போராட்டமே அனைத்தும். |
| 6. தமது தாய்பூமியை இராணுவ ஆக்கிரமிப்புச் செய்துள்ள அந்நிய எதிரிக்கு எதிராக நாட்டின் முழு மக்களையும், தனி ஒரு மனிதன்போல் ஐக்கியமுறச் செய்வதிலேயே நாட்டம் அதிகம். இதுவே வெற்றிக்கு அடிப்படையான உத்திரவாதம். தாமே அதற்கான வழியை அமைப்பவர்களாகவும் முன்னோடிகளாகவும் இருப்பதில் ஆழ்ந்த கவனம். | 6. ஐக்கிய உணர்வேயில்லை. ஏனையவர்களோ, மக்களோ ஸ்தாபனப்படுவது கண்டு அச்சம். தமதுஸ்தாபனம் மாத்திரம்தான் செயல்படவேண்டும் என்பதே ஒவ்வொருவரினதும் கருத்தாகும். |

www.tamilarangam.net



7. மக்களை ஸ்தாபனப்படுத்துவதன் மூலமே அரசியல், இராணுவம், பொருளாதாரம் ஆகிய மூன்று போராட்டங்களும் ஒன்றிணைக்கப் படுகின்றன. இந்நிகழ்ச்சியால் கிரம மான சேனைதான் சார்ந்து நிற்பதற் கான பலமான அடித்தளத்தைப் பெறுகின்றது. மக்கள் இராணுவ ரீதி யிலும் ஸ்தாபனப்படுகிறார்கள். இத னால் கிரமமான சேனை தனக்கென் றோர் ஆயுத பாணியான சகாவையும் பெற்றுக் கொள்கிறது.

7. "ஆயுதம் ஏந்திய முன்னணிப் படை யினரே அனைத்தும் இராணுவ நடவ டிக்கைகளே, தமது படையின் நலனுக் காக பொருளாதார உற்பத்தியில் ஈடுப டுவார்கள். தாம் மக்களிடம் இருந்து பொருளாதாரம் பெறுவதற்காக மக் களை அணிதிரட்டுவார்கள். அதே போல் தமது நிரந்தர படைக்கு இரா ணுவ சேவகம் செய்வதற்காக சில ருக்கு ஆயுதம் வழங்கி அணி திரட்டு வார்கள். அத்துலத் முதலியால் அமைக்கப்பட்ட குடிப்படைகளுக் கும் நிரந்தர ராணுவத்திற்கும். உள்ள உறவை இங்கு உவமானம், கூறுவதில் எந்தவித தவறும் இல்லை.

8. மக்களை சார்ந்திருத்தலால் கொரில்லா யுத்தம் கிரமமான யுத்த மாக படிப்படியாக வளர்ச்சியுறும். மூலோபாய ரீதியான ஸ்தல யுத்தம் என்ற மட்டத்திற்கு இது வளரும். அதேநேரத்தில் கொரில்லா யுத்தத் தனித கிரமமான யுத்தத்தின் துணைவ னாக இணைப்பதில் ஆற்றலும் இருக்கும்.



8. மக்களை சார்ந்திராததால் ராணுவ செயற்படுதிறன் எல்லைப்படுத்தப் பட்டது. குறிப்பிட்ட கட்ட ராணுவ திறனுக்கு அப்பால் வளர்ச்சி பெற முடியாதது. கொரில்லா யுத்தத்தை கிர மமான யுத்தம் என்ற கட்டத்திற்கு வளர்த்தெடுக்கும் தன்மையில்லை. இதனால் கொரில்லா யுத்த வடிவை தாண்ட முடியாது. அல்லலுறுவர். தமது இராணுவ திறனை அதிகரிப்ப தற்காக கொரில்லா சேனையை நவீன கருவிகளாலும், நவீன போர் யுக்திகளி னாலும், நிறைக்க முற்படுவர். ஒரு குறிப்பிட்ட எல்லைக்கப்பால் கொரில்லா சேனையால் இதை உள் வாங்குவதற்கான எல்லைகள் எதை யும் கொண்டிராததாகும். இவ் யுத்தமு றையை பின்பற்றும் மற்றோர் பிரிவி னர் கொரில்லா யுத்தத்தை நிராகரித்து கிரமமான யுத்தமுறையை மாத்திரம் பின்பற்றுவர். இவர்கள் தமது கிரம மான சேனையை தமது மக்களைச்

www.tamilarangam.net



சார்ந்து உருவாக்காதபடியால் அது கருச்சிதைவுறும், அல்லது முட்டையை விட்டு வெளிவந்த கணமே அழிக்கப்பட்டு விடும். இப்பிரிவினர் கொரில்லா யுத்தப்பிரிவினர் நின்று பிடிக்கும் அளவிற்கு இவர்களால் நின்று பிடிக்க முடியாது.

*9. தமது சொந்த நாட்டில் நடைபெறும் விடுதலைப் போராட்டத்தையும், தம்மை ஆக்கிரமித்துள்ள நாட்டு மக்களின் புரட்சிகர போராட்டங்களுடனும் நிறையவே தொடர்புகள் ஏற்படுத்துவார்கள்.*

*9. அந்த நோக்கு இல்லை. சிங்கள மக்கள் மத்தியில் புரட்சிகர இயக்கங்களின் வளர்ச்சிக்கு பாதகமான அரசியல் விளைவுகள் ஏற்படக்கூடிய முயற்சிகளில் தெரிந்திருந்தும் ஈடுபடுவர்.*

*10. வர்க்க அபிலாசைகளில் உழைக்கும் மக்கள் இவ் இராணுவத்தை தமது சொந்த இராணுவமாகவே காண்பார்கள். தேசிய அபிலாசைகளின் அடிப்படையிலும் மக்கள் இதனுடன் ஒரு அந்நியோன்ய தன்மையையே காண்பார்கள்.*

*10. வர்க்க அபிலாசைகளின் அடிப்படையில் மக்கள் இதற்கும் - முன்பிருந்த முதலாளித்துவ பொலிஸாருக்கும் இடையே எந்த வேறுபாட்டையும் காணமாட்டார்கள். இவ் ராணுவத்தில் இருந்து மக்கள் அந்நியமாகியே நிற்பார்கள். தேசிய அபிலாசைகளின் அடிப்படையில் மக்கள் இந்த ராணுவத்துடன் ஒரு நல்லுறவைக் காண்பார்கள். ஆனால் அது அந்நியோன்ய உறவாக இருக்கமாட்டாது.*

*தமிழ் ஈழ பிரதேசத்தில் பின்பற்றப்பட்டது "முன்னணிப்படை" யுத்தமுறையேயாகும். இதுவே மேலாதிக்கம் செலுத்தியது. எல்.டி.டி.ஈ. இதன் கொரில்லா யுத்தபிரிவின் தலைமை அங்கம். PLOT இதன் கிரமமான யுத்தபிரிவின் தலைமையங்கம். எல்.டி.டி.ஈ.யின் யுத்தமுறையே இன்று தீர்க்கமான யுத்த நடைமுறைச் செயற்பாடாக இருந்துவருகின்றது. PLOT இன் யுத்த முறை கருச்சிதைவு அடைந்துவிட்டது. ஏனைய போராளிக்குழுக்கள் இப்பிரிவில் ஏதோ ஒன்றையோ அல்லது ஓரளவு அப்பிரிவையும் ஓரளவு இப்பிரிவையும் சார்ந்ததேயாகும். எதுவுமே மக்கள் யுத்தபிரிவைச் சார்ந்தவையாக மாறவில்லை.*

ஜீ. காந்தன்,
நவசகாப்தம் - 2

www.tamilarangam.net



# யாரை நோகடித்தோம்...

பா.அ. ஜயகரன்

காதைக் கடுக்கும் பனியுறைப் பொழுதில்
என் நெஞ்சைக் கடுக்கும் கவிகூற விளைகிறேன்

மூன்றாண்டுகள்
மண்ணிலிருந்து அகற்றப்பட்டு மூன்றாண்டுகள்
மனிதன்பால் மனிதனுக்குள்ள
அகதியின்பால் அகதிக்குள்ள; நேயத்தால்
துன்பங்களை, துயரங்களை
அறிந்ததில், உணர்ந்ததில், அனுபவிப்பதில்
அதன் விளைவில்
கோரங்களை கோர்க்க விளைகிறேன்.

வன்னிக் காட்டில் எனதூர் அருகே
எம்போன்றோர் வாழும் தரை
எம்போன்றோர் விதைக்கும் நிலம்
எம்போன்றோர் பேசும் மொழி
எம்போன்றோர் வளர்ந்த மண்
ஒரு முஸ்லிம் கிராமம்
ஆண்டியா புளியங்குளமெனும் சிற்றூர்

குண்டுக்காக்காவெனும் ஒரு தாத்தா,
தள்ளாத வயதிலும் வீடுதேடி வருவார்
வந்தவுடன் அவர் கைப்பையில் வருவதை
பிரித்துண்பதே எம் வேலை
திண்ணையில் இருந்து பலவும் கதைப்பார்
அவர் தன் பேத்திக்கு சம்பந்தமும் பேசுவார்
நானும் சிரித்துக் கொண்டே,
"இனி என்னல் சுன்னத்தா செய்து கொள்ள
முடியும்" என்பேன்
இப்படித்தான் எங்கள் உறவு
கள்ளம் கபடமற்றது

நோன்பு நாட்களிலும்
புதுவருட, பொங்கல்களிலும்
விருந்தோம்பல்களும் இருக்கும்

www.tamilarangam.net



இப்படிப் பலவும் தொடரும்
இனிய நட்பு. இனிய உறவு

இனவாதப் பேரிரைச்சலில்
செட்டிகுளமெனும் ஓர்தரைஊர்ந்தது
மக்களோ வேர்விட்டகன்றனர்.
எத்தனை காலம் வாழ்ந்திருந்த மண்
எத்தனை கனவுகளை நனவாக்கிய மண்
சொந்த மண்ணிலிருந்து அகன்று செல்வதுபோல்
ஓர் துன்பமே
இம் மேதினியில் மிகப் பெரிய துன்பமென்பேன்
அதுவும் இவ்வாறே
காலையில் ஒலிபெருக்கியுடன் நுழைந்த
சிங்கள இராணுவம்
இருபத்திநான்கு மணிநேரத்துள்
மண்ணைவிட்டு அகலுங்கள் என எச்சரித்தது
ஆயினும் தம் இருப்புக்களை காவ
உடமைகளை எடுத்துச் செல்லக்கூட
எதிரி அனுமதித்திருந்தான்
கால்நடையாகவும், மாட்டுவண்டிகளிலும்
உழவு இயந்திரங்களிலும்
கண்ணீர் சிந்தி மண்ணைவிட்டகன்ற பொழுதுகள்
இன்னும் எம்மனதில் முதிரத்தில் வலியதாகவுள்ளது.

இராணுவ முனைப்பில் எப்போதும்
உயிரற்றுப் போகும் காலம்
குறிபார்க்கும் துப்பாக்கிகளிடை
எப்போதும் உயிரற்றதே எம்வாழ்வு
அப்போதெல்லாம் உயிர் தந்தது
அக் குக்கிராமம்

'அல்லா'வின் பேரால்
அரவணைத்திருந்தனர் அம் மக்கள்
வாப்பா, உம்மாவென
அவர்களிடை அவர்களாய்
வாழ்ந்திருந்த நாட்கள்
என் உயிரிடை உயிராய் உண்டு

மூன்றாண்டுகள் முன்பாய் ஓர்நாள்
அன்று
"அதட்டல்களும் நீட்டிய துப்பாக்கிகளும்"

www.tamilarangam.net



"உடுத்த உடையுடன் வெளியேறுக"
எனப் பணித்தன.
எல்லாமே உயிரற்றுப் போயின
யாருமே எதிர்பார்த்திலர்
அதுவும் சொந்தச் சோதரரினால்

யார் மொழிந்தார் சொல்க
எதிரியிடமிருந்து கற்ற கல்வியோசொல்க
போரின் மகிமை இழந்தோம்
நட்பைத் துறந்தோம்
நம்பிக்கையைச் சிதைத்தோம்

பேரினத்தின் காலில் சிதையுண்டு கிடந்தோம்.
ஒன்றாய் வாழ்ந்து ஓர் மொழி பேசி
பேரினக்காலை முறிக்கவெழுந்த
பல தோழரை இழந்தோம்
நம்பிக்கையை முறித்தோம்

மன்னார்
உயிலங்குளம் விட்ட மக்கள் அங்கு
பலமைல் நடந்து கர்ப்பிணிகள்
கருச்சிதைந்ததும்
சிசுப் பேறுகள் காட்டுப்பாதையோரங்களில்
நிகழ்ந்ததுமென
நீண்டவோர் துன்பம் சொன்னார் என் நண்பர்
யாரை நோகடித்தோம். யாரை நொந்து கொண்டோம்
அவர்களும் எம் மக்களே
அவர்களுக்கும் எம் மண்ணே

எதிரிகள் யார்?
துரோகிகள் யாரெனப்
புரிந்து கொள்ளத் தெரியாத துப்பாக்கிகளை
நான் எப்போதும் மன்னிக்கேன்
நாம் எப்போதும் மன்னிக்கோம்

நாம் இழந்தது தேசமெனில்
அவர் இழந்ததும் தேசம்தான்
நாம் இழந்தது உரிமையெனில்
அவர் இழந்ததும் உரிமைதான்
நாம் இழந்தது சமத்துவமெனில்

www.tamilarangam.net



அவர் இழந்ததும் சமத்துவம்தான்
நாம் இழந்தது நீதியெனில்
அவர் இழந்ததும் நீதிதான்
நாம் இழந்தது சுதந்திரமெனில்
அவர் இழந்ததும் சுதந்திரம்தான்.

நாம் எழுந்ததே உரிமைக்காய்
நாம் எழுந்ததே நீதிக்காய்
நாம் எழுந்ததே சுதந்திரத்திற்காய்
நாம் எழுந்ததே கொடுமைக்கெதிராய்; எனில்
நாம் இப்போது புரிவது என்ன?

யாரும் எதிர்பாராக் கொடுமை
யாரும் எதிர்பாராக் கோரம்
சொல்க!... சொல்க!...
இப்போ சொல்க...
யார் எதிரிகள்?
யார் துரோகிகள்

விட்டகன்ற மக்களின் உடமைகள்
அனைத்தும் ஏலத்தில் விடப்பட்டதாம்
யாரிடத்தில் சொல்வது?
யாரைக் கேட்பது?
மௌனித்தனர் மக்கள்
பேசுகவெனில் பேசும் ஓர் மொழிமட்டுமே அங்குண்டு
நிர்க்கதியாகினர் மக்கள்
விதியெனப் படைத்தவர் ஆண்டவர் இல்லை
விதியைப் படைத்தவர் எம்மவர் ஆகினர்
அயலவன் நெருப்பானான்
அகதி முகாங்களுக்குள் முடங்கியது வாழ்வு

மௌன மொழியுடன் எத்தனை நாள் வாழ்வோம்?
மௌனம்தான் மொழியெனில்
எங்கும் மானிடம் வீதியில் புரளும்
என்பதை உணர்வேன்.

இன்றே சொல்வோம்
எம்மவர் அவர்கள்
மனிதர்கள் ஆயின் மனிதரை மதிப்போம்
மனிதர்கள் நாங்கள் கொடுமையை மறுப்போம்

www.tamilarangam.net



# சமகாலத்தில் தேசிய இன விடுதலைப் போராட்டங்கள்

இன்று உலகில் நடந்து கொண்டிருக்கும் மக்கள் போராட்டங்களில், யுத்தங்களில், தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமைக்கும், தேசிய இன விடுதலைக்கும், நாடுகளின் தேசிய சுதந்திரத்திற்குமான போராட்டங்கள், யுத்தங்கள் ஒரு பிரதான நிகழ்ச்சி நிரலாக இருக்கின்றது. குறிப்பாக ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன், அமெரிக்க நவகாலனி நாடுகளிலும், முன்னாள் சோசலிச நாடுகளிலும் தேசிய இனப் பிரச்சனை கொழுந்துவிட்டு எரியும் பிரச்சனையாக வளர்ந்து வருகின்றது. ஏன் கனடா போன்ற முதலாளித்துவ நாடுகளிலும் இப்பிரச்சனை எதிரொலிக்கின்றது.

இலங்கையின் வரலாற்றில் பிரித்தானிய காலனி ஆதிக்கத்திற்கு எதிரான இலங்கை மக்களின் தேசிய சுதந்திரத்திற்கான போராட்டமும், 1948-இல் ஆட்சியதிகார மாற்றத்தின் பின் நவகாலனிய ஒடுக்குமுறைக்கெதிரான போராட்டமும் முக்கியமானது. அதன்பின் 1956-இல் இருந்து கூர்மையடைந்த சிறீலங்கா, சிங்கள பௌத்த பேரினவாத அரசின் இன ஒடுக்குமுறைக்கு எதிரான தமிழ் தேசிய இன மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமைக்கான போராட்டம், படிப்படியாக மாற்றமடைந்து இது பின் தெள்ளத் தெளிவாக தனித் தமிழீழத்திற்கான போராட்டமாக பரிணாம வளர்ச்சி கண்டுள்ளது. கடந்த 15 ஆண்டுகளாக சிறீலங்கா அரசின், வல்லரசுகளின் தேசிய இன ஒடுக்குமுறை யுத்தத்தை எதிர்த்து தமிழீழ மக்கள் நடத்திவரும் தமிழீழ தேசிய விடுதலைக்கான போராட்டமும், யுத்தமும், யுத்தத்தை இன்று வழி நடத்திக் கொண்டிருக்கும் விடுதலைப் புலிகள் இயக்கமும் உலகின் மூலை முடுக்கிலுள்ள மக்களுக்கெல்லாம் தெரிந்ததே. தமிழீழ மக்களின் தேசிய இன விடுதலைக்கான போராட்டத்தை - யுத்தத்தை உலகின் ஒவ்வொரு பகுதியிலும் தத்தமது தேசிய சுயநிர்ணய உரிமைக்காகவும், தனிநாட்டு விடுதலைக்காகவும், மக்களின் சமூக, பொருளாதார, பண்பாட்டுச் சுதந்திரத்திற்கும் அரசியல் விடுதலைக்காகவும் போராடும் மக்களும், கட்சிகளும், தமிழீழ மக்களின் போராட்டத்தை ஆதரித்து வருகின்றனர். ஒடுக்கப்படுகின்ற தேசிய இனம், சுரண்டப்படுகின்ற மக்களின் போராட்டம் என்ற அடிப்படையிலும், இனவெறி ஒடுக்குமுறை அரசுகளுக்கும் உலகு தழுவிய அளவில் இவ் அரசுகளுடன் இரண்டறக் கலந்துள்ள வல்லரசுகளின் தேச ஒடுக்கு முறைக்கு - யுத்தத்திற்கு எதிரானவர்களின் உலகு தழுவிய ஒற்றுமை என்ற வகையிலும் தமிழீழ மக்களுக்கும் - உலக மக்களுக்கும், கட்சிகளுக்கும் இடையிலான பரஸ்பர உறவு வளர்ந்து வருகின்றது.

www.tamilarangam.net



உலகளவில் தேசிய சுயநிர்ணய உரிமைக்கான போராட்டம், தனிநாட்டு விடுதலைக்கான யுத்தம் நடந்து கொண்டிருக்கும் போராட்டப் பகுதிகளில் - யுத்த களங்களில் உள்ள முற்போக்கு தேசபக்த சனநாயக சக்திகளும் இயக்கங்களும், கொம்யூனிஸ்ட் கட்சிகளும் முகம் கொடுத்துவரும் பிரச்சினைகளும் பெரும்பாலும் ஒன்றானவையே. இது தேசிய இனப் பிரச்சினை குறித்த சித்தாந்த அரசியல் கண்ணோட்டங்களும், போராட்டத்தின் எதிரிகள் - நண்பர்கள், போராட்ட வழிமுறைகள் குறித்த குறிப்பான பார்வைகளும் உள்ளடங்கியது. விசேடமாக 2-ம் உலக யுத்தத்தின் பின் ஆசிய, ஆப்பிரிக்க, லத்தின் அமெரிக்க நாடுகளில் வளர்ந்து வரும் தேசிய இனப்பிரச்சினை பற்றிய புரிதலில் - அதற்கான தீர்வுகளை முன் வைப்பதில் மற்றும் அப்போராட்டங்களிற்கு தலைமை தாங்குவதில் கொம்யூனிஸ்ட்டுகளிடம் வெளிப்படும் நிறைகளும் - குறைகளும் - பலயீனங்களும் கவனித்திற்குரியது. இதன் விளைவாக தேசிய இன விடுதலைக்கான போராட்டங்கள் முன்னிலை பெற்றிருக்கும் நாடுகளில் கொம்யூனிஸ்ட்கள் போராட்டத்தின் தீர்மானகரமான சக்தியாக பெரும்பாலும் இல்லாது இருக்கின்றனர் என்பது இரகசியமல்ல.

மறுபக்கம் தேசிய இனப் போராட்டங்களில் குட்டி முதலாளித்துவ, முதலாளித்துவ, சுத்த இராணுவ இயக்கங்களே போராட்டத்தின் தீர்மானகரமான சக்தியாக இருப்பதையும் காணக்கூடியதாகவுள்ளது. தத்தமது தேசிய இன விடுதலைப் போராட்டங்களை ஒடுக்கும் இனவெறி - சியோனிச - பாசிச அரசுகளுக்கும், வல்லரசுகளுக்கும் எதிராக தமது தேசிய இன விடுதலைக்கான போராட்டங்களை வல்லரசு எதிர்ப்புப் போராட்டமாகவும், கொம்யூனிச ஆதரவுப் போராட்டமாகவும் முன்னெடுத்து வந்த தென் ஆப்பிரிக்காவில் நெல்சன் மண்டேலாவின் தலைமையிலான கட்சியும், பாலஸ்தீன விடுதலைப் போராட்டத்தில் யாசர் அரபாத்தின் தலைமையிலான இயக்கமும் கால் நூற்றாண்டுகளுக்கு மேலான அம்மக்களின் போராட்டத்தின் - யுத்தத்தின் பின் இன்று இவை இரண்டின் நிலை என்ன? இப் போராட்டங்களுக்கு தேசிய இனப் பிரச்சினையில் முதலாளித்துவ, குட்டி முதலாளித்துவ வர்க்கக் கண்ணோட்டம் கொண்ட இவ்வியக்கங்கள் இம் மக்களின் தேசிய சுதந்திரத்தை, தனிநாட்டு விடுதலையை, அத் தேசிய இனத்தின் ஒடுக்கப்பட்ட பெரும்பான்மை மக்களின் சமூக, பொருளாதார, பண்பாட்டு விடுதலையில் என்ன மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது? வங்காளதேசம், எரித்திரியா போன்றவை, தேசிய விடுதலைப் போராட்டங்கள் ஊடாக தங்களை தனி நாடுகளாக்கிய போதும் அந்நாடுகளின் தேசிய சுதந்திரமும்! மக்கள் விடுதலையும் இன்று என்ன நிலையில் உள்ளது? இந்நாடுகளில் இத்தேசிய இனங்களின் முதலாளித்துவ, குட்டி முதலாளித்துவ சக்திகள் ''தேசிய சுதந்திரம், சமத்துவம், சமாதானம்'' என்ற கொள்கை அறிவிப்புடன் அத்தேசிய இன மக்களை அணிதிரட்டி நடாத்திய போராட்டங்களில் யுத்தங்களில் கணக்கிட முடியாத இழப்புகள்,

www.tamilarangam.net



தியாகங்கள் உள்ளது. இன்று இத்தேசிய இன முதலாளி வர்க்கமும், கட்சிகளும், தலைவர்களும் எந்த இனவெறி அரசுகளின், வல்லரசுகளின் சாம்பல் மேட்டில் 'தேசத்தின் சுதந்திரம்' நிறுவப்படும், மக்களின் சமூக பொருளாதார அரசியல் விடுதலையை வெல்வோம் என சூளுரைத்தார்களோ, தேசத்தின் சுதந்திரம், மக்களின் விடுதலை என்ற கொள்கைக்கு உண்மையாக இருந்து உயிர் நீத்த போராளிகளின் – மக்களின் கல்லறைகள் முன் அதே எதிரிகளுடன் கைகோர்த்து நிற்கின்றனர். தேசத்துக்கும் மக்களுக்கும் துரோகம் செய்து, தேசிய சுயநிர்ணய உரிமையைக் கைவிட்டு, ஆனால் மக்களை ஏமாற்ற தேச விடுதலையை அடைய என்ற பெயரில் "தேசிய சுயநிர்வாகத்தையும், அதற்கான தேர்தல்களையும்" ஏற்றுநடைமுறைப் படுத்துகின்றனர். தேச விடுதலைப் போராட்டத்தை ஒடுக்கவும், அதை வெல்லவும் இதுவரைகாலம் நடாத்தப்பட்ட யுத்தத்தில் 'சுடலை ஆக்கப்பட்ட தேசத்தை' இந்த துரோகம் இழைத்த முதலாளி வர்க்கமும் இயக்கத் தலைவர்களும், வல்லரசுகளுக்கும் பல்தேசிய கொம்பனிகளுக்கும் கூறுபோட்டு விற்கும் ஒப்பந்தங்களில் கையொப்பமிட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதுதான் நடந்து கொண்டிருக்கின்றது.

ஆனால் மீண்டும் இந்த நாடுகளின் தேசிய இனங்களின் மக்களும் முற்போக்கு தேசபக்த சனநாயக சக்திகளும் கொம்யூனிஸ்டுக்களும் அதே பழைய வல்லரசுகளால், சியோனிச, பாசிச அரசுகளால், தமது 'புதிய முதலாளித்துவ எசமானர்களால்' தங்கள் தேசத்தின் சுதந்திரம் மீண்டும் பறிக்கப்பட்டிருப்பதையும், மக்கள் தொடர்ந்துச் சுரண்டப்படுவதையும், ஒடுக்கப்படுவதையும் எதிர்த்துப் போராடுகின்றார்கள். போராடுவார்கள். மிக நீண்ட நெடிய தேசிய இன விடுதலைப் போராட்டங்களும், வல்லரசு எதிர்ப்பையும், கொம்யூனிச ஆதரவையும் வெளிப்படுத்திய இயக்கங்களும், தலைவர்களும் தேசவிடுதலைக்கும், மக்களின் சுதந்திரத்திற்கும் துரோகம் இழைத்து போராட்டத்தை திசை திருப்பி எதிரிகளுடன் சமரசம் கண்டுள்ளனர். இது இந்த வல்லரசிய சகாப்தத்தில் ஒடுக்கப்படும் தேசிய இனங்களின் விடுதலைப் போராட்டத்திற்கு முதலாளித்துவ குட்டி முதலாளித்துவ வர்க்கத்தால், முதலாளித்துவ சித்தாந்தத்தால், அதன் அரசியல், இராணுவ போராட்ட வழிமுறைகளால் தேசிய இனங்களின் பிரச்சனைக்கு தீர்வைக் கொடுக்க முடியாது என்பதை தெளிவாக்கி விட்டது. தேசிய விடுதலைப் போராட்டங்களுக்குத் தலைமை தாங்கி வெற்றி ஈட்டும் சக்தியை வரலாற்று ரீதியில் முதலாளித்துவ வர்க்கம் இழந்துவிட்டது என்ற லெனினியக் கொள்கையை மீண்டும் நிரூபித்துள்ளது. சந்தர்ப்பவாத வல்லரசிய எதிர்ப்புக் கொள்கையும், கொம்யூனிச ஆதரவுக் கொள்கையும் கொண்டு, தேசத்தையும் மக்களையும் ஏமாற்றிய குட்டி முதலாளிய சந்தர்ப்பவாத தேசியக் கொள்கைக்கும், இயக்கங்களும், தலைவர்களுக்கும் வரலாற்றில் இந்தக் கதி எனில், இன்று தேசிய விடுதலைப் போராட்டங்க

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ளங்களில் உள்நாட்டு இனவெறி அரசுகளை மட்டும் எதிர்த்துப் போராடும் - யுத்தம் புரியும் 'வல்லரசு எதிர்ப்பை வெளிப்படுத்தாத,' 'கொம்யூனிச எதிர்ப்பை வெளிப்படுத்தும்' முதலாளித்துவ தேசிய வாதக் கொள்கையும் இயக்கங்களும் தலைவர்களும் தத்தமது தேசிய இன விடுதலைப் போராட்டத் திற்கு, மக்களின் விடுதலைக்கு எதை எதிர்காலத்தில் செய்வார்கள் என்பது சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

இன்று தேசிய இனப்பிரச்சனையைப் பற்றி சிந்திக்கின்றவர்களும் தேசிய விடுதலைப் போராட்ட களங்களில் உள்ள முற்போக்கு, தேசபக்த சனநாயக சக்திகள், கொம்யூனிஸ்டுகள் என அனைவரும் உலகு தழுவிய போராட்டங் கள், தமது சொந்த தேசிய இனப் போராட்டங்கள் மூலம் பெற்றுள்ள சித்தாந்த அரசியல் - அனுபவ படிப்பினைகளில் இருந்து புதிய புதிய விடயங்களைக் கற்றுக் கொண்டு வருகின்றார்கள். இந்த வல்லரசு சகாப்தத்தில் எந்த ஒரு தேசிய இனங்களின் விடுதலைப் போராட்டங்களும், நாடுகளின் தேசிய சுதந் திரப் போராட்டங்களும் பாட்டாளி வர்க்கத்தின் தலைமையிலே புதிய சனநா யகப் புரட்சியின் பகுதியாக அல்லது சோசலிசப் புரட்சியின் பகுதியாக, கொம் யூனிஸ்ட் கட்சியின் தலைமை வழிகாட்டுதலில் முன்னெடுக்கப்பட்டால் மட் டுமே வெற்றியளிக்கும் என்ற மார்க்சிய - லெனினிய - மாவோ சிந்தனை நிலைப்பாட்டை கைக் கொள்கின்றனர். ஆனால் இதைப் பொதுப்படையாக ஏற்றுக் கொண்டு நடைமுறையில் உண்மையில் தேசிய இனப் பிரச்சனை மற்றும் அதற்கான தீர்வு பற்றிய மா-லெ-மாவோ சிந்தனைக்குப் புறம்பான வகையில் தேசிய இனப் பிரச்சனை குறித்த அடிப்படைத் தத்துவப் புரிதலி லும், குறிப்பான இன்றைய வல்லரசிய தேசிய ஒடுக்குமுறைச் சூழலில், குறிப்பான நாடுகளின் தேசிய இனப் பிரச்சனைகளின் தோற்றுவாய் வேர் களை, வர்க்க கண்ணோட்டத்தில் ஆய்வு செய்வதிலும் அதிலிருந்து சமூகப் புரட்சி நலன் சார்ந்த நிலையில் தீர்வுகளை முன் வைப்பதிலும், குறிப்பிட்ட தேசிய இனங்களின் விடுதலைப் போராட்டத்தில் போராடும் குட்டி முதலா ளித்துவ வர்க்க நலன் சார்ந்த இயக்கங்களை அதன் அரசியல், இராணுவ செயற்பாடுகளை கணிப்பிடுவதிலும் பாரதூரமான தவறுகளை இழைத்துக் கொண்டிருக்கின்றார்கள். இத் தவறுகள் தேசிய இனப் பிரச்சனையில் சித்தாந்த அரசியல் போக்கில் முதலாளித்துவ தேசிய வாதத்திற்கு வால் பிடிக்கும் போக்கை வெளிப்படுத்துகின்றது. ஒடுக்கப்பட்ட தேசிய இனத்தின் தொழி லாள, விவசாய வர்க்கத்திற்கும், பரந்துபட்ட மக்களுக்கும், சர்வதேச தொழி லாளி வர்க்கத்திற்கும், தேசிய சுய நிர்ணய உரிமைக் கோட்பாட்டிற்கும், இறுதியில் மார்க்சிய - லெ. மாவோ சிந்தனைக்கும் துரோகம் இழைப்பதில் போய் முடிகிறது.

காலனி எதிர்ப்பு தேசிய விடுதலைப் போராட்டங்களிலும், இன்று நவகா லனி சமூகக் கட்டமைப்புக்குள் நடக்கும் நாடுகளின் வல்லரசு எதிர்ப்பு தேசிய

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



விடுதலைப் போராட்டங்களிலும், உள்நாட்டில் ஒடுக்கப்படும் தேசிய இனங்களின் விடுதலைப் போராட்டங்களில் கொம்யூனிஸ்ட்கள் தலைமை தாங்க முடியாமற் போவதற்கான காரணங்களை சரிப்படுத்த முதலில் நமது சொந்த தத்துவார்த்த சித்தாந்த அரசியல் பலயீனங்களை சரி செய்து கொள்ள வேண்டிய முக்கிய கடமை கொம்யூனிஸ்டுக்களுக்கு இருக்கின்றது. தேசிய இனப்பிரச்சனையில் இனவாத அரசுகளை, வல்லரசுகளை தோற்கடிக்க போராட்டத்தில் காணப்படும் முதலாளித்துவ வர்க்க சித்தாந்தப் பாதையை எதிர்த்துப் போராடி, முற்போக்கு தேசபக்த சனநாயக சக்திகளை வென்றெடுத்து, நீண்ட கால மக்கள் யுத்தப் பாதையில் உண்மையான தேசிய சுதந்திரத்தை, மக்கள் விடுதலையை, அப்போது மட்டும்தான் வெல்லமுடியும்.

## மா-லெ-மா ஓ சிந்தனையில் தேசிய இனப்பிரச்சனை

தேசிய இனப் பிரச்சனையும் மற்றைய எல்லா சமூகப் பிரச்சனைகள் போல் மனித சமூக வரலாற்றில் ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் தோன்றி வளர்ந்து மாற்றம் கண்டு வருகின்றது. முதன்முதலில் நிலப்பிரபுத்துவ சமூகத்தின் அழிவிலும் முதலாளித்துவத்தின் தோற்றத்துடனும் தேசியம் என்ற பிரச்சனை முன்னெழுந்து வந்தது. உலகில் முதலாளித்துவத்தின் தோற்றமும் நிலப்பிரபுத்துவத்தின் அழிவும் வேறுபட்ட நாடுகளில், வேறுபட்ட காலகட்டங்களில் நிகழ்ந்திருப்பது தெளிவு, வரலாற்று வளர்ச்சியில் முதலாளித்துவத்தின் தொடக்க காலம் சரக்குப் பொருளாதாரத்தின் தோற்றத்துடனும் சந்தைகளின் எல்லைகளை நிறுவும் நிகழ்ச்சிகளுடன் நவீன தேசிய இன உணர்வுகளுக்கு விதை விதைக்கப்பட்டது. இதனால் தான் "முதலாளித்துவம் சந்தை என்ற பள்ளியில் தான் தேசியம் என்னும் பாடத்தைக் கற்றுக் கொண்டது" என்பர். வரலாற்று வளர்ச்சியில் அன்று முற்போக்கான பாத்திரத்தை முதலாளித்துவம் வழங்கியது. தேசிய இனப் பிரச்சனைக்கு தலைமை தாங்கவும் தீர்வைக் கொடுக்கவும் முடிந்தது. ஆனால் முதலாளித்துவ சுரண்டலுக்கும், ஒடுக்குமுறைக்கும் முடிவு கட்டி மனித வரலாற்றின் அடுத்த கட்ட வளர்ச்சிக்கு பாட்டாளி வர்க்கம் தலைமை தாங்கி சோசலிசப் புரட்சியை நடாத்த வேண்டியிருந்தது. கற்பனா சோசலிசக் கருத்துக்களை முறியடித்து விஞ்ஞான சோசலிசத்தை மார்க்சியம் முன் வைத்தது. தேசிய இனப் பிரச்சனையின் தோற்றம், வளர்ச்சியை வர்க்கப் போராட்ட வரலாற்று வளர்ச்சியுடன் மார்க்சியம் சரியாக இணைத்து இனம் கண்டது. தேசிய இனப் பிரச்சனையை முதலாளித்துவம் தனது வரலாற்று ரீதியான எல்லைப்படுத்தல்களுக்கு உட்பட்டு எவ்வாறு தீர்வு கண்டது, காணமுடியும் என்பதையும் விளக்கியதுடன் தேசிய இனப் பிரச்சனையை பாட்டாளி வர்க்கம் தனது வர்க்க நலன், வர்க்கப் போராட்ட வளர்ச்சி, சோசலிசப் புரட்சி சமூக மாற்றம் இவற்றுடன் இணைத்து புரிந்து கொள்ள

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வேண்டும் என்பதையும் முன் வைத்தது. தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வை அதற்காக எவ்வாறு போராட வேண்டும் என்பதை அன்றைய சமூக நிலைமையில் வெளிப்பட்ட தேசிய இனப் போராட்டங்களில் மார்க்சியம் தனது குறிப்பான நிலைப்பாட்டைக் கூட முன்வைத்தது. நோர்வே இல் இருந்து சுவீடன் பிரிவது, இங்கிலாந்தில் இருந்து அயர்லாந்து பிரிவது பற்றிய தேசிய இனப் பிரச்சனைகளில் மார்க்சியத்தின் முன்னேறிய அறிவியல் முடிவு களை எல்லோரும் அறிந்திருப்பர். எனவே தேசிய இனப் பிரச்சனை அதற் கான தீர்வை பாட்டாளி வர்க்க நலனில் இருந்து வர்க்கப் போராட்ட வளர்ச்சிக் கும், சோசலிசப் புரட்சியின் வளர்ச்சிக்கும் உட்படுத்திப் பார்த்தது. இவற் றிற்கு விரோதமான வகையில் தேசிய இனப் பிரச்சனை தொடர்பான வரட்டுச் சூத்திரங்களை, முதலாளித்துவ கோட்பாடுகளை தோற்கடித்து தேசிய இன பிரச்சனைக்கு மிக முன்னேறிய தத்தவ வழிகாட்டல்களை வழங்கியது. முத லாளித்துவம் வல்லரசியமாக மாற்றம் அடைதற்கு முன்னரே தேசிய இனப் பிரச்சனையில் கொம்யூனிஸ்ட்டுக்களின் கண்ணோட்டம், கடமை, என்ன வாக இருக்கவேண்டும் என்பதை மார்க்சியம் முன் வைத்திருந்தது.

முதலாளித்துவம் தனது தொடக்க காலத்தில் பண்டங்களின் விற்பனை யில் வேற்றுத் தேச முதலாளிகளுடன் சந்தைக்காக போட்டியிடுவதே குறிக் கோளாக இருந்தது. உள்நாட்டுச் சந்தையின் மீது தன்னுடைய ஆதிக்கத்தை நிறுவுவது முதலாளித்துவத்திற்கு அத்தியாவசியமாக இருந்தது. இவ்வாறு தேசியத்தை நிறுவிக் கொண்ட முதலாளித்துவமும் அதனது வளர்ச்சியும் மூல தனக் குவியலும், தான் நிறுவிய தேசியத்தை, எல்லைகளைக் கடந்து சுரண்ட வும் சந்தைகளைக் கைப்பற்றவும் வேறு தேசங்களை ஆக்கிரமிக்கவும் தொடங் கியது. முதலாளித்துவம் வல்லரசியமாக மாறியதன் நிகழ்ச்சிப் போக்கை இவை வெளிப்படுத்தியது.

ரசியாவில் நிலவிய தேசிய இனங்களின் பிரச்சனையையும் இது தொடர் பாக வெவ்வேறு தேசிய இன சமூக ஜனநாயக கட்சிகள் முன்வைத்த ஆய்வு கள், தீர்வுகளை கூர்மையாக ஆய்வு செய்த தோழர் ஸ்டாலின் தேசிய இனப் பிரச்சனைகளில் மார்க்சியத்தின் அடிப்படை நிலைப்பாடுகளைப் புரிந்து மேலும் செழுமைப்படுத்தும் வகையில் முன் முயற்சி எடுத்தார். கொம்யூ னிஸ்ட்டுக்கள் சோசலிசப் புரட்சியின் நலனுக்கும் பாட்டாளி வர்க்க சர்வதேசி யத்திற்கும் இசைவான முறையில் தேசிய இனங்களின் சுய நிர்ணய உரி மையை சனநாயகப் போராட்டத்தை எவ்வாறு கணிப்பிடவேண்டும். நடைமு றைப் போராட்டத்தில் முன்னெடுத்துச் செல்லவேண்டும் என்றும் தேசிய இனப் பிரச்சனையில் பாட்டாளி வர்க்க நலனுக்கும் சோசலிசப் புரட்சிக்கும் எதிரான கண்ணோட்டங்களை விளக்கி 1913-களில் எழுதிய ''தே. இனப் பிரச்ச னையும் சமூக ஜனநாயகமும்'' என்னும் கட்டுரையில் முன் வைத்தார். ரசியா வில் தேசிய இனப் பிரச்சனைக்குத் தீர்வாக 'பண்ட்' அமைப்பும், காகேஷியர்க

www.tamilarangam.net



ளும், பெர், ஸ்பிரிங்கர் போன்றவர்கள் முன்வைத்த "பண்பாட்டுத் தேசியத் தன்னாட்சி" திட்டத்தின் மோசடிகளை அம்பலப்படுத்தியதுடன் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டை முன் வைத்தார். தேசிய இனங்களின் சுதந்திரத்திற்கும் பல்வேறு தேசிய இனங்களின் சுய விருப்பத்துடன் கூடிய அய்க்கியத்திற்கும் வர்க்கப் புரட்சியின் நலனுக்கும், பாட்டாளி வர்க்க சர்வதேசியத்திற்கும் சோசலிசப் புரட்சிக்கும் விரோதமான தேசிய இனப்பிரச்சனை பற்றியு கோட்பாடுகளை முறியடித்து ரசியாவில் தேசிய இனங்களின் பிரச்சனைக்கு பிரிந்து செல்வதுடன் கூடிய சுய நிர்ணய உரிமைக் கோட்பாட்டை முன்னிறுத்தினார்.

தோழர் லெனின் முதலாளித்துவம் வல்லரசியமாக மாறியதை ஆய்வு செய்தபின்னர் தேசிய இனப் பிரச்சனையையும், தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டையும் உலகு தழுவிய பாட்டாளி வர்க்க தத்துவ பிரச்சனையாக வெளிப்படுத்தினார். "வளரும் முதலாளித்துவமானது தேசிய இனப் பிரச்சனையில் இரண்டு வரலாற்றுப் போக்குகளைப் பற்றி அறிந்துள்ளது. முதலாவதாக தேசிய இன ஒடுக்குமுறைகளுக்கு எதிரான போராட்டம், தேசிய இன அரசுகளின் உருவாக்கம். இரண்டாவதாக தேசிய இனங்களுக்கு இடையே உள்ள உறவுகளின் வளர்ச்சி, தேசிய எல்லைகளின் தகர்வு, மூலதனம், பொதுவாக பொருளாதார வாழ்வில் மற்றும் அரசியல் விஞ்ஞானம் அனைத்திலும் சர்வதேச கூட்டின் தோற்றமும் வளர்ச்சியும் ஆகும்" இந்த இரு போக்குகளும் முதலாளித்துவத்தின் உலகளாவிய கோட்பாடுகளாகும். முதல் போக்கு முதலாளித்துவத்தின் தொடக்க காலங்களிலும் இரண்டாவது போக்கு சோசலிச சமூகத்தை நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கும் முதலாளித்துவத்தின் முதிர்ச்சியடைந்த வல்லரசிய காலகட்டத்திலும் நிகழ்கின்றது என தெளிவுபடுத்தினார் லெனின். தேசிய இனப் பிரச்சனை, தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை தொடர்பாக இரண்டாவது அகிலத்தின் சந்தர்ப்பவாதிகள் மற்றும் இங்கிலாந்தின் 'ஃபேபியன்கள்', ரசியாவின் லீப்மன், செம்கோவஸ்கி போன்ற சமூக வெறியர்களின் மற்றும் காவுட்ஸ்கியவாதிகள் வான்டர்வில் போன்ற சோசலிசத் தேசிய வெறியர்களின் முதலாளித்துவ, வல்லரசிய சார்புக் கண்ணோட்டங்களை தத்துவார்த்த ரீதியில் லெனின் எதிர்த்துப் போராடினார். வல்லரசியமும் பாட்டாளி வர்க்க புரட்சியுமான இந்த சகாப்தத்தில் பிரிந்து சென்று தனியரசு அமைப்பது உள்ளிட்ட சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டை விட குறைவான எந்தக் கோட்பாடும் (சுயாட்சிசமும், கலாச்சாரத் தேசிய தன்னாட்சி) சனநாயக ரீதியில் தேசிய இனப்பிரச்சனையை தீர்க்காது. எனவே பாட்டாளி வர்க்கத்தின் தலைமையில் சோசலிசப் புரட்சி திட்டத்தின் ஒரு பகுதியாக தேசிய இனங்களின் சுய நிர்ணய உரிமைக்கான போராட்டத்தை முக்கிய சனநாயக கடமையாக சர்வதேச பாட்டாளி வர்க்கம் இணைக்க வேண்டும் எனக் கூறினார். அவ்வாறே சோவியத் கம்யூனிஸ்ட் கட்சித் திட்டத்திலும் முன் வைக்கப்பட்டது.

www.tamilarangam.net



முதலாளித்துவ நாடுகளின் சோசலிசப் புரட்சியும், வல்லரசுகளின் காலனி ஆதிக்க தேசிய ஒடுக்குமுறைக்கு, சுரண்டலுக்கு எதிரான காலனி நாடுகளின் தேசிய விடுதலைப் போராட்டமும் உலக சோசலிசப் புரட்சியின் மிக நெருக்கமான உறவை பரஸ்பரம் ஒன்றுக்கொன்று தொடர்புபட்டிருப் பதை லெனினியம் முன் வைத்தது. தேசிய இனங்களின் சுய நிர்ணய உரிமை குறித்து அதுவரைகாலம் நிலவி வந்த அரைகுறைத் தன்மை கொண்ட புரித லையும் ஏகாதிபத்தியம் பற்றிய லெனினின் விரிவான பகுப்பாய்வும், தேசிய இனப் பிரச்சனையை பாட்டாளி வர்க்கமும் கொம்யூனிஸ்டுக்களும் எவ்வாறு அணுகவேண்டும் என்பதை மார்க்சிய அடிப்படையில் லெனினியம் புதிய கட்டத்திற்கு வளர்த்தெடுத்தது. தேசியத்திற்கும் சர்வதேசியத்திற்கும் இடையி லான உறவு பற்றிய சர்வதேசியக் கண்ணோட்டத்தை மிகச் சிறப்பாக முன் வைத்தது. லெனினியத்தின் அடிப்படை அம்சங்கள் என்ற ஸ்டாலினின் கட்டு ரையில் பின்வருமாறு குறிப்பிடப்படுகின்றது. ''அதுவரை ஒரு நாட்டின் குறிப்பான உள்நாட்டுப் பிரச்சனையாக இருந்து வந்த தேசிய இனப் பிரச்ச னையை ஒரு பொதுப் பிரச்சனையாக, சர்வதேசப் பிரச்சனையாக வல்லரசியத் தின் நுகத்தடியில் இருந்து குடியேற்ற நாடுகளையும் ஒடுக்கப்பட்ட நாடுகளை யும் மக்களையும் விடுவிக்கும் உலகப் பிரச்சனையாக மாற்றியது லெனினி யம்.''

சீன நாட்டின் அன்றைய சமூக, பொருளாதார வளர்ச்சிக் கட்டமும் சீனா வின் குறிப்பான சூழ்நிலைமையும் சீனாவின் தேசிய இனங்களின் பிரச்சினை பற்றி குறிப்பான விரிவான ஆய்வுகளை செய்யக் கோரவில்லை. ஆனால் தோழர் மாவோ சர்வதேச ரீதியில் தேசிய இனப் பிரச்சினை குறித்த கோட் பாட்டு நடைமுறைப் பிரச்சனைகளில் மா.லெனினிய அடிப்படை நிலைப்பா டுகளை உறுதியாகப் பின்பற்றினார். சீன நாட்டின் தேசிய விடுதலை பற்றிய பிரச்சினையில் ஜப்பானிய - அமெரிக்க வல்லரசுகளுக்கும், உள்நாட்டு நிலப் பிரபுத்துவத்திற்கும் எதிரான போராட்டத்தில் பாட்டாளி வர்க்கத்தின் கொம்யூ னிஸ்ட்டுக்களின் கடமையை, சரியாக வரையறுத்து இருந்தார். பல்வேறு பட்ட நலன் சார்ந்த தேசிய விடுதலை இயக்கங்களை அவற்றுடனான ஐக்கி யம் - போராட்டத்துடன் சரியான கொள்கையையும், குறிப்பான சூழ்நிலை யில், குறிப்பான நிலைப்பாடுகளை மேற்கொண்டார். சீன நாட்டின் தேசிய விடுதலைப் போராட்டத்தில், போரில், சீனக் கொம்யூனிஸ்ட் கட்சி வரலாற்று ரீதியாக தனது தலைமையை நிறுவியதும் காலனி அரைக்காலனிய சீனாவில் புதிய ஜனநாயகப் புரட்சியின் வெற்றியில் நாட்டின் தேசிய விடுதலைக்கும் ஒடுக்கப்பட்ட மக்களின் சமூக பொருளாதார, அரசியல் விடுதலைக்கும் இடையிலான தொடர்பை சரியான முறையில் இணைத்தது. சீனாவில் உள்ள தேசிய இனங்களின் சுய நிர்ணய உரிமையையும் சரியாப் புரிந்து இருந்தது. ''சீனாவின் தேசிய விடுதலைக்கு இரண்டு அர்த்தங்கள் உண்டு. ஒன்று சீனா

www.tamilarangam.net



என்ற முழுநாடும் வல்லரசுகளிடம் இருந்து விடுதலை அடைவது. இரண்டு சீன நாட்டிற்குள் உள்ள ஒவ்வொரு தேசிய இனங்களும் தேசிய சுயநிர்ணய உரிமை அடிப்படையில் விடுதலை அடைவது'' என்றார் மாவோ.

காலனி - அரைக்காலனி நாடான சீனாவில் புதிய சனநாயகப் புரட்சித் திட்டத்தில் தேசிய சுய நிர்ணய உரிமைக் கோட்பாட்டை இணைத்ததுடன், வல்லரசு எதிர்ப்பு தேசிய விடுதலைப் போராட்டத்தில் சீனா என்கிற முழுநாட்டையும் அனைத்து தேசிய இன மக்களையும் சரியான முறையில் கொம்யூனிஸ் கட்சி தனது தலைமையில் அய்க்கியப்படுத்தியது. தேசிய விடுதலைப் போராட்டத்தில் தேசிய முதலாளி வர்க்க இயக்கத்துடன் (சன்யாட்சன் - ஷியாங்கேசேக்) அய்க்கியம் - போராட்டம் என்ற கோட்பாட்டைப் பின்பற்றி வல்லரசுக்கு எதிரான சீனநாட்டின் முழு சக்தியையும் ஒன்றிணைத்தது. கொம்யூனிஸ்ட் கட்சிக்குள் இருந்த இடது - வலது திசைவிலகல்களை எதிர்த்து பாட்டாளி வர்க்க நலனுக்கு, புதிய சனநாயகப் புரட்சிக்கும் உகந்த முறையில் தேசிய விடுதலைப் போரை முன்னெடுத்தது. இதில் தேசபக்தியையும் பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தையும் சரியான முறையில் மாவோ தலைமையிலான சீனக் கொம்யூனிஸ்ட் கட்சி இணைத்து வெற்றிகாண முடிந்தது.

காலனி நாடுகளின் தேசிய விடுதலைப் போராட்டத்தில், இந்நாடுகளின் பெரும்பாலான கொம்யூனிஸ்ட் கட்சிகள் தேசிய இனப் பிரச்சனையில் மா.லெ.இன் தத்துவார்த்த அடிப்படையை ஆழமாகப் புரிந்து கொள்ளத் தவறினர். தமது நாடுகளின் குறிப்பான சூழ்நிலைமையுடன் வல்லரசு எதிர்ப்பில் தேச பக்தியையும் சர்வதேசியத்தையும் இணைப்பதிலும், தேசிய விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்ட உள்நாட்டு முதலாளித்துவ வர்க்க இயக்கத்தை பற்றிய புரிதலில் தவறு இழைத்தது. இடது - வலது திசைவிலகல்களே ஆதிக்கம் செலுத்தியது. ஜெர்மன் பாசிசத்திற்கு எதிரான உலகு தழுவிய பாசிச எதிர்ப்பு முன்னணியில் சோசலிச சோவியத் ஒன்றியமும், பிரித்தானிய, மற்றும் வல்லரசுகளும் ஏற்படுத்திய தற்காலிக ஐக்கிய முன்னணி பற்றிய பார்வையில், அதே காலகட்டத்தில் பிரித்தானிய காலனிய ஒடுக்கு முறைக்கு எதிராக நடந்த தத்தமது நாட்டுத் தேசிய விடுதலைப் போராட்டத்தில் சர்வதேசியத்தையும் தேச பக்தியையும் பொருத்தி பார்ப்பதில் இழைத்த தவறுகளும் ஒட்டுமொத்தத்தில் பின்னர் கொம்யூனிஸ்ட்டுக் கட்சிகளைக் கலைத்து விட்டு காலனி எதிர்ப்பு முதலாளித்துவ தேசிய விடுதலை இயக்கத்தில் இணைவது என்ற முடிவும் கோட்பாட்டு ரீதியிலும் நடைமுறையிலும் காலனி நாட்டுப் பெருமுதலாளி வர்க்கத்திற்கும் நிலப்பிரபுத்துவ வர்க்கத்திற்கும் அவர்களது தேசிய விடுதலை குறித்த வர்க்க சித்தாந்தத்திற்கும் வால் பிடிக்கவே செய்தது. பாட்டாளி வர்க்கத்திற்கும் நாட்டின் சுதந்திரத்திற்கும், மக்களின் விடுதலைக்கும் துரோகம் இழைத்தது. இன்றும் அதன்தாக்கம் நவகாலனி நாடுகளில் நடந்து கொண்டிருக்கும் தேசிய இனவிடுதலைப் போராட்டங்களில் யுத்தங்க

www.tamilarangam.net



ளில் தலைமை தாங்கிக் கொண்டிருக்கும் முதலாளித்துவ, சுத்த இராணுவ இயக்கங்களின் பின்னே கொம்யூனிஸ்ட்டுக்களையும், கட்சிகளையும் இழு பட வைத்துள்ளது. அல்லது அவ்வியக்கங்களுடன் ஒன்றிணைந்து போராடக் கோருகிறது. குறிப்பிட்ட தேசிய இனத்தின் முதலாளித்துவ வர்க்கத்திற்கும் சித்தாந்தத்திற்கும் ஒடுக்கப்படும் தேசிய இனத்தின் பாட்டாளி வர்க்கத்தை யும், அதன் சித்தாந்தையும், பரந்துபட்ட மக்களையும் தேசத்தின் சுதந்திரத் தையும் இப்போக்கு அடகு வைப்பதேயாகும்.

இலங்கை, இந்திய கொம்யூனிஸ்ட் கட்சிகளின் அன்றைய இந்தத் தவறு தேசிய இனப் பிரச்சனை, தேசிய விடுதலை பற்றிய பார்வையில் மிகப் பெரிய பின்னடைவை ஏற்படுத்தியது. இந்தப் பிராந்தியத்திலும், பெரும்பாலான ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளின் கொம்யூனிஸ்ட்களும் இத்த வறை இழைத்தனர். இவ்வாறு காலனி நாடுகளின் கொம்யூனிஸ்ட்கள், காலனி எதிர்ப்புத் தேசிய விடுதலைப் போராட்டத்தில் உள்நாட்டு முதலாளி வர்க்கத்தின் தேசிய விடுதலைத் தத்துவத்திற்கு பலியாகினர் என்றால் வல்லரசு நாடுகளின் கொம்யூனிஸ்ட்டுக் கட்சிகளும் குறிப்பாக பிரான்சின் கொம்யூ னிஸ்ட் கட்சி 1940-களில் பிரஞ்சுக் காலனி ஆதிக்கத்தை எதிர்த்து நடந்த அல்ஜீ ரியா மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தில் பிரான்ஸ் முதலாளித்து வத்தின் காலனி ஆதிக்க ஒடுக்கு முறையை எதிர்ப்பதில் தயக்கம் காட்டியது. பாட்டாளி வர்க்க சர்வதேசியத்திற்கு எதிராக வல்லரசுகளின் தேசபக்தக் கொள் கையை ஆதரித்தனர். இது அவர்களின் வலது சந்தர்ப்பவாதத்தை வெளிப்படுத் திய வரலாற்று நிகழ்வாகும்.

ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நவகாலனி நாடுகளில் தேசிய இனப் பிரச்சனையின் குறிப்பான வளர்ச்சி மாற்றங்களைப் புரிந்து கொள்வதி லும், குறித்த தேசிய இனங்களின் போராட்டத்தில் பிரிவினை உள்ளிட்ட, தேசிய சுய நிர்ணய உரிமைக் கோட்பாட்டை குறிப்பாக பொருத்துவதிலும், அத்தேசிய இனப் போராட்டங்களிலுள்ள குட்டி முதலாளித்துவ, முதலாளித் துவ வர்க்கங்களை இயக்கங்களை மதிப்பிடுவதிலும் இப்போராட்டங்களை அண்டை நாடுகளும், விரிவாதிக்க நாடுகளும், வல்லரசுகளும் எவ்வாறு பயன்படுத்திக் கொள்கின்றன என்ற புரிதலிலும், முக்கியமாக வல்லரசுகளின் பொருளாதார அரசியல் அரசமைப்பு கட்டுமான செயற்பாடுகளை பற்றிய துல்லியமான கணிப்பீட்டை பெறுவது அவசியமாகவுள்ளது. இதைச் சரியா கச் செய்யாத வரை தேசிய இனப் பிரச்சனையில், நாடுகளின் தேசிய விடுத லைப் போராட்டங்களில் கொம்யூனிஸ்டுக்களின் கண்ணோட்டத்தில் உள்ள குறைபாடுகளைக் களைவதும் தேசிய விடுதலைப் போராட்டத்தில் கொம்யூ னிஸ்ட்கள் தீர்மானகரமான சக்தியாக மாறுவதும் முடியாதது.

மேற்கண்ட கடமையைச் செய்ய வேண்டின் அதற்கு நிபந்தனையானது மா.லெ.மாஓ சிந்தனைத் தத்துவம் என்ற பெயரில் அதற்குள்ளேயே நுழைந்து

www.tamilarangam.net



விட்ட குருச்சேவிய திரிபுவாதத்தை, டெங்கின் நவீன திரிபுவாதவழியை கண் டறிந்து, விட்டுக் கொடுப்பற்ற சித்தாந்தப் போராட்டத்தின் மூலம் மா.லெ. மாஓ சிந்தனையின் புரட்சிகர சித்தாந்த அடிப்படையை, தேசிய இனப் பிரச்ச னையில் அதன் புரட்சிகர கண்ணோட்டத்தை முதலில் பெறவேண்டியுள்ளது. நிலை நிறுத்த வேண்டியுள்ளது. தேசிய இன விடுதலைப் போராட்டங்களுக்கு கொம்யூனிஸ்டுக்கள் தலைமை தாங்க வேண்டும் என்ற அவாவினால் மட்டும் இக்கடமையைச் செய்ய முடியாது. இன்று உலகளவில் நடக்கும் தேசிய இனப்பிரச்சனையை விசேடமாக நவகாலனி நாடுகளில் உள்ள தேசிய இனப் பிரச்சனையின் ஸ்தூலமான சமூக பொருளாதார வரலாற்று நிலைமை பற்றிய ஆய்வில் இருந்து இப்பிரச்சனை பற்றிய புரிதலையும் அதற்கான தீர்வுகளை யும் பொருத்த வேண்டும். இதன் வழியாக கொம்யூனிஸ்டுக்கள் மீண்டும் வரலாற்றில் தேசிய இனப்பிரச்சனையைத் தீர்ப்பதிலும் விடுதலைப் போராட் டங்களில் தலைமைப் பாத்திரங்களை ஆற்றவும் புதிய சனநாயகப் புரட்சியை தமது நாடுகளிலும் நிறைவேற்றவும் முடியும்.

ஆகவே முதலாளித்துவ காலகட்டத்திலும், முதலாளித்துவம் வல்லரசிய மாக மாறியுள்ள காலகட்டத்திலும் தேசிய இனப்பிரச்சனைகளை தேசிய சுய நிர்ணய உரிமைக் கோட்பாட்டை உலகளவிலும் காலனி நாடுகளிலும், அரைக் காலனி நாடுகளிலும் மா-லெ-மாஓ சிந்தனை மிகச் சரியாகப் புரிந்து விளக்கியதுடன் சோசலிசப் புரட்சியின், புதிய சனநாயகப் புரட்சியின் பகுதி யாக சனநாயகக் கடமை என்ற அடிப்படையில் தேசிய இனப்பிரச்சனையை தீர்த்ததிலும் வரலாற்று ரீதியில் முன்னேறிய தத்துவமாக முன் நிற்கின்றது. இன்று வரையிலும் 'லெனினிய சகாப்தம்' வலரலசியமும் - பாட்டாளி வர்க் கப் புரட்சியுமான சகாப்தமே நீடிக்கின்றது. ஒட்டு மொத்தமாக இரண்டாவது உலக மகா யுத்தத்தின் பின் வல்லரசியமும் தனது காலனி ஆதிக்கக் கொள்கை, ஒடுக்குமுறை குறித்த அணுகுமுறையில் பெரிய அளவு மாற்றத்தை ஏற்படுத்தி யது. காலனி நாடுகளின் தேசிய விடுதலைப் போராட்டங்களில் தலைமை தாங்கி வந்த பெரும் முதலாளி, நிலப்பிரபுத்துவ வர்க்கங்களுடன் சமரசம் செய்து தேச விடுதலைப் போராட்டத்தை திசை திருப்பியது. அதே போன்று நவகாலனி நாடுகளில் நடந்து கொண்டிருக்கும் தேசிய இன விடுதலைப் போராட்டங்களில் அத் தேசிய இன முதலாளித்துவ வர்க்கத்துடன் இயக்கங்க ளுடனும் வல்லரசியம் தனது பொருளாதார, அரசியல், அதிகார கட்டுமானத் திற்கு உள்ளடங்கிய முறையில் உடன்பாட்டை ஏற்படுத்திக் கொள்கிறது. ஒரு அதிகார மாற்றத்தை ஏற்படுத்தியது. இதுவே 'சுதந்திரம்' என அழைக்கப்படுகி றது. காலனிய சுரண்டல் ஒடுக்குமுறைக்கு ஆட்சிக்கு மாற்றாக நவகாலனிய கொள்கையை சுரண்டலை தேசிய ஒடுக்குமுறை ஆட்சியை நடைமுறைப்ப டுத்துகிறது. இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பிந்திய வல்லரசிய, பொருளா தார, அரசியல் மாற்றங்கள் லெனினினால் முன் வைக்கப்பட்ட வல்லரசியம் குறித்த அடிப்படைக் கோட்பாட்டு விளக்கத்தில் இன்றுவரை புதிய மாற்றங்

www.tamilarangam.net



கள் ஏற்படவில்லை. எனவே இன்றளவும் தேசிய இனப்பிரச்சனை பற்றிய அடிப்படை புரிதலைப் பெறவும் அதற்குத் தீர்வான பிரிந்து போகும் உரிமை உள்ளிட்ட சுய நிர்ணய உரிமைக் கோட்பாட்டை முன்னிறுத்தவும் மா-லெ-மாஓ சிந்தனைத் தத்துவ வழிகாட்டுதலை நாம் உயர்த்திப் பிடிக்க வேண்டியுள்ளது.

## தேசிய இனப்பிரச்சனையில் திரிபுவாதத்தின் தாக்கம்

சோவியத்தில் சோசலிசம் தவழ்ந்து கொண்டிருந்த காலத்தில் உலகில் முதலாளித்துவ வல்லரசிய சமூக பொருளாதார அமைப்பும், அரசியலும், பண்பாடும் அதிகாரக் கட்டமைப்பும் ஒருபுறமும், மறுபக்கமாக சோசலிச சமூக பொருளாதார அமைப்பும் அரசியலும் பண்பாடும் அதிகார கட்டமைப்பும் உருவாகி வளர்ந்து கொண்டிருந்தது. உலகில் சுரண்டப்படுகின்ற மக்களின் சமூகப் புரட்சி ஆயுதமாக, ஒடுக்கப்படுகின்ற காலனி நாடுகளின், தேசிய இனங்களின் விடுதலைத் தத்துவமாக மா.லெ. தத்துவம் உலகில் மிளர்ந்து கொண்டிருந்தது. வல்லரசு நாடுகளிலும் காலனி நாடுகளிலும் உள்ள கொம்யூனிஸ்ட் கட்சிகளுடன் சோவியத் கட்சி நெருங்கிய உறவுகளைப் பேணி வந்தது. 3-வது அகிலம் இக்கட்சிகளை ஒருங்கிணைத்தது. இந் நிலைமையிலும் காலனி எதிர்ப்பு தேசிய விடுதலைப் போராட்டங்களுக்கு தலைமை தாங்குவதில் அப்போராட்டங்களுக்கு ஆதரவு கொடுப்பது பற்றிய கொள்கையில் நடைமுறையில் காலனி நாட்டுக் கட்சிகளுக்கும் முதலாளித்துவ நாட்டில் உள்ள கட்சிகளுக்கும் இடையில் தவறான கண்ணோட்டங்கள் வெளிப்பட்டிருந்தது. இவற்றை எதிர்த்து மா.லெ. வழிகாட்டுதலுக்கு ஆதரவாக உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் சித்தாந்த அரசியல் போராட்டங்கள் நடந்து வந்தது. பெரும்பாலான காலனி நாடுகளில் கொம்யூனிஸ்ட் கட்சிகள் காலனி எதிர்ப்புத் தேசிய விடுதலைப் போராட்டத்தில் தலைமைப் பாத்திரத்தை எடுப்பதில் புதிய சனநாயகப் புரட்சியை நிறைவேற்றுவதில் தோல்வியைத் தழுவினர். இரண்டாவது உலக யுத்தத்தின் பின் இக்காலனி அரைக் காலனி நாடுகள் நவகாலனியாக மாற்றம் அடைந்தன. நவகாலனி நாட்டுக் கட்சிகள் தாம் காலனி எதிர்ப்புப் போராட்டத்தில் இழைத்த தவறுகளுக்கும் தோல்விக்கும் காரணமான தேசிய இனப்பிரச்சனையில் மா.லெ.க்கு விரோதமாக தாம் கொண்டிருந்த சித்தாந்த அரசியல் அடிப்படையை கண்டுபிடித்து சுய விமர்சனப்படுத்தி திருத்திக் கொள்வதற்கு எவ்வளவு தூரம் அக்கறை காட்டினார்கள் என்பது கேள்விக்குறியே. அடுத்து சர்வதேசக் கொம்யூனிச இயக்கத்தில் 1956-களில் குருச்சேவிய திரிபுவாதமும் அதை எதிர்த்த மாபெரும் விவாதத்தில் நவகாலனி நாட்டு கொம்யூனிஸ்ட்டுக் கட்சிகள், மூழ்க வேண்டி இருந்தது. பிளவுபட நேர்ந்தது.

www.tamilarangam.net



குருச்சேவிய திரிபுவாதம் பல்வேறு வர்க்க சமரசக் கொள்கைகளை முன் வைத்ததுடன் வல்லரசியம் பலவீனப்பட்டுள்ளது சோசலிசம் பலம் பெற்றுள்ளது இனி பலாத்காரப் புரட்சி வழி இன்றி பாராளுமன்ற வழிமுறையில் மட்டும் சோசலிசப் புரட்சியை, தேசிய இனங்களின் விடுதலைப் புரட்சியை நிறைவேற்ற முடியும் என்ற மா.லெ. விரோத வழியை முன்வைத்தது. இதற்கு இரையான நவகாலனி நாட்டுக் கட்சிகள் பாராளுமன்றக் கதிரைகளைக் கைப்பற்றுவதற்காக முழு சக்தியையும் செலவு செய்தனர். ஆளும் வர்க்க முதலாளித்துவ கட்சிகளில் முற்போக்கு, பிற்போக்கு தேடி கூட்டணி அமைத்தனர். தேசிய இனங்களுக்கு சுய நிர்ணய உரிமை உண்டு என மேடைகளில் பேசிக் கொண்டு உள்நாட்டில் தேசிய இனங்கள் மீதான ஒடுக்கு முறையை நடாத்திய இனவெறி, மதவெறி ஆளும் வர்க்க கட்சிகளுடன் சமரசம் செய்து தேசிய இன ஒடுக்குமுறைக்கு மறைமுகமாக ஆதரவு கொடுத்தனர். சர்வதேச அளவில் தங்கள் நாட்டு அரசும் ஆளும் வர்க்க கட்சிகள் அமெரிக்க வல்லரசு எதிர்ப்பையா? சோவியத், சீன ஆதரவையா? வெளிப்படுத்துகின்றது என்பதில் இருந்து, அவ் அரசுகள், கட்சிகள் உள்நாட்டில் தேசிய இனங்கள் மீதான ஒடுக்குமுறையில் என்ன பங்கை வகிக்கின்றது. மக்களைச் சுரண்டுவதில் அடக்குவதில் என்ன செய்கின்றது என பார்க்கத் தவறினர். சர்வதேசியம் என்ற பெயரில் பாட்டாளிவர்க்க சர்வதேசியத்திற்கும் - தேசியத்திற்கும் எதிராக செயல்பட்டனர். தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை என்ற கோட்பாட்டை இரண்டாவது அகிலத்தின் சந்தர்ப்பவாதிகள் போல் பயன்படுத்தினர். சுயநிர்ணய உரிமைக்கான போராட்டங்களை முன் எடுக்காததுடன் ஒடுக்கப்படும் தேசிய இனத்தின் போராட்டத்தில் அண்டை நாடுகளும் வல்லரசுகளும் தலையிடுவதைக் காரணம் காட்டி அவற்றை நிராகரித்தனர். அல்லது சுயநிர்ணய உரிமை உண்டு. ஆனால் பிரிந்து செல்வதற்கான உரிமை இல்லை என்ற நிலையுடன் ''தாய் நாட்டின் ஒற்றுமையைக் காப்போம்'' என்ற கோஷத்துடன் காவுட்ஸ்கிய வாதிகளின் வழியை முன்வைத்தனர். உள்நாட்டு இனவாத, மையப்படுத்தப்பட்ட தரகு முதலாளித்துவ, நிலப்பிரபுத்துவ அரசுகளின், வல்லரசுகளின் தேசிய ஒடுக்குமுறைக்கும் சுரண்டலுக்கும் ஆதரவாக செயற்பட்டனர். தேசிய இன விடுதலைக்கான போராட்டங்களை காட்டிக் கொடுத்தனர். தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமைப் பிரச்சனையில் இந்தக் குருச்சேவிய திரிபுவாதிகளும், ரொஸ்ட்கிய கட்சிகளும் கூட ஒன்றுபட்டுச் செயல்பட்டனர். வல்லரசு நாடுகளின் தொழிலாளி வர்க்க இயக்கத்துள் காணப்பட்ட சமூக தேசிய வெறிக் கொள்கை இந்தக் குருச்சேவிய திரிபுவாத கட்சிகளிடம் அப்பட்டமாக வெளிப்பட்டது.

குருச்சேவிய திரிபுவாதத்திற்கு எதிராக தத்துவார்த்தப் போராட்டத்தில் மா.லெ. தத்துவ, சித்தாந்த அரசியல் அடிப்படைகளை மாஓ தலைமையிலான சீனக் கட்சி முன்னிறுத்தியது. இம்'மாபெரும் விவாதத்தை' ஆசிய, ஆப்பி

www.tamilarangam.net



ரிக்க, லத்தீன் அமெரிக்க நாட்டு மா.லெனினிய சக்திகள் உள்வாங்கிக் கொண்டனர். நவகாலனி நாடுகளின் புதிய சனநாயகப் புரட்சிப் போராட்டத்தில் மீண்டும் தேசிய சுயநிர்ணய உரிமையை முன் வைத்தனர். தங்கள் நாட்டுத் தேசிய இனப் பிரச்சனைக்கான சமூக பொருளாதார அரசுக் கட்டுமான அடிப்படைகளை ஆராயத் தொடங்கினர். ஒடுக்கப்படும் தேசிய இனங்களின் போராட்டங்களை ஆதரித்தனர். கொம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில் பிரிந்து போவது உள்ளிட்ட தேசிய சுய நிர்ணய உரிமைப் போராட்டத்தை முன்னெடுக்க முன்வந்தனர். உள்நாட்டு ஆளும் வர்க்கத்திற்கும் இனவெறி அரசுகளுக்கும் வல்லரசுகளுக்கும் எதிரான போராட்டங்களாக அவற்றைப் பார்த்தனர். இவ்வாறு தேசிய இனப்பிரச்சனையில் குருச்சேவிய திரிபுவாத வழியை முறியடித்து மா.லெனினிய வழியை முன்வைத்தனர்.

நவசீனத்தில் மாஓவின் மறைவுக்குப் பின் சர்வதேச இயக்கத்துள் டெங்கினால் முன்வைக்கப்பட்ட திரிபுவாத மார்க்கம் நம்மிடம் இவ்வாறு வெளிப்பட்டது. வல்லரசியம் பலயீனப்பட்டிருக்கின்றது, மீண்டும் உலகளவில் உடனடியாக பலாத்கார புரட்சிகர சூழ்நிலைமைகள் பக்குவப்பட்டுள்ளது; சோசலிச சக்திகள் தாக்குதல் நிலையிலுள்ளது புரட்சி வழி மூலம் கொம்யூனிஸ்ட்டுக் கட்சிகள் உடனடியாகப் படைகளை உருவாக்கினால் புதிய சனநாயகப் புரட்சியும், சோசலிசப் புரட்சியும், தேசிய விடுதலைப் போராட்டங்களும் வெற்றிபெற முடியும் என்றது. கூடவே மாஓ-வின் பெயரில் 'மாஓ சகாப்தம்' ''மூன்று உலகத் தத்துவத்தை'' முன் தள்ளினர். டெங்கின் இப்புதிய திரிபுவாத வழி மா.லெ. கட்சிகள் மத்தியில் இன்றுவரை தாக்கம் செலுத்துகிறது.

டெங் திரிபுவாத வழியினை பின்பற்றுபவர்களின் கண்ணோட்டமானது, தேசிய இனப்பிரச்சனையில் தேசிய இனங்களின் சுய்நிர்ணய உரிமைப் போராட்டங்களை ஆதரிப்பது, முன்னெடுப்பதுடன் சுய நிர்ணய உரிமை என்பதே பிரிவினைதான் எனவும் முன் வைக்கின்றது. குருச்சேவிய திரிபுவாதிகள் 'சுயநிர்ணய உரிமை என்பதை ஏற்று பிரிந்து செல்லும் உரிமையை நிராகரித்தார்கள்.' டெங் திரிபுவாதிகள் 'சுயநிர்ணய உரிமை என்பதை பிரிவினையாக மட்டுமே' பிரகடனப்படுத்த முற்படுகின்றனர். அப் போராட்டங்கள் எந்த வர்க்கத்தின் நலனில் இருந்து ஊக்குவிக்கப்படுகிறது. எந்த வர்க்கத்தின் தலைமையில் வழிநடத்தப்படுகிறது. அத்தேசிய இனப் போராட்டங்கள் புதிய சனநாயகப் புரட்சிக்கும், பாட்டாளி வர்க்க நலனுக்கும் எவ்வகையில் உதவுகின்றது? முதலாளி வர்க்கத்தின் தலைமையில் நடக்கும் தேசிய இன விடுதலைப் போராட்டங்கள், யுத்தங்கள் தனிநாடாகப் பிரிந்தாலும் அது தேசத்திற்கும் மக்களுக்கும் என்ன பலனைக் கொடுக்கும்? போன்ற கேள்விகளை கண்டறிவதை விட அத்தேசிய 'இனப் போராட்டங்கள் ஆயுதப் போராட்டமாக இருக்கின்றதா? இல்லையா?' இதற்கான பதிலில் இருந்து அப்போராட்டம் பற்றிய முடிவுக்கு வருகின்றது. இத்திரிபுவாத உள்ளடக்கம் தேசிய இனப்

www.tamilarangam.net



போராட்டங்களில் மட்டுமல்ல, வர்க்கப் போராட்டங்களிலும் நேர்மையான கொம்யூனிஸ்ட்டுக்களை, கட்சிகளை பரிசோதிப்பதற்கும் இதைத்தான் முன்னிறுத்துகிறது. இதற்கு அப்பாலும் ஒரு பெரிய தவறைச் செய்கின்றது. அதாவது ஒரு ஒடுக்கப்படும் தேசிய இனத்தின் விடுதலைக்கான போராட்டத்தில், உள்நாட்டு இனவாத அரசை எதிர்த்துப் போராடும் ஒடுக்கப்படும் தேசிய இன முதலாளி வர்க்க இயக்கம், தனது எதிரிகள் யார்? நண்பர்கள் யார்? என்பது பற்றி கொள்கையிலும், பிரச்சாரத்திலும், போராட்டத்திலும் வல்லரசு எதிர்ப்பை வெளிப்படுத்தாத நிலையிலும், அண்டை நாடுகளிலும் உலகளவிலும் நடக்கும் தேசிய இன விடுதலைப் போராட்டங்களை நேரடியாக ஆதரிக்காது இருக்கின்ற போதும், அத்தகைய ஒரு முதலாளித்துவ தேசிய இன விடுதலை இயக்கத்தின் போராட்டமும், போரும் புற நிலையில் ஒரு வல்லரசு எதிர்ப்புப் போராட்டமாக இருக்கின்றது என கூறுமளவிற்கு மா.லெ. நிலைப்பாட்டிற்கு விரோதமாக வெளிப்படையாக இந்த திரிபுவாத வழி முன் வருகின்றது. இதுபற்றிய லெனினியத்தின் பார்வை தெளிவாக இருக்கின்றது.

ஒடுக்கப்பட்ட தேசங்களின் தேச விடுதலை இயக்கங்கள் எப்படிப்பட்ட தன்மை வாய்ந்தவை என்பதை, சடங்குமுறை சனநாயகத்தின் கண்கொண்ட சீர்தூக்கி ஆராயக்கூடாது. அதற்குப் பதிலாக ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தின் பொதுவான லாப நஷ்டக் கணக்குப் பட்டியல் காட்டுகிறபடி அவை என்ன விளைவுகளை நடைமுறையில் உண்டு பண்ணியிருக்கின்றன என்பதைக் கொண்டுதான் சீர்தூக்கி, ஆராயவேண்டும். அதாவது ''தனிமை நிலையில் நிறுத்திப் பார்க்காமல், உலக ரீதியில்'' சீர்தூக்கி ஆராய வேண்டும்.

(— லெனின் - தே. நூல். 19,257)

தேசிய இனப் பிரச்சனை, தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை குறித்த புரிதலிலும் அவற்றை முன்னெடுப்பதிலும் மற்றைய நாட்டு தேசிய விடுதலைப் போராட்டங்களை ஆதரிப்பதிலும் திரிபுவாதக் கொம்யூனிஸ்ட் கட்சிகளிடம், ரொட்ஸ்ட்சியக் கட்சிகளிடமும், குருச்சேவிய திரிபுவாத வழியின் வெளிப்பாட்டையும், மா.லெ கட்சிகள் மத்தியில் டெங்திரிபுவாத வழியின் தாக்கமும் காணப்படுகின்றது. மா.லெ. கட்சிகள் தங்கள் மத்தியில் உள்ள மா.லெனினியத்துக்கு விரோதமான அந்நிய வர்க்க கண்ணோட்டங்களை வெல்ல கடுமையான சித்தாந்தப் போராட்டங்களை நடத்துகிறார்கள். அதன் பகுதியாக தேசிய இனப் பிரச்சனையில் நம் மத்தியில் ஆதிக்கம் செலுத்திவரும் குட்டி முதலாளிய, முதலாளி வர்க்க சித்தாந்த அரசியல் கண்ணோட்டங்களை முறியடிக்க வேண்டியுள்ளது. நவகாலனி நாடுகளின் தேசிய இனப் பிரச்சனையை பொதுவாக ஆராயவும், தமது நாடுகளின் தேசிய இனப் பிரச்சனையில் குறிப்பான ஆய்வைச் செய்யவும் அதற்கு மா.லெ. மாஓ சிந்தனைத்

www.tamilarangam.net



தத்துவத்தை பிரயோகிக்கவும் மா.லெ. கட்சிகள் முயலவேண்டும். இதன் மூலம் நவகாலனி நாடுகளின் தேசிய இனப் பிரச்சனைக்கு சரியான தீர்வை முன் வைத்து புதிய சனநாயகப் புரட்சியின் ஒரு பகுதியாக அப்போராட்டங்க ளுக்கு தலைமை தாங்குவதிலும் போராட்ட வழியின் தீர்மானகரமான சக்தி யாக புரட்சிகர கொம்யூனிஸ்ட்டுகள் மாறவும் வேண்டியுள்ளது.

## தேசிய இனப் பிரச்சனையில் காணப்படும் தவறான போக்குகள்

கொம்யூனிஸ்ட்டுக்கள் தேசிய இனப் பிரச்சனையில் தலையிடுவதும், அப்போராட்டங்களில் ஈடுபடுவதும் அத்தேசிய இனங்களின் முதலாளித்து வத்திற்கு இனவாத சக்திகளுக்கு உதவியளிப்பது ஆகும் என்ற பூச்சாண்டியும், தேசியம் ஒரு கற்பிதம் என்றும், தேசிய விடுதலைப் போராட்டமா? வர்க்கப் போராட்டமா? முதன்மையானது; வர்க்கப் போராட்டம் நடாத்தப்பட்டால் தேசிய இனப் பிரச்சனைகள் தானாக தீர்ந்துவிடும் எனவும், இன்றைய தேசி யப் போராட்டங்கள் பாசிசத்தை நோக்கியே செல்லுகின்றன எனவே முற் போக்கு ஜனநாயக சக்திகள் அதை ஆதரிக்க கூடாது, எனக்கூறும் நவீன இடது களும், இந்த வல்லரசிய காலகட்டத்தில் தனி ஒரு நாட்டில் சோசலிசப் புரட் சியோ, சனநாயகப் புரட்சியோ சாத்தியமில்லை. ஒட்டு மொத்த உலகப் புரட் சியே இவற்றுக்கெல்லாம் தீர்வைக் கொடுக்கவல்லது என்று ரொட்ஸ்கியவாத மும் ரொட்ஸ்கியவாதிகள் தேசிய இனங்களின் சுய நிர்ணய உரிமையை பேச்ச ளவில் ஆதரித்துக் கொண்டே ஒடுக்குமுறையாளர்களுடனும், இனவெறி அர சுகளுடன், வல்லரசுகளுடன் கூடிக்குலாவுகின்றனர். இதற்கு நல்ல உதாரணம் இலங்கையின் L.S.S.P., N.S.S.P. போன்ற ரொட்ஸ்கியக் கட்சிகளாகும். இப் போது ரசியா, சீனா, கிழக்கு அய்ரோப்பிய முன்னாள் சோசலிச நாடுகளில் முதலாளித்துவ மீட்சிக்குப் பின் அந்நாடுகளில் நடக்கும் தேசிய இனப் போராட்டங்கள் - யுத்தங்களிலும் மற்றும் நவகாலனிய நாடுகளில் நடந்து கொண்டிருக்கும் தேசிய இன விடுதலைப் போராட்டங்களில் முதலாளி வர்க் கத்தின் தலைமையை அதன் பாசிசப் போக்குகளை காட்டி மீண்டும் ஒட்டு மொத்த உலகப் புரட்சிதான் தீர்வு என வாதிடுகின்றனர் ரொஸ்ட்கியவாதிகள்.

இன்றைய சூழ்நிலையில் ஒவ்வொரு தேசிய இனங்களும் தனித்தனியாக தனிநாடாக விடுதலை அடைவதும், கொம்யூனிஸ்டுக்கள் ஒவ்வொரு தேசிய இனங்களுக்கும் தனியாக கட்சிகளைக் கட்டவேண்டும். நவகாலனியத்தின் குறிப்பான வர்க்க போராட்ட வடிவமே அந்நாடுகளின் தேசிய இனப் போராட் டங்கள்தான். தேசிய போராட்டத்தை முதலில் முன்னெடுக்க வேண்டும், இதனால் வர்க்க முரண்பாடுகள் தீர்ந்து விடும் என்கின்ற பார்வையும் உள்ளது போராடும் தேசிய இனங்களின் கலாச்சாரங்களைப் பேணுவது என்ற பெயரில்

www.tamilarangam.net



திருவள்ளுவருக்கு சிவப்புத் துண்டு போர்த்தும் பண்பாடுவரை இப்போக்கு வளர்ந்து செல்கிறது. அடுத்து ஒடுக்கப்படும் தேசிய இனங்களின் குட்டி முதலாளித்துவ மற்றும் குறுந்தேசிய இனவாத சக்திகள் மார்க்சியம் - லெனினியம் காலம் கடந்து விட்டது. மா.லெ. ஐரோப்பாவிற்கும், மேற்கு நாடுகளுக்கும் விடுதலை அளிக்கும் தத்துவம் இது கீழை நாடுகளுக்குப் பொருந்தாது அல்லது பகுதி அளவு பொருந்தும், அல்லது தமது தேசிய இனத்தைப் பற்றி மார்க்சியம் எதுவும் கூறவில்லை என்பதுடன், சுதேசியத் தலைவர்களை, முன்னிறுத்த வேண்டும் எனக் கூறி மார்க்சிய லெனினிய பெரியாரிசம், மார்க்சிய லெனினிய அம்பேத்கரிசம் என ''மொட்டந் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடும்'' தேசியக் கண்ணோட்டங்களும் வெளிவந்து கொண்டிருக்கின்றது. இன்னொரு வகையானது குறுந்தேசிய இனவாத சக்திகள் மார்க்சியம் செத்துவிட்டதாவும் ரசியாவிலும், கிழக்கு அய்ரோப்பாவிலும் இன்று நடந்து கொண்டிருக்கும் தேசிய இனப் போராட்டங்கள் மா.லெ.தின் இயலாமையை காட்டுவதாகப் புலம்புகிறார்கள். தேசிய இன ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராடும் உலகிலுள்ள எல்லாத் தேசிய இனங்களின் போராட்டங்களையும் ஜனநாயக உணர்வுடன் ஆதரிக்காது, ஒரே மொழியை பேசுவோர் ஒரே மதத்தைப் பின்பற்றுவோர் என்ற காரணத்தால் மட்டும் அம்மொழியைப் பேசும், மதத்தைப் பின்பற்றும் தேசிய இனங்கள் அண்டை நாடுகளில் நடத்தும் தேசிய இன விடுதலைப் போராட்டங்களை மட்டுமே ஆதரிப்பதும், அப்போராட்டத் தலைவர்களை, இயக்க கொள்கை நடைமுறைகளை உலகளவில் அம் மொழி பேசும், அம்மதத்தைப் பின்பற்றும் தேசிய இனங்கள் அனைத்தும் வரித்துக் கொள்ள வேண்டும் என முன் வைக்கின்றனர் போக்கும் வெளிப்படுகிறது.

தேசிய இனப் பிரச்சனையைப் புரிந்து கொள்ளவும் அதற்கான தீர்வைத் தேடும் மேற்கண்ட தவறான கண்ணோட்டங்கள், ஒடுக்கப்படும் தேசிய இனங்கள் மத்தியில், போராட்ட களங்களில் ஆளுமை செலுத்த தொடங்கியுள்ளது. இத்தகைய தவறான இன, மொழி, மத பெருமித கண்ணோட்டம் தனது தேசிய இனத்திலுள்ள தேசிய எல்லைக்குள் உள்ள மதச் சிறுபான்மை, மொழிச் சிறுபான்மையினரை, அவர்களது பிரச்சனைகளை சனநாயக ரீதியில் அணுக மறுத்து அட்டகாசம் செய்கிறது நண்பர்களை திட்டமிட்டு எதிரியின் காலடிக்கு தள்ளுகிறது. ஒடுக்கப்பட்ட தேசிய இனத்தின் தொழிலாள வர்க்கத்தினை, பரந்துபட்ட மக்களை அவர்களது வர்க்க நலன் சார்ந்த, அவர்களின் சமூக, பொருளாதார பண்பாட்டு விடுதலையை, தேசத்தின் சுதந்திரத்தை உறுதிப்படுத்தும் மா.லெ. மாஓ சிந்தனை வழியில் இருந்து திசைதிருப்பி விடுகிறது.

இன்று ஒடுக்கப்படும் தேசிய இனங்களின் விடுதலைப் போராட்டத்தில், தேசிய இனப்பிரச்சனை குறித்த மா.லெ. மாஓ சிந்தனைத் தத்துவம் வழி காட்டினால் கொம்யூனிஸ்ட்டுக் கட்சி தலைமைப் பாத்திரம் ஏற்றால் மட்டும்

www.tamilarangam.net



தான் வல்லரசியத்தின் உலகு தழுவிய மற்றும் குறிப்பான நாட்டின் தேசிய ஒடுக்கு முறைக்கும் சுரண்டலுக்கும் முற்றுப் புள்ளி வைக்க முடியும். உள் நாட்டு, பிற்போக்கு இனவெறி அரசை ஆளும் வர்க்கத்தை தோற்கடிக்க முடியும் என்பதை வல்லரசியமும், முதலாளித்துவ வல்லரசிய சித்தாந்தமும் மற்றைய எல்லோரையும் விடத் தெளிவாகப் புரிந்து கொண்டிருக்கின்றது. இதனால் தான் தேசிய இனப் பிரச்சனை அதற்கான தீர்வு குறித்த மா.லெ. மாஓ சிந்தனைத் தத்துவக் கண்ணோட்டத்தை முறியடிக்க கொம்யூனிஸ்டு இயக்கத்துள்ளும் வெளியிலும் திரிபுவாத இனவாத, மதவாத சாதியவாத, பிரதேசவாத கண்ணோட்டங்களை திட்டமிட்டு புதிது புதிதாக தேசிய இனப்பிரச்சனை கூர்மையடைந்து வரும் நாடுகளில் அரங்கேற்றி வருகிறது, ரசிய, சீனா, கிழக்கு அய்ரோப்பிய முதலாளித்துவ மீட்சிக்குப் பின் வல்லரசியம் தனது சித்தாந்த அரசியல் தாக்குதலை பாட்டாளி வர்க்க புரட்சி தத்துவத்தின் மேல் கூர்மைப்படுத்தியுள்ளது. வல்லரசியம் தனது பொருளாதாரச் சுரண்டலை, சித்தாந்த அரசியலை வல்லரசிய சமூக கட்டமைப்பை காப்பாற்றுவதன் பகுதிக் கடமையாகவே தேசிய இனப் பிரச்சனையில் மா.லெ. மாஓ சிந்தனையின் சித்தாந்த வழிகாட்டுதலை எதிர்த்து தாக்குதல் நடாத்துகிறது. முன்னாள் சோவியத் நாடுகளில் நடந்த முதலாளித்துவ மீட்சியின் விளைவாக இன்று அங்கு நடக்கும் தேசிய இனப் போராட்டங்களைக் கூட சோசலிசத்தின் தோல்வியாக, மா.லெனியத்தின் இயலாமையாகக் காட்டுகிறது. "எதிரிக்கு எதிரி நண்பன்" என்ற முறையைப் பயன்படுத்தி வல்லரசிய சித்தாந்தத்துடன் சமரசம் காணாத சித்தாந்தமான மா.லெ. மாஓ சிந்தனையை கொம்யூனிஸ்ட்டுக்களைத் தாக்கி அழிக்க, தேசிய இனப் போராட்டங்களில் நம்மை அந்நியப்படுத்த வல்லரசியமானது தன்னால் ஒடுக்கப்படும் தேசிய இனத்தின் குட்டி முதலாளிய, முதலாளிய வர்க்கங்களைகூட அவற்றின் சித்தாந்தங்களைக் கொண்டு முதற்கட்டமாகப் தேசிய இன தொழிலாளிவர்க்கத்துக்கு எதிராக பயன்படுத்தி கொள்ள தயாராகிவிட்டது.

தேசிய இனப் பிரச்சனைகளை, தேசிய விடுதலைப் போராட்டங்களை வல்லசியங்களும், பிராந்திய விரிவாதிக்க அரசுகளும், எல்லைப் பயங்கரவாத ஊக்குவிப்பு அண்டை நாட்டு அரசுகளும் பயன்படுத்துவது அன்றாட நிகழ்ச்சிநிரலாகி விட்டது. அனைவரும் தேசிய விடுதலைப் போராட்டத்தின் எதிரிகளே, உலகம் முழுவதும் வல்லரசியங்களால், பிராந்திய, உள்நாட்டு முதலாளி வர்க்கங்களால் அவர்களின் சுரண்டும் சமூக பொருளாதார, அரசியல் அதிகார பண்பாட்டு ஒடுக்கு முறையின் விளைவாக உருவாகும் தேசிய இனப் போராட்டங்களில் 'இவ் எதிரிகளே' ஏன் தலைவிடுகிறார்கள்? வல்லரசுகளின் நோக்கம் சர்வதேசிய மயமான தனது சுரண்டலுக்கும் நவகாலனியத் தேசிய ஒடுக்குமுறைக்கும் எதிராக நாடு தழுவிய மக்களின் தேசிய இனங்களின் போராட்டங்களை அந்நாட்டில் வாழும் மற்றைய தேசிய இனங்களுக்கு எதி

www.tamilarangam.net



ராக திசை திருப்புவது. அந்நாட்டு மக்களின், தேசிய இனங்களின், தொழிலாளி வர்க்க ஒற்றுமையை, ஒடுக்கப்படும் தேசிய இனங்களின் ஒற்றுமையைப் பிளவுபடுத்துவது, தொழிலாளி வர்க்கத்தை இனப்பிரச்சனையில் முதலாளித்துவப் பாதைக்கு இழுத்துவிடுவது. வல்லரசுகளுக்கு இடையிலான முரண்பாட்டில் உலக சந்தைகளைப் பங்கிடுவதில் ஒன்றுக்கெதிராக மற்றைய வல்லரசு போராடும் தேசிய இனத்தின் முதலாளித்துவ சக்திகளைப் பாவித்து - தனக்கான சந்தைகளை ஏற்படுத்திக் கொள்வது. வல்லரசியங்கள் ஆயுத விற்பனைக்கான சந்தையை தேடும் - தொடரும் நோக்கில் தேசிய விடுதலை யுத்தங்களை ஊக்குவித்துப் பயன்படுத்துவது. மொத்தத்தில் எந்த தேசிய இன, விடுதலைப் போராட்டங்களும் வல்லரசிய எதிர்ப்புப் போராட்டமாக உருவாக விடாமல், வளரவிடாது தடுப்பது வல்லரசியச் சுரண்டல், தேசிய ஒடுக்குமுறைச் சமூகக் கட்டமைப்பை தக்கவைக்கும் விதத்தில் தேசிய இனப் பிரச்சனையை வல்லரசியம் கையாள்கின்றது.

பிராந்திய விரிவாதிக்க அரசுகளின் நோக்கம் வல்லரசியங்களுடன் பொதுவாக கூட்டிணைந்து இருப்பதுடன், இவ்விரிவாதிக்க நாடுகளின் பெரும் தொழிற்துறை - நிதித்துறை - வணிக முதலாளி வர்க்கம் தனது நாட்டையும் தாண்டி தனது பிராந்திய நாடுகளில் சுரண்டிக் கொண்டிருக்கின்றது. வல்லரசியங்களால் இப்பிராந்திய விரிவாதிக்க நாடுகளின் மக்களும், தேசிய இனங்களும் சுரண்டப்படுகிறார்கள். ஒடுக்கப்படுகிறார்கள். அதேவேளை இவ்விரிவாதிக்க நாடுகள் சிறிய அண்டை நாடுகளை பொருளாதார, அரசியல் ஆதிக்கத்துள் கொண்டுவர முயல்கின்றன. அண்டை நாட்டு அரசுகளுடன் சேர்ந்து அந்நாட்டு மக்களை தேசிய இனங்களை சுரண்டி ஒடுக்குகின்றன. அதே வேளை அந்நாடுகளை தமது 'பெரியண்ணன்' ஆதிக்கத்துள் கொண்டு வர நடாத்தும் அதிகாரப் போட்டியில், சந்தைப் போட்டியில் மற்றும் தமக்கு சார்பான ஆளும் கும்பலை உருவாக்கும் வேலையில் வெற்றி பெறும் நோக்கிலும், பனிப்போர்க் காலத்தில் ரஷிய - அமெரிக்க வல்லரசுகளுக்கிடையில் நடந்த உலகைப் பங்கிடும் போட்டியிலும், இன்று அமெரிக்கா தலைமையிலான வல்லரசுகளுக்கு இடையிலான முரண்பாட்டை தமக்கு சாதகமாக பயன்படுத்தவும், இப்பிராந்திய நாட்டாண்மை சக்தியை மேலும் வளர்த்து கொள்ளவும், அண்டை நாட்டுத் தேசிய இனங்களின் பிரச்சனைகளைப் பயன்படுத்திக் கொள்கின்றன இவ்விரிவாதிக்க நாடுகள். கூடவே சர்வதேச ஆயுத உற்பத்தி விற்பனையில் இந்நாடுகள் கூட ஈடுபடுவதால் ஆயுதச் சந்தைக்காகவும், தேசிய இன விடுதலை யுத்தங்களைப் பாவிக்கின்றன. அண்டை நாடுகளில் போராடும் தேசிய இனங்களின் 'இனம், மொழி, மதம்' இவற்றைப் பொறுத்து தமது நாட்டில் உள்ள அதே இனம், மொழி, மதம் சார்ந்த ஆளும் வர்க்கங்களை, மாநிலங்களின் அரசுகளைப் பயன்படுத்தியும், உளவு நிறுவனங்களைக் கொண்டும் தேசிய இனப் பிரச்சனையில் ஊடுருவுகின்றன. தேசிய இன

www.tamilarangam.net



விடுதலைப் போராட்டங்கள் பிராந்திய விரிவாதிக்க எதிர்ப்பு போராட்டமாக உருவாக - வளரவிடாமல் தடுக்கின்றன.

எல்லைப் பயங்கரவாத ஊக்குவிப்பு நாடுகளின் நோக்கம், வல்லரசிய, பிராந்திய விரிவாதிக்க நாடுகளின் நோக்கங்களுக்கு உட்பட்டு இருந்தாலும், இது பெரும்பாலும் இரண்டு அண்டை நாடுகளின் ஆளும் வர்க்கங்களுக்கு அரசுகளுக்கு இடையிலான நீண்டகால மோதலை மையமாகக் கொண்டிருக்கின்றது. காலனிய காலத்தில் இருந்து வல்லரசுகளால் நவகாலனிகளாக மாற்றப்பட்ட போதும் நாடுகளாகப் பிரிக்கையில் இனம், மொழி சார்ந்த முரண்பாடுகளை வல்லரசியங்கள் கவனத்தில் கொண்டன. இதன் மூலம் வல்லரசுகளின் பிரித்தாளும் சூழ்ச்சிக்கு அமைய ஒரு நாட்டைக் கட்டுப்படுத்த, பயமுறுத்த அண்டைநாட்டை கருவியாகப் பயன்படுத்துவது. இதை மாறி மாறிச் செய்கிறது வல்லரசியம். இதன் மூலம் இவ்நாடுகளை தனது காலடியில் தேசிய ஒடுக்குமுறைக்குள் வைத்திருக்கின்றது. இவ்நாடுகள் தமது எல்லையோர நாடுகளின் தேசிய இனப் பிரச்சினையில் சுயமாகவும், வல்லரசுகளின் ஊக்கிகளாகவும் தலையிடுகின்றது.

தங்கள் நாட்டு மக்கள், தேசிய இனங்கள் மீதான வர்க்க, தேசிய இன ஒடுக்குமுறைகளை, சுரண்டலை மறைக்கவும் அவற்றுக்கு எதிரான உள்நாட்டுப் போராட்டங்களை திசை திருப்பவும் முழுநாட்டையும் தேசிய வெறியில் மூழ்கடிக்கவும் "மதவாதத்தில் வெறியில்" மக்களைப் பிளவு படுத்தி வைத்திருக்கவும் "தாய்நாட்டைப் பாதுகாப்போம்" என்ற தேசிய வெறியில் தொழிலாளி வர்க்கத்தை திசைத்திருப்பவும் பயன்படுத்துகின்றன. வல்லரசு நாடுகளின் தலையீட்டுக்கு ஆப்கானிஸ்தான், ஈரான், ஈராக், போஸ்னியா, பிராந்திய விரிவாதிக்க அரசின் தலையீட்டுக்கு பூட்டான், நேபாளம், வங்காள தேசம், இலங்கை, மீதான இந்தியாவின் தலையீடு. குறிப்பாக இந்தியா சிறீலங்கா இனவாத அரசுக்கு ஆயுதங்களும், இராணுவப் பயிற்சியும், கொடுத்து வருகின்றது. அதே வேளை தமிழீழ இயக்கங்களான TELO, EPRLF, PLOT, LTTE, EROS, ENDLF, EPDP, க்கு ஆயுதங்களும் இராணுவப் பயிற்சியும் பணமும் கொடுத்துப் போராட்டத்தை திசை திருப்பி வந்துள்ளது. அரசு எல்லைப் பயங்கரவாதத்திற்கு பாகிஸ்தான், வங்காளதேசம் மீதான இந்தியாவின் தலையீடும், இந்தியாவிலும், ஆப்கானிஸ்தானிலும் பாகிஸ்தான் தலையிடுவதும் வெளிப்படையான உதாரணங்களாகும். குறிப்பாக பாகிஸ்தான் அரசு, காஷ்மீர், பஞ்சாப் தேசிய விடுதலை இயக்கங்களுக்கு இராணுவப் பயிற்சியும், ஆயுதங்களும், பணமும் கொடுத்து போராட்டத்தை திசை திருப்பி வருகின்றது. தேசிய இனப் பிரச்சனையில் 'குளோபல்' அரசுப் பயங்கரவாத நாடுகளின் செயற்பாடுகளும் கவனிக்கத்தக்கவை. அமெரிக்காவின் செல்லப்பிள்ளையான இஸ்ரேல் உருவானதில் இருந்து எவ்வாறு தேசிய இன விடுதலை இயக்கங்களுள் ஊடுருவிச் செயல்பட்டு வருவது பிரசித்தமானது. அமெரிக்கா தலைமையிலான வல்லர

www.tamilarangam.net



சுகளால் மேற்காசியாவில் இஸ்ரேல் அரசும் தெற்காசியாவில் பாக்கிஸ்தான் அரசும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. வல்லரசுகளின் இரகசிய சர்வதேச ஆயுத விற்பனை, இராணுவப் பயிற்சி, உளவுத்துறை ஊடுருவல் இவற்றிற்கு இந்நாடுகள் உதவுகின்றன. ஆப்கானிஸ்தான் போராட்டத்தில் இன்றளவும் பாக்கிஸ்தானின் ஆயுத விநியோகம், பயிற்சி, உளவு நடவடிக்கைகள் தொடர்கின்றது. முன்னாள் சோவியத் யூனியனில் நடக்கும் தேசிய இன போராட்டங்களில் பாக்கிஸ்தான் தலையீடு உள்ளது. அதேபோல் இஸ்ரேல் அரசு சிறிலங்கா அரசுக்கும், விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் கொடுத்த ஆயுதங்களும், இராணுவப் பயிற்சியும் 'The way of Deception' புத்தகத்தில் வெளிவந்துள்ளது.

இவ்வாறு ஒடுக்கும் இனவாத அரசுகளையும், இன ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராடும் விடுதலை இயக்கங்களையும், ஆயுத விற்பனைச் சந்தையில், இராணுவப் பயிற்சியில் ஒன்று சேரப் பயன்படுத்தும் நாசகாரக் கொள்கையை, நடைமுறையை வல்லரசுகளும் பிராந்திய விரிவாதிக்க அரசுகளும், எல்லைப் பயங்கரவாத ஊக்குவிப்பு அரசுகளும் செய்து வருகின்றார்கள். இவ் உலக மக்களின் எதிரிகள் இன ஒடுக்குமுறை அரசுகளை அங்கீகரிக்கின்ற, நம்புகின்ற, அளவுக்கு தேசிய இன விடுதலை இயக்கங்களை அங்கீகரிப்பதோ, நம்புவதோ இல்லை. அவர்களை இவ் எதிரிகள் தங்கள் எல்லை கடந்த தேசிய ஒடுக்குமுறை, சுரண்டல் நலன்களுக்கான ஊக்கிகளாக மட்டுமே பயன்படுத்துகின்றனர். ஆனால் ஒடுக்கப்படும் தேசிய இனங்களின், நாடுகளின் விடுதலைக்காகப் போராடும் குட்டி முதலாளித்துவ, முதலாளித்துவ சுத்த இராணுவ இயக்கங்கள் இதைப் புரிந்து கொள்ள முயற்சிப்பதில்லை. அல்லது புரிந்து கொண்டாலும் தமிழீழ குட்டி முதலாளித்துவ தலைமைகள் கூறுவது போல் ''யாரிடம் இருந்தும் ஆயுதமும், பயிற்சியும், பணமும் பெற்றாலும் பிரச்சனை இல்லை. இதில் கொள்கை தேவையில்லை. அவற்றைப் பயன்படுத்தப் போவது நாங்கள் தானே''. இத்தத்துவத்தை சர்வதேச நாசகார சக்திகளும் சரியாகப் புரிந்து கொண்டிருக்கின்றார்கள். தங்களது சுரண்டலுக்கும் தேசிய ஒடுக்குமுறைக்கும் எக்காலத்திலும் உள்ளார்ந்த வர்க்க சித்தாந்தத்தில் - நடைமுறையில் முரண்படாத ஒடுக்கப்படும் தேசிய இனத்தின் முதலாளி வர்க்கத்திற்கே தாம் எல்லாவற்றையும் கொடுத்துக் கொண்டிருக்கிறோம் என்பதை அறிவார்கள்.

இச் சர்வதேச அரசு பயங்கரவாத நாடுகள் அனைத்தும் தேசிய இனப்பிரச்சனையில் இன்னோர் வடிவிலும் தலையிடுகின்றார்கள். உலகமயமான சமூக நல செயற்பாட்டுத் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு வெளிநாட்டுப் பணத்தில் இயங்கும் 'தன்னார்வ குழுக்கள்', 'நிதி நிறுவனங்கள்', 'அரசுசார அமைப்புகள்' என உலகளவில் செயற்படுகின்றார்கள். 'சமாதான இயக்கம்,' 'இன,மத நல்லிணக்க கூட்டமைப்பு', 'உலக சனநாயக, அமைதி இயக்கம்'

www.tamilarangam.net



என்ற பெயர்களில் இயங்குகிறார்கள். ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளில் 'பெட்டிக் கடைகள்' போல் இவ்வமைப்புகள் இயங்குகின்றன. இவ் அமைப்புக்களும் தேசிய இனப்பிரச்சனையில் தலையிடுகின்றனர். தேசிய ன ஒடுக்குமுறைக்கு உள்ளாகி வரும் மக்களை ஒரு தேசிய விடுதலை இயக்கத்தை நோக்கி அணிதிரள விடாது தடுக்கும் எல்லா வேலைகளையும் இவை செய்கின்றன. தேசிய இனப்பிரச்சனை கூர்மையடைந்த பகுதிகளில், இன ஒடுக்குமுறை கலவரங்கள், குடியேற்றங்கள், நில ஆக்கிரமிப்புகள், யுத் தங்களால், பாதிக்கப்பட்ட அகதிகள் மத்தியிலும் செயற்படுகின்றன. இன ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டங்களை தங்கள் நலனில் இருந்து ஆதரிக் கின்றனர். தேசிய ஒடுக்குமுறைக்கு எதிராக மக்களின் நிரந்தரத் தீர்வுக்கான மக்கள் திரள் போராட்டங்களை, ஆயுத போராட்ட நடவடிக்கைகளை நிராக ரிக்கின்றன. 'சில அமைப்புகள்' குட்டி முதலாளித்துவ ஆயுதப் போராட்ட இயக்கங்களுக்கும் மறைமுகமாக உதவுகின்றன. இலங்கையில் 'காந்திய'த் தின், 'மேர்ச்சின்' செயற்பாடுகள் இதற்கு வெட்ட வெளிச்சமானது. தேசியப் போராட்டத்தின் வளர்ச்சியோடு போட்டி போட்டு தேசிய இனப் போராட் டத்தை சரியான வழியில் முன்னேற விடாது தடுக்கும் தவறான சித்தாந்த, அரசியல் கண்ணோட்டங்களை, அமைப்பு நடைமுறைகளை விதைப்பதி லும் முனைப்புடன் செயற்படுகின்றன. மக்கள் மத்தியில் அக் கண்ணோட்டங் களுக்கு ஆதரவான முறையில் தமது செயற்பாடுகளை விரிவாக்குகின்றனர்.

தேசிய விடுதலை இயக்கங்கள் வளர்ந்து ஆயுதப் போராட்டம் தொடங் கிய பின்னர் அரசின் ஒடுக்குமுறை யுத்தம் உக்கிரமடைகின்ற போது; யுத்தங்க ளின் விளைவுகளை மட்டும் காட்டி அரசின் அநீதியான யுத்தம், மக்களின் நீதியான ஆயுதப் போராட்டம் என்பதை மறைத்து "யுத்த எதிர்ப்பு", "மனித உரிமைப் பாதுகாப்பு", எனப் பெயர்களை மாற்றி அவர்களது உலக எசமானர் களின் கட்டளைப்படி செயற்படுவர். தமிழீழ மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தில் சதையும் நகமுமாக இவர்களது செயற்பாடு இருந்து வருகின் றது. யாழ்ப்பாணம் மீதான கடைசி இராணுவத் தாக்குதலின் முன் அரசுடன், இராணுவ உயர் மட்டத்துடன் இவ் அமைப்புகளின் 'ஒரு பகுதி' யுத்தம் தொடங்க முன்னரே உட்கார்ந்து பேசி யாழ்ப்பாணம் மீதான சிறீலங்கா இரா ணுவம் நடத்தும் யுத்தத்திற்கு ஆதரவு கொடுப்போம் எனவும், யுத்தத்தால் பாதிக்கப்படும் மக்களுக்கு (உணவு, மருந்து, உடை, தங்குமிடம்) நிவாரணம் வழங்கவும் ஒத்துக் கொண்டன. "இந்த எதிர்ப்புரட்சிக் கும்பல்" அப்படியே நடந்தும் காட்டியுள்ளது. இவ்வமைப்புக்களின் இன்னொரு பகுதி இச் சதித் திட்டம் தெரியாமல் வழமைபோல் தமது நிவாரண வேலைகளில் ஈடுபடுகின் றார்கள். இப்போது சிறீலங்கா அரசின் தேசிய இன ஒடுக்குமுறை யுத்தத்தை ஆதரித்து நிவாரணம் வழங்கும் எதிர்ப்புரட்சிக் கும்பல் ஒருபுறம், ஒடுக்கு முறை யுத்தம் — விடுதலை யுத்தம் இரண்டையும் எதிர்த்து, ஆனால் நிவார

www.tamilarangam.net



ணம் வழங்கும் கூட்டம் மறுபுறம் என இரு பிரிவாக செயற்படுகின்றன. இதே போன்ற நிலைமை ஆப்பிரிக்காவில் யுத்தம் நடக்கும் பகுதிகளிலும் வெளிப்ப டுவதாக அறிய முடிகிறது.

நவகாலனி நாடுகளில் வல்லரசியங்கள் தமது சுரண்டலை தேசிய ஒடுக்கு முறையை தொடர்ந்து நடத்த, அமைதியான வழிமுறைகளையும் ஆட்சிக் கவிழ்ப்புக்களையும் நடத்துவதுடன் கூடவே அந்நாடுகளில் எழும் எதிர்ப்புப் போராட்டங்களை பயன்படுத்தவும், யுத்தங்களைக் கூட பயன்படுத்தி சுரண்ட வும் தனது தேசிய ஒடுக்கு முறையை தொடர அவற்றை மீண்டும் அடக்கவும் வல்ல கலையைப் பயன்படுத்துகிறது.

வல்லரசியங்களின், பிராந்திய விரிவாதிக்க நாடுகளின், எல்லைப் பயங்க ரவாத ஊக்குவிப்பு நாடுகளின் இந்த உலகு தழுவிய தேசிய இனப்பிரச்சனை யில் தலையிடும் கலையை நேர்மையான தேசிய விடுதலைச் சக்திகள் புரிந்து கொள்ள வேண்டும். இதில் பாட்டாளி வர்க்கப் புரட்சியாளர்களின், முற் போக்கு, தேசபக்த, சனநாயக சக்திகளின் கடமையானது ஒடுக்கப்படும் நாடு கள், தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை (பிரிந்து செல்வது உட்பட) அங்கீகரிப்பதும், அப்போராட்டத்தை முன்னெடுப்பதும் ஆகும். சர்வதேச வல்லரசுகளின், பிராந்திய விரிவாதிக்க அரசுகளின், எல்லைப் பயங்கரவாத அரசுகளின் சதிநடவடிக்கைகளை, தலையீடுகளை, அம்பலப்படுத்தி, எதிர்த் துப் போராட வேண்டும். சர்வதேச எதிர்ப்புரட்சிக் கும்பலின் உள்நாட்டு ஆதரவாளர்களை ஒட்டு மொத்தப் போராட்டத்தின் லாப நட்டக் கணக்கு அடிப்படையில் அம்பலப்படுத்தி அந்நியப்படுத்த வேண்டும். இன ஒடுக்கு முறை யுத்தத்தில் எதிரிப் படைகளுடன் யுத்தத்தில் சேர்ந்து செயற்படும் உள் நாட்டு, சொந்த தேசிய இனத்து எதிர்ப்புரட்சிக் கும்பல்களும் விடுதலை யுத்தத்தில் களையப்பட வேண்டும்.

## காலனிய - நவகாலனிய இலங்கையில் தேசிய இனப்பிரச்சனை

பிரித்தானியர்களின் வருகைக்கு முன்னால் இலங்கைத் தீவானது பல் வேறு சிங்கள - தமிழ் அரசுகளால், அவர்களுக்கு மரபு வழியாக சொந்தமான நிலப்பரப்புகளில் ஆளப்பட்டு வந்தது.

1619-ஆம் ஆண்டில் வடக்கு யாழ்ப்பாணத்தில் இருந்த தமிழ் ஆட்சியா னது, போர்ச்சுகீசர்களால் அவர்களின் காலனி ஆட்சிக்கு கீழ் கொண்டு வரப் பட்டது. 1638-இல் கிழக்கு மட்டக்களப்பில் நிலவிய தமிழ் ஆட்சியானது ஒல்லாந்தரின் காலனி ஆட்சியின் கீழ் வந்தது. 1658-இல் ஒல்லாந்தர் யாழ்பா ணத்தை போர்ச்சுகீசியரிடம் இருந்து கைப்பற்றினர். இதற்கிடையில் சிங்கள வர்களின் ஆதிக்கத்தில் இருந்த வேறு பல பகுதிகளையும் போர்ச்சுக்கீசிய

www.tamilarangam.net



காலனி ஆதிக்கர்களிடமிருந்தும், சிங்கள பகுதி முழுவதையும் கைப்பற்றி போச்சுக்கிசியரிடமிருந்து அரசியல் ஆதிக்கத்தை கைப்பற்றி ஒல்லாந்தர் தமது ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்தனர்.

இதைத் தொடர்ந்து 1815-இல் பிரித்தானியர்களிடம் ஒல்லாந்தர் தமது காலனிகளைப் பறி கொடுத்தனர். இலங்கையின் உருவாக்கத்தை துரிதப்படுத்தினர். 1803-ம் ஆண்டிற்கும் 1825-ம் ஆண்டிற்கும் இடையில் தொழிலாளிகளை தமிழகத்தில் இருந்து மத்திய இலங்கையில் உள்ள கோப்பி, தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்வதற்காகவும், தெருக்களை அமைப்பதற்காகவும் கொண்டு வந்தனர். இந்த மக்களைத் தான் இப்போது சிறீலங்காவில் 'மலையக மக்கள்' என்று அழைக்கின்றோம். அதைப் போன்று வடக்கு கிழக்கு இலங்கையில் ஈழத் தமிழர்கள் என்று அறியப்படும் தமிழர்கள் ஈழத்தையே தங்கள் மரபு வழிப்பட்ட தாயகமாகக் கொண்டிருக்கின்றனர். இதையே இங்கு நாம் மத்திய இலங்கையில் உள்ள தமிழகத்தில் இருந்து வந்தோரை மலையக மக்கள் என்றும், ஆரம்பம் முதலே இலங்கையை சொந்த தாயகமாக கொண்ட வடக்கு கிழக்கு பகுதியில் வாழும் தமிழர்களை ஈழத்தமிழர்கள் என்று கூறுகின்றோம்.

சிங்கள - தமிழ் தேசிய இனங்களால் சூழப்பட்ட தீவைத் தான் இலங்கை பிரதிநிதித்துவப் படுத்துகிறது. சிறீலங்கா தேசம் என்பது சிங்கள தேசிய இனத்தின் தாயகம். அதே போல மரபு வழிப்பட்ட தமிழர்களின் தாயகமாக பிரதிநிதித்துப்படுத்துவது தமிழீழ தேசம் ஆகும்.

இன்று அது மட்டுமல்லாமல் குடியேற்றப்பட்ட மலையக தமிழர்கள் என்று அழைக்கப்படுபவர்களும் கூட வரலாற்று ரீதியில் சிறீலங்காவின் சமூக, பொருளாதார கட்டுமானத்தில் பிரிக்க முடியாத பகுதியாக மாறி விட்டனர். இவர்கள் சிறீலங்காவின் தேசிய பொருளாதாரத்திற்காக மிகப் பெருமளவில் கடுமையாக உழைத்துள்ளனர். எனவே தங்களின் வாழ்வையும் ஜனநாயக உரிமைகளையும் உறுதிப்படுத்திக் கொள்வது என்பது அவர்களின் அடிப்படை உரிமையும் கூட ஆகும்.

1888-இல் கண்டியில் காலனி எதிர்ப்பு இயக்கமானது துவக்கப்பட்டது. இது 'கண்டிப் புரட்சி' என்று அழைக்கப்படுகின்றது. அப்போது நிலவிய வர்த்தகத்திற்கும் நிலத்திற்குமாக அவர்களுக்குள்ளேயே ஏற்பட்ட மோதல்களின் விளைவாக 1893-இல் நடந்த கிறீஸ்துவ எதிர்ப்பு இயக்கமும், 1915-இல் நடந்த இஸ்லாமிய எதிர்ப்பு கலகமும் ஏகாதிபத்திய எதிர்ப்பு போராட்டங்களாக தங்களைக் கருதிக் கொண்டு சிங்கள மக்களின் மொத்த உணர்வுகளைத் தூண்டிவிட்டனர். பிரிட்டனானது, இந்தியாவில் இருந்த தனது இராணுவத்தின் உதவியைக் கொண்டு தனது இரும்புக் கரங்களால் இஸ்லாமிய எதிர்ப்பு இயக்கத்தை ஒடுக்கியது என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். இந்த நடவடிக்கை சிங்களவர்களின் மத்தியில் இருந்த இந்திய எதிர்ப்பு உணர்வு

www.tamilarangam.net



என்ற நெருப்பின் மேல் மேலும் எண்ணையை ஊற்றுவதாக இருந்தது. இத்தகையதொரு பின்னணியில் தான் சிங்கள தமிழ் மக்களின் பெரும்பான்மையினரால் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட ''இலங்கை தேசிய காங்கிரஸ்'' 1919-ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. பிரிட்டிஸ்காரர்களால் நடைமுறைப்படுத்தப்பட்ட டொனமூர், சோல்பரி கமிஷனின் பரிந்துரைகள், மொழி அடிப்படையிலான மக்கள் பிதிரநிதித்துவத்தை மறுதலித்து பிரதேச அடிப்படையிலான பிரதிநிதித்துவத்துக்கு வழி வகுத்தது. இதன் விளைவாக மக்கள் திரளில் தங்கள் பலத்திற்கு ஏற்ப பிரதிநிதித்துவத்தைப் பெற்றிருந்த மொழிச்சிறுபான்மையினர் முழுமையாக தோற்கடிக்கப்பட்டு சிங்களவர்கள் தேர்தல்களில் பெரும் வெற்றியைப் பெற்றனர். இதன் மூலம் சிங்களவர்கள் அல்லாதவர்களின் பிரதிநிதித்துவம் முகம் தெரியாமல் ஒழிக்கப்பட்டு சிங்களவர்களையே மட்டும் கொண்ட மந்திரிசபை 1936-ல் அமைக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து தேர்தல்களில் மொழி அடிப்படையிலான பிரதிநிதித்துவத்துக்கான கோரிக்கை சிங்களவரின் ஆதிக்கத்தில் இருந்த இலங்கை தேசிய காங்கிரசால் நிராகரிக்கப்பட்டது. தமிழ் மக்களின் உணர்வுகளை வெளிப்படுத்தும் வகையில் 1944-இல் தமிழ்த் தேசிய காங்கிரஸ் ஜி.ஜி. பொன்னம்பலத்தால் தொடங்கப்பட்டது. இது வளர்ந்து வந்த தமிழ் சிங்கள உள்நாட்டு முதலாளிகளுக்கு இடையேயான மோதலின் வெளிப்பாடே ஆகும்.

சுருக்கமாக இதை தொகுத்துச் சொல்வதானால் பிரித்தாளும் அரசியலை பிரித்தானிய காலனியவாதிகள் நடைமுறைபடுத்திய வேளையில், சிங்களவர்களுக்கு இடையே இருந்த பிரித்தானிய எதிர்ப்பு இயக்கமானது காலனி ஆதிக்க காலத்திலேயே சிங்கள பௌத்த வெறியையும் தூண்டி விட்டது.

பிரிட்டனிடம் இருந்து அரசு அதிகாரம் கைமாறிய பின்னர் மலையகத் தமிழர்களுக்கு 1949-இல் இருந்து கீழ்கண்ட காரணங்களால் வாக்குரிமை மறுக்கப்பட்டது.

1. பிரித்தானிய காலனி ஆதிக்க வாதிகள் அதிகாரமாற்றத்திற்குப் பிறகும் கூட தங்களுடைய தோட்டங்களையும் ஏனைய விடயங்களையும் தமது கட்டுக்குள் வைத்திருக்க முயன்றனர்.
2. 17 பாராளுமன்றத் தொகுதிகளை உள்ளடக்கிய மலையகப் பகுதியில் உள்ள தோட்டத் தொழிலாளரின் நலன்களுக்காக போராடிய கொம்யூனிஸ்டுகள், தோட்டத் தொழில் துறையில் ஆதிக்கம் செலுத்திய பிரித்தானிய முதலாளிகளை அச்சுறுத்தக் கூடிய ஒரு அரசியல் சக்தியாக தோன்ற தொடங்கினர்.
3. வெளியேறும் பிரித்தானியர்களுக்கும், வந்து கொண்டிருக்கும் சிங்கள ஆட்சியாளர்களுக்கும், தோட்ட தொழிலாளர்களைப் பிரதிநித்துவப்படுத்தும் கொம்யூனிஸ்ட்டுக்களை பாராளுமன்றத்துனுள் நுழையாத படி தடுக்க வேண்டிய அவசியம் வெகுவாகத் தேவைப்பட்டது.

www.tamilarangam.net



4. தோட்டத் தொழிலாளரின் வாக்குரிமையைப் பறிப்பதை சிங்கள ஆளும் வர்க்க அரசுகள் ஒரு ஆயுதமாகப் பயன்படுத்தி தமிழர்களுக்கு எதிரான தங்களின் சிங்கள வெறி உணர்வுக்கு ஒரு வெற்றியாக கருதினர். வாக்குரிமை இழந்த தோட்ட தொழிலாளர்களிடையே 30000 மேற்பட்ட இஸ்லாமியர்களும் இருந்ததால் இது ஒரு இஸ்லாமியர் எதிர்ப்பு நடவடிக்கையாகவும் இருந்தது. அதே நேரத்தில் சிங்கள ஆட்சியாளர்கள் தங்கள் வர்க்க நலனுக்கு இசைவாக நேசக் கரம் நீட்டிய நாட்டுக் கோட்டைச் செட்டியார்களையும், குஜராத்திகளையும், பனியாக்களையும், பார்சிகளையும் ஏற்கனவே அவர்கள் வர்த்தக துறையில் ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருந்தபோதிலும் அவர்களுக்கு எல்லா வகையிலும் உறுதுணையாக இருந்தனர்.

ஒரு வேளை இந்த நவீன உலகில் தன் சொந்த நாட்டில் சொந்த மக்களின் 12.5 விழுக்காடு மக்களின் வாக்குரிமையைப் பறித்த ஒரே நாடாக இலங்கை மட்டுமே இருக்கும். ஈழத் தமிழர்கள் சுய நிர்ணய உரிமையைக் கோருவதற்கான காரணத்தை முன்னுக்குத் தள்ளும் விதத்தில், ஈழத் தமிழர்களுக்கு எதிராக சிங்கள, பௌத்த ஆட்சியாளர்கள் அமுல்படுத்திய திட்டங்களை இங்கு நாம் சற்று சுருக்கமாக பார்ப்போம்.

சட்டபூர்வமான பாராளுமன்றம் அமைக்கப்பட்ட உடனேயே மதச் சிறுபான்மை இனரின் ஜனநாயக உரிமைகளை மறுதலிக்கும் வகையில் பௌத்த மதம் ஒன்றே அரசு மதமாகப் பிரகடனப்படுத்தப்பட்டது.

வேலை இல்லாத சிங்கள இளைஞர்களுக்கும், நிலமில்லாத தொழிலாளர்களுக்கும் சுய வேலை அளிப்பதற்காக 1950-ஆம் ஆண்டுகளில் உருவாக்கப்பட்ட குடியேற்றத் திட்டத்தின் அடிப்படையில், மிகப் பரந்து பட்ட தமிழர்கள் வாழும் பகுதிகளிலும் எல்லைப் பகுதிகளிலும் விவசாய நிலங்களை அவர்களுக்கு வழங்குவதை நடைமுறைப்படுத்த தொடங்கியது.

நீரையும் இதைப் போன்ற பிறவற்றையும் தங்களுக்குள் பங்கு போட்டுக் கொள்வதில் தமிழர்களுக்கும், புதிதாக குடியேறிய சிங்களவர்களுக்குமிடையே மோதல்கள் வேகமாக வளரத் தொடங்கின. கிழக்கில் திருகோணமலைக்கு அருகில் ஏராளமான நிலங்கள் இருக்கும் போது, வடக்கு மாவட்டங்களான மன்னார், முல்லைத் தீவு பகுதிகளை குறியாக கொண்டு அங்கு சிங்களவர்களை குடியேற்றியதானது,மிகக் குறிப்பாக தமிழ் பகுதிகளை தமது சிங்கள காலனிகளாக மாற்றும் நோக்கத்துடன் இந்த மறு குடியேற்ற திட்டமானது வரையப்பட்டுள்ளது.

இதைத் தொடர்ந்து இராணுவத்தின் உதவியோடு கொடிய அச்சுறுத்தலை அவிழ்த்து விட்டு தமிழர்களை அவர்கள் பாரம்பரிய பிரதேசங்களில்

www.tamilarangam.net



இருந்து துரத்தி விட்டு, பரந்து பட்ட தமிழர்கள் வாழ்ந்த பகுதிகள் பகிரங்க மாகவே காலனியப் படுத்தப்பட்டது.

1956-ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட சிங்களம் மட்டும் ஆட்சி மொழி என்ற சட்டமானது தமிழை ஆட்சி மொழி அந்தஸ்தில் இருந்து அப்புறப்ப டுத்தியது.

தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்ற பதவியில் இருந்து இராஜினாமா செய்து 1956-1958 வரை நடை பெற்ற சனநாயக விரோத சட்டங்களுக்க எதிரான சத்தியாகிரகம் போன்ற அமைதி வழி போராட்டங் கள் சிறீலங்காவின் இராணுவத்தாலும் சிறீலங்காவின் காடையர்களாலும் இரும்புக் கரங் கொண்டு வெறித்தனமாக ஒடுக்கப்பட்டது. இதன் விளை வாக தான் 1958-ஆம் ஆண்டு இலங்கையில் முதலாவதாக மிகப் பெரிய இனக்கலவரம் வெடித்தது. கொழும்பில் இருந்தும் மலையகத்தில் இருந் தும் தமிழர்கள் வடக்கிற்கும் கிழக்கிற்கும் அகதிகளாகச் சென்றனர்.

இந்தக் கலவரங்களும் ஒடுக்கு முறைகளும் தமிழர்களிடையே சுய நிர்ணய உரிமைக்கான வித்தை ஊன்றியதோடு அல்லாமல் தங்களை ஒடுக்கப்பட்ட இனமாக அடையாளப் படுத்திக் கொள்ளவும் செய்தது. 1972-இல் குடியரசு ஆக்கப்பட்டு இலங்கைக்கு சிறீலங்கா என்று மறுபெயர் இடப்பட்ட போதும், அதனுடைய அரசு இலட்சனைகள் தீர்மானிக்கப்பட்டட போதும் பிற அனைத்து நடவடிக்கைகளும் ஒட்டு மொத்தமாக அனைத்து துறைகளி லுமே சிங்கள - பௌத்த இனமத வெறியை பிரதிபலிப்பதாகவும் மாற்றி யது.

1974-ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் பல்வேறு தடங்கல்களுக்கு இடையே நடத்தப்பட்ட 'உலக தமிழராட்சி' மாநாட்டின் போது 9 தமிழ் இளைஞர்களை சிறீலங்காவின் பொலிசார் சுட்டுத் தள்ளினர். தமிழர்களின் அமைதிவழிப் போராட்டங்களுக்கும் குறிப்பாக சுயநிர்ணய உரிமையை இலட்சியமாக கொணடு இளைஞர்கள் தீவிரமாக நடாத்திய போராட்டங்க ளுக்கும் சிறீலங்கா அரசு "அரசு பயங்கரவாதத்தை" கட்டவிழ்த்து விட்டது.

இத்தகையதோர் பின்னணியில் தான் TULF என்ற பெயரின் கீழ் தனி ஈழத்தை கோரும் வகையில் தமிழர்களின் அபிலாசைகளை வெளிக்காட்டும் வகையில் வட்டுக் கோட்டையில் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றினர். "வட் டுக் கோட்டைத் தீர்மானம்" என இது அழைக்கப்பட்டது. வடக்கையும் கிழக் கையும் பிரதிநிதித்துப்படுத்தும் ஒரே கட்சியாக TULF வேட்பாளர்கள் தேர்ந்தெ டுக்கப்பட்டனர். பாராளுமன்ற வரலாற்றில் முதன் முறையாக தமிழர்களிடம் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட TULF முதன்மையான எதிர்கட்சியாக இருந்தது. பெருந்திரளான மக்களின் ஆதரவை TULF பெற்றதைக் கண்ட சிங்கள இனவெ றியர்கள் பயங்கரவாதத்தை அவிழ்த்து விட்டனர். குறைவான அதிகாரத்துடன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கூடிய ஒரு ஒப்பந்தத்தை மாவட்ட சபைகள் என்ற பெயரால் சிங்கள அரசு முன் வைத்த யோசனைக்கு TULF 1981-ஆம் ஆண்டில் பணிந்தது. ஆனால் திருகோணமலை, மட்டக்களப்பு, கொழும்பு, மலையகம் போன்ற பகுதிகளில் இந்த மாவட்ட சபைகளுக்கு எதிராக அதே 1981-ம் ஆண்டில் நடாத்தப்பட்ட கலவரங்களால் இந்த மாவட்ட சபைத் தேர்தல்களை சரியாக நடாத்த முடியவில்லை.

இந்தக் கலவரத்தின் போது 90,000 ஆயிரத்திற்கும் மேற்பட்ட விலை மதிப்பற்ற புத்தகங்களைக் கொண்டிருந்த உலகப் புகழ் பெற்ற 'யாழ்ப்பாண பொது நூலகமானது' இராணுவத்தினால் தீயிட்டுக் கொழுத்தப்பட்டு தரைமட்டமாக்கப்பட்டது. இதைக் கண்டு நாகரீகமடைந்த உலகம் முழுவதுமே வெட்கித் தலை குனிந்தது.

பிரச்சனைகளைப் பாராளுமன்றத்தின் மூலம் தீர்க்க முடியும் என்பதில் நம்பிக்கை இழந்த, சமாதான நடவடிக்கைகளில் அதிருப்தியுற்ற இளைஞர்கள் மிருகத்தனமான ஒடுக்கு முறைகளுக்கு எதிராக தனித் தமிழீழத்திற்கான ஆயுதப் போராட்டத்தை ஆரம்பித்தனர். ஈழத்தின் வரலாற்றில் கருப்பு நாள் என்று அறியப்பட்ட அந்த 1983-ம் ஆண்டு நடாத்தப்பட்ட பயங்கரமான இனப்படுகொலையானது இலங்கையில் உள்ள தமிழர்களை தனி ஈழத்தைத் தவிர அதற்கு குறைந்த வேறு எந்த தீர்வையும் ஏற்க கூடாது என்ற நிலைக்கு கொண்டு சென்றது. அது முதல் தேசிய விடுதலைப் போராட்டமானது தேசிய விடுதலை யுத்தம் என்ற கட்டத்தை அடைந்தது.

**தமிழீழ தேசிய விடுதலை யுத்தத்தில் பல்வேறு கட்டங்கள்**

**1983-1987 இந்திய தலையீட்டு காலகட்டம்**

சிறிலங்காவில் உள்ள தமிழர்கள் மீது தொடுக்கப்பட்ட இனப்படுகொலையானது, பல தேசிய இயக்கங்கள் தங்களை பலப்படுத்திக் கொள்ளவும் அங்கீகாரத்தைப் பெறவும் வாய்ப்புக்களைக் கொடுத்தது. தமிழீழ விடுதலை இயக்கம் (TELO), தமிழீழ விடுதலைப்புலிகள் (LTTE), தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (PLOT), ஈழபுரட்சிகர மாணவர் அமைப்பு (EROS), ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி(EPRLF) போன்ற பெரிய இயக்கங்கள் தமிழீழ மக்களின் அபிலாசைகளை பிரதிபலிக்கக் கூடிய வலிமை வாய்ந்த சக்திகளாக தோன்றின.

இதில் மிகச் சுவையான விடயம் யாதெனில், தேசிய சுயநிர்ணய உரிமைக்காக காஷ்மீர், பஞ்சாப், வடகிழக்கு இந்திய மாநிலங்களிலும் இன்னும் பல இடங்களிலும் நடக்கும் தேசிய விடுதலைப் போராட்டங்களை தொடர்ந்து ஒடுக்கி வரும் இந்திய ஆட்சியாளர்கள், தமிழீழ விடுதலைக் குழுக்களுக்கு உதவிக் கரம் நீட்ட முன் வந்தது தான். பல்வேறு வெகுஜன அமைப்புகளின், குறிப்பாக தமிழகத்தின் பரந்துபட்ட மக்களின் பெரும்திர

www.tamilarangam.net



ளான ஆதரவுக்கு இனக்கமான முறையில் இந்தியரசானது விடுதலைக் குழுக்க ளுக்கு பன்முகப்பட்ட உதவிகளை தாராளமாகக் கொடுத்தது. பிரதானமாக இந்திய விரிவாக்கத்தின் பூகோள, அரசியல் நலன்களுக்கு உகந்த முறையில், குறிப்பாக தெற்கு ஆசியாவில் இந்தியத் தலையீடானது அவசியப்பட்டது என்பதை இங்கு அழுத்திக் கூற வேண்டியது அவசியமில்லை. வங்கதேச விடுதலைப் போராட்டத்தில் இந்தியாவின் தலையீடானது இந்திய விரிவாக் கத்திற்கான முந்தைய திட்டமாகும். வங்கத்தில் உள்ள நிலைமையானது இந் திய அரசாங்கத்தை வங்கதேஷ் விடுதலை போராட்டத்திற்கு வற்புறுத்தியது. அதே போல பலம் வாய்ந்த தமிழ் நாட்டின் சாதக அம்சங்கள், இந்தியரசை ஈழ விடுதலைக் குழுக்களுக்கு ஆதரவை அளிக்குமாறு வற்புறுத்தின.

இந்தியரசின் விரிவாக்க திட்டங்களை, பாக்கிஸ்தான் கேள்விக்கு உட்ப டுத்தியதைப் போன்றே, சிறீலங்கா அரசும் செய்தது. இந்த இரண்டு விடயங்க ளிலும் இந்தியரசானது உண்மையான மக்கள் போராட்டங்களைப் பயன்படுத் திக் கொண்டு குழம்பிய குட்டைகளில் மீன் பிடிக்கத் தொடங்கினர். இந்து சமுத்திரத்தில் திருகோணமலை முக்கியத்துவம் வாய்ந்ததாக இருப்பதால் ஈழத்தின் பகுதியான திருகோணமலையின் மீது இந்தியா தனது கட்டுப் பாட்டை நிலை நிறுத்த பேரார்வம் கொண்டிருந்தது. இந்திராகாந்தியும் அவ ரது ஆட்சியும் கொண்டிருந்த 'போலி சோசலிசத்' தோற்றத்தினால், விடுத லைக் குழுக்கள் இந்தியாவை தமது பாதுகாப்பாளன் என்று கருதின. சிறுமுத லாளித்துவ கண்ணோட்டத்தில் இருந்து பங்களாதேசப் பிரச்சனையில் செய் தது போன்று, இலங்கையிலும் இந்தியா தலையிட்டு ஈழம் பிரித்து கொடுக்கப் படும் என்று கருதின. இந்தியா தனது விரிவாதிக்க நோக்கில் இருந்து இந்த ஈழ விடுதலை அமைப்புக்களுக்கு அனைத்து உதவிகளையும் வழங்கியது. 'சோசலிச ஈழத்தை' கட்டுவதற்கும் இவ் அமைப்புகள் இந்தியாவை சார்ந்து இருக்க விரும்பின.

இந்த குழுக்கள் இவ்வாறு அடிபணிந்ததற்கு காரணம் அவர்களுடைய மத்திய தரவர்க்க சித்தாந்தமும், தேசிய விடுதலை யுத்தத்தில் அதிலும் குறிப் பாக நவகாலனிய ஏகாதிபத்திய ஆதிக்கத்தின் கீழ் பிரதேச ரீதியிலும், சர்வதேச ரீதியிலும் எதிரியார்? நண்பர்கள் யார்? என்பதைக் கணிப்பதில் கொண்டிருந்த தவறான மதிப்பீட்டுகளாலும் ஆகும்.

தமிழீழவிடுதலைக் குழுக்கள் வங்காள தேசத்தின் பிரிவினையை விமர் சன ரீதியாக அணுகிய போதிலும் இந்திர காந்தியின் 'போலி சோசலிசத்' தோற்றத்தைக் கண்டு நம்பிக்கை கொண்டிருந்தார்கள். இது எந்தளவிற்கு சென் றதென்றால், இந்திரா காந்தியின் ஈமச் சடங்கின் போது தங்களின் இராணுவ முகாம்களில் அவருக்கு இராணுவ மரியாதை செலுத்தும் அளவுக்கு பெரிய அளவில் நம்பிக்கை கொண்டிருந்தனர்.

www.tamilarangam.net



இந்நிலையில் எல்லா விடுதலை அமைப்புகளின் உறுதியான தீவிரமான போராட்டங்கள் சிறீலங்கா அரசுனுடைய பிடிவாதமான போக்கை விட்டொழித்து தீர்வுக்கான பேச்சுவார்த்தைக்கான வாசலைத் திறந்து விட்டது. இதன் உயர்ந்த பட்ட நடவடிக்கை தான் 1985-இல் உருவான திம்புக் கோரிக்கை.

4 கோரிக்கைகள்

1. இலங்கைத் தமிழர்களை ஒரு தேசிய இனமாக அங்கீகரித்தல்.
2. தமிழ் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்க வேண்டும்.
3. இலங்கைத் தமிழர்களுக்கு வரையறுக்கப்பட்ட பாரம்பரிய பிரதேசம் உண்டு என்பதை அங்கீகரிக்க வேண்டும்.
4. இலங்கையை தமது சொந்த தாயகமாக கொண்ட எல்லாத் தமிழர்களுக்கும் அடிபடை உரிமைகளும் குடியுரிமையும் வழங்கப்பட வேண்டும்.

இந்தக் குறைந்த பட்சக் கோரிக்கையை சிறிலங்கா அரசு முற்று முழுதாக எதிர்த்தது. பேச்சுக்களின் போது நடுநிலையில் இருந்த இந்தியா, சிறீலங்கா அரசுக்கு சார்பாகவே இருந்தது. அவர்கள் வைக்கும் தீர்வுக்கு வர நிர்ப்பந்தித்த தோடு அல்லாமல் இயக்க தலைவர்களையும் பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டவர்களையும் கைது செய்தும், நாடுகடத்தியும் அச்சுறுத்தியது. ஆனால் விடுதலை அமைப்புக்கள் இதற்கு சிறிதும் அடிபணியாததோடு ஆயு தப் போராட்டத்தையும் தொடர்ந்தனர். இதைத் தொடர்ந்து விடுதலை அமைப் புக்களின் பால் இந்தியா, ஒரு பகைமையான போக்கை கடைப்பிடிக்கத் தொடங்கியது. அமைப்புகளிடையே உள்முரண்பாடுகளைத் தோற்றுவிப்ப தன் மூலம் அவர்களைப் பலவீனப்படுத்தி அந்த அமைப்புக்களை இந்தியா வின் திட்டத்திற்கு பணிய வைத்தது. 1987-இல் ஏற்பட்ட இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் இவ்வமைப்புக்கள் சில இடம் பெற்றதோடு இவ் ஒப்பந்தம் தமிழீழ மக்களின் மேல் பலவந்தமாக திணிக்கப்பட்டது. இந்த ஒப்பந்தத்தில் சில அம்சங்கள்.

1. சிறீலங்காவின் ஆட்சி மொழிகளில் ஒன்றாக தமிழ் அங்கீகரிக்கப்பட வேண்டும்.
2. வடக்கினதும் கிழக்கினதும் ஒன்றிணைப்பானது கிழக்கில் மட்டும் நடைபெறும் ஒரு பொது வாக்கெடுப்பின் மூலம் தீர்மானிக்கப்பட வேண்டும்.
3. வடக்கிலும் கிழக்கிலுமான மாவட்ட சபைகளுக்கு அதிகாரத்தை பகிர்ந்தளிப்பதை ஒரு பகுதியாக கொண்ட அந்த ஒப்பந்தமானது இலங்கையின் 9 மாகாணங்களுக்கும் பொருந்தும்.

மேலே குறிப்பிட்டவற்றைக் காணும் போது இந்தத் தீர்மானத்தில் தேசிய இனப்பிரச்சனையில் எந்த ஒரு அடிப்படைக் கோரிக்கைகள் கூட நிறைவேற்

www.tamilarangam.net



றப்படவில்லை என்பதோடு இனப்பிரச்சனை முற்றிலுமாக மறைக்கப்பட்டது.

**இரண்டாவது கட்டம் : 1987 - 1990**

**இந்திய ஆக்கிரமிப்பு யுத்தத்தின் காலகட்டம்**

1987-ல் செய்து கொள்ளப்பட்ட இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை அமுல் படுத்தும் நோக்கத்தோடு பல்வேறு விடுதலை அமைப்புக்களை கொண்ட இடைக்கால அரசு அமைக்கப்பட்டது. இதற்கு உதவும் வகையில் இலங்கையில் நுழைந்த இந்திய அமைதிப் படையிடம் தமது ஆயுதங்களை ஒப்படைக்குமாறு இயக்கங்கள் வற்புறுத்தப்பட்டன. தமிழீழ மக்களின் எதிர்பார்ப்புகளை விட, இந்த ஒப்பந்தமானது மிகக் குறைந்த பட்சமாக இருந்தாலும், தற்காலிக அரசை அமைப்பதில் விடுதலைப் புலிகளின் எதிர்பார்ப்புகள் தீர்க்கப்படாது இருந்தபடியாலும் இந்த ஒப்பந்தத்தை அமுல்படுத்துவதில் இந்தியாவின் மேல் அதிருப்தியுற்ற விடுதலைப் புலிகள் தமது ஆயுதப் போராட்டத்தை இந்திய அமைதிப்படைக்கு எதிராக தொடுத்தனர். இந்திய அமைதிப் படையானது ஒரு ஆக்கிரமிப்புப் படையாக மாறியதால், விடுதலைப் புலிகள் ஒட்டுமொத்தான தமிழீழ மக்களையும் தன் பின்னால் இந்த ஆக்கிரமிப்புக்கு எதிராகத் அணி திரட்டியது, இதை இரண்டாவது யுத்தம் என அறிவித்து, இந்திய அமைதிப்படையை தமிழீழத்தில் இருந்து திரும்ப பெற வேண்டும் எனக் கூறினர். பிற நான்கு தமிழீழ விடுதலை அமைப்புக்களும் இந்தியா சிறீலங்கா ஆகியவற்றின் சதி திட்டங்களுக்க சரண் அடைந்து இந்திய அமைதிப்படையோடு சேர்ந்து கொண்டு விடுதலைப் புலிகளுக்கு எதிராக போரிட்டதும், இவ்வாறாக தமிழீழ இலட்சியத்துக்கு துரோகமிழைத்ததும், மிகவும் துரதிர்ஷ்டமாகும். இந்தக் குழுக்கள் இந்திய அமைதிப்படையின் உதவியுடன் ஒரு தமிழ் மாகாண ஆட்சியை அமைத்தனர்.

சிங்கள மக்கள் மத்தியில் ஜனதா விமுக்தி பெரமுன இந்திய - இலங்கை ஒப்பந்தத்திற்கும், இந்திய அமைதிப் படைக்கும் எதிராக போராட்டங்களை தொடங்கியது. அமைதிப் படை ஈழத்திற்குள் வந்தது. சிங்கள மக்கள் மத்தியில் இனவாத அரசியலாக்கப்பட்டது. சிங்கள மக்கள் மத்தியில் தோன்றிய வெறுப்புணர்வைக் கண்ட பிரேமதாச தனது ஆட்சியைத் தக்க வைத்துக் கொள்ள இந்திய அமைதிப்படை வெளியேறக் கோரிக்கை விடுத்தார்.

1987-90-இல் தமிழீழ விடுதலைப் புலிகள் இந்திய அமைதிப் படையையும், அவர்களுடன் நின்ற தமிழீழ விடுதலைக் குழுக்களையும் தீவிரமாய் தாக்கினார். இந்திய அமைதிப்படை வெளியேறியது. இந்திய - இலங்கை ஒப்பந்தம் கைவிடப்பட்டது. இந்திய அமைதிப் படையுடன் தமிழீழ எட்டப்பர் கூட்டங்கள் ஒரிசா மாநிலத்தில் தஞ்சம் புகுந்தனர். விடுதலைப் புலிகள் பிரேமதாசாவுடன் பேச்சு வார்த்தைக்குச் சென்றனர்.

www.tamilarangam.net



இலங்கை அரசு சிங்கள மக்கள் மேல் அடக்குமுறை செய்யும் போது, தமிழ் பகுதிகளை அமைதியாகவும் தமிழ் மக்கள் மேல் அடக்குமுறை செய்யும் போது, சிங்களப் பகுதிகளை அமைதியாகவும் வைத்திருக்கும் தந்திரத்தை கையாண்டது. இதனால் சிங்கள - தமிழ் மக்கள் இணைந்து தம் பொது எதிரிக்கு எதிராய் போராடும் வழிகளை இழந்தனர்.

சிங்கள மக்கள் மத்தியில், ஈழத் தமிழர்கள் இந்திய ஆக்கிரமிப்பு முயற்சிக்கு உதவிகாரணமானவர்கள் என்ற எண்ணம் தமிழீழ விடுதலைப் புலிகள் இந்திய அமைதிபடையை எதிர்த்ததால் அழிக்கப்பட்டது. ஆனால் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் பிரேமதாசாவுக்கும் இடையில் ஏற்பட உறவுகள் பரந்துபட்ட சிங்கள மக்களை, தமிழ் மக்களிடமிருந்து அன்னியப்படுத்தியது.

## மூன்றாம் கட்டம் 1991-94.

1990-இல் இந்திய அமைதிப்படை வெளியேறியதும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் பிரேமதாசாவுக்கும் இடையில் தொடங்கிய அமைதிப் பேச்சுக்கள் முறிந்தன. இனப் பிரச்சனைக்கு தீர்வு காண அமைக்கப்பட்ட பாராளுமன்ற குழு எவ்வித அறிக்கையையும் தயாரிக்கவில்லை. மீண்டும் த.வி. புலிகளுக்கும், சிறீலங்கா இராணுவத்துக்கும் இடையில் யுத்தம் ஆரம்பமானது. தமிழ் மக்கள் மேல் கடுமையான தாக்குதல்களை நடாத்தியது. ஜெயவர்த்தனாவின் "சண்டைக்கு சண்டை; சமாதனத்திற்கு சமாதானம்" என்ற கோட்பாடு பிரேமதாச ஆட்சியிலும் நிலவியது. 1991 தொடக்கம் 1994 வரை போர் நடந்தது.

## நாலாம் கட்டம் 1995 - பேச்சில் அமைதி, செயலில் போர்

17 வருடங்களாக அய்.தே.கட்சி நடாத்தி வந்த யுத்தத்தாலும் மிகவும் மோசமாகி வரும் பொருளாதார நிலைமையாலும் பாதிக்கப்பட்ட சிங்கள - தமிழ் மக்கள் சந்திரிகாவை தெரிவு செய்தனர். சந்திரிகா "போர், போர், போர், " கோசத்திற்குப் பதிலாக "சமாதானம், சமாதானம், சமாதானம்" என்ற கோஷத்தை எழுப்பினார். தமிழீழ விடுதலைப் புலிகள், சமாதானத்துடன் முழுமையான பதவிப் பங்கீடும் சந்திரிகா தலைமையில் ஏற்படும் என்று எதிர்பார்த்தனர்.

நாலு சுற்று பேச்சுக்களின் பின்னும், பல கடிதப் பறிமாற்றங்களின் பின்பும் புலிகளுக்கும் சந்திரிகாவிற்கும் இடையில் உடன்பாடு ஏற்படவில்லை. தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆகக் குறைந்த கோரிக்கைகளைக் கூட ஏற்க அரசு தயாராக இல்லை. வடக்கில் பொருளாதாரக் கட்டுப்பாடுகள் தளர்ப்பு, மீனவர் கடலுக்க செல்ல அனுமதி, புலிகள் கிழக்கில் ஆயுதங்களுடன் நடமாட அனுமதி, பூநகரி இராணுவ முகாம் கலைப்பு, கிளாலி ஊடாக வடக்கு மாகாண கட்டுப்பாடற்ற போக்குவரத்து வசதி என்று புலிகளால் அரசுக்கு கோரிக்கைகள் வைக்கப்பட்டது.

www.tamilarangam.net



இவை சமாதான பேச்சு வார்த்தைகளை ஊக்குவிக்கும் என எண்ணப்பட்டது. புலிகளின் கோரிக்கைகளில் சிலவற்றை மட்டுமே சந்திரிகா அரசு ஏற்றது. அவற்றையும் சரிவர நடைமுறைப்படுத்தவில்லை. அதே நேரத்தில் போருக்கான ஆயத்தங்களைத் தீவிரப்படுத்தியது. தமிழீழ விடுதலைப் புலிகள் பேச்சு வார்த்தைகளை நிறுத்தி போர் செய்யத் தள்ளப்பட்டனர். யுத்தம் ஆரம்பமானது. விடுதலைப் புலிகள் விமானங்களைச் சுட்டு வீழ்த்தினர். முப்படைகளினதும் தாக்குதல்களைச் சமாளிக்க முடியாது. புலிகள் 5 வருட கட்டுப்பாட்டில் இருந்த யாழ்ப்பாணத்தை விட்டு வன்னிப் பகுதிக்கு வெளியேறினர். கிழக்கு மாகாணத்தில் இருந்து புலிகள் கொரில்லாச் சண்டையை தொடர்கின்றனர்.

சிங்கள மக்கள் மத்தியில் உள்ள இனவெறியர்களாலும் சில பீடங்களைச் சேர்ந்த பௌத்த குருமார்களினாலும் அதிகார பரவலாக்கல் பாராளுமன்றத்தாலும் ஆராயப்பட முடியவில்லை. எதிர் கட்சிகள் மத்தியிலும் பொது சன அய்க்கிய முன்னிலை அரசில் உள்ள சிலராலுமே அரசின் தீர்வுத் திட்டத்திற்கு எதிர்ப்பு உள்ளது. இந்திய இலங்கை ஒப்பந்தத்தை ஒத்த தீர்வுத் திட்டமே சந்திரிகாவினாலும் வைக்கப்பட்டுள்ளது. சந்திரிகா தன்னை சமாதான வீராங்கனை என்று உலகுக்கு காட்டிக் கொண்டதே மிச்சம். இதற்கு முன்பு இருந்த சனாதிகளிலும் பார்க்க மிக மோசமான போரை சந்திரிகா தமிழீழ மக்களின் மேல் கட்டவிழ்த்து விட்டுள்ளார். உலகை ஏமாற்றச் சமாதானப் பேச்சு வார்த்தைகளைச் சந்திரிகா தொடர்கின்றார்.

## துரோக இயக்கங்கள் மீதான பார்வை

1987 இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் பின் பிரபல்யமான 5 சிறுமுதலாளித்துவ இயக்கங்களின் போக்கில் பாரிய மாற்றம் ஏற்பட்டது. 1987 இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை ஏற்று சிறீலங்கா அரசுடன் இந்தியாவுடன் சமரசம் அடைந்தவை என EPRLF, PLOT, EROS, TELO, ENDLF, EPDP. ஒருபுறமும் அவற்றை எதிர்த்து போராடிய LTTE மறுபுறமும் துரோக இயக்கங்கள். மகாண சபைத் தேர்தல்களில் பங்கு பற்றின. 1994 பாராளுமன்ற தேர்தர்களிலும் கூட இவை பாராளுமன்ற வழியில் தேசிய இனப்பிரச்சனையை தீர்க்க முடியும் என்ற நம்பிக்கைக்கு மாறியுள்ளன. அதே வேளை சிறீலங்கா - இந்திய ரசுகளின் துணையுடன் ஆயுதக் கும்பல்களாகவும் செயல்படுகின்றன. அரசின் இன ஒடுக்குமுறை யுத்தத்தை எதிர்ப்பதை - போராடுவதை கைவிட்டு விட்டு வெறும் 'அறிக்கையில் போர்' நடத்துகின்றனர். பாராளுமன்றத்தில் குடி கொள்வதே TULF போன்ற பழைய தமிழ் துரோக தலைமைகள் போல் மாபெரும் போராட்ட வழியாக முன் வைக்கின்றன தமிழீழ மக்கள் முன்.

www.tamilarangam.net



இவ் இயக்கங்களின் ஆயுதங்கள் LTTE க்கும், புரட்சிகர தேசபக்த இயக்கங்களுக்கும் எதிராக பயன்படுத்தப்படுகிறது. அத்துடன் தமிழீழ மக்கள் மீது அராஜகத்தையும், சனநாயக மறுப்பு அரசியலையும் திணிக்கின்றன. தேசிய ஒடுக்குமுறைக்கு எதிரான தமிழீழ மக்களின் தேசிய சுதந்திர இலட்சியத்துக்கும் சுரண்டப்படும் பரந்துபட்ட மக்களின் அடிப்படை சனநாயக உரிமைக்கும் எதிராக செயல்படுகின்றனர். இவர்கள், LTTE இன் தனி இயக்க சர்வாதிகாரத்தை எதிர் கொள்வது முதல் கடமை எனக் கூறி பொது எதிரிக்கு எதிரான போராட்டத்தை திசைதிருப்புவதுடன் தமிழ் மக்களின் போராட்ட சக்தியை பிளவுபடுத்தி LTTE அழிக்கும், பலயீனப்படுத்தும் சிறீலங்கா இந்தியரசுகளுடன் கூட்டிணைந்து செயல்படும் தந்திரத்தை கடைப்பிடிக்கின்றன. இச்சிறு முதலாளிய இயக்கங்கள் ஆரம்பகால போராட்டங்களில் சிறீலங்கா அரசை எதிர்க்க - இந்தியரசுடன் சேர்ந்து செயல்படுவதாக அறிவித்து செயல்பட்டார்கள். ஒடுக்கப்படும் தேசிய இனங்களின் விடுதலைக்கான போராட்டத்தில் சொந்த தேசிய இன பரந்துபட்ட மக்களின், உலகளவில் ஒடுக்கப்படும் தேசங்கள், மக்களுடன் இணையாத சிறுமுதலாளிய முதலாளிய சுத்த இராணுவ இயக்கங்கள் உள்நாட்டு - உலகநாட்டு எதிரிகளுக்கு இடையில் நடக்கும் மோதல்கள் பற்றிய புரிதல் இன்றியும், புரிந்தும் வர்க்க நலன் சார்ந்தும் எதிரிகளையே மாறி மாறி பயன்படுத்துவதாக கூறுவார்கள். ஆனால் இறுதியில் இவர்களே ஒடுக்கப்படும் தேசிய இனப் போராட்டங்களுக்கு எதிராக பொது எதிரிகளால் பயன் படுத்தப்படுகின்றனர். இன்றைய நலகானிய சமூக கட்டமைப்புகள் தேசிய இன விடுதலைப் போராட்டங்கள் கூர்மையடைந்துள்ள இடங்களில் இத்தகைய உ+ம்கள் நிறையவேயுள்ளன. இலங்கையில் இத்துரோக இயக்கங்கள் நல்ல உ+ம். இவ்வியக்கங்கள் இன்று தமிழ் பெருமுதலாளி வர்க்க நலனை வெளிப்படுத்துகின்றன. கூடவே சமரசவழிக்கு செல்ல தயாரான நிலையிலுள்ள குட்டிமுதலாளிய முதலாளிய வர்க்க நலன்சார்ந்த சக்திகளையும் தனது அடித்தளமாக கொண்டுள்ளது. போராடுவதைவிட சமரசப்பட்டு கொள்வதை பிரதான இலக்காக கொண்டுள்ளது.

புலிகளின் தனி இயக்க சர்வாதிகாரத்தை எதிர் கொள்ளவும், தமிழீழ மக்களின் தேசிய சுதந்திரம் - சனநாயக உரிமைகளுக்காக போராடுவதற்காகவும் பரந்துபட்ட தமிழீழ மக்களை நம்பி சொந்த மக்களில் தங்கிநிற்காத இவ் இயக்கங்கள், அமெரிக்க வல்லரசு எதிர்ப்பு பற்றி, இலங்கையின் தேசிய சுதந்திரம் குறித்து பேசுவதன் 'ஏமாற்றை - கண் கட்டி வித்தையை' புரிந்து கொள்ளவேண்டும். தமிழீழ மக்களை ஒடுக்கும் சுரண்டும் பொது எதிரிகளுக்கு சித்தாந்த, அரசியல் ரீதியில் உதவுகின்றனர். சில துரோக இயக்கங்கள் இராணுவ ரீதியிலும் எதிரியுடன் ஒன்றுபட்டு செயல்படுகின்றன. தேசிய ஒடுக்குமுறையை எதிர்த்து போராடும், தமிழீழ மக்களின் பக்கம் நிற்கும்

www.tamilarangam.net



எந்தவர்க்க நலன் சார்ந்த இயக்கங்களும் இத்துரோக இயக்கங்களை அரசியல் - அமைப்பு ரீதியில் அம்பலப்படுத்த வேண்டும். அதையும் மீறி போர்முனையில் எதிரியின் பக்கம் நிற்பவர்களை போரிலும் தோற்கடிக்க வேண்டும். LTTE இன் தனி இயக்க சர்வாதிகாரத்தை முகங்கொள்ள இத்துரோக இயக்கங்களை புரட்சிகர இயக்கங்கள் பயன்படுத்தினாலும் அதற்காக கூடிக் குலாவினாலும் அதுவும் தமிழீழ மக்களுக்கு செய்யும் துரோகமும்.

## போராடும் புலிகள் மீதான பார்வை

தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டம் ஆயுதப் போராட்டமாக மாறியதிலிருந்து இன்றுவரை புலிகள் இயக்கம் சிறீலங்கா அரசுக்கு எதிரான ஆயுதப் போராட்ட தீயை அணையவிடாது தொடர்கிறார்கள். தேசிய இன ஒடுக்குமுறைக்கு எதிராக நிற்கும் தமிழீழ முதலாளி, குட்டி முதலாளி வர்க்கத்தின் நலனிலிருந்து தேசிய விடுதலைப் போராட்டத்தைLTTE நடத்தி வருகிறது. இதற்காக தேசிய இன ஒடுக்குமுறைக்குள்ளாகும் அனைத்து வர்க்க பிரிவு மக்களையும் போராட்டத்தில் ஈடுபடுத்தி வருகிறது. தமிழீழ முதலாளி வர்க்கத்தின் சமூக பொருளாதர அரசியல் நலன்களை பிரதிநிதிப்படுத்தியும், (FO-CO) போக்கோ இராணுவ தத்துவத்தினை மிகச்சிறப்பாக நடைமுறைப்படுத்தியும் இன்று உலகளவில் பேசப்படும் புலிகளின் இராணுவ நடவடிக்கைகள் 'டெஜிரெப்றேயின்'FOCO இராணுவ தத்துவத்தைLTTE தலைமை புதிய புதிய வடிவங்களில் வளர்த்தெடுத்துள்ளது. நவகாலனி நாடுகளின் ஆயுதம் தாங்கிய தேசிய இன விடுதலை இயக்கங்களில் இந்த இராணுவ தத்துவம் பலமான தாக்கத்தை செலுத்தி வருவதை கூர்ந்து கவனிப்போமாக.

அதேவேளை புலிகளின் தனி இயக்க சர்வாதிகாரம், குறுகிய தேசிய வெறி அணுகுமுறை, மக்களை போராட்ட யுத்தபங்களிப்பில் இருந்து அன்னியப் படுத்திவைக்கும் இராணுவக் கொள்கையும் செயல்பாடுகளும் போராட்ட வளர்ச்சிக்கு ஏற்படுத்திய தீய விளைவுகள் கொஞ்ச நஞ்சமல்ல. இன ஒடுக்குமுறைக்கு எதிரான தமிழீழ மக்களின் தேசிய இன விடுதலைப் போரில் சிறீலங்கா அரசை எதிர்த்து ஊன்றி நிற்கின்ற போதும், இன்று உலகில் எங்கும் வல்லரசுகளை தோற்கடிக்காத - தேசிய சுதந்திரம், தேசிய விடுதலை என்பது ஏமாற்றுதனமானதே. இந்த விடுதலை யுத்தத்தில் பெரும் பகுதி பங்களிப்பை செய்யும் இரத்தத்தை சிந்தும் தமிழீழ தொழிலாளி, விவசாயி மக்கள் மற்றும் நடுத்தர வர்க்கத்துக்கும் பரந்துபட்ட மக்களுக்கும் எந்த வகையில் விடுதலை, சுதந்திரம் கிடைக்கும்? ஒரு வேளை நாடு பிரிந்தாலும் ஒடுக்கும் தேசிய இன முதலாளி வர்க்கமும் வல்லரசுகளும் நடத்தி வரும் இன்றைய

www.tamilarangam.net



சரண்டல், தேசிய இன ஒடுக்குமுறையிலிருந்து, ஒடுக்கப்படும் தேசிய இன முதலாளி வர்க்கமும் வல்லரசுகளும் நேரடியாக சுரண்டவும் தேசிய ஒடுக்கு முறை செய்யவும் ஆன புதிய நிலைமை தோன்றும். LTTE தலைமையில் வெல்லப்படக்கூடிய தமிழீழம் அதற்கு மேல் எதையும் நமக்கு கொடுக்காது. அரசுக்கு எதிராக தேசிய சுதந்திரத்தின் பக்கம் நின்று போராடும் புலிகள், பரந்துபட்ட தமிழீழ மக்களின், அரசியல் சனநாயக உரிமைகளை மறுத்து நிற்பதும் அவற்றுக்கு எதிராக புலிகள் செயற்படுத்தும் கண் கூடு. இது நவகாலனிய சமூக அமைப்பில் நடக்கும் தேசிய இனப்போராட்டங்களில் ஒடுக்கப்படும் தேசிய இன குட்டி முதலாளிய முதலாளிய வர்க்க நலன்களை பிரதிநிதித்துவம் செய்யும் எந்த இயக்கத்துக்கும் அடிப்படையில் பொதுவானது. முழுமையான தேசிய விடுதலைக்கும் பரந்துபட்ட பெரும்பான்மை மக்களின் சனநாயக உரிமைகளுக்கும் இடையிலான உறவை இவ்வாக்கங்களால் முரண்பாடற்ற முறையில் ஒன்றிணைத்து போராட்டத்தை முன்னெடுக்க முடியாது. அதே வேளை (இலங்கை போன்ற தேசிய இனப்பிரச்சனை கூர்மையடைந்த நாடுகளில் நவகாலனிய சமூக பொருளாதார கட்டமைப்புக்குள் குறிப்பாக இவ்வர்க்கங்கள் வர்க்கநலன் சார்ந்த இயக்கங்கள் உள்நாட்டு இன ஒடுக்குமுறை அரசுக்கு எதிராக எந்தளவுக்கு நீடித்து நின்று போராடும் சக்தியை பெற்றுள்ளது என்பதற்கும் புலிகள் முன்னுதாரணமாக உள்ளனர்.

புலிகள் தமது தமிழீழ முதலாளி வர்க்கத்தின் நலனில் இருந்தபடி எந்தளவுக்கு இன ஒடுக்குமுறைக்கெதிராக தேசிய சுதந்திரத்தின் பக்கம் போராடினாலும், தொழிலாளி விவசாய பரந்துபட்ட மக்களின் அரசியல சனநாயக உரிமைக்கு எதிராக எப்படிச் செயல்பட்டாலும், தனது தனி இயக்க சர்வாதிகாரத்தை எவ்வளவு மூர்க்கமாக அமுல்படுத்தினாலும் - தமிழீழ புரட்சிகர தேசபக்த சக்திகளின் தொழிலாளி வர்க்கத்தின் கொம்யூனிஸ்டுக்களின் கடமையானது. அடிப்படையில் தமிழீழ மக்களில் தங்கி நின்று, அவர்களை அணிதிரட்டி இன ஒடுக்குமுறை அரசுக்கும், வல்லரசுகளுக்கும் எதிராகவும், நிலப்பிரபுத்துவ எச்ச சொச்சங்களுக்கு எதிராகவும் தேசிய இன விடுதலைக்காக போராட வேண்டும். அப்போதுதான் உண்மையான ஒடுக்கப்பட்ட மக்களின் தேசபக்தியை வெளிப்படுத்த முடியும். அதன்போக்கில் புலிகளின் தனி இயக்க சர்வாதிகாரத்தை, சனநாயக மறுப்பை எதிர்கொள்ள முடியும். தேசிய இன ஒடுக்குமு முறைக்கு எதிராக புலிகள் - (தமிழீழ முதலாளிவர்க்கம்) போராடும் கடைசி நிமிடம் வரையில் தேசிய ஒடுக்குமுறைக்கு எதிரான அவர்களது போராட்டத்தை ஆதரிக்கவேண்டும்.

**பொது எதிரிகளுக்கு எதிராக கூட்டிணைந்து போராட கோர வேண்டும்.** நமது பலம் பலயீனத்தை பொறுத்து நடைமுறையில் ஒன்றுபட்டு நின்று பொது எதிரிகளை தோற்கடிக்கவும் முடியும். நவகாலனிய சமூக அமைப்பி

www.tamilarangam.net



லும் இது காலாவதியாகி விடவில்லை. தமிழகத்தில் - சிறீலங்காவில் பாட்டாளி வர்க்க கட்சி இல்லை. அல்லது பலம்மிக்கதாக இல்லை, அல்லது ஆயுதப் போராட்டம் நடத்தவில்லை என்ற காரணங்களால் போராடும் இரத்தம் சிந்தும் புலிகளுடன் புரட்சிகர தேசபக்த சக்திகள் ஒன்று கலந்துவிட வேண்டும். அல்லது புலிகளும் புரட்சியாளர்களாக மாறலாம் என்ற வாதங்களிலிருந்து பாட்டாளிவர்க்க புரட்சிகர இயக்கத்தின் சுதந்திரமான சுயேச்சையான அடிப்படை நிலைப்பாட்டிலிருந்து வழுவி தேசிய இனப்பிரச்சனையில், தேசிய விடுதலைப் போரில் சங்கமிக்க கோருவதும், செய்வதும் தமிழீழ தொழிலாள, விவசாய வர்க்கத்துக்கும் பரந்துபட்ட தமிழீழ மக்களுக்கும் தேசிய இனப்போராட்டத்தில் நாம் துரோகம் செய்வதாகும்.

சிறீலங்கா அரசின் கட்டுப்பாட்டிலிருந்து விடுபட்டு புலிகளின் கட்டுப்பாட்டில் 5 ஆண்டுகள் யாழ்ப்பாணம் இருந்தது. 1996 வரை. இந்த 5 ஆண்டு கால யுத்தத்திற்கு போராளிகளை பெருமளவில் வளங்கிவரும், உயிர்த்தியாகம் செய்துவரும், அரசின் பொருளாதார தடையால், விலைவாசி உயர்வு, பணத்தட்டுப்பாடு என எல்லாப் பக்கங்களிலும் மிக கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள தொழிலாள, விவசாய வர்க்க மக்களின் நடுத்தர வர்க்க மக்களின் சமூக பொருளதார பிரச்சனைகளை புலிகள் தமது 5 ஆண்டு கட்டுப்பாட்டு பகுதியில் எப்படி அணுகினார்கள் என்பது தெளிவு. ஒருபுறம் அரசின் ஒடுக்குமுறை மறுபக்கம் தமிழீழ வணிக தொழில் முதலாளிகளின் பெரும் பணக்கார விவசாயிகளின் சுரண்டல் அடக்குமுறை, கூலி உயர்வு இன்மை, தமிழீழ சுரண்டும் வர்க்கம் இவற்றுக்கு யுத்தத்தின் நெருக்கடியை காட்டி மேலும் அம்மக்களை ஏமாற்றுவது. இவை அனைத்தையும் தாண்டி இந்த சுரண்டப்படுகின்ற தமிழீழ உழைக்கும் மக்கள் புலிகளுக்கு உதவினார்கள். உதவுகிறார்கள். ஆனால் புலிகளால் இவர்களின் வாழ்க்கைக்கு என்ன உத்தரவாதம் கொடுக்க முடியும்? இப்போது தேசத்துக்கு விடுதலை, மண்ணுக்கு விடுதலை, பின்னர் மக்களின் சமூக பொருளாதார பிரச்சனைகளுக்கு விடுதலை என்பது பச்சை ஏமாற்றுத்தனம்.

தேசிய இனப் போராட்டமானாலும், எந்த சமூக போராட்டங்களிலும் முதலாளி வர்க்க சுரண்டும் நலன் சார்ந்த போராட்டம், போராட்ட இயக்கம், சுரண்டப்படும் மக்களுக்கு விமோசனத்தை கொடுக்கும் என்பது கண்கட்டி விளையாட்டே. தமிழீழ முதலாளி வர்க்கம் தனது வர்க்க நலனை விட்டு கொடுத்து தொழிலாளி வர்க்கத்தின் பரந்துபட்ட மக்களின் நலனுக்காக போராடுகிறதா? இதுவரை காலம் காத்திருந்த முதலாளிவர்க்கம் தேசிய இனப்பிரச்சனை வரும் வரை காத்திருந்து புலிகளின் தலைமையில் 'சோசலித் தமிழீழம்' அமைக்க வழி காட்டுகிறதா? இல்லை. இல்லவே இல்லை. தேசிய இன விடுதலைப் போராட்டத்தில் ஒடுக்கப்படும் தேசிய இன முதலாளிவர்க்கம்

www.tamilarangam.net



தனது வர்க்க தலைமையில் நலனிலிருந்து ஒடுக்கப்பட்ட தேசிய இனத்தின் முழுமக்களையும் எவ்வாறு அணிதிரட்டி போராடவேண்டும்? என்ன வாக்குறுதிகளை கொடுக்கவேண்டும்? குறைந்த பட்ச சீர்திருத்த நடவடிக்கைகள், குறிப்பான போராட்ட வடிவங்கள் என்ன? இவற்றில் தெளிவாக இருக்கிறார்கள். தமிழீழ போராட்டத்தில் மிகச்சிறப்பாக செய்கிறார்கள்.

ஒடுக்கப்படும் தேசிய இன பாட்டாளி வர்க்க இயக்கம், புரட்சிகர தேசபக்த சனநாயக சக்திகளும் தமது வர்க்கம் சித்தாந்த - அரசியல் நலனிலிருந்து தேசிய இனப் பிரச்சனையை, போராட்டத்தை இனவாத அரசுக்கும் வல்லரசுகளுக்கும் எதிராக நடத்தவேண்டும். ஒடுக்கப்புடும் தேசிய இனமுதலாளி வர்க்கத்தை அதன் போராட்டத்தை பொது எதிரிக்கு எதிராக ஒன்றிணைப்பதில் தேர்ச்சி பெற வேண்டும். இவற்றை செய்யவேண்டின் அடிப்படையில் தேசிய இனப்பிரச்சனையில் வர்க்க சமரசமற்ற சித்தாந்த அரசியல் போராட்டங்களை நடத்தவேண்டும். போராட்டத்தில் போராடும் முதலாளிவர்க்க இயக்கத்துடன் உள்ள உறவை கையாள்வது பற்றி குறிப்பான நடைமுறைப் போராட்டங்களில் வளர்ச்சியும் தேர்ச்சியும் பெற வேண்டும். தமிழீழம் - சிறீலங்காவிலுள்ள பாட்டாளி வர்க்க சக்திகள், புரட்சிகர தேசபக்த போராளிகள் இந்த பாதையில் முன்னேற தம்மை தயாரிக்க வேண்டியுள்ளது. முன்னேறிய தீர வேண்டும்.

## தேசிய இனப்பிரச்சனையும் - இடது சாரிகளும்

இலங்கையின் தேசிய இனப்பிரச்சனையை நாட்டின் குறிப்பான சமூக பொருளாதார அரசியல் சூழ்நிலைமைகளிலிருந்தும், புதிய சனநாயகப் புரட்சியின் பிரிக்க முடியாத ஒரு அம்சமாகவும், ஆழமாக புரிந்து கொள்வதில், அதற்கான தீர்வுகளை முன் வைத்து செயற்படுவதில் இடதுசாரி இயக்கம் முழுவதும் தோல்வியை சந்தித்துள்ளது. இதனால்தான் பிரிட்டன் காலனியாதிக்க தேசிய ஒடுக்குமுறைக்கெதிரான இலங்கை மக்களின் தேசிய சுதந்திர போராட்டத்திலும் (வல்லரசு எதிர்ப்பு, தேசிய சுதந்திரம், தொழிலாளிவர்க்க ஒற்றுமை என கொள்கை முடிவுகளை முன்வைத்து 1938-ல் உருவான ட்ரொஸ்கியவாத கட்சியான L.S.S.P. யும், சூரியமல் இயக்கத்தை அடுத்து உருவான 1944-ல் இலங்கை கொம்யூனிஸ்ட் கட்சியும் (CPC யும்) பின்னர் 1948-க்கு பிந்தைய நவகாலனிய இலங்கையில் சிங்கள பௌத்த பேரினவாத அரசின் தேசிய இன ஒடுக்குமுறைக்கெதிரான தமிழ் தேசிய இன மக்களின் சுயநிர்ணய உரிமைக்கான - பிரிவினைக்கான போராட்டத்திலும் திசை வழியை தீர்மானிக்கும் தலைமை அரசியல் சக்தியாக இடதுசாரிகளால் மாறமுடியவில்லை. ஏன் போராட்ட திசைவழியில் தாக்கம் கொடுக்கும் இடையீடு செய்யும் சக்தியாக கூட தன்னை வளர்க்க முடியவில்லை என்பது கண்கூடு.

www.tamilarangam.net



இலங்கை கொம்யூனிச கட்சி 1947-ல் மலையகத் தமிழர்களின் வாக்குரிமை, குடியுரிமை பறிப்புக்கு எதிராகவும், 1956-ல் சிங்கள அரசக மொழிச் சட்டத்துக்கு எதிராக ''ஒரு மொழி இரண்டு நாடு, இரண்டு மொழி ஒரு நாடு'' பிரச்சார இயக்கத்தை நடத்தியதிலும், அதே ஆண்டு வல்வெட்டித்துறை மாநாட்டில் CPC மொழிக் கொள்கையை வற்புறுத்தியது, தமிழர்களுக்கு 'பிரதேச சுயாட்சியையும்' முன்வைத்தது பின்னர் குருச்சேவிய திரிபுவாத நிலைப்பாட்டில், பாராளுமன்ற வழியில் மூழ்கும் வரை தமிழ் முதலாளித்துவ கட்சிகளை விடவும் தேசிய இன ஒடுக்குமுறைக்கு எதிராக தேசிய சுயநிர்ணய உரிமையை முன் வைத்து போராடியது. திரிபுவாத நிலைப்பாட்டின்பின் 1970-களில் உருவான தரைப்படுத்தல் கல்விச் சட்டத்தை உருவாக்குவதில்CPC இன் பீற்றர் கெனமன் முக்கிய பங்கு வகித்தார். ட்ரொஸ்கியவாத கட்சியான L.S.S.P. ஆரம்பம் முதல் தமிழ் மக்களை ஒரு தேசிய இனமாக அங்கிகரிப்பதில், அவர்களது சுயநிர்ணய உரிமையை அங்கிகரிப்பதற்கு கூட மறுத்து வந்தது. இனவாத, மதவாத எதிர்ப்பை மட்டும் காட்டியது. சிறுபான்மை இன நலன்களுக்கு இருந்த உத்திரவாதம் அகற்றப்பட்டது. பௌத்த மதம் அரசு மதமானது) 1972-இன் அரசியல் யாப்பை வரைந்தது L.S.S.P இன் கொல்வின் ஆர்.டி. சில்வாவே, 1970-களில் SLFP 'தேசிய முதலாளித்துவ கட்சி' எனCPC, L.S.S.P. யில் பார்க்கப்பட்டது. S.L.F.P இவர்களின் கூட்டரசாங்கமே மேற்கண்ட அரசியல் யாப்பு ரீதியான தேசிய இன ஒடுக்குமுறையை ஊக்குவித்தது. இன்று வரை இக்கட்சிகளின் பாராளுமன்ற சோசலிச பாதை தேசிய இன ஒடுக்குமுறைக்கு பங்களித்து வருகிறது.

இந்த திரிபுவாத கட்சியும், ட்ரொஸ்கியவாத கட்சிகளும் தேசிய இனப் பிரச்சனையில் மட்டுமல்ல மக்களின் ஒட்டு மொத்த புதிய சனநாயக புரட்சி வழியிலும் துரோகம் இழைத்து நிற்கிறார்கள். இக்கட்சிகளின் துரோக நிலைப்பாடுகளையும், கூடவே J.V.P போன்ற குட்டி முதலாளிய சந்தர்ப்பவாத மார்க்சிய இயக்கங்களின் சிங்கள இனவாத பார்வை - அணுகுமுறைகளையும், 70-களின் நடுப்பகுதியில் உருவான N.S.S.P. இன் பாராளுமன்ற சந்தர்ப்பவாத நிலைப்பாடுகளையும் (இது தமிழர்களை தேசிய இனம் என்றும், தேசிய சுயநிர்ணய உரிமை உண்டு எனவும் கூறுகிறது) இவை அனைத்தையும் காட்டி முழு இடதுசாரி இயக்கத்தையும் தமிழர் விரோத இயக்கமாக கூறிய - தனித்தமிழீழ கோரிக்கையை முன்தள்ளிய PLOT, EROS, EPRLP, EPDP, TELO போன்ற குட்டி முதலாளிய சந்தர்ப்பவாத மார்க்சிய இயக்கங்கள் இன்று, தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்கு துரோகம் இழைத்து, இனவாத சிறீலங்கா அரசுக்கு அரசியல் ரீதியில் - இராணுவ ரீதியில் தேசிய - இன ஒடுக்குமுறைக்கு சேவகம் செய்கிறார்கள்.

www.tamilarangam.net



கொம்யூனிச சித்தாந்தத்துக்கும், கட்சிகளுக்கும் எதிராக ஆரம்பம் முதல் முதலாளித்துவ - வல்லரசிய சித்தாந்தம் நடத்திவரும் தாக்குதலின் வேகம், ரசிய, சீன கிழக்கு அய்ரோப்பிய முதலாளித்துவ மீட்சிகளுடன் உக்கிரப்படுத் தப்பட்டுள்ளது. சர்வதேசளவிலும், உள்நாட்டிலும் தேசிய இனப் பிரச்சனை யில் மார்க்சிய முகமூடி அணிந்த திரிபுவாத, ட்ரொஸ்கியவாத கட்சிகள், குட்டி முதலாளிய சந்தர்ப்பவாத இயக்கங்களின் துரோகத்தனமான வரலாற்று உதாரணங்களை காட்டி அதற்கான கோட்பாடுகளை உருவாக்கி "தேசிய இனப் பிரச்சனையில் மார்க்சியம் வழிகாட்டும் சக்தியை இழந்துவிட்டது" "தேசிய இனப்பிரச்சனை வர்க்கங்களுக்கு அப்பாற்பட்ட பொதுப்பிரச்சனை" மீண்டும் "கொம்யூனிசம் கதைப்பவர்கள் போராட்ட களத்தில் இல்லாதவர் கள்" - "பிழைப்பு வாதிகள் - மக்களை குழப்புபவர்கள்", "இடது சாரிகள் இனவாதிகளின் கூட்டாளிகள்" "கொம்யூனிஸ்டுக்கள் துரோகிகள் கையாலா காதவர்கள்" என உலகுதழுவியளவில் நடக்கும் கொம்யூனிச எதிர்ப்பு பிரச்சா ரத்தில் புலிகள் உட்பட தமிழீழ - சிறீலங்கா குட்டி முதலாளிய சக்திகள் கூட்டாக குரல் கொடுக்கின்றனர். வல்லரசுகளும், உள்நாட்டு தரகு வர்க்கங்க ளும் அரசும் இதுவரைகாலம் செய்துவந்த பிரச்சார இயக்கத்தில் இந்த 'தேசிய வாதிகளும்' உணர்வு பூர்வமாக பங்கு கொண்டுள்ளனர்.

தேசிய இனப்பிரச்சனையிலும் கொம்யூனிசத்தின் சரியான வழிகாட்டு தலை, இன்றைய தமது வர்க்க வாழ்நிலை நலன்களிலிருந்து எள்ளளவும் அனுமதிக்க முடியாத இச்சுரண்டும் வர்க்கங்கள் எல்லாம் தமது வர்க்க சித்தாந் தமும் அரசியலும் கொம்யூனிச சித்தாந்தத்தை, அரசியலை குழிதோண்டி புதைக்க எடுக்கும் பிரச்சாரங்கள், செயல் வினைகளில் கொம்யூனிச இயக்கத் தின் வரலாற்று ரீதியான பலயீனங்கள், தவறுகளின் சம்பவங்களை, இன்று நடக்கும் தேசிய இன போராட்டங்கள் - யுத்தங்களின் நமது செயல் வீச்சின் மையை ஒட்டு மொத்தமாக தொகுத்து தமது மூலோபாய ரீதியான சித்தாந்த தாக்குதலுக்கு பயன்படுத்துகிறார்கள். மக்களை திசைதிருப்புகிறார்கள்.

CPC இன் திரிபுவாதத்துக்கும், அதே நேரம் ட்ரொஸ்கிய வாதத்துக்கும் எதிரான சித்தாந்த போராட்டத்தை முன்னிறுத்தி உருவான CPC இடதும், இதனது சீன அல்பேனிய உதாரண ஒப்புவிப்பிலும், செயல்பாடற்ற தன்மையி லும் முரண்பட்டு உருவான இலங்கை புதிய சனநாயக கட்சியும் (NDP) தேசிய இனப்பிரச்சனையில் மீண்டும் CPC இன் ஆரம்பகால நிலைப்பாடுகளை முன் வைத்தன. திரிபுவாத கட்சியின், ட்ரொஸ்கியவாத கட்சியின் இனவாத சார்பு நடவடிக்கைகளை அம்பலப்படுத்தி எதிர்த்தன. ஆனால் தேசிய இனப்பிரச்ச னையை சிங்கள - தமிழ முதலாளிகளுக்கு இடையிலான உற்பத்தி சந்தைக் கான போட்டி என்றும், சிங்கள ஆளும் வர்க்கத்தின் இனவாத, மதவாத

www.tamilarangam.net



ஒடுக்குமுறைகளால் சிறுபான்மை தமிழ்த் தேசிய இனமும், சிறுபான்மை இந்து - இஸ்லாமிய மதங்களும் ஒடுக்கப்படுவதை பார்த்தனர். அதற்கெதிரான அவர்களது சனநாயக போராட்டங்களை ஆதரித்தன. இவற்றுக்கும் அப்பால் தேசிய இனப்பிரச்சனையானது எவ்வாறு நவகாலனி நாடுகளில் அதன் ஏற்றத் தாழ்வான சமூக பொருளாதார அரசியல் அதிகார அமைப்பு கட்டுமானத்தில் முக்கிய பிரச்சனையாக மாறுகிறது. இதை பாட்டாளி வர்க்க சக்திகள் எப்படி புரிந்து கொள்வது. வளர்ந்து கொண்டிருக்கும் பொருளாதார போட்டியில் வல்லரசுகள் கூட்டிணைந்துள்ள, அரசியல் அதிகாரத்தை பெற்றுள்ள தேசிய இன தரகு ஆளும் வர்க்கங்கள் மற்றைய தேசிய இன, மதச்சிறுபான்மையின, மொழிச்சிறுபான்மையின ஆளும் வர்க்கங்களுடன் நடக்கும் பொருளாதார போட்டியிலும் அரசியல் அதிகார போட்டியிலும் தங்களிடம் உள்ள அரசு அதிகார பலத்தை கொண்டு எவ்வாறு மேலாண்மை செலுத்த தொடங்குகிறது. இதற்கு இனவாதத்தை, மதவாதத்தை பிரதேசவாதத்தை எப்படி பயன்படுத்திக் கொள்கிறது, இந்த நிகழ்ச்சி போக்கில் தேசிய இன ஒடுக்குமுறையானது, மற்றைய தேசிய இனம், மத - மொழி சிறுபான்மையின மக்களது சமூக வாழ்வின் அனைத்து தளங்களுக்கும் எவ்விதம் விரிவடைகிறது. எவ்வகைப் பட்டதாக்கங்களை ஏற்படுத்துகிறது. நவகாலனிய சமூக கட்டுமானத்தில் வல்லரசுகளும் உள்நாட்டு ஆளும் வர்க்கமும் கட்டி வளர்க்கின்ற தேசிய ஒடுக்குமுறையானது அவ்வவ்நாடுகளிலுள்ள குறிப்பான வரலாற்று நிலைமைகளை ஒட்டி மற்றயை தேசிய இனங்கள் தொடக்கம் மிகமிகப் பின்தங்கிய பழங்குடி மக்களின் சமூக பொருளாதார அரசியல் பண்பாட்டு தளங்களிலும், நிலவுரிமைகளிலும் அவர்களது சுய அடையாளங்களை திட்டமிட்டு அழிக்கும் தேசிய ஒடுக்குமுறையாக வெளிப்படுகிறது. இன்றைய வல்லரசிய கட்டுமானம் பொருளாதாரம், அரசியல், பண்பாடு என உலகத்தை ஒரு குடைக்கு கீழ் மாற்றிக் கொண்டிருக்கிறது. வல்லரசியங்களின் தேசிய ஒடுக்குமுறையும், உள்நாட்டு தேசிய இன ஒடுக்குமுறைகளும், சுரண்டலும் உக்கிரப்பட்டு வருவது தவிர்க்க முடியாததாகியுள்ளது. இதனால் புதிய சனநாயகப் புரட்சியின் பகுதியாக தேசிய இனப் பிரச்சனை பொதுவாக கோட்பாட்டளவிலும், குறிப்பாக இலங்கையில் அது வெளிப்பட்டு வளர்ந்த விதத்தையும் ஆழமாக புரிந்து கொள்வதில், அல்லது புரிந்து கொண்டளவுக்கு கூட தேசிய ஒடுக்குமுறைக் கெதிரான போராட்டங்களை கொம்யூனிச கட்சியின் தலைமையில் முன்னெடுப்பதில் இரண்டு கொம்யூனிச கட்சிகளும் இன்றுவரை தோல்வியை தழுவியுள்ளது.

இந்த தேசிய ஒடுக்குமுறைச் சூழலையும் அதன் விளைவாக இங்கு உருவாகி வரும் 'சுதேசிய தேசிய வாதத்தையும்' கவனித்தால் சுரண்டும் வர்க்கங்களின் இன்னோர் முகமும் தெரியவரும். நவகாலனிய நாடுகளின் ஏற்றத்

www.tamilarangam.net



தாழ்வான சமூக பொருளாதார முறைமையும், கூடவே நவகாலனிய அரசு அதிகார வடிவமும் அதில் நிலவும் மொழிவழி மாநிலம் போன்ற அதிகார பரவல் முறையும் இவ்வடிவ ஆட்சியிலுள்ள ஒவ்வொரு தேசிய இனங்களின் சுரண்டும் வர்க்கங்களும் தமது மொழிவழி எல்லைக்குள் நடக்கும் பொருளாதார போட்டியில் தம்மை திடப்படுத்திக் கொள்ளவும், அவ்எல்லைக்குள் உள்ள மத-மொழிச் சிறுபான்மையின சுரண்டும் வர்க்கங்களை சில இடங்களில் மற்ற தேசிய இனங்களாகக் கூட போட்டியில் வெல்லவும், முக்கியமாக வல்லரசுகளுடன் அவற்றின் நிதி, தொழில், வணிக நிறுவனங்களுடன் நேரடியாக (மைய அரசு மூலமாக இல்லாது) கூட்டு வைத்து கொள்ளவும் முயல்கின்றன. அதன்மூலம் தமது சொந்த தேசிய இனத்தை சுதந்திரமாக தாமே சுரண்டவும், வல்லரசுகளின் தேசிய ஒடுக்குமுறை, சுரண்டலின் பங்கு போட்டு கொள்ளவும் ''மைய அரசின் தேசிய ஒடுக்குமுறைக்கெதிராக போராடுவது'' என்ற அறிவிப்புடன் 'சுதேசிய தேசியவாதத்தை' முன்னிறுத்துகின்றன. இத்தேசிய வாதத்தை வளர்க்க மொழி, இன, மத உணர்வை பயன்படுத்திக் கொள்கின்றன. காலனிய எதிர்ப்பு தேசிய சுதந்திரப் போராட்டத்தில் உள்நாட்டு முதலாளி வர்க்கம் செய்த போராட்டமும் துரோகம் ஒருவகை எனில் இன்றைய நவகாலனிய அமைப்பில் தேசிய இன ஒடுக்குமுறைக்கெதிராக 'சுதேசிய தேசியவாதத்தை' முன்னிறுத்தும் தேசிய இன முதலாளிவர்க்கம் செய்யும் போராட்டமும் - துரோகமும் இன்னொரு வகையானதாக இருக்கிறது. ஒடுக்கும் பெரும்பான்மை தேசிய இன ஆளும் வர்க்கத்துக்கும் - ஒடுக்கப்படும் சிறுபான்மை தேசிய இன சுரண்டும் வர்க்கங்களுக்கும் இடையிலுள்ள வேறுபாடு என்ன? முன்னது அரசு அதிகாரத்தை - மைய அரசு அதிகாரத்தை பெற்றுள்ளது. வல்லரசுகளுடன் முழுமையாக அய்க்கியப்பட்டுள்ளது. பின்னையது. மாநில அரசு அதிகாரத்துக்கும், வல்லரசுகளுடன் நேரடியாக அய்க்கியப் படவும் 'தேசியவாதத்தை' கையில் எடுத்துள்ளது. (சந்திரிகா அரசு முன் வைத்து அதிகார பரவலாக்க திட்டம் பற்றிய திருத்தம் - சேர்ப்பில் TULF, EPDP போன்ற கட்சிகள் வல்லரசுகளுடன் தொழில், வணிக கூட்டு நேரடியாக வைத்துக் கொள்ளும் உரிமை தமிழர்களுக்கு வேண்டும் என கோரியுள்ளது)

சிறீலங்கா அரசின் தேசிய இன ஒடுக்குமுறைக்கு எதிராக தமிழ் தேசிய இனத்தின் பெருமுதலாளிவர்க்கமும் - நிலவுடைமை வர்க்கமும், குட்டி முதலாளிய வர்க்கமும் கூட, அவ்வர்க்க நலனுக்காக நின்ற கட்சிகள் - இயக்கங்கள் மூலம் தமது சுரண்டும் வர்க்க அதிகார நலனிலிருந்து தேசிய இனப்பிரச்சனையை மக்களிடம் எடுத்துச் சொல்லவும், தீர்வுகளை முன் வைக்கவும் தொடங்கின. TULF போன்ற தமிழ் தரகு முதலாளிய கட்சியின் தேசிய ஒடுக்குமுறைக்கெதிரான சட்ட வரம்புக்குட்பட்ட போராட்டங்களை அரசியல் இரட்டை வேடங்களை விமர்சிக்கவும். சட்ட வரம்ப மீறிய போராட்டங்களுக்

www.tamilarangam.net



கும் குட்டி முதலாளிய வர்க்கம் தலைமை ஏற்க தொடங்கியது தேசிய இன ஒடுக்குமுறைத் தளத்தில் நடந்த அரசின் வன்முறை வடிவ அரசு இயந்திர நடவடிக்கைகளுக்கு பதிலடி கொடுக்க ஆயுதப் பேராட்ட வழியை, தனித்தமிழீழம் என்ற அரசியல் நிலைப்பாட்டை குட்டி முதலாளித்துவ இயக்கங்கள் முன்வைத்து செயற்பட தொடங்கியது.

சுரண்டப்படும் தமிழ் தொழிலாள - விவசாய வர்க்கத்தையும் பிரதேச வேறுபாடுகளால், சாதி ஒடுக்குமுறையால், ஆணாதிக்கத்தால் என சமூக ஒடுக்குமுறைக்குள்ளான பரந்துபட்ட மக்களையும் குட்டி முதலாளிய வர்க்க தலைமைகள் அணிதிரட்டின. திரிபுவாத கட்சிகளை, ட்ரொஸ்கிகட்சிகளை, கொம்யூனிச கட்சிகளை எல்லாமாக துரோகிகள், இனவாதிகள் என பிரச்சாரப்படுத்தியது. பிரிவினையை - தனித் தமிழீழத்தை ஆதரிக்காத அனைவரும் தமிழின விரோதிகள் என்றன. PLOT போன்ற இயக்கங்கள் A.E. குணசிங்க போன்ற இனவாத தொழிற்சங்க தலைவர்களை காட்டி குணசிங்காவை எதிர்த்து அம்பலப்படுத்திய இடதுசாரிக் கட்சிகளையும், தொழிற்சங்கங்களையும் கூட இனவாத சக்திகளாக பிரகடனப்படுத்தினர்.

தமிழ் சுரண்டும் வர்க்கங்களின் தேசிய இனப்பிரச்சனைக் கண்ணோட்டத்தை கொம்யூனிடுக்கள் ஓரளவு அம்பலப்படுத்தினர். ஆனால் தேசிய இன ஒடுக்குமுறைக்கெதிரான போராட்டங்களுக்கும் புதிய சனநாயகப் புரட்சியின் வளர்ச்சிகளும் இடையிலான உள்ளார்ந்த உறவுகளை புரியாததுடன், தேசிய இன ஒடுக்குமுறைக்கெதிரான மக்கள் இயக்கங்களுக்கு தாங்களே தலைமை கொடுக்க வேண்டும் என்பதில் தெளிவின்மையால் தேசிய இன ஒடுக்குமுறைக்கு முகங்கொடுத்த தமிழ் தொழிலாள - விவசாய வர்க்க மக்களிடம் கூட தேசிய ஒடுக்குமுறைக்கெதிரான இயக்கத்தை கட்ட தவறினர். இதன் விளைவு வடக்கில் சாதிஒடுக்கு முறைக்கெதிரான போராட்ட இயக்கத்தை 70-களில் பலப்படுத்தி வந்த கொம்யூனிச கட்சிகள், 80-களின் தொடக்கத்தில் தங்கள் தலைமையில் சாதி ஒடுக்குமுறைக்கும், சுரண்டல் அமைப்புக்கும் எதிராக கட்டிவளர்த்த கூலி விவசாயிகள் சங்கத்தை சேர்ந்த போராளிகளை, தேசிய ஒடுக்குமுறைக்கு எதிராக இயக்கத்தை கட்டிவந்த குட்டி முதலாளிய சந்தர்ப்பவாத மார்க்சிய இயக்கங்ளிடம் பறி கொடுத்தனர்.

அந்தளவுக்கு கொம்யூனிச கட்சிகள் சுயநிர்ணய உரிமையை ஆதரிப்பது என்ற சுலோகத்துடன், தேசிய இனப்பிரச்சனை தூய்மையான வர்க்கப் போராட்டத்தின் மூலம் தீர்க்கப்படும் என்ற வரட்டுவாத பார்வையை கொண்டிருந்தனர். தமிழ் தேசியவாத இயக்கங்களை விமர்சிப்பதுடன் தேசிய இனப் பிரச்சனையில் கொம்யூனிஸ்டுகளின் கடமையில் கோட்டை விட்டார்கள். கூடவே தேசிய இன ஒடுக்குமுறை தமிழ் தேசிய இனத்தின் அனைத்து வர்க்

www.tamilarangam.net



கங்களின் சமூக வாழ்நிலைமையிலும் தனது கொடூர வடிவத்தை வெளிப்படுத்தியது. அரசின் திட்டமிட்ட இனக்கலவரங்கள், சொந்த மண்ணில் தமிழர்களை அகதிகளாக்கியது; உயிர்கள், உடமைகள் எரித்து, சூறையாடப்பட்டன. பெண்கள் பலாத்காரப்படுத்தப்பட்டார்கள். இன்ன பிற....

தமிழ் தேசிய இனம் சுயநிர்ணய உரிமை அடிப்படையில் பிரிவினைக்கான குறிப்பான அரசியல், வடிவத்தை எட்டிய நிலையிலும் இது பற்றிய தர்க்கங்கள் கொம்யூனிச கட்சிகளுள் தொடங்கியது. நவகாலனிய இலங்கை சமூக அமைப்பில் தேசிய இனப் பிரச்சனையின் குறிப்பான நிலைமைகளை ஆய்வு செய்து, அதற்கான போராட்ட வழியை முன்வைப்பதற்கு அதாவது இலங்கை புதிய சனநாயகப் புரட்சி திட்டத்தின் ஒரு பகுதியாக தமிழ் தேசிய இனமக்களின் பிரிவினைக்கான தேசிய விடுதலைப் போராட்டத்தையும் முன்வைத்து அதற்கு பாட்டாளி வர்க்கம் தலைமை தாங்குவதுடன் தமிழீழ மக்களின் சிறீலங்கா இனவாத அரசு எதிர்ப்பு போராட்டத்தை வல்லரசு எதிர்ப்பு போராட்டமாக முன்னெடுப்பதும், அதேவேளை சிறீலங்கா மக்களின் ஆளும் வர்க்க இனவாத அரசு எதிர்ப்பு, வல்லரசு எதிர்ப்பு போராட்டங்களை, இந்திய விரிவாதிக்கத்துக்கு எதிரான தமிழீழ - சிறீலங்கா மக்களின் போராட்டங்களை அவற்றுக்கே உரித்தான தனித்துவமான அரசியல், கோரிக்கைகள் - அமைப்பு வடிவங்களுடன் எவ்வாறு பாட்டாளி வர்க்க கட்சி தலைமை தாங்க முடியும் என சிந்திப்பதற்கு பதிலாக பிரிவினை பற்றி கதைத்த கொம்யூனிஸ்டுகளை தமிழ் முதலாளிய தேசிய வாதத்துக்கு, இன உணர்வுக்கு பலியாகிவிட்டதாக, இரையாகிவிட்டதாக முத்திரை குத்தமட்டுமே இத்தலைமைகளால் முடிந்தது.

பெரும்பான்மை தேசிய இனமான சிங்கள மக்கள் மத்தியில் புரட்சிகர இயக்கத்தை கட்டி சிறீலங்கா அரசின் இன, மதவாத கொள்கையை தோற்கடிக்கலாம், மோசமான பொருளாததர சுரண்டல், சமூக ஒடுக்குமுறையை எதிர்கொள்ளும் மலையகத் தோட்ட தொழிலாளர்கள் மத்தியில் வேலை செய்வது புரட்சிகர இயக்கத்தின் அடித்தளமிடும் வேலை எனவும் முன்வைத்த கொம்யூனிச கட்சி தலமை தேசிய இன ஒடுக்குமுறைக்கெதிராக தமிழ் மக்கள் மத்தியில் இயக்கத்தை கட்டுவதுதான் தேசிய இன ஒடுக்குமுறையாளர்களான சிறீலங்கா அரசை வல்லரசுகளை எதிர்ப்பதற்கான பிரதான தளமாகும். என்பதை மறந்ததா? மற்றைவை தேசிய இன ஒடுக்குமுறையை எதிர்ப்பதற்கான இரண்டாம் நிலைத் தளங்களும் பக்க துணைத் தளங்களுமாகும். தேசிய இனப் பிரச்சனையை - புதிய சனநாயக புரட்சி போராட்டத்துடன் இணைப்பதிலுள்ள புரிதல் இன்மை, தேசிய ஒடுக்குமுறைக்கெதிரான மக்கள் இயக்கங்களை கட்டுவதில் உள்ள தவறுகளால் இக் கொம்யூனிசக் கட்சிகளால் தமிழீழ

www.tamilarangam.net



பகுதிகளில் சுயநிர்ணய உரிமைக்கான மக்கள் இயக்கத்தை கட்டவும் முடிய வில்லை. தமிழீழ குட்டி முதலாளிய இயக்கங்களின் வளர்ச்சியிலும், வீழ்ச்சியி லும் இடையீடு செய்யவும் முடியவில்லை. அதுமட்டுமல்ல இன்றுவரை சிறீலங்கா அரசுக்கு எதிராக வல்லரசுகளுக்கு எதிராக, சிறீலங்கா மக்களை அணிதிரட்டி குறைந்தது நிர்ப்பந்தம் கொடுக்கும் கட்சிகளாக மாறவும் முடிய வில்லை. J.V.P போன்ற குட்டிலமுதலாளிய இனவாத இயக்கங்களின் எழுச்சி - வீழ்ச்சிகளிலும் இடையீடு செய்யவும் முடியவில்லை என்தே கொம்யூனிஸ் டுக்களின் எதார்த்த நிலைமையாகவுள்ளது.

தமிழ் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்தில் கொம்யூனிச கட்சிகளின் செயற்பாடற்ற தன்மையை விமர்சித்து, பிரிவி னையை எதிர்ப்பது சுயநிர்ணய உரிமைக்காக போராடுவது என்ற நிலைப்பாட் டில் உருவாக தமிழ் மக்கள் பாதுகாப்பு பேரவை என்ற அமைப்பும், அதே போன்று 78-ல் உருவான தமிழ் மக்கள் சனநாயக முன்னணியும் M.L சக்திகளால் உருவாக்கப்பட்டது.

இதில் தமிழ் மக்கள் சனநாயக முன்னணி, 1981-இல் நடந்த தேசிய மாநாட்டில் தமிழமீ தேசிய விடுதலை முன்னெடுக்கும் (பிரிவினையை அங்கி கரிக்கும்) இயக்கமாக தமிழீழ தேசிய விடுதலை முன்னணியாக N.L.F.T மாறி யது. அதற்கான அரசியல் திட்டத்தையும் முன் வைத்தது. இத்திட்டத்தில் பாரிய முரண்பாடு இன்றி அமைப்பு கட்டுவது பற்றிய வேறுபாடுகளால் 1985 தமிழீழ மக்கள் விடுதலை முன்னணி (P.L.F.T.) உருவானது. மார்க்சிய - லெனி னிய மாஓ சிந்தனையை, கொம்யூனிச கட்சிதலைமையை ஏற்றுக் கொண்ட இவ்வமைப்புகள் (T.M.P.P., N.L.F.T., P.L.F.T.) கூட தேசிய இனப் போராட்டத் தில் தாக்கமிக்க பங்களிப்பை செய்ய முடியாமல் போனதும் 87-க்கு பின் செயற்பாடற்ற தன்மைக்குள்ளானதும் கவனத்தில் கொள்ளப்படவேண்டும்.

குட்டி முதலாளிய - சுத்த இராணுவ இயக்கங்களின் தேசிய விடுதலைக் கான அரசியல் திட்டத்தை விட இவ் அமைப்புகளின் அரசியல் திட்டம் புரட்சி கர தன்மையை கொண்டிருந்தது. ஆனால் ஒரு தேசிய விடுதலை இயக்கம் என்ற மட்டத்துக்கு கூட இவை தம்மை வளர்த்து கொள்ள முடியாமல் போன தற்கான அமைப்பு கண்ணோட்டங்கள் நடைமுறை வேலைகள் பற்றி பார்க்க வேண்டியுள்ளது. அதேவேளை இவ் அமைப்புக்கள் கொம்யூனிச கட்சியின் தலைமையை ஏற்றுக் கொண்டபோதிலும் கட்சிக்கான சித்தாந்த, அரசியல், அமைப்பு அடிப்படைகளை வரையறுத்து முன்வைக்கவில்லை என்பதை யும், கட்சி கட்டப்படவில்லை என்பதை பார்க்க முடிகிறது. ஏனெனில் முன்ன ணிகள் மாற்றமடைந்தும் பின் உடைந்து புதிதாக உருவானபோதும் கட்சி ஒன்று இருந்திருந்ததால் அங்கு தான் இவற்றின் தாக்கம் முதலில வெளிப்பட்

www.tamilarangam.net



டிருக்கும். கட்சி ஒன்றை கட்டவேண்டும் என கூறிக் கொண்டு கட்சியை கட்டுவதன் பிரதான கடமையை கைவிட்டு அல்லது இரண்டாம் பட்சமாக கருதிக் கொண்டு முன்னணிகளை கட்டி வளர்ப்பதானது. முன்னணியே கட்சியாகவும் கருதப்படும் நிலைக்கு கொண்டு செல்லும் சித்தாந்த அரசியல் அமைப்பு கண்ணோட்டங்களில் அன்னிய வர்க்க பார்வைகள் ஆளுமை செலுத்தும் சுயநிர்ணய உரிமைக்காக வாதிட்ட சிலரை தொடர்சியான யுத்தம் தனிநாட்டு விடுதலையின்பக்கம் கொண்டு சென்றிருக்கிறது. அதேபோல் பிரிவினைக்காக குரல் கொடுத்து போராடிய பலரை குட்டி முதலாளித்துவ இயக்கங்களின் வீழ்ச்சியும், நீடித்த யுத்தமும் பலரை சுயநிர்ணய உரிமையின் பக்கம் இழுத்து சென்றுள்ளது. குட்டி முதலாளிய இயக்கங்களின் எழுச்சியிலிருந்து பிரிவினையை எதிர்ப்பதும் பாட்டாளிவர்க்க சக்திகளை புரட்சிகர தேசபக்த சனநாயக சக்திகளை சந்தர்ப்பவாத நிலைப்பாட்டுக்கு தள்ளிவிடும். எனவே இலங்கையின் குறிப்பான சூழ்நிலைமையில் தமிழ் தேசிய இனம் பிரிந்து செல்வது என்ற குறிப்பான நிலைப்பாட்டிலிருந்து போராடுகிறது என்பதை பாட்டாளி வர்க்க இயக்கம் கோட்பாடு ரீதியாக முன்னிறுத்தி செயல்பட வேண்டியுள்ளது.

தேசிய இனப்பிரச்சனை இடது சாரி இயக்கங்களின் தோல்விக்கான காரணங்களை கண்டறிவதும் இக்கடமையை செய்வதானது தேசிய இனப்பிரச்சனையில் இலங்கை கொம்யூனிச இயக்கத்தின் தவறுகளை சரி செய்வதால் மட்டும் நடந்தேறிவிடாது. முக்கியமாக கட்சியின் அடிப்படையான தத்துவ சித்தாந்த அரசியல் அமைப்பு கண்ணோட்டங்களில் உள்ள பாட்டாளி வர்க்க விரோத மார்க்சிய லெனினிய மாஓ சிந்தனைக்கு புறம்பான கண்ணோட்டங்களை, அன்னிய வர்க்க போக்குகளை, முறியடித்து புரட்சிகரமான பாட்டாளி வர்க்க சித்தாந்த அரசியல அமைப்பு வழியை முன்வைக்க வேண்டியுள்ளது. இலங்கையின் மார்க்சிய - லெனினிய மாஓ சிந்தனைசக்திகள் தேசிய இனப்பிரச்சனை கூர்மையடைந்து - யுத்தமாக மாறியுள்ள சூழ்நிலைமையில், புரட்சிகர கொம்யூனிச கட்சி ஒன்று இல்லாத நிலையில் கொம்யூனிச கட்சியையும் அதன் தலைமை வழிகாட்டலில் தேசிய இன விடுதலைக்கான முன்னணியையும் சமகாலத்தில் கட்டி வளர்ப்பது எவ்வாறு என்ற அரசியல் அமைப்பு கேள்விக்கு மிக முன்னேறிய கொள்கையை முன்வைத்து செயல்படுவதால் மட்டுமே தீர்க்கப்படமுடியும். இடதுசாரி இயக்கத்தில் வெளிப்பட்டுள்ள குருச்சேவிய திரிபுவாதம், ட்ரொஸ்கியவாதம் டெங்கின் நவீன திரிபுவாதம் இவற்றுக்கு எதிரான உறுதியாக சமரசமற்ற சித்தாந்த போராட்டமே மேல் கண்ட கேள்விக்கு முன்னேறிய கொள்கையை வகுக்க உதவும். அதுதான் பாட்டாளி வர்க்க புரட்சியாளர்களின் முதல் கடமை புரட்சி கட்சியை கட்டுவதற்கான அடிப்படை இதுதான்.

www.tamilarangam.net



★ மார்க்சிய - லெனினிய - மாஓ சிந்தனை வழியில் தேசிய இன விடுதலைப் போராட்டங்களை முன்னெடுப்போம்.!

★ தேசிய இனப் பிரச்சனையில் திரிபுவாத வழிகளை முறியடிப்போம்!

★ தேசிய இனங்களின் தேசிய சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை அங்கீகரிப்போம்!

★ தேசிய சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை வல்லரசு எதிர்ப்பு போராட்டமாக முன்னெடுப்போம்!

★ சர்வதேச அளவில் ஒடுக்கப்படும் தேசிய இனங்களின் போராட்டங்களுடன், கூட்டிணைவோம்!

★ இந்திய விரிவாதிக்க அரசுக்கு எதிரான அனைத்து தேசிய இனப் போராட்டங்களுடன் ஒன்றுபடுவோம்!

★ சிறிலங்கா, சிங்கள பௌத்த பேரினவாத அரசுக்கு எதிராக தமிழீழ மக்களின் தேசிய இன விடுதலைப் போராட்டத்தை தொடர்வோம்.

அரசியல் தலைமைக் குழு
பாட்டாளி வர்க்க முன்னணி கழகம்
இலங்கை.

www.tamilarangam.net



# தேசிய இனப்பிரச்சனை பற்றிய சர்வதேச கருத்தரங்கு

கடந்த மாசிமாதம் 16-ம் திகதி தொடக்கம் 19-ம் திகதி வரை நான்கு நாட்கள் இந்திய தலைநகரான புதுதில்லியில் ''அகில இந்திய மக்கள் போராட்டக் கூட்டமைப்பால்'' (All India People's Resistance Forum) (AIPRF) தேசிய இனப் பிரச்சனை பற்றிய சர்வதேசக் கருத்தரங்கம் ஒன்று கூட்டப்பட்டது. இதற்கு பல நாடுகளில் இருந்தும் பொதுவுடமை இயக்கத்தவர்களும், சிந்தனையாளர்களும், மற்றும் இந்திய அளவில் தேசிய விடுதலைப் போராட்டம் நடைபெறும் மாநிலங்களில் உள்ள தே.வி. இயக்கங்களின் போராளிகளும், மா.லெ. இயக்கங்களும், சிந்தனையாளர்களும் மற்றும் பலரும் கலந்து கொண்டனர். பலர் தமது கருத்துக்களை நேரடியாக கூறியும் கட்டுரைகளையும் படித்தனர். சிலர் கட்டுரைகளை அனுப்பியும் வாழ்த்தும் தெரிவித்து இருந்தனர். கருத்தரங்க மண்டபத்திற்கு 1995 கார்த்திகையில் நைஜீரிய இராணுவ ஆட்சியாளர்களால் தூக்கிலிடப்பட்ட கவிஞரும் நாடக ஆசிரியரும், எழுத்தாளருமான ''கென்சரோவிவாவிவா'' பெயர் சூட்டப்பட்டிருந்தது.

இக் கருத்தரங்கை வில்லியம் ஹின்டன் ஆரம்பித்து உரையாற்றினார். இவர் 'நூறுநாட்கள் யுத்தம்', 'மாபெரும் பின்னடைவு', 'ஆழமாக உழுதல்' போன்ற நூல்களை எழுதியுள்ளார். ''புரட்சிகர அமெரிக்க கம்யூனிஸ்ட் கட்சி'' யின் தொடர்பாளர் 'ரேமன் லோட்டா', 'பெல்ஜியம் தொழிலாளர் கட்சி'யைச் சேர்ந்த 'ஜோ கொண்டையினர்', 'குர்திஸ்தான் தொழிலாளர் கட்சி' சார்பில் 'பாரூக்டோர்', பிலிப்பைன்ஸ் சிந்தனையாளர் 'லூயிஸ் ஜெலான்டொனி', மற்றும் கென்ய பேராசிரியர் 'கூகி வாடியாங்கோ' போன்றவர்கள் தமது கருத்துக்களையும், கட்டுரைகளையும் படித்தனர். இதைவிட நேபாளம், பாகிஸ்தான், இலங்கை, ஈழம் போன்ற நாடுகளில் இருந்து பொவுடமை இயக்கத்தவர்களும், கருத்தரங்கில் கட்டுரைகளை வாசித்தனர். இத்துடன் AIPRF சார்பில் ''இந்தியாவில் தேசிய இனப்பிரச்சினை'', என்ற கட்டுரையும் 'உலகமயமாக்கல்', 'கட்டுமானசீரமைப்பு', 'தேசியப் பிரச்சனை' என்ற கட்டுரையும் படிக்கப்பட்டது. இவற்றுடன் இந்திய அளவில் காஷ்மீர், பஞ்சாப், நாகலாந்து, அசாம், ஜார்க்கண்ட், உத்தரகாண்ட், கூர்கலாந்து, சதீஸ்காட், கர்நாடகா போன்ற பகுதிகளிலிருந்து தேசிய விடுதலைப் போராளிகளும் கருத்தரங்கில் கட்டுரைகளைப் படித்தனர். சிறைக் கைதிகளாக இருக்கும் ஆந்திராவின் பொதுவுடமைப் புரட்சியாளர்களும் (மக்கள் யுத்தம்) ஒரு கட்டுரையை கருத்தரங்கில் அனுப்பி இருந்தனர். பிலிப்பைன்ஸ் கொம்யூனிஸ்ட் கட்சியை சேர்ந்த

www.tamilarangam.net



'ஜோஸ் மரியா சிசனின்' ''பிலிப்பைன்ஸ் புரட்சிகர இயக்கமும் தேசிய இனப் பிரச்சனையும்'' என்ற கட்டுரையும் கருத்தரங்கில் படிக்கப்பட்டது.

தமிழீழத்தில் இருந்து ''பாட்டாளி வர்க்க முன்னணியினர் கழகத்தால்'' (PROVO) ''சமகாலத்தில் தேசிய விடுதலைப் போராட்டங்கள்'' என்ற கட்டுரையும், ''தமிழீழ விடுதலை அணி''யின் செயலாளரான திரு ஈழவேந்தன் அவர்களால் ஒரு கட்டுரையும் படிக்கப்பட்டது. இந்த கருத்தரங்கில் 'விடுதலைப் புலிகள் இயக்கம்' பங்கு பற்றாமல் போனது மிகப் பெரும் குறையாக இருந்தது. தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் அன்றில் இருந்து இன்றுவரை சந்தர்ப்பவாத அரசியல் நடத்தும் திரு ஈழவேந்தன் தானே புலிகளின் பிரதிநிதி என்ற கருத்துப்பட பேசியும் அவ்வாறே நடந்து கொண்டதும் அவதானிக்க முடிந்தது. தமிழீழ மக்களும் புலிப் போராளிகளும் இந்திய ஆக்கிரமிப்பை எதிர்த்து நடாத்திய வீரம் செறிந்த போராட்டத்தையும், இழப்புக்களையும் தியாகங்களையும் வசதியாக (பிழைப்புக்காக) மறந்து மீண்டும் இந்தியரசின், தலையீடு பற்றியும் இந்திய அரசின் அயலுறவுக் கொள்கை பற்றியும் இருந்த இவரின் பேச்சு, கருத்தரங்கில் கலந்து கொண்டவர்களால் உன்னிப்பாக அவதானிக்கப்பட்டது. இந்திய அரசு பற்றியும், அய்.நா. சபை பற்றியும் அவரின் கண்ணோட்டமும் கருத்தும் தமிழீழத்தையும் - சிறீலங்காவையும் விரிவாதிக்க இந்தியாவிடமும், வல்லரசுகளிடமும் அடகு வைக்கும் அறைகூவலாக இருந்தது. (அய்நா சபையில் தமிழீழக் கொடியை ஏற்றி வைத்த தமிழர்கள் நாங்கள் என்றும் பல புளுகு மூட்டைகளையும் அவிழ்த்து கொட்டினார். இது விடுதலைப் புலிகளின் ஆதரவாளரான அமெரிக்காவில் வசிக்கும் திரு. வைகுந்தவாசன் அவர்களின் கவனத்திற்கு)

கருத்தரங்கின் இறுதி நாளன்று 3 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. காஷ்மீர் போராளிகளின் முன்மொழிதலுக்கு இணங்க,

1. மாசி 18-ம் திகதியை தேசிய இன விடுதலைப் போராட்டங்களின் ஆதரவு நாளாகக் கடைப்பிடிப்பது.
2. மற்றும் பகத்சிங் பாராளுமன்றத்தில் குண்டு வீசிய நாளை 'ஏகாதிபத்திய எதிர்ப்பு' நாளாக கொண்டாடுவது' என்றும்
3. AIPRF உம் தேசிய இன விடுதலைக் குழுக்களும் இணைந்து போராட விரிந்த மேடை ஒன்று அமைப்பது என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

தேசிய இன விடுதலைப் போராளிகளும், பொதுவுடமை இயக்கப் பிரதிநிதிகளும், தேசிய இனப் பிரச்சனையில் அக்கறையுள்ள அறிவாளிகளும் என எல்லோரும் சேர்ந்து தத்தமது தேசிய இன விடுதலைப் போராட்டங்கள் பற்றியும், தேசிய இனப் பிரச்சனை குறித்த கண்ணோட்டங்களையும் பரிமாறிக் கொண்டனர். பரஸ்பரம் உறவுகளை ஏற்படுத்திக் கொண்டனர்.

www.tamilarangam.net



கருத்தரங்கில் கலந்து கொண்ட பொதுவுடைமையாளர்களுக்கு இடையிலும், பொதுவுடமையாளர்களுக்கும் தேசிய இன விடுதலைப் போராளிகளுக்கும் இடையிலோ உலகளவில் இன்றைய தேசிய இனப் பிரச்சனையை நோக்குவதிலும், தேசிய இன விடுதலைப் போராட்டங்களை அணுகுவதிலும் ஒரு பொது அடிப்படை எட்டப்படவில்லை. வல்லரசியங்களுக்கு எதிராகவும், தெற்காசியாவில் இந்திய விரிவாதிக்கத்திற்கு எதிராகவும் போராடும் தே.வி. இயக்கங்கள் ஒன்றுபட்டு நிற்பதற்கான பொது அடிப்படைகளை கருத்தரங்கின் தீர்மானங்களாக நிறைவேற்றி இருந்தால் AIPRF இன் முன் முயற்சி இன்னும் சிறப்பாக அமைந்திருக்கும்.

"ஆனந்தன்"

---

**இக்கருத்தரங்கிற்கு 'பாட்டாளி வர்க்க முன்னணியினர் கழகம்' முன்வைத்த "சமகாலத்தில் தேசிய இனவிடுதலைப் போராட்டங்கள்" கட்டுரை இணைக்கப்பட்டுள்ளது**

---

# மேதின சர்வதேசக் கருத்தரங்கு 1996

சர்வதேசளவில் 11 கொம்யூனிச கட்சிகள் இணைந்து உருவாக்கியுள்ள "ஜொயின்ட் கோர்டினேஷன் குருப் ஒப் இண்டர்நேஷனல் கொன்பரன்ஸ் ஒப் மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட் பார்ட்டிஸ் அண்ட் ஓர்க்கனைஷேசன்" என்ற அமைப்பு. 1995 மே சர்வதேச கருத்தரங்கின் முடிவில் 04.05.95-ல் "சர்வதேச கொம்யூனிச இயக்க ஒற்றுமைக்கான தீர்மானங்களை" நிறைவேற்றியிருந்தது. பின் 1995 ஆடி மாதம் நடந்த 11 கட்சிகளின் கூட்டத்தில் 1996 மே தின சர்வதேச கருத்தரங்கை பெல்ஜியம் நாட்டில், பெல்ஜியம் தொழிலாளர் கட்சியின் பெரும் பங்களிப்புடன் நடத்த தீர்மானித்தது. "புதிய உலக ஒழுங்கமைப்புக்கு எதிரான ஏகாதிபத்திய எதிர்ப்பு போராட்டங்கள்" என்ற பிரதான தலைப்பில் மூன்றுநாள் சர்வதேச கருத்தரங்குக்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

இக்கருத்தரங்குக்கு இலங்கையிலிருந்து பாட்டாளி வர்க்க முன்னணியினர் கழகம் Provo வை அழைத்திருந்தனர். பல காரணங்களினால் நமது பிரதிநிதிகள் நேரடியாக கலந்து கொள்ள முடியவில்லை. அக்கருத்தரங்குக்கு அரசியல் தலைமைக் குழுவால் செய்தி அனுப்பப்பட்டது. தோழமையுடன் பெல்

www.tamilarangam.net



ஜியம் தொழிலாளர் கட்சியின் மத்திய கொமிட்டிக்கும் 1996 மே தின சர்வதேச கருத்தரங்கு அமைப்பு கொமிட்டிக்கும், நமது புரட்சிகர வாழ்த்துக்கள்.

மே தின சர்வதேச கருத்தரங்கு குறித்த தங்களது அழைப்பு அறிக்கை கிடைத்தது மிக்க மகிழ்ச்சி.

தங்களது ''சர்வதேச கொம்யூனிச இயக்க ஒற்றுமைக்கான அறிக்கையும்'' பெற்றுக் கொண்டோம். அதில் பெரும்பாலானவை ஏற்புடையதாகவுள்ளது. சில விடயங்கள் தொடர்ந்து விவாதிக்கவும் ஆய்வுக்குட்படுத்தவும் வேண்டி யுள்ளது.

சர்வதேச கொம்யூனிச இயக்க வரலாற்றில், இன்றைய சர்வதேச சூழ்நி லைமையானது என்றும் இல்லாதளவுக்கு ஒவ்வொரு நாட்டு கொம்யூனிச கட்சிகள், அமைப்புக்களை சர்வ தேச ரீதியாக தொடர்புபடுத்தவும், சர்வதேச கொம்யூனிச இயக்கத்தின் ஒற்றுமையின் அவசியத்தை புறநிலையிலும், அக நிலையிலும் வலியுறுத்துகின்றது. மீண்டும் இதற்கான அடித்தளமிடலை, ஒற்றுமைக்கான முயற்சிகளை தூண்டியுள்ளது.

முதலாவது, இரண்டாவது அகிலமும், சோவியத் புரட்சிக்கு பின் உரு வான மூன்றாவது அகிலம் சர்வதேச கொம்யூனிச இயக்கத்தின் ஒற்றுமைக்கு பொதுவழியாக முன்வைத்த சித்தாந்த, அரசியல், அமைப்பு அடிப்படை களை நாம் தொகுத்து பார்க்க வேண்டியுள்ளது.

மூன்றாவது அகிலத்தின் கலைப்புக்கு பின் உருவாக்கப்பட்ட 'கொமின் போமும்' அதன் பருண்மையான நிகழ்வுகளையும் அடுத்து குருச்சேவிய திரிபு வாதத்துக்கு எதிரான மாபெரும் விவாதமும், அதன்மூலம் சர்வதேசளவில் கொம்யூனிச இயக்கத்தில் பிளவுகளும் - அணிசேர்க்கைகளும் நடந்தன. இதன் பின் சர்வதேச கொம்யூனிச இயக்க ஒற்றுமையை கட்டிவளர்ப்பதில் வெளிப் பட்ட பிரச்சனைகளை கோட்பாட்டளவிலும், நடைமுறைரீதியிலும் ஆழ்ந்து கவனிக்க வேண்டியுள்ளது.

கொம்யூனிச இயக்க ஒற்றுமையை மீண்டும் கட்டியமைப்பது. குருச்சே விய - டெங்திரிபுவாத வழியையும், அல்பேனிய திசைவிலகலையும் எதிர்ப் பது என்ற நிலைப்பாடுகளுடனும், 1984களில் உருவான சர்வதேச புரட்சிகர இயக்கத்தின் (Rim) சித்தாந்த, அரசியல் அமைப்பு அடிப்படைகளையும் இன்று கூர்ந்து கவனிக்க வேண்டிய நிலை உள்ளது.

மூன்றாவது அகிலத்திலும், ''கொமின் போமிலும்'' நேரடிப் பங்கு வகித்த அனுபவம் இலங்கை கொம்யூனிச கட்சிக்கு உள்ளது. மாபெரும் விவாதத்தின் பின் நடந்த சர்வதேச கொம்யூனிச இயக்க ஒற்றுமைக்கான முன் முயற்சிகளில் ஈடுபட்ட அனுபவமும், சர்வதேச புரட்சிகர இயக்கத்தின் உரு

www.tamilarangam.net



வாக்கத்தில்(Rim) இருந்து இன்றுவரை பங்கு வகிக்கும் இலங்கை கொம்யூனிச் கட்சி (மாவோயிஸ்ட்) இன் நேரடி அனுபவமும், இன்று CPC M.L.M. சக்திக ளால் கூர்மையான ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு வருகிறது.

இன்று உலகளவில் நடந்து கொண்டிருக்கும் சர்வதேச கொம்யூனிச இயக்க ஒற்றுமைக்கான சில முன் முயற்சிகளில் தங்களது முயற்சியையும் பார்க்க முடிகிறது. இதில் சர்வதேச கொம்யூனிச இயக்க பொதுவழியை உயர்த் திப் பிடிக்கவும், மார்க்சிய லெனினிய மா ஓ சிந்தனை வழியில் பொதுவ ழியை மேலும் வளர்க்கவும், அமைப்பாக்கல் வழியை செழுமைப்படுத்தவும் எங்களாலான பங்களிப்பை செய்யத் தயாராகவுள்ளோம். இந்த அடிப்படை யில் பொதுவழி பற்றிய பார்வையிலும் அமைப்பாக்கல் முன்முயற்சியிலும் நிலவும் குறுகிய நலன் மற்றும் தாராளவாத அணுகுமுறைகளை, அவற்றின் அரசியல் - அமைப்பு திசைவிலகலுக்கு எதிராக உறுதியான சித்தாந்த போராட் டத்தை நடத்தவேண்டியுள்ளது. அதன்மூலம்தான் உலகளவில் உண்மையான மார்க்சிய லெனினிய கட்சிகள், அமைப்புக்களின் சர்வதேசிய கொம்யூனிச இயக்க ஒற்றுமையை உருவாக்க முடியும்.

அமெரிக்கா தலைமையிலான ஏகாதிபத்தியங்களின் 'புதிய உலக ஒழுங்க மைப்பும்' சமூக பொருளாதார கட்டமைப்பும் ஒரு பக்கம், சோவியத்திலும், கிழக்கு அய்ரோப்பாவிலும், சீனத்திலும் நடந்த முதலாளித்துவ மீட்சியும், 90-களின் பின் இந்நாடுகளில் அம்மணமாக வெளிப்பட்ட முதலாளித்துவ சமூக பொருளாதார - அரசமைப்பு முறைகளும் இன்றைய சர்வதேச சூழ்நிலை மையில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது.

உலகளவில் தொழிலாளர்களின் - விவசாயிகளின், ஒடுக்கப்படுகின்ற தேசங்களின் புரட்சிகர போராட்டங்களின் குரல் வளையானது. அதனது புரட் சிகர சித்தாந்த அரசியல், முதலில் முதலாளித்துவ, திரிபுவாத, சீர்திருத்தவாத சித்தாந்தங்களால் திசை திருப்பப்படுகிறது. பின் மக்களின் நடைமுறை எழுச்சி போராட்டங்கள் ஏகாதிபத்திய பிற்போக்கு அரசுகளால் அடக்கி ஒடுக் கப்படுகிறது.

ஏகாதிபத்தியமும் - பாட்டாளிவர்க்க புரட்சியுமான இச்சகாப்தம். ஏகாதி பத்தியங்களின், நவகாலனி நாடுகளின் சுரண்டல் பொருளாதார அரசியல் கட்டுமானத்தை அரசு அதிகார அமைப்பு முறையை, கொம்யூனிச சித்தாந்தத் தால் - கட்சியால் மட்டுமே வேரோடும் வேரடி மண்ணோடும் நிர்மூலமாக்க முடியும். மாற்றாக சோசலிச - புதிய சனநாயக சமூக பொருளாதார அரசியல் பண்பாட்டுக் கட்டமைப்பை பாட்டாளிவர்க்க சர்வாதிகார அரசு அமைப்பு முறையை உருவாக்கமுடியும். பாட்டாளி வர்க்கம் மீண்டும் இதைச் செய்ய வேண்டுமாயின் முதலில் தான் தனக்கே உரித்தான வர்க்க சித்தாந்தத்தை,

www.tamilarangam.net



அரசியலை வர்க்கப் போராட்டத்தின் ஊடாக இறுகப் பற்றிக் கொள்ளவேண்டும். இன்று பாட்டாளி வர்க்க சித்தாந்த அரசியல் வழியில், மார்க்சிய - லெனினியம் என்ற பெயரில் கூட நுழைந்து நிற்கும் திரிபுவாத சித்தாந்த அரசியலை எவ்வித சமரசமும் அற்ற தத்துவார்த்த போராட்டத்தின் மூலம் தோற்கடிக்க வேண்டும். மிக முன்னேறிய வர்க்க சித்தாந்த பார்வையிலிருந்து இரண்டாவது உலக யுத்தத்திற்கு பிந்திய ஏகாதிபத்திய, நவகாலனிய பொருளாதார அரசியல் அரசமைப்பு முறையை புரிந்து கொள்ள வேண்டும். அப்போதுதான் சுரண்டப்படும் மக்களின், ஒடுக்கப்படும் தேசங்களின் புரட்சிகர போராட்டங்களுக்கும் அனைத்து நிலைகளிலும் கொம்யூனிஸ்டுக்களால் தலைமை தாங்க முடியும் என உறுதியாக சொல்லமுடியும்.

இந்த அடிப்படையில் தங்களது 'சர்வதேச கொம்யூனிச இயக்க ஒற்றுமைக்கான முன்முயற்சியை' உளப்பூர்வமாக வரவேற்கிறோம். தங்களின் அமைப்பு அறிக்கையில், இணைப்பில் உள்ள நடைமுறை தீர்மானங்களை அதற்கான முன்முயற்சி குறிப்புக்களையும 1997 மே கருத்தரங்கு தயாரிப்பையும் வரவேற்கிறோம்.

''புதிய உலக ஒழுங்கமைப்பும்' ஏகாதிபத்திய எதிர்ப்பு போராட்டங்களும்'' 1996 மே சர்வதேச கருத்தரங்கானது ஏகாதிபத்தியங்களின் எல்லா வடிவங்களிலான இயங்குநிலை பற்றியும் ஆய்விலும் குறிப்பாக நவகாலனி குறித்த கோட்பாட்டு புரிதலை பெறுவதிலும், சர்வதேச கொம்யூனிச இயக்கத்தில் ஏகாதிபத்தியத்தை பற்றிய பார்வையில், பாட்டாளிவர்க்க புரட்சியின் தொடர்ச்சி குறித்த பார்வை அணுகுமுறையில் முன்னிறுத்தப்பட்ட திரிபுவாத வழியை அம்பலப்படுத்த வேண்டிய சித்தாந்த அரசியல் அம்சங்களை ஒழுங்குபடுத்துவதிலும், மாபெரும் விவாதத்தின் பின் புரட்சிகர சித்தாந்த அரசியல் பொது வழியை மேலும் வளர்த்தெடுக்க முடியாமல் போயுள்ளதற்கான சித்தாந்த வறுமை நீடிப்பதற்கான அகநிலைக் காரணங்களையும், முன்வைப்பதில் இச் சர்வதேச கருத்தரங்கு ஒரு மைல் கல்லாக இருக்கும் என நம்புகிறோம்.

மீண்டும் இச்சர்வதேச கருத்தரங்கை நடத்தும் 11 மார்க்சிய லெனினிய கட்சிகளின் அமைப்பு கொமிட்டிக்கும், இக்கருத்தரங்கில் கலந்து கொண்டிருக்கும், மார்க்சிய லெனினிய கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும், ஏகாதிபத்திய எதிர்ப்பு போராளிகளுக்கும் நமது புரட்சிகர வாழ்த்துக்களை தெரிவிக்கிறோம்.

அரசியல் தலைமைக்குழு,<br>
பாட்டாளிவர்க்க முன்னணியினர் கழகம்,<br>
இலங்கை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# எது? மூன்றாவது பாதை

தமிழீழ மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமைப்போராட்டம், இன்றைய நிலையில் பிரிந்து போகும் உரிமையையும், அங்கீகரித்து முன்னெடுக்கப்படும் ஆயுதப்போராட்டமாகும், கடுமையான தேக்க நிலைக்கும், பல புதிய திசைவிலகல்களுக்கும் உள்ளாகியுள்ளது. சிறீலங்கா சிங்கள பௌத்த பேரினவாத அரசின் தேசிய ஒடுக்குமுறை யுத்தம் எல்லா திசைகளிலும் நாளுக்கு நாள் தீவிரப்படுத்தப்படுகிறது. அதே வேளை அரசுக்கு எதிரான ஆயுதப் போராட்டப் பாதையைக் கைவிட்டு, பாராளுமன்றத்தின் மூலமும், பேச்சுவார்த்தை மூலமும் தீர்வுகாணும் கனவில் திசைமாறிய, தேசிய ஒடுக்குமுறைக்கு மறை முகமாக உதவும் ஆயுதக்குழுக்கள், துரோக அரசியல் கட்சிகள் ஒருபுறம். தமிழ் தேசிய ஒடுக்கு முறைக்கு எதிராக, அரசுடன் போரிடும் தமிழ் முதலாளித்துவ சக்தியான 'விடுதலைப் புலிகள் இயக்கம்' மறுபுறம், புலிகள் தேசியப் போராட்டத்தில் தமிழ் முதலாளித்துவத்தின் அத்தனை பிற்போக்குத்தனங்களின், தனி ஆதிக்க சர்வாதிகார 'பாசிச' போக்கின் மையமாகவும் விளங்கிக் கொண்டிருக்கின்றனர்.

இத்தகு சூழ்நிலையில் தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டம் ஒரு குழப்பகரமான நிலையில் உள்ளது. தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டம் வெற்றி பாதையை நோக்கி முன்னேறுமா? தேக்கநிலை உடைக்கப்படுமா? இதை யாரால் செய்ய முடியும்? என்ற கேள்வியும் (?) அச்சமும்!! அரைகுறை நம்பிக்கையும், போராட்டத்தின் மேலும், மக்களின் மீதும் அக்கறை கொண்டவர்கள் வாழும் எல்லாத் தளங்களிலும் (இலங்கை, இந்தியா மற்றும் வெளிநாடுகளில்) இப்பிரச்சினை சிந்திக்கத் தூண்டுகிறது, விவாதிக்கப்படுகிறது, பிரசுரிக்கவும் படுகிறது.

தமிழீழ மக்களின் புரட்சிகரமான தேசிய கோரிக்கையையும் - மக்களின் சனநாயக உரிமைகளையும் முரணற்ற விதத்தில் ஒன்றிணைத்து, வழிகாட்டும் தகைமையுள்ள முன்னேறிய அரசியல் பாதையும், அதன் வழியில் கட்டப்பட்ட போராடும் திறனுள்ள மக்கள் இயக்கமும், இப்போராட்ட பாதையினை தீர்மானிக்கும் சக்தியாக மாற வேண்டும் என்பது பொதுவாக தமிழீழ தேசிய சுதந்திரத்திற்கும் - மக்களின் சனநாயக உரிமைக்கும் ஆக சிந்திக்கின்றவர்களால் ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

அத்தகைய முன்னேறிய அரசியல் பாதையை, அதன்வழி கட்டப்படும் அமைப்பு மார்க்கத்தை எத்தகைய தத்துவம் மிக மிக சிறப்பாக முன்வைக்கிறது என்பதில் மார்க்சிய லெனினிய மா ஓ சிந்தனை தத்துவம் தான் புரட்சிகர அரசியல், அமைப்பு மார்க்கத்தை முன்வைக்கிறது. ஏனெனில் முன்னேறிய

www.tamilarangam.net



வர்க்கமான தொழிலாளி வர்க்கத்தின் மற்றும் விவசாயிகளினதும் பரந்துபட்ட பெரும்பான்மை உழைக்கும் மக்களின் சார்பாகவும் தேசிய போராட்டத்தி லும் வர்க்கப் போராட்டத்திலும் சரியான கொள்கைகளை முன் வைக்கிறது. பின்தங்கிய நாடுகளின் தேசிய, வர்க்கப் போராட்டங்களில் மக்களின் சனநா யக புரட்சியை நிறைவு செய்து ஒரு சமத்துவ சமூக புரட்சிக்கு (சோசலிச புரட்சிக்கு) செல்லும் மனித வரலாற்று வளர்ச்சிக்கு இது உத்தரவாதம் அளிக் கின்றது. எனவே இந்த புரட்சிகர தத்துவ வழியில் உருவாக்கப்படும் அரசியல் வழியும், யுத்தப் பாதையும் பொதுவுடமைக் கட்சியும், அதன் தலைமை வழிகாட்டலில் நிறுவப்படும் பலமிக்க அய்க்கிய முன்னணி, மக்கள் இராணு வம்' இவைதான் தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தின் இன்றைய தேக்க நிலையை உடைக்கும். திசைவிலகல்களை திருத்தி சீரமைக்கும். இதன் மூலம் சிறீலங்கா இனவாத அரசையும் அதனுடன் சேர்ந்து நிற்கும் ஏகாதிபத்தி யங்களையும் எதிர்த்து முன்னேறும் அரசியல் போராட்ட பாதையில் வெளிச் சத்தை நமக்கு தரும். பிரதான எதிரிக்கு எதிராக பரந்துபட்ட மக்களையும் புரட்சிகர வர்க்கங்களையும் போராட்டத்தில் தொழிலாளி வர்க்கம் தனது தலைமையில் இறுதி இலட்சியத்தில் திசைவிலகலின்றி வழிநடத்தி செல்வ தற்கான உறுதியின் அடித்தளமாகும். இவற்றின் மூலம் மட்டும்தான் தமிழீழ தேசிய கோரிக்கையுடன் மக்களின் சனநாயக கோரிக்கைகளை முரணற்ற விதத்தில் ஒருங்கிசைவான முறையில் இணைத்து, தமிழீழ தேசிய விடுத லைப் புரட்சி போக்கை வெற்றியை நோக்கி முன்னெடுத்து செல்லவும், இலங்கை மக்களின் புதிய சனநாயகப் புரட்சியை வளர்க்கவும் நடைமுறை யில் போராட்டத்தில் - புரட்சிகர சக்திகள் தீர்மானகரமான சக்தியாக மாறவும் வழிபிறக்கும்.

தமிழீழ மக்களின் சுயநிர்ணய உரிமைக்கான ஆயுதப் போராட்டத்தில் வழியாக வளர்ந்து வரும் மார்க்சிய - லெனினிய சக்திகளும், ஒரு 'புரட்சிகர கட்சியை' கட்ட வேண்டிய தேவையை நன்குணர்ந்துள்ளார்கள். தத்துவார்த்த ரீதியில், அரசியல் அமைப்பு நிலையில், போராட்ட கள செயல்பாட்டளவில் இதை எவ்வாறு காரிய சாத்தியமாக்குவது என்பதில் பலவித சிக்கல்களை முகங்கொள்கிறார்கள். இதைக் காரியசாத்தியப்படுத்துவது மிக மிக கடினமா னது. பல தியாகங்களை வேண்டி நிற்பது. ஆனால் இதைவிட குறுக்கு வழி எதுவும் இன்று போராட்டம் சந்தித்துள்ள தேக்க நிலையை உடைத்து புரட்சிக ரமான பாதையில் முன்னேற வழி விடாது. இவ்வாறு புரட்சிகர கட்சியைக் கட்டுவது, தினமும் உச்சரிப்பதன் மூலம், அழகாக எழுதி விடுவதால் சாதிக்கப் படுவதல்ல. இது உணர்வு நிலையில் முதல்படி மட்டுமே.

மார்க்சிய - லெனினிய மா ஓ சிந்தனை குறித்து, அடிப்படைப் புரிதலும் இன்றைய சர்வதேசிய, தேசிய பொருளாதார அரசியல் கட்டுமானங்கள், அரச வைப்பு முறைகள், சமுதாய முரண்பாடுகள் அவை வெளிப்படும் விதங்கள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வர்க்க அரசியல் போராட்ட சக்திகளின் அணி சேர்க்கைகள், இவற்றின் மீது தொழிலாளி வர்க்கத்தின் முன்னணி சக்திகளது பார்வை, அணுகு முறை, இறுதி இலட்சியத்துக்கு இசைவான முறையில் தனித்துவம் மிக்க பாத்திரத்துடன் போராட்டத்தில் தீர்மானகரமான தலையீடு இவை குறித்து தத்துவார்த்த அரசியல் தெளிவும், குறிப்பாக இலங்கையின் சமுதாய வளர்ச்சிக் கட்டம், தேசிய இன முரண்பாடுகளின் தோற்றுவாய், வளர்ச்சி, சமகாலம், போராட்ட சக்திகள் பற்றிய மதிப்பீடு, இன்று தொழிலாளி வர்க்கம் தனது சமுதாயக் கடமையை எங்கிருந்து தொடக்குவது, இவை பற்றிய உயர்ந்த பட்ச புரிதலுடன் தீட்டப்பட்ட ஒரு 'அரசியல் திட்டத்தின்' மேல் நாம் வாழும் தளங்களில், போராட்டத்தின் நேரடி செயற்பாடுகள் மூலம், பங்களிப்புகள் வழியாக அரசியல் திட்டத்தையும் தங்களையும் புடம்போட்டு வளர்த்து வருபவர்களின் ஒன்றுபட்ட மையமாக கட்சி இருக்க வேண்டும்.

இத்தகைய ஒரு புரட்சிகர அரசியல் திட்டத்தை உருவாக்கவும், அதைச் செயற்படுத்தவும் தயாராகவுள்ள புரட்சிகரமான முன்னணிப் போராளிகள் ஒன்றுபடுவதன் மூலம், புரட்சிகர அரசியல் கட்சியை கட்ட முடியும். இத்தகைய நிகழ்ச்சி நடந்தேறுவதை காரிய சாத்தியப்படுத்த அரசியல் தெளிவுடன் கூடவே உறுதியான சக்திகளை ஒன்றுபடுத்துவதே நமது பிரதான பணியாக கருதவேண்டும். இது எவ்வளவு தீவிரத்துடன் நடைமுறைக்கு வருகிறதோ அப்போது போராட்டத்தில் பிரகாசமான வெளிச்சம் தெரியும்.

இந்த மாபெரும் கடமை இன்று பல காரணங்களால் பல தளங்களில் சிதறுண்டு இருக்கும் தமிழீழ, சிறீலங்கா தேசங்களின் புரட்சிகர இயக்கத்தின் முன்னணி சக்திகளால் முயற்சிக்கப்பட்டு வருகிறது. தமது புரிதலுக்கும் சக்திக்கும் ஏற்ப அந்த பிரதான பணிக்கு முன்னுரிமை கொடுக்கிறார்கள். ஒரே பணியை தமது தோள்களில் சுமந்து கொண்டு பல தளங்களில் வாழும் இவர்கள் தமக்கிடையில் கருத்தறிதலை, கொள்கை ரீதியான உறவை ஒன்றுபடும் அல்லது முரண்படும் போக்கை தெளிவாக்கும் திசையில் வளர்க்கிறார்கள். கருத்து நிலையில் ஒன்றுபடும் சக்திகள் நடைமுறையில் ஆரோக்கியமான உறவுகளை வளர்த்து கூட்டு வேலைகளை நோக்கி ஒன்றுபடவேண்டும்.

தமிழீழ மக்கள் முகங்கொள்ளும் யுத்தத்தின் கொடூரம், துன்பங்கள், தொல்லைகள், இழப்புகள், இயக்கங்களின் அராஜகங்கள், சனநாயக உரிமை மீறல்கள் இவற்றை எல்லாம் எழுதுவது, உலகறியச் செய்வது அவசியம். இது சமுதாய வாழ்வின் அன்றாட நிலவரங்களை வெளியிடும் செய்தி நிறுவனங்கள் தத்தமது வர்க்க கண்ணோட்டத்தில் இருந்து வெளியிடுவார்கள். இது எவ்விதத்திலும் மக்கள் சந்திக்கும் எந்தப் பிரச்சனைகளையும் தீர்த்து விடுவதற்கான சிந்தனையை தூண்டுவதில்லை. தமிழீழ மக்களின் தேசிய இனப் பிரச்சினைக்கு காரணமான இனவாத அரசை, அதன் ஏகாதிபத்திய கூட்டாளிகளை, இயக்கங்களின் குறிதவறிய சிந்தனைகள், செயல்களை அடையாளம் காட்டி

www.tamilarangam.net



மக்களுக்கு எல்லோரும் எதிரிகள் எனக்காட்டி அதற்கு தீர்வைக் கூறாது மக்கள் சக்தியை தட்டி எழுப்பாது திசை மாற்றும் நிலைகள் ஒருபக்கம் அடுத்த கட்டம் இதற்கு மேல் மக்களின் பிரதான எதிரியை தனித்து அடையாளம் காட்டியும், அரசுடன் மோதும் அதேவேளை மக்களின் சனநாயக உரிமைகளை மதிக்காத சக்திகளை, திசை தவறும் இயக்கங்களை விமர்சனத்துன் சுட்டிகாட்டும். மொத்தத்தில் தமிழீழ மக்கள் முன் ஒரு புதிய புரட்சிகர அரசியல் இயக்கத்தின், புதிய நடவடிக்கைகளின் தேவையை உணர்த்தி ஒரு இதழ், பத்திரிகை, கட்டுரை, கவிதை, சிறுகதை என பிரசுரித்தால் இது சமுதாய அவலங்களை சுட்டிகாட்டி தீர்ப்பதற்கான சிந்தனையை மக்களுக்கு ஏற்படுத்திக் கொடுப்பதில் மிக மிக முன்னேறிய நிலை, ஆனால் இங்கே தான் புதிய எழுதுகோல்கள் மக்களின் இருட்டான வாழ்வை கிழித்து வெளிச்சத்தை காட்டும் புதிய புரட்சிப் பாதையையும் திறக்கும். புதிய எழுதுகோல்களும் திசை விலகினால் மக்களை மீண்டும் இருட்டுக்கும் அழைத்து செல்லும் புதிய திசை விலகலையும் ஏற்படுத்தும்.

கடந்தகால போராட்டத்தின் விலை மதிப்பில்லா அனுபவங்களையும் ஏட்டறிவை, பட்டறிவை சுமந்து வந்து நின்று புதிய பாதை (மூன்றாவது பாதை) தேடும் சக்திகள் மக்களின் இருட்டான வாழ்வில் வெளிச்சத்தை ஏற்படுத்தும் சக்தி பெற்ற அரசியல், அமைப்பு பாதையை நோக்கி தெளிவுடன் சுவடுகளை பதிக்க வேண்டும்.

தமிழீழ மக்களின் சமகால போராட்ட நிலவரம், அதன் எதிர்காலம் பற்றி சிந்திக்கும், வெளிப்படுத்தும் சுதந்திரம் புலிகளைத் தவிர மற்றவர்களுக்கு புலிகளால் தடைசெய்யப்பட்டுள்ளது. இதனால் மாற்று சிந்தனை கருத்துக்கள், நிலைப்பாடுகள், தமிழீழத்துக்கு வெளியில்தான் முன்வைக்கப்படும் சூழ்நிலை காணப்படுகிறது.

தமிழீழ மக்களின் பக்கத்தில் இருந்து மேற்கூறிய போக்குகள் ஒவ்வொன்றையும் வெளிப்படுத்தும் இதழ்கள், பத்திரிகைகள் தமிழ் மொழியில் பெருமளவில் தமிழீழத்துக்கு வெளியில் சிறீலங்காவில் ஒன்றிரண்டு தவிர குறிப்பாக அய்ரோப்பிய அமெரிக்க நாடுகளில் வெளிவருகிறது. இவற்றுள் புலி எதிர்ப்பு, புலி ஆதரவு ஒருவகை. திசைமாறிய இயக்கங்களின் பின்னணி பத்திரிகைகள் இன்னோர்வகை. இவை சில கலகலப்பான விளம்பரங்களுடன் தமது கண்ணோட்டத்தை முன்வைக்கிறது. இவற்றை விடுத்து தமிழீழத்தவர் வாழும் ஒவ்வொரு அய்ரோப்பிய அமெரிக்க நாடுகளிலும் ஒரு இதழ் ஆவது தமிழீழ மக்களின் எதிர்காலத்தின் மீது அக்கறை கொண்டு போராட்டதேக்க நிலையை சுட்டிகாட்டி இதற்கான காரணங்களை ஆராய்ந்து, பிரச்சனைகள் தலைக்குமேல் என சொல்லி அதைத் தீர்ப்பதற்கான வழியாக 'மூன்றாவது பாதை' ஒன்று உருவாக வேண்டும் என முன்வைக்கிறது.

www.tamilarangam.net



இப்படி முற்போக்கு சனநாயக கருத்துக்களை தாங்கிவரும் அரசியல், கலாச்சார இதழ்களின் ஆசிரியர்குழு முதல்பக்கத்தில் மூன்றாவது பாதை உரு வாக்குவது, வளர்ப்பது பற்றி அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது. குறிப்பான சில கட்டுரைகள் சிறந்த விவாத போக்கை வெளிப்படுத்தி உள்ளது. இது அந்தந்த வெளியீட்டாளர்களுக்குள்ளாக ஓடுகின்ற புதிய அரசியல் பாதையின் தேவை, தன்மை குறித்த பிரக்ஞையை காண்பிக்கிறது. இதுபோன்ற முயற்சி கள் மிகவும் வரவேற்கப்படவேண்டும். ஆதரவளிக்கப்படவேண்டும்.

மூன்றாவது பாதை உருவாக்குவது, வளர்ப்பது பற்றிய தேடலுக்கூடாக வெளிப்படும் திசைவிலகலை கவனிக்கும் முன், எது மூன்றாவது பாதை? என்பதை அதை எப்படிப் புரிந்து கொள்கிறோம்? என்பதை தெளிவுபடுத்திக் கொள்வது நல்லது.

இலங்கையின் இன்றைய அரசியல் சாசனத்தையும், அதன் மேல்கட்டப் பட்டுள்ள அரசமைப்பு முறையையும் (இன அடக்குமுறைக்கான சரத்துக் களை உள்ளடக்கியதும் தேசிய இனங்களின், சிறுபான்மை இனங்களின் பாது காப்பை சுதந்திரத்தை உத்தரவாதப்படுத்தா சரத்துக்களை கொண்டதும்) இதில் ஆளும் அதிகாரத்துக்கு செல்வதற்கான வழியாக பாராளுமன்றப் பாதை யையும், ஏற்றுக் கொண்டுள்ளதும், ஏகாதிபத்திய சார்பு கொள்கையின், பிராந் திய விரிவாதிக்க அரசு சார்பை பெற்றுள்ள தமிழ் முஸ்லீம், தரகு முதலாளித் துவ அரசியல் கட்சிகள், இவர்கள் பலருக்கு தனியான ஆயுதக் குழுக்களும் உண்டு. ரி.யூ.எல்.எப். தொடக்கம் ஈ.பி.டி.பி. வரை. இவர்கள் சிறீலங்கா அரசின் தமிழின ஒடுக்குமுறை யுத்தத்துக்கு நேரடியாகவும், மறைமுகமாக வும் உதவுபவர்கள். சில சமயங்களில் சில விவகாரங்களில் தமிழ் முதலாளி வர்க்கத்தின் பொருளாதார அரசியல் அதிகார பேரங்களுக்காக அரசுடன் முரண்பட்டுக் கொண்டிருப்பவர்கள். புலிகளின் பாசிச நடவடிக்கைகளைக் காட்டி தமிழ் மக்களின் பிரதான எதிரியான சிறீலங்கா அரசுக்கும், புலிகளுக் கும் இடையிலான முரண்பாட்டில், யுத்தத்தில் அரசுக்கு சேவகம் செய்யும் துரோக நிலைப்பாட்டினை மக்களுக்கு வழங்குபவர்கள். இவர்கள் புலிகளை மட்டுமல்ல தமிழ் மக்களின் சனநாயக உரிமைகளுக்கும், போராடும் புரட்சிகர தேசபக்த சனநாயக சக்திகளுக்கும் வேட்டுவைப்பவர்களும் கூட இவர்கள் முதலாவது பாதையினர். அடுத்து தமிழீழ மக்களின் தேசியக் கோரிக்கையின் பக்கம் நின்று யுத்தம் அரசுடன் நடத்தும் தமிழ் முதலாளி வர்க்கத்தின் அரசியல் பிரதிநிதியாக போராட்ட சக்தியாக இருக்கும் 'விடுதலைப் புலிகள்' இவர்கள் திட்டவட்டமான ஏகாதிபத்திய எதிர்ப்பு தன்மை அற்றவர்கள். தங்களைத் தவிர மற்றைய வர்க்க சக்திகளை செயற்பட மறுப்பது மட்டுமல்ல, தமிழ் முதலாளி வர்க்கத்தின் ஏகப்பிரதிநிதியாக நினைத்து செயற்படும் தனியாதிக்க 'பாசிச' சக்தியாகும்.

www.tamilarangam.net



இவர்கள் தமிழ் தேசிய இன மக்களுக்கும் சிறீலங்கா அரசுக்கும் இடையிலான முரண்பாட்டில் தமிழ் முதலாளி வர்க்கத்தின் பக்கம் நின்று போராடுவதால் ஒரு தேசிய சக்தியாக தன்னை போரரா்டும் வரை அடையாளம் காட்டும். அதேவேளை பரந்துபட்ட தமிழ், முஸ்லிம் மக்களின் சனநாயக உரிமைகளை, போராடும் தேசபக்த சனநாயக சக்திகளை ஒடுக்கிய வண்ணம், தேசியப் போராட்டத்தில் தமிழ் முதலாளி வர்க்க 'பாசிச' ஆட்சியதிகாரத்தை, தேசிய யுத்தத்தில் சிந்தப்படும் உதிரத்தின் மூலம் நிலைநிறுத்த முற்படுகிறது. எது எவ்வாறு இருப்பினும் சிறீலங்கா அரசுடன் போரிடும் வரை தமிழ்த் தேசியத்தின் பக்கம் தன்னை இனம் காட்டும். இது இரண்டாவது பாதை.

மூன்றாவது பாதை, இது இன்று நடைமுறையில் தமிழீழ அரசியல் போராட்ட அரங்கில் தாக்கம் செலுத்தாக பாதை. தமிழீழ மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமைக்கான ஆயுதப்போராட்டத்தை, இன்று பிரிந்து போகும் நிலைய முன்வைத்து, மத, மொழி (முஸ்லிம், மலையக) சிறுபான்மை மக்களின் சுயாட்சியமைப்பை ஏற்றும், தொழிலாளி வர்க்க சித்தாந்த அரசியல் கட்சி வழிகாட்டலை ஏற்றும், தமிழீழ தேசிய கோரிக்கையுடன் மக்களின் சனநாயக கோரிக்கைகளையும் இணைத்துக் கொள்ளும் பரந்துபட்ட தமிழீழ மக்களின் அரசியல் போராட்ட பிரதிநிதியாக தன்னை வெளிப்படுத்தும் புரட்சிகர தேசபக்த அய்க்கிய முன்னணியாக விளங்கும் சக்தி. இது சிறீலங்கா அரசுக்கும் ஏகாதிபத்தியங்களுக்கும் எதிரான தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தில், தமிழ்த் தேசியத்தின் பக்கம் நிற்கும் போராட்ட சக்திகளுடன் மேல் இருந்து கட்டப்படும் அய்க்கிய முன்னணி கொள்கையை பின்பற்றும், அதேவேளை பிரதான எதிரிகளுக்கு எதிரான இலங்கையின் ஏனைய போராட்ட முனைகளின் (சிறீலங்கா, மலையக) சக்திகளுடன் ஒன்றிணைந்து போராடும், உலகளவில் ஏகாதிபத்திய எதிர்ப்பு சக்திகளின் போராட்டத்துக்கு ஆதரவை மனப்பூர்வமாக வழங்கும். தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தை புரட்சிகரப் பாதையில், தொழிலாளி வர்க்க தலைமையில் முன்னெடுக்கும் புரட்சிகர தேசபக்த மக்களியக்க பாதையாகும்.

இனி மூன்றாவது பாதை பற்றிய தேடலுக்கூடாக வெளிப்படும் திசைவிலகலை கவனிப்போம். முதலாவது, 'மூன்றாவது பாதை, மூன்றாவது பாதை' எனக்கூறிக் கொண்டு ஒரு 'பாட்டாளி வர்க்க கட்சியை' கட்டுவது பற்றியோ, அதன் தலைமையின் கீழ் அய்க்கிய முன்னணியை 'மக்கள் இராணுவத்தை' உருவாக்குவது பற்றி எந்தவிதமான கருத்து வெளிப்படுத்தலும் செய்யாது அடிப்படையில் மார்க்சிய - லெனினிய - மா ஓ சிந்தனை தமது வழிகாட்டும் தத்துவம் என்பதைக் கூட முன் வைக்காத நிலையில், மூன்றாவது பாதை உருவாக்க வேண்டும் எனக் கூறுவதன் மூலம், தாங்கள் எந்தவிதமான வர்க்க அரசியல் அமைப்பை கட்டவுள்ளனர், என்பதையோ எத்தகைய தத்துவ வழிகாட்டி பாதையில் இயங்க தயாராகவுள்ளனர் என்பதையோ வெளிப்படுத்தாத

www.tamilarangam.net



போக்கு. குறைந்தது கடந்தகால அனுபவங்களை தொகுப்பதிலும், விமர்ச னப்பூர்வமாக அணுகுவதில், சமகால அரசியல் போக்கை தெளிவுபடுத்துவ தில், எதிர்கால வழியை கண்டறிவதில் மார்க்சிய லெனினிய அணுகுமுறை பின்பற்றப்படவேண்டும் என்பதைக் கூட வெளிக்காட்டாத நிலை. இது ஒரு வகை.

அடுத்து பாட்டாளி வர்க்க சித்தாந்தத்தை ஏற்றுக் கொண்டு புரட்சிகர கட்சியை கட்ட வேண்டும் என வலியுறுத்துபவர்கள் மத்தியிலும், சிலர் கடந்த காலத்தில் தமிழீழ மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை அது பிரிந்து போகின்ற நிலையை முன்வைப்பதும் சரியென அங்கீகரித்து அதனடிப்படையில் செயற்பட்டவர்கள். இவர்கள் பெரும்பாலும் சிறுமுதலா ளிய சந்தர்ப்பவாத மார்க்சிய இயக்கங்களில் மார்க்சிய பாதையை நோக்கி வளர்ந்துகொண்டிருந்தவர்கள். இவ்இயக்கங்களின் உடைவுகள் சிதறல்களால் அதிலிருந்து வெளியே வந்தவர்கள். தமிழீழ போராட்டத்தில் ஏற்பட்ட தேக்க நிலை காரணமாகவும், இந்திய- இலங்கை ஒப்பந்தத்தின் பின்பான மாற்றங்க ளாலும் இன்று இவர்கள் தமிழ் மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமையை ஏற்றுக் கொள்வதாகவும் பிரிந்து போகின்ற கோரிக்கை என்பது முதலாளித் துவ தேசியவாதக் கோரிக்கை என்ற நிலை எடுத்து அய்க்கிய இலங்கை புரட்சி தான் சாத்தியமானது. தேசிய சுயநிர்ணய உரிமைக்கான போராடுவது மட் டுமே தொழிலாளி வர்க்க இயக்கத்தின் கோரிக்கை என வாதிடுபவர்கள். இவர்கள் தமிழீழ கோரிக்கையை அதன் தொடக்க காலத்தில் இருந்தே முதலா ளித்துவ தேசிய கோரிக்கையென முடிவு செய்கிறார்களா? அல்லது சிறுமுதலா ளித்துவ சந்தர்ப்பவாத மார்க்சிய தேசிய இயக்கங்களின் தோல்விகள் - தேக்கநி லையில் இருந்தும், புலிகளின் பாசிச போக்குக்கு பின்னால் அத்தகைய நிலைப்பாட்டிற்கு வருகிறார்களா என்று தெரியவில்லை. அய்க்கிய இலங்கை புரட்சி பற்றி பேசி, தேசிய இன முரண்பாட்டின் பிரதான நிகழ்ச்சிப் போக்கை காணத்தவறி அரசியல் அரங்கிலிருந்து ஒதுக்கப்பட்ட பழைய புகலிட மார்க்சி யர்கள் சிலர் இவர்களுடன் சேர்ந்து இப்போது சூடாக மீண்டும் இத்தகைய 'புதிய அய்க்கிய இலங்கை' புரட்சி பற்றி பேசவும் எழுதவும் முன் வந்துள்ளார் கள். தமிழீழ போராட்டத்தில் எந்த புரட்சிகர இடது சாரி இயக்கமும் அற்ற நிலையில் இவர்களும் மூன்றாவது பாதை பற்றியே முன்வைக்கிறார்கள். தமிழீழ தொழிலாளிவர்க்கம் இலங்கையின் சூழ்நிலையில் இனமுரண்பாட் டின் வேகம், இதன் பிரதான நிகழ்ச்சிப் போக்கு இன்னும் தீவிரம் அடைந் துள்ள நிலையில் பிரிந்து போகும் கோரிக்கையை கைவிடும் அளவுக்கு இனப் பிரச்சனைக்கு தீர்வு காணப்படாத நிலையில் தனது கோரிக்கையை கைவிட்டு அய்க்கிய இலங்கைப் புரட்சிப் பாதைக்கு மீண்டும் செல்வதானது புரட்சிகர மார்க்கத்தை தேடுவதற்கு, இயக்கத்தை கட்டுவதற்குப் பதில் ஒரு திசை விலக லாகவே அமையும்.

www.tamilarangam.net



தமிழீழத் தொழிலாளி வர்க்க முன்னணி சக்திகள் மத்தியில் நிலவும் தமிழ் குறுந்தேசியவாத போக்கை விமர்சிக்கவும் தேவையானால் கண்டிக்கவும் செய்யலாம், ஆனால் பிரிந்து செல்லும் உரிமையை மறுத்து அய்க்கிய இலங்கைப் புரட்சி பற்றிய நிலைப்பாட்டுக்கு செல்வது சரியான தீர்வாகாது. தமிழீழ பிரிவினைக் கோரிக்கையை எதிர்க்கும் இவர்கள் மத்தியில் இன்னுமோர் கருத்தும் வெளிப்படுகிறது. தமிழ்த் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கும் இவர்கள் தமிழ் மக்களின் தேசிய எல்லையை வரையறுப்பதும், வரைவதும் கூட ஒரு 'முதலாளித்துவ தேசியவாதம்' என கூற முற்படுகின்றனர். அப்படியானால் தேசிய இனங்களின் பாரம்பரிய பிரதேசங்களின் எல்லையை வரையறுப்பு செய்யாத அல்லது தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்தாலும் அதன் எல்லையை வரையறுத்துக் கொள்வதை ஏற்றுக் கொள்ளாத ஒரு சுயநிர்ணய உரிமையைப் பற்றி இவர்கள் பேசுகிறார்கள். இது மிகவும் எச்சரிக்கையுடன் கவனிக்கப்பட வேண்டும். தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசம் இனவாத அரசால் ஆக்கிரமிக்கப்பட்டு அத்துமீறல் குடியேற்றங்கள் நில ஆக்கிரமிப்புகள் தேசிய இன ஒடுக்குமுறையின் பிரதான வெளிப்பாடாக காண்கின்ற நமது நாட்டில் தேசிய இனப்பிரச்சனைக்கான தீர்வில், அது பிரிவினையை ஒருக்கால் ஏற்றுக் கொள்ளாவிட்டாலும், தமிழ் தேசிய இனத்தின் பாரம்பரிய பிரதேசத்தின் ஒருமைப்பாட்டை உறுதிப்பாட்டை பேண வேண்டுமானால், தேசிய எல்லையை வரையறுப்பது தவிர்க்க முடியாதது என்பதை உணர வேண்டும்.

இறுதியாக, தமிழீழ தேசிய சுயநிர்ணய உரிமைக் கோரிக்கைக்காகவும், பிரிவினைக்கும் கூட கடந்த காலங்களில் போராடியவர்களில் சிலர் இன்று பிரிவினையை நிராகரித்து தேசிய சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பது என்ற மேற்கூறிய திசை விலகல் பாதைக்கு சென்றுள்ளதுடன் மேலும் ஆபத்தான நிலைப்பாட்டையும் முன்வைக்கிறார்கள். இவர்கள் ட்ரொஸ்கியவாத பாதையை இப்போது முன் வைக்கிறார்கள். நான்காவது அகிலக் கூட்டத்தாருடன் சுறுசுறுப்பாக பேசிக் கொண்டே மூன்றாவது பாதை பற்றி முன்வைக்கிறார்கள். இவர்கள் முன்வைப்பது தமிழீழ மக்களின் தேசிய விடுதலைப் புரட்சி மட்டுமல்ல, அய்க்கிய இலங்கைப் புரட்சிகூட சாத்தியம் இல்லை. தனி ஒருநாட்டில் புரட்சி வெற்றி பெறமுடியாது. உலகம் தழுவிய புரட்சிதான் ஒரே வழி எனக் கூறுகிறார்கள். முதலாளித்துவத்தினதும், ஏகாதிபத்தியங்களினதும் ஏற்றத்தாழ்வான சீரற்ற வளர்ச்சியையும் புறக்கணித்து இம்முடிவுக்கு வந்து சேர்ந்து இருக்கிறார்கள். இப்படியாக ஒரே மூச்சில் ட்ரொஸ்கியின் கால்களில் வீழ்ந்துவிட்டார்கள். இவர்களுக்கு ரசிய, சீனா, கிழக்கு அய்ரோப்பாவில் நடந்த முதலாளித்து மீட்சி வரப்பிரசாதமாக ஆகிவிட்டது. தமிழீழம் பிரிவது என்ற கோரிக்கை ஏற்றுக் கொண்டிருந்தபோது, இவர்களது எழுத்துக்கவிலும், சட்டைப் பையினுள்ளும் வாழ்ந்த தோழர் ஸ்டாலின் இன்று இவர்க

www.tamilarangam.net



ளது பரம விரோதியாகி விட்டார். உலக அளவில் ஏகாதிபத்தியமும், திரிபுவாதிகளும், ட்ரொஸ்கியவாதிகளும், புதிய இடதுகளும் கட்டவிழ்த்து விட்டுள்ள மார்க்சிய - லெனினிய - மா ஓ சிந்தனை எதிர்ப்பு மார்க்கத்தாலும், நவீன திரிபுதத்துவங்களாலும் ஆகர்சிக்கப்பட்டுள்ளனர். கட்டிப் போடப்பட்டு உள்ளனர். அய்ரோப்பிய, அமெரிக்க நாடுகளில் இவர்களின் புகலிடம் இருப்பதால் அங்கு ட்ரொஸ்கியத்தையும் லெனினியத்தையும் இணைத்து தொழிலாளி வர்க்கத்திற்கு வழிகாட்ட விரும்பும் நவீன ட்ரொஸ்கிய வாதத்தின் அமைப்புகளின் தாக்கம் இவர்களை முற்றாகவே திசை திருப்பி உள்ளது. இந்த ட்ரொஸ்கியவாத திசை விலகல்காரர்களும் 'மூன்றாவது பாதையை', 'மக்கள் பாதையை' உருவாக்குவது வளர்ப்பது பற்றி முன்வைக்கிறார்கள்.

ஆகவே மேற்பார்த்த சந்தர்ப்பவாத அரசியல் வழிக்காரர்கள், திரிபுவாத பாதையாளர்கள், ட்ரொஸ்கிய வாதிகளின் மூன்றாவது பாதைக்கும் புரட்சிகர பாட்டாளி வர்க்க சக்திகளின் மூன்றாவது பாதைக்கும் இடையில் மலைக்கும் மடுவுக்கும் இடையிலான வேறுபாடு சித்தாந்த நிலையிலும், அரசியல் அமைப்பு கண்ணோட்டத்திலும் உண்டு என்பது தெளிவாகும்.

தேசிய இன ஒடுக்குமுறை யுத்தம் நடந்து கொண்டிருக்கின்ற நமது நாட்டில் நடைமுறையில் ஒரு புரட்சிகரபாட்டாளி வர்க்க கட்சி யுத்தத்தில் தலையீடு செய்கின்ற நிலை இல்லாது இருக்கின்றபோது, புரட்சிகர அரசியலில் பங்கு வகிக்காது இருக்கின்றபோது புரட்சிகர தேசபக்த சக்திகளின் பலம்வாய்ந்த அய்க்கிய முன்னணியை நாம் எங்கே போய் தேடமுடியும்? எனவே, நாம் ஒன்றை மட்டும் தெளிவாகப் புரிந்து கொள்வோம். போராட்டக்களத்தில் இருந்தும், யுத்தத்தில் இருந்தும் அன்னியப்பட்டு நின்று ஒரு புரட்சிகர கட்சியைக் கட்டிவிட முடியாது, என்பதே அது. நாம் புரிந்து கொண்டிருக்கின்ற மார்க்சிய - லெனினிய மா ஓ சித்தாந்தத்தை நமது நாட்டின் ஸ்தூலமான சமுதாய செயற்பாடுகளுடனும் தேசிய போராட்ட நடவடிக்கைகளுடனும் இணைத்து பிரயோகித்தாக வேண்டும். அதைவிடுத்து நேரடியாக தத்துவ புத்தகங்களுடன் ஒருமைப்பாடு காண்பதும், அப்படி புத்தகத்துடன் ஒருமைப்பாடு கண்டவர்களைக் கொண்டு தேடிப்பிடித்து கட்சியைக் கட்டுவது அல்லது அனுபவவாத பாதையில் செல்வது என்பது, மீண்டும் தோல்விக்கும், திசை விலகலுக்கும் இட்டுச் செல்லும் என்பதை வளர்ந்து வரும் புரட்சிகர தேசபக்த சனநாயக சக்திகள் புரிந்து கொள்ள வேண்டிய அவசியமாகும்.


தமிழீழ தேசியவிடுதலைப் போராட்டத்தில், சிறு முதலாளித்துவ சுத்த ராணுவ சித்தாந்தத்தின் இருப்பும், சந்தர்ப்பவாத மார்க்சியத்தின் எழுச்சி அலை ஓய்வுக்குப் பின், உயிர்த்துடிப்புடன் எழுந்து வருகின்ற புரட்சிகர தேசபக்த எண்ணம் கொண்ட இளம் துளிர்கள், ஒவ்வொன்றும் உண்மையான மக்கள் விடுதலைப் பாதையை, மார்க்சிய - லெனினிய - மா ஓ சிந்தனைப்

www.tamilarangam.net



பாதையை கண்டுபிடிக்கும் ஆற்றலைப் பெற்றுக் கொள்ளவேண்டும். சந்தர்ப்பவாத அரசியலையும் நவீன திரிபும், ட்ரொஸ்கியவாத பாதையையும் நோக்கிச் செல்லும், மூன்றாவது பாதை என்ற பெயரில் தலைகாட்டும் திசைவிலகலை நிராகரிக்கவேண்டும். புரட்சிகர பாட்டாளி வர்க்க கட்சியைக் கட்டும், அதன் தலைமை வழிகாட்டலை ஏற்றுக் கொள்ளும் முற்போக்கு தேசபக்த சனநாயக சக்திகளின் ஐக்கிய முன்னணியை உருவாக்கும் புரட்சிகரமான மூன்றாவது பாதையை நோக்கி அணிதிரள வேண்டும்.

★ நசீர்




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மே தினத்தில் தந்த கொடி
# செங்கொடி பறந்தாடுது

செங்கொடி பறந்தாடுது
செகமெல்லாம் புகழ் பாடுது
சிந்தை மகிழ்ந்தாடுது நம் வாழ்வினிலே
சிறந்த இன்பங் கூடுது (செங்கொடி)

வறுமையின் துயரினாலே
வாடித் தவிக்கும் மக்களுக்கு
போராட வந்த கொடி
புரட்சிக் கொடி இந்தக் கொடி (செங்கொடி)

அமெரிக்க தேசத்திலே
சிக்காகோ நகரினிலே
சிலிர்த்தெழுந்த தொழிலாளர்கள்
சிங்கக் கூட்டம் நிறைந்தது
சீற்றமெல்லாம் திரண்டது (செங்கொடி)

வெள்ளைக் கொடி ஏந்தி வந்தோர்
வீதியிலே அணிவகுத்து
ஆர்த்தெழுந்தார் மே தினத்தில்
எட்டு மணி வேலை கோரி
விண்ணுலவ பறந்தது
வெள்ளைக் கொடி ஒளிவீசி (செங்கொடி)

துப்பாக்கியின் தோட்டாக்கள்
தொழிலாளர்கள் மீதினிலே
அலை அலையாய் பறந்தன
உயிர்கள் பல மாண்டன
இரத்த ஆறு ஓடியது
வரலாறு மாறியது (செங்கொடி)

பாட்டாளியின் மார்பினிலே
பொங்கிய இரத்தத்திலே
நனைந்தது வெள்ளைக்கொடி அதன்
நினைவாக செங்கொடி
எட்டு மணி வேலை நேரம்
அடைந்தது புரட்சியாலே (செங்கொடி)

சிக்காக்கோ தியாகிகளின்
சரித்திரத்தை எடுத்து சொல்லும்
ஆயுதப் போராட்டத்தால்
ஆட்சியினை பிடிக்கும் கொடி
சுரண்டலை கருவறுக்கும் செம்புரட்சிச் செங்கொடி
நமது புரட்சிச் செங்கொடி (செங்கொடி)

ஆயிரத்து எண்ணூற்று என்பதாம் ஆண்டினிலே
உதித்த கொடி இந்தக் கொடி
உழைப்போரின் உரிமைக் கொடி
மே தினியில் சிறந்த கொடி
மே தினத்தை தந்த கொடி (செங்கொடி)

www.tamilarangam.net




- அரசியல் தீர்வுக்கு திம்புக் கோரிக்கைகளை முன்னிறுத்துவோம்!
- சிறீலங்கா அரசுக்கு எதிரான எல்லா அமைப்புக்களும் சுதந்திரமாக செயல்பட அனைத்துத் தடைகளையும் உடைப்போம்!
- அரசுக்கு எதிரான ஆயுதப் போராட்டத்தை தொடர்வோம்

PROLETARIAT VANGUARD'S ORGANISATION

Provo

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்